
# தூரன் சுயசரிதை

பதிப்பாசிரியர் ராஜ ஸ்ரீகாந்தன்



சிலம்பு
பதிப்பகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூரன் சுயசரிதை

பதிப்பாசிரியர்

ராஜ ஸ்ரீகாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனாதி நித்தியனேகன் அவனருள் அறிவேயானால்
அனாதியாந் தர்மம் வேறென்றவனியில் கல்வியீகை
மனோதிட மொன்றேயெம் கண்மாறிலா திருக்குமாயின்
புனலென வெங்கள் கூடம் பொங்கிடும்

- கா. சூரன்.

# சூரன் சுயசரிதை

காத்தார் சூரன்

(1881 - 1956)

இச்சுயசரிதையின் அனைத்துப் பொறுப்புக்களும் நூலாசிரியரையே சாரும்.


பதிப்புரிமை : சூரன் ஏகாம்பரம் ரவிவர்மா

ISBN 955-98619-0-5

பதிப்பாசிரியர் : ராஜ ஸ்ரீகாந்தன்

ஓராம் பதிப்பு : 2004 ஜூன்

அட்டை ஓவியம் : தவம்

கணினி எழுத்தமைப்பு : லீலாவதி ஸ்ரீகாந்தன்

நூலாக்கம் : "கிறிப்ஸ்"

அச்சாக்கம் : "கிறிப்ஸ்"
162, டாம் வீதி
கொழும்பு 01200




## சமர்ப்பணம்

*தமிழினத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகத்தின்*
*கல்வி, பொருளாதார சமூக மேம்பாட்டிற்காக*
*சிந்தித்துச் செயலாற்றியவர்களுக்கும்*
*அவர்களுக்கு வெற்றிகரமாக வழிகாட்டியவர்களுக்கும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

## ‘இரட்டை முட்கிரீடங்களைச் சுமந்த நமது பெரியார் சூரன் எனும் சுந்தர நாயகன்’’

தனி மனித வாழ்க்கையும் சமூக அசைவியக்கங்களும் இலக்கியக் கட்டுமானங்களும் மிக நெருக்கமாகச் சந்திக்கக்கூடிய படைப்பு சரிதவியலாகும். மனித குலத்தின் ஓர் அங்கமான தனது சமூகத்தின் மேம்பாட்டில் அக்கறை கொண்டு தொலைநோக்குச் சிந்தனையுடன் சமூக அசைவியக்கங்களை ஏற்படுத்தும் தனி மனிதனுக்கும் மெய்யான யதார்த்தத்திற்குமிடையே புதிய உறவுகள் உருவாகும் போது அவனால் படைக்கப்படும் இலக்கியத்திலும் தீவிரமான ஈர்ப்புகள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் சமூக உணர்வுள்ள அவன்தான், தனது குடும்பம் என்ற சிறு வேலியைத் தாண்டி சமூக நலன் என்ற விரிந்த பரப்பினுள் நின்று இயங்குவதேயாகும்.

இலக்கிய உலகில் சரிதவியலுக்கு முக்கிய இடமுண்டு. இதற்கு நல்லதொரு சான்றாக பேராசிரியர் சித்தலிங்கையாவின் ‘ஊரும் சேரியும்’ என்ற சரிதவியல் நூலைக் குறிப்பிடலாம். சேரியொன்றில், புல்லின் வேர் மட்டத்துக் குடும்பமொன்றில் பிறந்த சித்தலிங்கையா அடிநிலை ஏழ்மையும் போர்க்குணமும் நிறைந்த தலித்துக்களின் வாழ்வை கிண்டலும் குறும்பும் நிறைந்த தொனியில் தனது சரிதையில் எழுதிச் செல்கிறார். கன்னட வாசகர்களின் பெரு வரவேற்பைப் பெற்ற இந்நூல் பல இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

ஈழத் தமிழிலக்கிய உலகினைப் பொறுத்தமட்டில் சரிதவியல் பெருமளவில் கைவைக்கப்படாத ஒரு துறையாகவே இருந்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் ‘சன்லைற் லோன்றி’ நிறுவி நடாத்திய ஆர். செல்லையா என்பவர் 1970 இல் ‘வாழ்க்கையின் சோதனைகள்’ என்ற தலைப்பில் 216 பக்க சுயசரிதையினை எழுதியுள்ளார். எனது தேடலுக்கு உட்பட்டவரை யாழ்ப்பாண மண்ணில் ஒரு சாதாரணனின் சரிதவியல் ஓராம் முறையாக வெளியிடப்பட்டது இதுவேயாகும். இரண்டாவதாக வெளிவந்த சாதாரண மனிதரொருவரின் சுயசரிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். வீ. தம்பையா அவர்கள் எழுதிய 'மல்லிகைப் பந்தல்' வெளியீடான 'நினைவின் அலைகள்' என்ற நூலாகும். கொழும்பில் 'ஒறியன்ரல் சலூன்' நிறுவி நடாத்திய மனிதநேயம் மிக்க தம்பையா அண்ணை 'ஒரு சாதாரணனின் சரிதம்' என்ற தலைப்பில் இந்நூலுக்கு ஒரு முன்னுரையை எழுதும் வாய்ப்பை எனக்குத் தந்தார். இதனையடுத்து 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா, அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் ஆகியோரின் சரிதைகள் வெளிவந்தன. ஆனால் இவர்கள் இருவரும் சாதாரணர்கள் அல்லர்.

இவற்றையடுத்து இப்பொழுது வெளியிடப்படும் 'சூரன் சுயசரிதை' இவை அனைத்திற்கும் பல்லாண்டு காலத்திற்கு முன்னரே எழுதப்பட்டிருந்தாலும் தனித்துவமான தன்மைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. 2003 **ஆம் ஆண்டின் முதற்கூற்றில் செல்லக்குட்டி கணேசன் சூரனின் சிலை குறித்த எண்ணக் கருவை வெளிக்கொணர்ந்தபோது எனது மனதில் ஒரு பொறி தெறித்தது. இன்று தேசிய மட்டத்திலும் அதற்கப்பாலும் பேசப்படுகின்றவர்களில் சிலரை உருவாக்கிய தேவரையாளி இந்துக் கல்லூரியை உன்னத நிலைக்கு உயர்த்தி வைத்த சாதனையாளர் மூ. சி. சீனித்தம்பி அவர்கள் 'தேவரையாளி இந்து' என்ற மலரை என்னிடம் தந்தபோது பல்வேறு உரையாடல்களுக்கு மத்தியில் 'சூரன் தனது வாழ்க்கை வரலாற்றை தனது கைப்பட எழுதி வைத்திருக்கிறார் கட்டாயம் ஒரு முறை அதனைப் படித்துப் பார்' என்று கூறினார். பிறிதொரு சந்தர்ப்பத்தில் தெணியானும் இதே கருத்தினை என்னிடம் தெரிவித்திருந்தார். நகர வாழ்க்கையின் வேகமான நகர்வுகளுக்கு மத்தியில் இதற்கான தேடலை நிகழ்த்தும் தேவைப்பாடு ஏற்படவில்லை. செல்லக்குட்டி கணேசன் இதற்கான தேடலை நிகழ்த்தும் தேவைப்பாட்டினை ஏற்படுத்தினார். இந்நூலின் வாசகர்களினது முதல் நன்றிக்கு உரியவர் இவரேயாவார்.**

சூரனின் மூத்த பேரன் சூரன் ஏகாம்பரம் ரவிவர்மாவிடம் அந்த எழுத்துப் பிரதி இருப்பதாக அறிந்து கேட்டபோது அதனுடன் 'பராசக்தி' என்ற திரைப் படத்திற்கு சூரன் எழுதி 1953 இல் அச்சிட்ட மறுநிலை விமர்சன நூலொன் றையும் மூ. சி. சீனித்தம்பி அவர்கள் அதிபராயிருந்த காலத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நீதிபதி செ. தனபாலசிங்கம் தலைமையில் 1960. 12. 28 இல் நிகழ்வுற்ற சூரன் நினைவு விழாவின்போது பாராளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரம் அவர்களால் வெளியிடப்பட்ட 'வதிரி சைவப் பெரியார் உயர்திரு கா. சூரன் அவர்களின் புகழ்மாலையும் வரலாறும் அடங்கிய நினைவு மலர்' ஒன்றையும் தந்தார். இவை மூன்றும் என்னுள் பிரமிப்பை ஏற்படுத்தின.

**எனது எட்டு வயது வரை 'பள்ளிக்கூடச் சூரப்பு' என்று மட்டுமே எனது பிஞ்சு மனதில் பதிவாகியிருந்த எங்கள் கிராமத்து முதியவரின் மாமனிதத் தோற்றத் தரிசனம் கிடைத்தது. எங்கள் வேர்களை நாங்களும் இனிவரும் சந்ததிகளும் தெளிவாகக் கண்டறிவதற்கான இந்த அற்புதமான வரலாற்று ஆவணத்தை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்று அப்பொழுதே தீர்மானித்தேன்.**



பல நூற்றாண்டு காலமாக ஈழத் தமிழினத்தில் அடிப்படை மனித உரிமைகள் கூட கொடூரமாக மறுக்கப்பட்டு வந்த சமூகத்தில் பிறந்தவரான சூரன் கல்வியறிவு, அதனூடாகப் பெறப்படும் விழிப்புணர்வு, சைவசமயப் பற்று என்பவற்றின் மூலமே நிரந்தர விடுதலையையும் மேம்பாட்டையும் அடையலாம் என்ற சிந்தனையுடனும் தொலைநோக்குடனும் செயற்பட்டுள் ளார். நமது சமகாலத்தில் வாழும் சிறந்த அறிஞர்களில் ஒருவராகக் கொள்ளப்படும் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் தந்தையார் மாணிக்கம் என்றழைக்கப்பட்ட கரவெட்டிக் கார்த்திகேசு உத்தியோகம் பெறுவதற்கான முதற் கதவு சூரனாலேயே திறந்து வைக்கப்பட்ட தகவல் இந்நூலிற் சொல்லப்பட்டுள்ளது. இதுகுறித்த விரிவான தகவல்கள் முன்னுரையின் பின்குறிப்பில் பேராசிரியரினால் தரப்பட்டுள்ளன.

உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகத்தில், தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப் பட்ட ஓராவது இலக்கியகர்த்தாவாகக் கொள்ளப்படுபவர் அல்வையூர்க் கவிஞர் மு. செல்லையா. இச்சமூகத்தில் ஓராவது பயிற்றப்பட்ட ஆசிரியரும் இவரே தான் என்ற தகவலும் இச்சரிதையில் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 'இப்போ தலைமையாசிரியராயிருக்கும் மு. செல்லையா ஏழாம் வகுப்புப் பாசு பண்ணி எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் அவரை ஆசிரிய கலாசாலைக்கு விட்டுப் படிப்பிக்கில் எட்டாம் வகுப்புப் பாஸ் பண்ண வேண்டும் அல்லது பிரவேச பண்டிதர் பாசு பண்ண வேண்டும். அதற்காகச் செல்லையா இலக்கண இலக்கியம் படிப்பதற்காகக் கற்கும்பான் மயில்வாகனம் வாத்தியாரிடம் ஒப்படைத்தேன். அவர் படிப்பிக்கும் நேரம் மாலை ஆறரை தொடங்கி எட்டரை மணி நேரமாகும். செல்லையா தனிமையில் போய்வர முடியாது ஆகவே ஓர் அரிக்கன் விளக்குடன் நானே மூன்று மாதமாகக் கூட்டிக்கொண்டு சென்றேன்.' (கற்கும்பான் வதிரியிலிருந்து சுமார் 5 - 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.) சூரனின் ஆளுமையாளர்களை நிர்மாணிக்கும் திறன் (Personality building skill) இயல்பாகவே ஆக்கத்திறன் கொண்ட மு. செல்லையா அவர்களைக் கவிஞராக்கி தேசிய மட்ட அங்கீகாரத்திற்கு உயர்த்தியுள்ளது.

தமிழையும் சைவத்தையும் காத்தவரெனப் போற்றிக் கொண்டாடப்படும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இந்தத் தமிழ்ச் சமூகத்தினரை மனிதர்களாகவே மதிக்கக் கூடாதென்று உறுதிபடக் கூறி, அதற்கிணங்கச் செயலாற்றி, தனது 'சைவ வினாவிடையில்' தெளிவாகப் பதிவு செய்துமுள்ளார். நாவலர் இறந்து (1879) **இரண்டு ஆண்டுகளின் பின்னர் பிறந்த (1881) சூரனோ இரட்டை முட்கிரீடங்களைச் சுமந்துகொண்டு - ஒருபுறம் ஆறுமுகநாவலர்களின் வழித் தோன்றல்களின் கொடூரமான உரிமை மறுத்தல்கள், மறுபுறம் ஆட்சியதிகாரத்தைக் கொண்டிருந்த கிறீஸ்தவர்களின் மத மாற்றல்கள் - சைவத்தை உறுதியாகக் கடைப்பிடித்தமையும் இதன்பொருட்டு வதிரி, தேவரையாளி சைவ வித்தியாலயத்தை நிறுவியமையும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய மட்டத்தில் சூரனைத் தேசியப் பெரியாராகக் கொள்ளவேண்டும் என்ற பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் கூற்றுக்கு வலுச் சேர்ப்பவையாக உள்ளன. ஆறுமுகநாவலரின் சைவசமயக் கோட்பாடுகள் இன்று மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப் படவேண்டிய கட்டாய அவசியப்பாடு எழுந்துள்ளமையும் கவனத்திற் கொள்ளத்தக்கது. சைவத்தின் பெயரால் நிகழ்த்தப்பட்டு வந்த கொடுமைகளுக்காக இச்சமூக மக்கள் அனைவருமே மதமாற்றம் செய்திருந்தாற்கூட அது தவறாகக் கொள்ளப்பட்டிருக்க மாட்டாது.**

**இந்திய அரசியல் யாப்பின் பிதாமகர் டாக்டர் அம்பேத்கர் 'யால்டா' பிரகடனத்தில் 'நான் தாழ்த்தப்பட்ட இந்துவாகப் பிறந்தேன். இதைத் தடுத்து நிறுத்துவது என்பது என் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது, ஆனால் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் நான் இறக்கும்பொழுது இந்துவாக இறக்கமாட்டேன்' என்று குறிப்பிட்டு இலட்சக்கணக்கான தனது மக்களோடு புத்த மதத்தைத் தழுவிக் கொண்டார் என்பது உரத்த சிந்தனைக்கு உரியது. இந்தப் பகைப்புலத்தில் சூரனின் பிம்பப் பிரகாசம் மேலும் ஒளிர்கிறது.**

சி. கந்தர் (சி. க. சரவணமுத்துவின் தந்தையார்) என்பவரால் 'கொட்டன்' வைத்து வழிபாடு செய்யப்பட்ட வதிரி, பூவற்கரை அண்ணமார் என்ற சிறுதெய்வ ஆலயத்தில் பல்லாண்டுகளாக இடம்பெற்றுவந்த மிருக பலியை அன்றைய காலச் சூழலில் நிறுத்தத் துணிந்தமையும் அதனை வெற்றிகரமாகச் சாதித்தமையும் சூரனுடைய சைவப் பற்றின் வலிமையையும் அதற்கிணங்க வாழ்ந்தமையையும் துல்லியமாகப் புலப்பாடு செய்கின்றன. இந்த ஆலயம் பூவற்கரைப் பிள்ளையார் ஆலயமாகப் பரிணாமம் பெற்று அதற்கெனப் பெரும் பொருட் செலவில் சித்திரத் தேர் ஒன்று உருவாக்கப்பட்டது. இச்சித்திரத் தேரின் வெள்ளோட்டம் 2003. 08. 01ஆந் திகதி நிகழ்வுற்றது. இத்தினம் சூரனின் 122வது ஜனன தினம் என்பது முற்றிலும் எதேச்சையாக ஏற்பட்ட ஒத்த நிகழ்வாகும்.

கல்கி கிருஷ்ணமூர்த்தி இலங்கைக்கு வந்து இந்தியா திரும்பிய பின்னர் கல்கியில் தொடர்ச்சியாக எழுதிய 'இலங்கையில் ஒரு வாரம்' என்ற கட்டுரையில் சூரனைப் பற்றி எழுதும்போது 'இப்பெரியார் நந்தன் சரித்திரத்தில் வரும் பெரிய கிழவனாரை எனக்கு ஞாபகப்படுத்தினார்.' என்று குறிப்பிட்டுள்ளார். தலித் இலக்கிய முன்னோடியாகக் கொள்ளப்படும் டானியல் தனது 'தண்ணீர்' என்ற நாவலில் சூரனைப் பற்றி எழுதியுள்ளார். 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா 'எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்' என்ற தனது சுயசரிதையில் சூரனைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

சூரனை மீளக் கொணர்வதிலும் அவர் குறித்த முறையான தகவல்களை பரவலடையச் செய்வதில் முனைப்பாகச் செயற்பட்டவர் தெணியான். 'எமது நாவலர் ஆசாரியார் சூரன்', 'சைவச்சூரனின் சமயப் பணிகள்', 'கல்கி பாராட்டிய வதிரிப் பெரியார்', 'தேவரையாளிச் சூரனின் பட விமர்சனம்', 'சிறுபான்மை மக்களின் அறிவு வளர்ச்சிக்கு வழிவகுத்தவர் திரு. கா. சூரன்', 'சூரனும் கல்விப் பணியும்' ஆகிய பத்திரிகைக் கட்டுரைகளிலும் 'தேவரையாளி இந்து' மலரிலும் முருகேசு ஆசிரியர் பவளவிழா மலரிலும் 'மல்லிகை ஆண்டு மலர் - 2003' சிறுகதை ஒன்றிலும் சூரன் பற்றிய பல தகவல்களை இவர் பதிவு செய்துள்ளார்.



பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா 'வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கியப் பணியும்' என்ற ஆய்வு நூலில் சூரன் பற்றிய பல தகவல்களைத் தெளிவாகத் தந்துள்ளார். இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் சூரனைப் பற்றி மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டு சூரனின் பணிகள் விரிவாக ஆய்வு செய்யப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை கலைஞர் வைரமுத்து பற்றிய ஆய்வு நூலில் சூரனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். நாடகக் கலைஞர் கிருஷ்ணாழ்வாரின் நூற்றாண்டு மலரில் சூரனைப் பற்றிய குறிப்புகள் விரிவாக எழுதப்பட்டுள்ளன. அதிபர் மூ. சி. சீனித்தம்பி அவர்களால் வெளியிடப் பட்ட 'தேவரையாளி இந்து' என்ற மலரில் சூரன் பற்றிய குறிப்புகள் ஆதாரபூர்வமாகத் தரப்பட்டுள்ளன. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரத்தின் மறைவையொட்டி எழுதிய கட்டுரையில் சூரனைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. ச. வெளியீடான 'உயிர்ப்பு' என்ற தொகுதியில் வெளி வந்த எனது 'தத்து' என்ற சிறுகதையில் 'எங்கடை சைவத்தையும் எங்கடை தமிழையும் காப்பாத்தியது ஆறுமுகநாவலர் அல்ல சூரப்புதான், சூரன்தான்' என்று பதிவு செய்துள்ளேன்.

தமிழினத்தில் குறித்த சமூகத்தின் உரிமைகளை மறுத்துவந்த சமூகத்தைச் சேர்ந்த பல முற்போக்கானவர்கள் பெரியார் சூரனின் பணிகளுக்கு வழிகாட்டிகளாகவும் உறுதுணையாளர்களாகவும் விளங்கியமை இந்நூலில் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரத்தின் பேரனார் வீ. மூ. சிற்றம்பல முதலியார் (சித்தமணியம்), இவருடைய மைத்துனர் தா. சிதம்பரப்பிள்ளை, 'இந்துசாதனம்' பத்திரிகையின் ம. க. திருஞானசம்பந்தர், வித்தியாதரிசி சதாசிவ ஐயர் (இவருடைய சொந்தப் பாடசாலையான ஆரிய திராவிட பாடசாலையில் சமாசனமில்லாக் காலத்திலேயே பிரவேச பண்டிதர் சோதனையின்போது மு. செல்லையாவிற்கு மேசையும் இருக்க ஸ்ரூலும் கொடுத்தவர்), பாடசாலை முகாமையாளர் சி. சபாபதிப்பிள்ளை, 'இந்துபோட்' இராசரத்தினம், ஹன்டி பேரின்பநாயகம், தா. இராமலிங்கம் அப்புக்காத்து, கொழும்புச் சீமான்களான காராளபிள்ளை முதலியார், செல்லமுத்து முதலியார் ஆகியோர் உட்பட இன்னும் பலர் சூரனால் குறிப்பிடப்பட்டுள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரியின் தந்தையார், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1952) இப் பாடசாலையில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார் என்ற பதிவும் இந்நூலில் உள்ளது.

சூரனின் சரிதையைப் பதிப்பிக்கும் முயற்சியில் நான் ஈடுபட்டிருப்பதை அறிந்து இதற்கான முன்னுரையை தானே எழுதித் தரவேண்டும் என்று கூறி நோயுற்றுப் படுக்கையில் இருந்த வேளையிலும் அதனைச் சிறப்புறச் செய்து தந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் நன்றியுடன் போற்றத் தக்கவர். விழிப்புலன் வலுக்குறைந்த வேளையில் இச்சரிதையின் மூலப் பிரதியை அவருக்கு வாசித்தும் முன்னுரையைப் படியெடுப்பதற்கும் உதவி புரிந்த கொழும்பு இந்துக் கல்லூரி பழைய மாணவர் பதுளை ஸ்ரீகிருபானந்த் நன்றிக்குரியவர்.

ஒடிந்து நொருங்கும் நிலையிலிருக்கும் கையெழுத்து மூலப் பிரதியை கவனத்துடனும் அக்கறையுடனும் வாசித்து கணினி அச்சமைப்புச் செய்தும் புறக் காரணிகளால் தளர்வுற்றபோது என்னை ஊக்குவித்தும் உதவிய லீலாவதி ஸ்ரீகாந்தனின் பங்களிப்பு விதந்துரைக்கத்தக்கது.

இச்சரிதையை மிகுந்த சிரத்தையுடன் நூலாக்கிய பவானி கிருஷ்ணமூர்த்தி, அழகுற அச்சியற்றிய 'கிறிப்ஸ்' சு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நன்றிக்கு உரியவர்கள்.

இந்நூல் ஆக்கப்படுவதை அறிந்து நான் நேரிற் தொடர்பு கொள்ளாதபோதும் தானே முன்வந்து உதவிபுரிந்த சமூகப்பற்று மிகுந்த வையாபுரி அண்ணை பீ. வேலாயுதம் பெருநன்றிக்குரியவர்.

**இந்நூல் அரை நூற்றாண்டிற்கு முன்னர் எழுதப்பட்ட ஒரு சுயசரிதை மட்டுமல்ல, சமூக விஞ்ஞானிகளுக்கும் மொழியியல் ஆய்வாளர்களுக்கும், சைவமதவாதிகளுக்கும், வேர்களைத் தேடியறியத் துடிக்கும் இளந் தலைமுறையினருக்கும் மிகுந்த பயனுள்ள ஆவணமும் ஆகும். இச் சரிதவியலை நூலாகப் பதிப்பிப்பதன் நோக்கம் இவை மட்டுமேயாகும்.**

**ராஜ ஸ்ரீகாந்தன்**
பதிப்பாசிரியர்,
''பவானி''
வதிரி.

20, எசக்கிமுத்து பிளேஸ்,
கொழும்பு - 01300,
2004 . 03. 11.

# முன்னுரை

**பேராசிரியர். கார்த்திகேசு சிவத்தம்பி**
**தகைசார் ஓய்வு**நிலைப் பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம்

**கா**லஞ்சென்ற சைவத் திருவாளர் கா.சூரன் அவர்களின் "வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாலய வரலாறும் எனது நிலைமையும்'' என்ற மீள் நினைவுக் குறிப்பிற்கு எழுதப்பெறும் முன்னுரை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முந்நூறு முதல் இருபதாம் நூற்றாண்டின் முந்நூறு வரையிலான காலப்பகுதியில் யாழ்ப்பாணச் சமூகம் இயங்கிய முறைமை பற்றி அறிவதற்கான ஒரு முக்கிய சான்று - அதுபற்றிய சில குறிப்புகள்

I. இவ்வெளியீட்டில் இடம்பெறும் திரு.சூரனது நினைவுக் குறிப்புகள் அவரின் பெருமுயற்சியால் நிலைபேறுடைமை பெற்றதும், இப்பொழுது தேவரையாளி இந்துக் கல்லூரி என அறியப்படுவதுமான பாடசாலை நிறுவப்பட்டு சைவ ஆங்கிலப் பாடசாலையாக வளர்ந்த காலம்வரையான தன்னிலைக் குறிப்பாகும்.

திரு. சூரன் அவர்கள் தாம்வாழ்ந்த காலத்தில் கரவெட்டி, வதிரி, அல்வாய், கொற்றாவத்தை ஆகிய பெருங்கிராமங்களிலே பெருமதிப்புடைய ஒருவராக வாழ்ந்தவர். 1881ஆம் ஆண்டில் பிறந்த அவர் 1956ஆம் ஆண்டில் காலமானார். இக்குறிப்பு 1954 இல் எழுதி முடிக்கப் பெற்றதாகத் தெரிகிறது. இதனை எப்பொழுது எழுதத் தொடங்கினார் என்பது தெரியவில்லை. குறைந்தது ஆறுமாதகாலமாவது எடுத்திருத்தல் வேண்டும். தமது 72, 73 ஆம் வயதில் அவர் இதனை நிறைவு செய்துள்ளார். எழுதியுள்ள விடயங்களைப்பற்றிய நினைவுகளில் "தளர்வு" ஏதும் காணப்படவில்லை. தமது கண்ணோட்டத்தினை குறித்த அழுத்தத்துடனே எழுதியுள்ள இவர் இக்குறிப்பிற் பாடசாலையையும் அதன் வளர்ச்சியையும் பற்றிய விடயங்களையே மையப் புள்ளியாகக் கொண்டு இதனுடன் குறிப்பிடுகின்ற வகையில் வருகின்ற தகவல்களையும் தரவுகளையும் தருகின்றார். அந்த அளவில் அது ஒரு "ஆள்நிலை'' (Personal) ஆவணமாகும். இதிற் காணப்பெறும் குறிப்புக்களில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் 20ஆம் நூற்றாண்டினது முதலிரு தசாப்தங்களினதும் வரலாற்றில் இடம்பெறும் பலரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்களும் சம்பவங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அந்த அளவில் இவ் ஆவணம் பல வரலாற்றுத் தரவுகளை ஒன்றுடனொன்று இணைத்து நோக்கு வதற்கான ஒரு தடயமாகவும் அமைகின்றது. குறிப்பாக வடமராட்சி பகுதியின் அக்கால வரலாறு இதனூடாகப் பார்க்கக்கூடிய ஒன்றாக அமைகின்றது.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு அங்கு வளர்ந்து வாழ்ந்தவன் எனும் முறையிலும், குறிப்பாக இளமைப்பருவத்து சமூகத் தொழிற்பாடுகள் மூலம் அப்பகுதியின் வாழ்க்கை முறையின் ஏற்ற இறக்கங்களை, நீள அகலங் களை நேரே கண்டவன் எனும் முறையிலும் இக்குறிப்பினை இந் நூலில் வரும் விடயங்களை வாசிக்கும்பொழுது எனக்கு ஏற்பட்ட பதிற் குறியாகவே (Response) கொள்ளல் வேண்டும். சூரன் அவர்களது இந்த நினைவுக் குறிப்பை வாசிக்கும் பிறதுறைப் புலமையாளருக்கு இது அவரவர் தேவைக்கேற்ப ஒளி பாய்ச்சக்கூடிய ஆற்றலையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதையும் உணருகின்றேன்.

II. ஈழத் தமிழ் மக்களின், குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்து தமிழ் மக்களின் ஆங்கில காலனித்துவகால வரலாற்று பரிச்சயம் உடையவர்களுக்கு சூரனது இக்குறிப்பு ஆறுமுகநாவலர் (1822 - 1879) தொடக்கிவைத்த சைவக்கல்வியின் விஸ்தரிப்பு, அவர் காலத்தின் பின்னர் எவ்வாறு அவர் இறுக்கமாக வரையறைவு செய்த சமூக வரம்புகளை உடைத்துச் செல்கின்றது என்பதனைக் காட்டுவதாகவுள்ளமை புலப்படும். நாவலர் இறந்த இரண்டு ஆண்டுகளின் பின்னர் பிறந்த சூரனது இக்குறிப்பை வாசிக்கும்பொழுது நாம் முதலில் அவதானிப்பது அவர் கிறிஸ்தவ மிஷனரிமாரது மதம்சார் முயற்சிகளை எத்துணை ஆழமாக வெறுத்தார் என்பதாகும். கிறிஸ்தவத்தின் பரம்புகை காரணமாக தமக்கோ, தமது குடும்பத்திற்கோவிருந்த சமூக முக்கியத்துவம் குறைவுறுகின்றமை யைக் கண்டும் கிறிஸ்தவத்தை எதிர்ப்பவர்களும், சைவப் பண்பாட்டுச் சூழலை எவ்வாறு கிறிஸ்தவ வாழ்க்கைமுறை "மாசுபடுத்துகின்றது" எனக் கொண்ட பலரும் மிஷனரிக் கல்வியை எதிர்த்து தமது குழந்தைகள் கல்வி பயிலும் சூழலில் சைவப் பண்பாடு காணப்படவேண்டும் என்று விரும்பிப் போராடிய ஒரு சூழலில் - அந்தச் சைவப் பண்பாட்டின் முக்கிய நிறுவனமாகக் கொள்ளப்பட்ட கோயிலிற்குள்ளே செல்ல அனுமதிக்கப்படாத சாதியொன்றினைச் சார்ந்தவர் சைவக் கல்வியின் பேணுகைக்காக, அதனிலும் பிரதானமாக தமது பிள்ளைகள் சைவச் சூழலிலேயே கற்பிக்கப்படவேண்டும் என்று கூறி நிற்பது அவருடைய ஆளுமையின் வலிமையையும் அசாதாரணத் தன்மை யையும் காட்டுகின்றது.

யாழ்ப்பாணச் சைவக் கல்வியின் வளர்ச்சிபற்றி ஆர்வங்கொண்டிருந்த இத்தகையோரது சாதனைகள் பற்றி எழுதுவதோ, ஆய்வுகள் மேற்கொள்வதோ



இன்னும் காணப்படாதுள்ளமை கல்வி வளர்ச்சி பற்றிய நமது கருத்து நிலைகள் பற்றி பல வினாக்களைக் கிளப்புகின்றது. இந்த விடயம்பற்றிச் சிந்திக்கும் பொழுது இந்து போட் (Hindu Board) இராசரத்தினம் அவர்களது சேவையை நினைவுகூர வேண்டியுள்ளது. இந்த நூலிலேயே சூரன் இந்து போட் இராசரத்தினத்துடன் கொண்டிருந்த உறவு புலனாகின்றது. இந்துக் கல்விச் சபையின் முக்கியஸ்தராக விளங்கிய திரு. இராசரத்தினம் அவர்களது வரலாறு இன்னுந்தான் சரியாக எழுதப் படவில்லை. யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்தின் சமூகக் காரணிகள் பற்றிய ஆய்வுகள் குறித்த மௌனம் (ஆய்வுகள் செய்யப்பட்டிருப்பின் அவை வெளியிடப்படாமை நமது கல்விப்புல ஆய்வு நோக்குகளின் வரையறைகளையே எடுத்துக் காட்டுகின்றது என்று கூறலாம்) அந்தச் சமூகக் காரணிகளை எமக்குக் காட்டுகின்றன.

உண்மையில் இந்தக் கல்வி விஸ்தரிப்பினை நாம் நமது சமூகத்தின் நவீன மயமாக்கத்தின் ஓர் அம்சமாகவே எடுத்துக்கொள்ளல் வேண்டும். குறிப்பாக ஆறுமுக நாவலரின் பின்னர் சைவாங்கில கலாசாலை முறைமைக்கு முன்னோடியாக அமைந்த யாழ்ப்பாண இந்துக் கல்லூரி நிறுவுகையும் அதில் ஆங்கிலவழிக் கல்வி மேற்கொள்ளப்பட்ட முறைமையினையும் நோக்கும் போது நாவலரின் பின்னர் நாவலர் வழிவந்தோர் - நாவலரது கல்விக் கோட்பாட்டை விடுத்து (அதாவது சைவத்தமிழ் இலக்கண இலக்கிய சைவசித்தாந்தக் கற்கை என்பன வற்றை பிரதானப்படுத்தாமல்) காலத்தின் நன்மைகளை முழுமையாகப் பெற்றுக் கொள்வதற்கான வகையில் சைவப் பண்பாட்டு வரையறைக்குள் ஆங்கிலம் படிப்பதையே மேற்கொண்டனர் என்பதைக் காட்டுகின்றது. அத்தகைய பாடசாலைகளில் அவர்கள் தங்கள் சமூகச் சலுகைகளை மிகக்கவனமாகப் பேணிக் கொண்டனர் என்பதற்கு அத்தாட்சியாக விளங்குவது இந்த சைவாங்கிலப் பாடசாலைகளில் தாழ்த்தப் பட்ட மக்களை நீண்ட காலம் சேர்த்துக் கொள்ளாமையாகும். சூரனினது முயற்சியின் முதற் கட்டம் சைவத் தமிழ்ப் பாடசாலையை நடாத்துவதே என்பதை நோக்கும்பொழுது அவரது சேவையின் சைவ நிலைப்பாடு மேலும் துலக்கமாகின்றது. இந்நூலில் வரும் சில குறிப்புக்கள் சூரனது மத ஆளுமை பற்றி அறிவதற்கு உதவுகின்றது. பூவற்கரை அண்ணமார் கோவிலில் (இது இப்பொழுது பூவற்கரைப் பிள்ளையார் கோவிலாக உள்ளது) மிருக பலியை நிறுத்தியமையும் தொடக்கப் பெற்ற பாடசாலையில் ஓரறையில் படங்கள் வைத்துப் பூசை செய்தமையும், குறிப்பாக திருவெம்பாவைப் பூசையை மிகச் சிறப்பாகச் செய்தமையும் அவரது மத உணர்வின் ஆழத்தைக் காட்டுகின்றன.

இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது சூரனை நமது மத இலக்கிய பாரம்பரியத்தில் அதிகம் பேசப்படுபவரான நந்தனாருடன் ஒப்புமை காணத்தக்க ஒருவராகப் பார்க்கவே பலர் விரும்புவர். ஆனால் இவரது சேவைக்கான உரிய மதிப்பை வழங்கவேண்டுமெனில் இவரை ஆறுமுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரது சேவையின் விஸ்த்தரிப்பாகவே கொள்ளல் வேண்டும். இவரது சேவைகள் அக்காலத்தில் முக்கியஸ்த்தர்களாக விளங்கிய சிற்றம்பலம் மணியகாரர், தி. சதாசிவ ஐயர், இந்து போட் இராசரத்தினம் முதலியோர்களாலும் கொழும்பில் வாழ்ந்த காராளப்பிள்ளை முதலியவர்களாலும் மதிக்கப்பெற்றது என்பதனை மறந்து விடலாகாது. மேலும் இவரது சேவையை அக்காலத்து "இந்துசாதனம்" பத்திரிகையும் பாராட்டியுள்ளது என்பதும் மிக முக்கியமான ஒரு குறிப்பாகும். தன்னுடைய வாழ்க்கைப் போக்கின் ஒறுப்பான எளிமை காரணமாக பிற்காலத்தில் தமது பகைவர்களாலேயே மதிக்கப்பெற்ற சூரனது கல்விப்பணி உண்மையில் ஆறுமுக நாவலர் மட்டத்திற்கு வைத்து நோக்கத் தக்கது என்றே கருதுகிறேன்.

1992, 93 இல் அரசினர் வெளியிட்டுள்ள சமூகக் கல்வி தொடர் நூல்களில் காணப்பட்ட குறைகளை நிவர்த்திசெய்வதற்கான ஒரு முயற்சி யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டபொழுது பாடப் புத்தகங்களில் வரும் நமது பெரியார்கள் பற்றிய வழமையான பெயர்ப் பட்டியலை விஸ்த்தரிக்க வேண்டுமென்றும் அண்மைக்காலத்தில் நம்மிடையே வாழ்ந்தவர்கள் சிலர் முக்கியத்துவப்படுத்தப்படவேண்டுமென்றும் எடுத்துக்கூறி 20 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண வாழ்க்கை முறைப் போக்கில் திருப்புமுனைகளாகக் கொள்ளத்தக்கவர்களான எஸ். ஹன்டி பேரின்பநாயகம் அவர்களினதும் சூரன் அவர்களினதும் பெயர்களை நான் கூறினேன். சூரன் பற்றிப் பலருக்கு, குறிப்பாக வடமராட்சிக்கு வெளியில் உள்ளவர்களுக்குத் தெரியாமலேயே இருந்தது.

திரு. சூரனது வாழ்க்கை வரலாறு யாழ்ப்பாணத்துச் சமூக வரலாற்றின் முக்கிய தொடுபுள்ளிகளுள் ஒன்றாக அமைதல் வேண்டும். யாழ்ப்பாணத்து தாழ்த்தப்பட்ட மக்களினது மதப் பண்பாடு சைவமே என்பதனை நிறுவன ரீதியாக முதன்மைப்படுத்தியவர் திரு. சூரனேயாவார். இந்த உண்மை மறக்கப் படக்கூடாததாகும்.

சூரன் அவர்கள் வடமராட்சியில் செய்ததுபோன்ற ஒரு பணியினை யாழ்ப் பாணத்தின் பிற பிரதேசங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் எவரேனும் செய்துள்ளனரா என்பது தெரியவில்லை. காரைநகர் போன்ற இடங்களில் அத்தகையோர் தோன்றுவதற்கானதோர் வாய்ப்பிருந்தது. நம்மிடையே அது பற்றிய போதிய விபரங்கள் இல்லை. திரு. சூரன் போன்ற சைவமதச் செயற் பாட்டாளராக வேறு யாராவது இருப்பின் அவர்களது பெயர்களையும் சாதனை களையும் வெளிக் கொணர்வது அத்தியாவசியமாகும்.

III. இத்தகைய செயலூக்கம்கொண்ட ஒருவர் வதிரி பள்ளர் சமூகத்திலிருந்து மேற் கிளம்பியமைக்கான சமூகக் காரணிகளை அறிந்துகொள்வது மிகமிக அவசியமானதாகும்.

தேசவழமை மரபின்படி யாழ்ப்பாணச் சமூகத்தில், குறிப்பாக வெள்ளாளருக்கு அடிமை குடிமைகளாக குறிப்பிடப்படுபவர்கள் கோவியர்,



நளவர், பள்ளர், சிவியார் என்னும் நான்கு சாதிகளுமாவர். இந்நிலமை 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிலவிய ஒன்றாகும். இவர்களைவிட அக் காலத்திற் குடிமைகள் என மாத்திரமே கொள்ளப்பட்ட வண்ணார், அம்பட்டரும் இருந்தனர். துரதிஷ்டவசமாக தேச வழமைச் சட்டம் அடிமை குடிமை என்பதிலுள்ள வேறுபாடுகளைக் காட்டவில்லை. இச்சட்டத்தின் ஆங்கில வடிவத்தில் நான்கு பகுதியினரும் 'Slaves' என்றே குறிக்கப்படுகின்றனர்.

இவ்விடத்திலேதான் யாழ்ப்பாணத்தில் அந்நியர் வருகைக்கு முந்திய நிலப் பிரபுத்துவ முறைமை பற்றி அறியவேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் அந்நியர் காலத்திற்கு முன் நிலவிய பொருளாதார நிலைமையினை முற்றுமுழுதாக நிலமானிய (Feudal) என்று, குறிப்பாக ஐரோப்பிய மரபில் அது கொள்ளப்படும் முறைமையில் சொல்லவே முடியாது. தரப்பட்டிருக்கும் பட்டியலில் இறுதியில் குறிப்பிடப்பட்ட சிவியார் பல்லக்குகளைக் காவுபவர்களாகவே கொள்ளப்படு கின்றனர். இதனை முதலிமாருக்குரிய ஒரு அந்தஸ்த்துச் சின்னமாகக் கொள்ள வேண்டுமே தவிர சாதாரண வெள்ளாளர் எல்லோருக்குமுரிய ஒரு அந்தஸ்த்துச் சின்னமாகக் கொள்ளமுடியாது. சிவியார் என்று கொள்ளப்படுபவர்களின் சனப் பரம்பலைப் பார்க்கும்போது அவர்கள் யாழ்ப்பாணத்தில் எல்லா இடங்களிலும் இருந்ததாகத் தெரியவில்லை. மற்றைய மூவரில் கோவியர்கள் வெள்ளாள ருடைய வீடுகளின் உள்ளே சென்று புழங்கக்கூடிய அருகதை உள்ளவர்கள். இவர்கள் பெரு வெள்ளாளக் குடும்பங்களின் அன்றாட நடவடிக்கைகளில் மாத்திரமே ஈடுபட்ட னர். வெள்ளாளர் எல்லோருக்கும் சில சடங்குநிலைப்பட்ட பணிகளையாற்றினர். எனினும் அன்றாட வாழ்க்கையில் பெரிய வெள்ளாளக் குடும்பங்களுக்கே குடிமை செய்தவர்களாக இவர்கள் கொள்ளப்படல் வேண்டும். இச் சாதியினர் பற்றிய இன்னொரு முக்கிய குறிப்பு, இச்சாதியினர் தமிழகத்தில் இல்லாமையாகும். இதன் காரணமாக குறிப்பாக இந்தச் சாதி முறைமையை யாழ்ப்பாணத்தின் சிறப்பு அகக் காரணிகள் காரணமாக நடைமுறைக்கு வந்தது என்றே கொள்ளல் வேண்டும்.

நளவர், பள்ளர் எனக் கொள்ளப்படும் சாதிகளுள் நளவர் எனும் சாதிப் பிரிவு தமிழகத்தில் இல்லை. கேரள மரபில் ஈழவர்கள் என்று சொல்லப்படும் சாதியினர் இலங்கையிலிருந்தே வந்தவர்கள் என்ற ஒரு செவிவழிச் செய்தி உண்டு. அந்த ஈழவர்தான் இங்குள்ள நளவர் சமூகத்தினராய் இருந்திருத்தல் வேண்டும் என்று கூறுபவர்கள் உள்ளனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அந்நியர் ஆட்சியின் வருகையின் முன்னரே இவர்கள் வெள்ளாளருடைய நிலபுல வேலைகளைச் செய்பவர்களாய், பெரும்பாலும் அவர்களது காணிகளிலேயே வசித்தவர்களாவர். (ஒல்லாந்தர் காலத்தில் தோம்புகளைத் தயாரித்தவர்கள் அவ்வவ் ஊர்களின் தலைமைக்காரர்களாக இருந்தமையால் குறிப்பாக அடிமைக் குடிமைச் சாதிகளின் நிலங்களை தங்களுடையது என பதிந்தும் இருக்கலாம்) தோம்புக்கு முன்னர் நில உரிமைக்கான உறுதி வாய்வழக்கிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் எவ்வாறு இருந்ததெனத் தெரியவில்லை. வடமராட்சிப் பகுதியை எடுத்துக்கொண்டால் 20 ஆம் நூற்றாண்டின் முதல் நான்கு தசாப்தங்களிலும் இந்த நிலைமை நிலவியது. (சோல்பரி பிரபு பருத்தித்துறைக்கு வந்தபொழுது வடமராட்சிப் பகுதியில் நளவ மக்கள் படும் பாட்டைக் காட்டுவதற்கு அவர்களை நெல்லியடியில் நடந்த உபசாரத்தின் பின்னர் கரவெட்டிக் கிராமத்தின் தெற்கெல்லையில் உள்ள பகுதிகளுக்குக் கொண்டு செல்ல அதனால் கரவெட்டியில் இரண்டொரு நாட்கள் சலசலப்பு ஏற்பட்டிருந்தது என்பதை நான் எனது பதின்நான்காவது வயதில் அறிந்திருந்தேன்). குறிப்பாக கரவெட்டியில் பெரும்பாலும் இந் நிலைமையே காணப்பட்டதெனலாம்.

யாழ்ப்பாணத்தின் மற்றைய பகுதிகளில் நிலைமை எவ்வாறிருந்தது என்பதை என்னால் சொல்ல முடியாது. ஆனால், வடமராட்சியில் குறிப்பாக கரவெட்டி, வதிரி ஆகிய பகுதிகளில் வாழ்ந்த பள்ளர் சமூகத்தினர் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க தசாப்தங்களிலேயே தமக்கென காணிநில உருத்துடையவர்களாகவும் நிலப் பிரபுக்களின் நிலபுலங்களில் வேலை செய்யவேண்டிய கட்டாயமில்லாதவர்களாகவுமே இருந்தனர். திரு. சூரன் பாடசாலைக்கான காணியின் உறுதியைப் பற்றிப் பேசுகிறபொழுது இவ் உண்மை புலப்படுகிறது. வடமராட்சி பள்ளர் சமூகத்தில் குறிப்பாக கரவெட்டி, வதிரி பகுதிகளில் வாழ்ந்த பள்ளர் சமூகத்தினரின் பொருளாதாரச் சுயாதீனம் பற்றிப் பேசுவதன் முன்னர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலிருந்தே இந்த அடிமை குடிமை முறைமையில் கூறப்பட்டு வந்துள்ள ஒரு மிகமிக முக்கியமான விடயத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். அதாவது அடிமை குடிமைகளுக்கும் தத்தமக்கென சொத்துரிமை இருந்தது. எனவே எல்லா நிலங்களும் நிலப் பிரபுக்களின் சொந்தமாக இருந்திருத்தல் முடியாது.

இதற்குமேல் முக்கியமாவது 1844 முதல் சட்ட ரீதியாக அடிமைமுறை ஒழிக்கப் படுகிறது. அதனிலும் முக்கியமான தகவல் என்னவெனில் ஆண், பெண் அடிமைகள் பற்றிப் பேசும் பகுதியில் இந்த அடிமை குடிமைகள் எனக் கொள்ளப்படுபவர்கள் தங்களை தமது கட்டுக்களிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம். (பார்க்க - “யாழ்ப்பாணம்” பக்கம் 25 ). “இட்டம் போதல்” (இஸ்டம் போதல்) எனும் இவ்வழக்கே 20 ஆம் நூற்றாண்டின் 3 ஆம், 4 ஆம் தசாப்தங்களில் வடமராட்சியிற் பெருவழக்காகவிருந்த தொடராகும். கரணவாய், அச்சுவேலிப் பகுதியில் உள்ள கோவிய சமூகத்தினர் பற்றி இக்குறிப்பு இருந்தது. வதிரி, கரவெட்டி ஆகிய கிராம்ங்களில் வாழ்ந்துவந்த பள்ளச் சமூகத்தினர் பற்றி இத்தொடர் பயன்பாடு இருந்ததாகத் தெரியவில்லை.

இப்பள்ளச் சமூகத்தில் மூன்று பிரிவினரை முக்கியமாகக் குறிப்பிடல் வேண்டும்.

(அ) மரமேறிகள்

(இவர்கள் பனைமரத்தில் ஏறி சீவல்தொழில் செய்தவர்கள்)



(ஆ) வேர்க்குத்திப் பள்ளர்

(இவர்கள் துணிகளுக்கு சாயம்போடுவதற்கான கலவைகளை சாய வேர்களிலிருந்து தயாரிப்பவர்கள். அக்காலத்தில் பறைய சமூகத்தவர்கள் துணி நெசவில் ஈடுபட்டிருந்தனர்.)

(இ) செருப்புக் கட்டுபவர்கள்

(பதனிட்ட ஆடு, மாட்டுத்தோலைச் செருப்புக் கட்டுதலுக்காகப் பயன்படுத்தியவர்கள்.)

பள்ளச் சமூகத்தினருள் இவர்கள் மிக முக்கியமானவர்கள் - ஆங்கிலேய ஆட்சி யின் வழிவந்த நவீன மயமாக்கமும் மேனாட்டு மயமாக்கமும் உள்ளூர் வாசிகளின் நடையுடை பாவனைகளிலே பெருமாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கின. உத்தியோகம் பார்ப்போரும் கற்றோரும் செருப்பு, சப்பாத்து அணிதலென்பது இயல்பாயிற்று. நாடு முழுவதிலும் காலணித் தேவை பெரிதாக வளர்ந்துகொண்டு சென்றது. இவ்வாறு புதிதாகத் தோன்றிய சந்தைக்கு வேண்டிய காலணிகளை வதிரியைச் சேர்ந்த இப்பள்ளர் சமூகத்தினரே செய்தனர். இவர்கள் 1915, 1916 இலேயே கொழும்பு, கண்டி, இரத்தினபுரி, காலி ஆகிய பெருநகரங்களில் செருப்பு, சப்பாத்து கடைகள் வைத்திருந்தனர். இவர்களில் ஒரு சிலர் முதலாளிகளாகவும், பலர் கடைகளுக்குத் தேவையான செருப்பு, சப்பாத்துக்களை செய்து கொடுப்பவர்களாகவும் விளங்கினர். உண்மையில் ‘பாட்டா’ கொம்பனி (Bata Company)இன் வருகைக்கு முன்னர் இவர்களே இச்சந்தையை தமது தனியுரிமையாகக் கொண்டிருந்தனர். (1950, 60 கள் வரை கொழும்பில் மருதானையிலும் புறக்கோட்டையிலும் காலணிகள் செய்தல், விற்பனை இவர்கள் கையிலேயே இருந்தது. பாக்கியமலர், நியூ பூட் எம்போறியம் போன்ற பல நிறுவனங்கள் இருந்தன) பாடசாலையை நடத்துவதற்கு இவ்வியாபாரிகளிடத்தேயே பணம் பெற்றதாக சூரன் கூறுகிறார். இக்கடை முதலாளிகள் வழியாகவந்த உபரிச் செல்வம் அவர்களுடைய பொருளாதார நிலையைப் பலப்படுத்தியதுடன் மேல் நிலையாக் கத்திற்கும் வழிவகுத்தது. திரு. சூரனுடைய எழுத்தை வாசிக்கும் போது பாடசாலை ஸ்தாபிதமானதன் பின்னர் பாடசாலை நிருவாகம் சம்பந்தமாக ஏற்பட்ட பல பிணக்குகளுக்கு அவர்கள் சமூகத்தில் ஏற்பட்ட அகநிலை வேறுபாடுகள் காரணமாக இருந்தன எனக் கொள்ளலாம் போலத் தெரிகிறது.

பனையேற்றத்தில் ஈடுபட்டிருந்த பள்ளர் சமூகத்தினருள் கள் விற்பனையில் ஈடுபட்டிருந்தோர் அதிக தொகையினர் எனக் கூறமுடியாது. இவர்களிலிருந்தே பலர் படிப்படியாகத் தச்சு வேலைக்கு வந்தனர் என்பது இந்த ஆவணத்தை வாசிக்கும்போது நன்கு புலனாகிறது. பனை மரங்களைத் தறித்து, தறித்த மரங்களிலிருந்து வளைகள், கப்புகள் தயாரித்தல், வீட்டு கோப்பு வேலைகளைச் செய்தல் போன்றவற்றிலேயே இவர்களின் பிரதான கவனம் இருந்தது என்பது புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சூரன் அவர்களே தச்சு வேலையில், குறிப்பாக அதன் தொழில் நுட்பங் களிற் கைதேர்ந்தவராக இருந்தாரென்பது அவர் கத்தோலிக்கக் குருமாரின் ஊர்வலத்தில் பயன்படுத்திய தொழில் நுட்பத்திலிருந்தும் கத்தோலிக்கக் குருமாரை அழைத்துச் செல்வதற்குச் செய்த சகடை தொழில்நுட்பத்திலு மிருந்தும் நன்கு தெரியவருகிறது. சூரன் அவர்களை ஆசாரியார் என்றே கரவெட்டி, வதிரி ஆகிய கிராமங்களிலுள்ள பிறசாதியினரும் அழைத்தனர்.

மேற்கூறியவை காரணமாக வதிரிப் பள்ளர் சமூகம் பிற சாதியினரின் ஆதர வின்றி தாமே தமது முன்னேற்றக் கருமங்களைச் செய்யக்கூடிய நிலையில் இருந்தனர். கரவெட்டியில் வாழ்ந்த நளவ மக்களைப் பொறுத்தவரையில் இத்தகைய ஒரு நிலை அக்காலத்தில் காணப்படவில்லை. சூரன் அவர்கள் தமது குறிப்பில் கரவெட்டி 'மாணிக்கவாசக வித்தியாலயம்' என்னும் 'புதுப்பள்ளிக் கூடத்தில்' தாழ்த்தப்பட்டோர் சேர்க்கப்பட்டதாகக் கூறுகிறார். 1937 இல் அந் நிலமை இருக்கவில்லை. கரவெட்டி மேற்கின் அச்சமூகப் பிள்ளைகளுக்காக ஐந்தாம் வகுப்பு வரையே இயங்கிய 'விநாயகர் வித்தியாலயம்' என்னும் பாடசாலை இருந்தது. இது கரவெட்டி மேற்கிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அண்மித்தே காணப்பட்டது. மேலும் இவர்களுக்கு மேலாக இவர்களிடையே இருந்த வைத்தியர்கள் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். இவ் வைத்தியர்களிற் பலர் மற்றைய சாதி மக்களுக்கும் சிகிச்சை செய்து வந்தனர். 30 களில் கரவெட்டி கீரிப்பல்லியில் இருந்த மார்க்கண்டு வைத்தியர் அப்பகுதியில் மிகப் பிரபலமான வைத்தியராயிருந்தார். இவ்வாறு நோக்கும்பொழுது 1915 ஆம் ஆண்டளவிலேயே பொருளாதார சுயாதீனமுள்ளவர்களாக கரவெட்டி, வதிரி பள்ளர் சமூக மக்கள் காணப்பட்டனர். இந்தச் சமூக பொருளாதார பின் புலத்திலேயே அவர்கள் தமது மதப் பண்பாட்டு அடையாளம் பற்றி பிரச்சினை உடையவர்களானார்கள். குறிப்பாக வியாபாரிகளாக விளங்கியவர்கள் தாங்கள் வியாபாரம் நடாத்திய ஊர்களில் உள்ள கோயில்களில் எவ்வித பிரச்சனையும் இன்றிச் சென்றுவர முடிந்தது. கரவெட்டி, வதிரிப் பகுதிகளில் வாழ்ந்த சில பள்ளர் சமூக மக்கள் இந்தப் பாடசாலை வருவதற்கு முன்னர் பெரும்பாலும் அங்கிருந்த மிஷன் பாடசாலையிலேயே படித்தனர்.

சூரனவர்கள் குறிப்பிடும் மிஷன் பள்ளிக்கூட தலைமையாசிரியர் அவர்களின் குடும்பம் பருத்தித்துறையின் முக்கிய கிறிஸ்தவ குடும்பங்களில் ஒன்றாக விளங்கியது. அவர்களது பிள்ளைகள் ஹாட்லிக் கல்லூரியில் பயின்றவர்கள். அவர்களில் ஒருவர் அனைத்திலங்கை கரப்பந்தாட்ட வீரராக விளங்கியவர். மேலும் இச்சமூகத்தினருடைய பொருளாதார சுயாதீனம் பண்பாட்டுச் சிரத்தை ஆதியன அக்காலத்தில் கரவெட்டி, வதிரியில் வாழ்ந்த பல முக்கியஸ்தர்களின் ஆதரவைப் பெற்றுத் தந்தது என்பது புலனாகிறது. இவ்வகையிற் சித்தமணியம் எனக் குறிப்பிடப்படும் சிற்றம்பல முதலியார் மிக முக்கியமானவராவார். சித்தமணியமும் ஆசாரியாரை நட்புணர்வுகொண்டே நடாத்தினார் என்று கூற நான் கேட்டுள்ளேன்.



IV. இக்கட்டத்தில் இவ் ஆவணம்பற்றிய சற்று உன்னிப்பான நோக்கு அவசிய மாகிறது. சூரன் அவர்கள் தனது 72 ஆவது வயதிலேயே இதனை எழுது கின்றார். இதையெழுதிய இரண்டு வருடங்களுள் (1956 இல்) அவர் கால மானார். மீள் நினைவுக் குறிப்பினை முழுதாக வாசிக்கும்பொழுது அவரது எடுத்துரைப்பில் (Naration) இரண்டு துல்லியமான கட்டங்கள் காணப்படக் கூடியனவாக உள்ளன.

1. பாடசாலை நிறுவப்பட்டு கிறான்ற் உதவி நன்கொடையை பெறும் நிலை ஸ்தாபிதமாதல்.
2. அவர் மனேஜராகக்கூட (முகாமையாளர்) இருக்க முடியாது ஒதுங்கி வாழ்ந்த ஒருகாலம். அந்த இடத்தில் அவர் தன்னையும் தன்நிலைப் பாட்டையும் நியாயப்படுத்தும் முறைமையில் எழுதியுள்ளமை அவதானிக்கப்படவேண்டிய ஒன்றாகும். ஆயினும் அவரே பாடசாலையை நிறுவியவர் என்பதில் அச்சமூகத்தினுள் கருத்து வேறுபாடு இருக்கவில்லை. அதில் அவரது மனது திருப்தியாக இருந்தது என்பதும் நமக்குத் தெரிகிறது.

மேற்குறிப்பிட்ட இரண்டாம் நிலையில் நடைபெற்ற கோட்டு வழக்கே முக்கியமாகிறது. அந்த இடங்களிலும்கூட அவர் கூற்றுக்களில் நம்பமுடியாத் தன்மை இருக்கவில்லை.

இம்மீள் நினைவுக் குறிப்பின் பெறுமதி உண்மையில் 1930கள் வரையுள்ள காலப்பகுதியேயாகும். அக்காலப்பகுதியிலேதான் பாடசாலை நிறுவப்படுவ தற்கான உத்தியோகபூர்வ பதிற்குறிகள் முக்கியமாகின்றன. அதனிலும்பார்க்க ஆரம்ப காலத்தில் குறிப்பாக உதவி நன்கொடை தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் தகுதிவாய்ந்த ஆசிரியர்களை நியமிப்பதில் உள்ள சிக்கல்களும் தங்களுடைய சமூக மாணவர்களை ஆசிரியர்களாகப் பயிற்சி அளித்து எடுப்பிப்பதில் உள்ள சிரமங்களும் தெளிவாகின்றன. உண்மையில் பாடசாலை ஜுனியர் செக்கண்டரி தரத்திற்கு உயர்த்தப்படும்வரையுள்ள காலகட்டமே சமூக வரலாற்றுப் பின்புலத்தில் நோக்கும்போது மிகமிக முக்கியமானதாகிறது. அந்தக் காலத்துக்கு உரிய உத்தியோகத்தர்களின் பெயர்களைப் பார்க்கும்போது இவ் ஆவணம் உரிய நேர்மையுடனேயே பதிவு செய்யப்பட்டுள்ளது தெளிவாகிறது.

தனது செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை நிலைநிறுத்துவதற்காகவே எழுதப்பட்டுள்ளதெனினும், பின்பலமாக அமையும் தரவு அளிக்கையில் குறிப்பாக உத்தியோகபூர்வ விடயங்களைப் பற்றிக் கூறுகையில் தங்கு தடையற்ற ஓர் ஓட்டமே காணப்படுகிறது.

நாற்பதுகளின் பிற்பகுதிகளிலும் ஐம்பதுகளிலும் இந்தப் பாடசாலையை மையமாகக் கொண்டே அச் சமூகத்தினரிடையே சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. அந்த நிலையில் இப்பாடசாலையின் தோற்றம் வளர்ச்சி பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சொந்த ஆள்நிலைக் குறிப்பையே இந்தக் குறிப்பில் தருகின்றார். இதன் காரணமாக குறிப்பாக நாற்பது, ஐம்பதுகளில் நடந்த முக்கியமான சமூக, அரசியல் விடயங்கள் பற்றிக்கூட எதுவும் சேர்த்துக் கொள்ளவில்லை என்பது புலனாகிறது. உதாரணமாக சோல்பரி பிரபுவிற்கு நெல்லியடியில் வரவேற்புக் கொடுத்தபோது அப்பகுதியில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பற்றிய தகவல்களை மறைப்பதற்கு நடந்த முயற்சிகள். 1947 ஆம் ஆண்டு தேர்தல், வதிரி, அல்வாய் பள்ளர் சமூகத்தினரிடையே ஜெயம் என்ற செ. தர்மகுலசிங்கத் திற்கிருந்த மதிப்பு, 1947 ஆம் ஆண்டு தேர்தலில் பொன். கந்தையா மேற்கூறிய விடயம் காரணமாக இவர்களிடையே பெரிய ஆதரவைப் பெறமுடியாதுபோன நிலைமை என்பவை மிகமுக்கியமான விடயங்கள் ஆகும்.

இக்குறிப்பில் ஆ. ம. செல்லத்துரை ஆசிரியர் ஊர்ப் பொது விடயங்களில் காட்டிய ஆர்வம் - குறிப்பாக அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சியில் பெற்ற இடம் ஆதியனவும் இடம்பெறவில்லை. மேலும் தமிழரசுக் கட்சி தோன்றிய பொழுது இச்சமூகத்தைச் சேர்த்து சில ஆசிரியர்கள் அதன் ஆதரவாளர்களாக இருந்த தகவல் ஆதியன இடம்பெறவில்லை. மேலே குறிப்பிட்டபடி இவரின் மிகவும் வரையறுக்கப்பட்ட இலக்கு நோக்குக்குள் அந்த விடயங்கள் வரவில்லை.

இவை மாத்திரமல்லாமல் நாற்பதுகளின் பிற்கூற்றில் அவர் நெல்லியடி, கரவெட்டியில் தனக்கிருந்த ஒரு கௌரவமான மதிப்பைப்பற்றியும் எதுவும் கூறாமல் இருப்பது இந்தக் குறிப்பின் நம்பகத்தன்மையை மேலும் அதிகரிக் கின்றது.

1948 இல் மகாத்மா காந்தி இறந்தபொழுது, காந்தி இறந்த 31ஆம் நாள் என்று நம்புகிறேன் (அல்லது அஸ்தி கரைத்த தினமோ என்பது ஞாபகத்திற்கு வர வில்லை) திரு.சூரன் அவர்கள் நெல்லியடி மகாத்மா தியேட்டரில் மகாத்மா காந்தி பற்றி தான் பாடிய பாடல்களை சினிமா மண்டபத்தின் ஒலிபெருக்கியில் பாடியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கோட்சேயைப் பற்றிய குறிப்பு கேட்டுக் கொண்டிருந்தவரிடையே மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்திற்று.

மகாத்மா தியேட்டர் உரிமையாளர் வல்லிபுரம் இவர்பால் மதிப்புக் கொண்டிருந்தார்கள். ஆசாரியாரென அவரைத் தன்னருகே கதிரையில் இருத்தி உரையாடுவதை நான் பார்த்திருக்கிறேன்.

மெல்லிய கட்டையான தோற்றம் தலையில் ஓர் சிறிய குடுமி ஏற்கனவே கூர்மையான கண்களின் கூர்மையை மேலும் முனைப்புப்படுத்துகின்ற மூக்குக் கண்ணாடி, புத்தகங்கள், கொப்பிகள் ஒரு சிறு பட்டுச் சால்வைத் துண்டினுள் வைத்துச் சுற்றப்பட்டிருக்கும். அப்பொதியினை இடது கையில் அல்லது கமக்கட்டில் வைத்திருப்பார். பார்த்தவுடன் மரியாதையை வரவழைக்கும் முகம், நடை, இவற்றிற்கேற்ற ஒரு கௌரவமான ஒதுக்கம். நெல்லியடிச் சந்தியால்



வரும் பொழுது 'ஆசாரியார்' என்று அழைத்து தங்கள் அன்பைத் தெரிவிக்கும் பலர் இருந்தனர். சூரனவர்கள் மிகத்துல்லியமான ஒரு சைவ நிலைப்பாட்டுக் காரர் என்பது அப்பொழுது எங்கள் ஊரில் பிரசித்தம். தீண்டாமையை அகற்றி கோயிலுக்குள் தாழ்த்தப்பட்டோரை அனுமதிப்பது 1945, 52 காலகட்டங்களில் ஒரு முக்கியமான பிரச்சனையாகும். அதுபற்றிய வாக்குவாதங்களிலே சூரனும் ஈடுபடவேண்டிய தேவையேற்படும்பொழுது "எனது பிள்ளைகள் வருவார்கள் அவர்கள் கோயிலுக்குள்ளே செல்லட்டும். ஆனால் நான் உங்கள் கோயில் களுக்கே வரமாட்டேன். ஏனெனில் உங்கள் கோயில்களுக்குள்ளே சுத்தம் மிகக் குறைவு." என்று இவர் கூறியதாக மிகப்பரவலான கதையொன்று அக்காலத்தில் கரவெட்டியில் அடிபட்டது. இந்த ஒரு சம்பவமே சைவம் பற்றிய அவர் நிலைப்பாட்டை காட்டுகின்றதெனலாம்.

சூரனின் சைவசமய ஈடுபாடு பற்றிய மிகச் சுவாரசியமான தகவலொன் றைத் தருதல் வேண்டும்.

பராசக்தி படம் வெளியாகி, திராவிடர் கழகத்தினரின் பகுத்தறிவுவாதமும் நாத்திகப் போக்கும் கோயில் விடயங்களைக் கிண்டலாகப் பார்க்கும் பண்பும் வடமராட்சி இளைஞரிடையே பரவத்தொடங்கிய பொழுது இவர் பராசக்தி திரைப்படம் பற்றிய ஒரு மறுநிலை விமர்சனத்தை எழுதி அது உண்மையில் தெய்வ நம்பிக்கையை வளர்க்கின்றது என்பதைக் காட்டுகின்ற ஒரு சிறிய நூலை அச்சிட்டு வெளியிட்டார். சினிமா என்பது இளைஞர்களுக்கு மாத்திரமே உள்ள ஒரு விடயம் என்று நம்பப்பட்ட காலத்தில் அதன் தாக்க முக்கியத்து வத்தை உணர்ந்து மத எதிர்ப்புவாதங்களை எதிர்த்து எழுதியமை அவரது போராட்ட மனப்பாங்கினைக் காட்டுவதாகும்.

V. சூரன் அவர்களது இந்த நினைவுக் குறிப்பு யாழ்ப்பாணத்தின் 20ஆம் நூற்றாண்டு வரலாற்றில் குறிப்பாக அதன் முற்பகுதியில் நிகழ்ந்த சமூக வரலாற்று முக்கியத்துவமுடைய பல விடயங்களைக் கூறிச் செல்கின்றது. அவற்றை இங்கு பதிவுசெய்தல் நலம்.

> முதலில் நமது கவனத்தை ஈர்க்கவேண்டியது யாழ்ப்பாணத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் தம்மீது சுமத்தப்பெறும் சமூக ஒடுக்குமுறை களைக் கவனத்திற்கொள்ளாது தமது மத, பண்பாட்டு வாழ்க்கையின் மேம்பாட்டிற்காகவும் தொடர்ச்சிக்காகவும் சைவப் பாடசாலை யொன்றை நிறுவியதன் பின்னரும் அவ்வுயர் சமூகம் இவர்களை மேலும் எவ்வாறு துன்புறுத்தியது என்பதற்கு முக்கிய உதாரணமாக விளங்குவது பாடசாலையின் ஆரம்ப நாட்களில் நிலவிய தராதரப் பத்திரங்களுடைய ஆசிரியர்களை உடனடியாகப் பெற முடியாதிருந்த மையாகும். சூரன் அவர்களே மிகத் தெட்டத் தெளிவாக சைவ வெள்ளாள ஆசிரியர்கள் வரத் தயங்கியமையையும் மறுத்தமையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியுள்ளார். இந்தச் சைவ வெள்ளாள எதிர்ப்புணர்வு பாடசாலை முகாமையாளரை கிறிஸ்தவ ஆசிரியர்களிடம் செல்லவேண்டிய தேவையை ஏற்படுத்திற்று.

இது சம்பந்தமாக இன்னொரு உண்மையையும் குறித்தல் வேண்டும். இவ்வாறு சைவவெள்ளாள ஆசிரியர்கள் வரத் தயங்கியமைக்கான காரணம் பாடசாலை முகாமை பெயரளவில் சபாபதிப்பிள்ளையிடத்து இருந்தாலும் உண்மையில் சூரன் கையில் இருந்தமையே. ஏனெனில் வடமராட்சியிலேயே பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளைகளே படித்த அரசினர் பாடசாலைகளில் சைவவெள்ளாள ஆசிரியர்கள் படிப்பித்தலில் சிக்கல்கள் இருக்கவில்லை.

(நீண்ட நாட்களுக்குப் பின்னர் ஏறத்தாழ 1960களில் நிலமை மாறு கின்றது. அப்பொழுது தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பயிற்றப் பட்ட ஆசிரியர்கள் எல்லாச் சாதிப் பிள்ளைகளும் படிக்கும் பாடசாலை களுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டபொழுதும் சில சிக்கல்கள் ஏற்பட்டன. தெணியானின் முதல் நாவல் 'விடிவை நோக்கி' இப் பிரச்சினையை நன்கு சித்திரிக்கின்றது.)

இரண்டாவதாக நமது கவனத்தை ஈர்ப்பது 1930ஆம் ஆண்டு திரு. சி. வல்லிபுரம் அவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குச் சேர்க்கப்பட்ட பொழுது அங்கு நடந்த சமபோசன பிரச்சினையாகும். சி. வல்லிபுரம் அவர்களின் வருகை ஆசிரிய கலாசாலையின் அக்காலத்து அதிபர், உப அதிபர்களுக்கு ஏற்படுத்திய சிரமத்தினையும் வல்லிபுரம் ஆசிரியரை மற்றைய மாணவர்களோடு சமனாக இருந்து சாப்பிடாமல் தனி ஒழுங்கு செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டமை பற்றியும் சூரன் அவர்கள் மிக விரிவாகக் குறிப்பிடுகின்றார். சி. வல்லிபுரம் அவர்களைத் தொடர்ந்து திரு. ஆ. ம. செல்லத்துரை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குப் போனது பற்றியும் குறிப்பிடு கின்றார்.

இந்த விடயம் பற்றி இவர் தரும் தரவுகள் முக்கியமானவை. ஏனெனில் இந்த ஆசிரிய கலாசாலை சமபோசன விடயம் சேர். பொன்னம்பலம் இராமநாதனே தலையிட்ட ஒரு விடயமாகும். சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சமபோசனம் அனுமதிக்கப்படக்கூடாது என்று தேசாபதிக்கு ஒரு பெட்டிசம் அனுப்பியிருந்தார். இந்த விடயம் ஜோன் ரஸல் என்பவர் எழுதியுள்ள Communal Politics under the Donoughmor Constitution (1931-1947) - Colombo, 1982 என்பதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விபரத்தை "யாழ்ப்பாணம்" என்ற எனது நூலில் பார்க்கவும். (2000). சூரன் அவர்கள்



இராமநாதன் இவ் விடயத்திற் காட்டிய ஆர்வம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஒரு வேளை இந்த மட்டங்களில் அது தெரியா மலும் இருந்திருக்கலாம். 1920 களில் நடந்த சமாசன சமபோசன பிரச்சினை என்பது யாழ்ப்பாணத்து சாதி வேறுபாட்டு இன்னல்கள் பற்றிய முக்கிய விடயமாகும். துரதிஷ்டவசமாக இது பற்றிய வரலாற்று ஆய்வுகள் எதுவும் இல்லை.

இந்த நூலில் சமாசன பிரச்சினை பற்றிய சில தரவுகள் வந்துள்ளன. சமாசன பிரச்சினையில் பஸ்களிலுள்ள ஆசனங்களில் இருந்து செல்ல முடியாது அவர்கள் கீழேயே இருத்தல் வேண்டும். இப் பிரச்சினை பஸ் ஓட்டங்கள் மூலமே முக்கியப்பட்டிருந்தது. சூரன் அவர்களும் ஊர்ப் பிரச்சினை காரணமாக யாழ்ப்பாணத்திற்கு பஸ்சில் சென்றபொழுது "மட் காட்" இல் இருந்து பயணம் செய்ததைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். (சூரன் மாட்டு வண்டிலிலும் பஸ்ஸிலும் காரிலும் யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்த தரவுகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.)

iii. 1920 இன் பிற்கூற்றில் யாழ்ப்பாண அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய புள்ளியாக அமைவது யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் ஆகும். இந்திய சுதந்திரப் போராளிகள் வேண்டிநின்ற பூரண சுயராஜ்ஜியத்தையே கோரி நின்ற இவர்கள் யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதி வேறுபாட்டிற்கு எதிராகவும் போராடினர். டொனமூர் குழுவினர் சிபாரிசு செய்த ஆட்சி முறைமையினை நிராகரித்து அதன் கீழ் நடந்த தேர்தலையே பகிஷ்கரித்தார்கள். அக் காலத்தில் தமிழ், சிங்கள முற்போக்காளர்களை முன்னிலைப்படுத்தி தங்கள் அரசியற் கொள்கைகளைப் பரப்பினர். அந்த இயக்கத்தின் வருடாந்த மகாநாடுகளில் இரண்டு ஆண்டுகள் சூரன் அவர்கள் பங்கு பற்றியுள்ளமை பற்றிய தகவலை இந்நூலிலே காணலாம். (1929, 1930)

iv. சூரன் அவர்களுடைய குறிப்பில் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காணப்பட்ட கல்வி நிர்வாக ஒழுங்கமைப்பு மிகவும் துல்லியமாகப் புலப்படுகின்றது. வித்தியாகத்தர் என்பது அக்காலத்துக் கல்விப் பணிப்பாளர்களை (Director of Education) குறித்தது. வித்தியாதிபதி என்பவர் (Divisional Inspectror) மாகாண மட்டத்தில் பொறுப்பாக இருந்தவரைக் குறிப்பதாக இருத்தல் வேண்டும். வித்தியாதரிசி என்பவர் (Inspector of School) ஆவார். 1844 இற்குப் பின்னரும் நமது நாட்டின் சமூகச் சமவீனங்கள் அரசாங்க நிர்வாகத்தில் வருவதைக் குறிப்பதற்கு ஆங்கில உத்தியோகத்தர்கள் மட்டத்தில் நிலவிய கருத்து இறுக்கத்தை திரு. சூரனின் இந்தப் பதிகை மூலம் நாம் அறிகிறோம். ஆசிரிய கலாசாலை சமபோசனப் பிரச்சினையிலும் இதன் சாரம் புலப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. இவ்விடத்தில் சமூக அதிகாரப்படிநிலைப்பட்ட நமது சமூகத்தில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சி நிலைநிறுத்திய "சட்டத்தின் ஆட்சி" (Rule of Law) "சட்டத்திற்கு முன் சமன்" (Equality before Law) ஆகிய அம்சங்கள் நமது சமூகத்தில் ஜனநாயகமாக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான ஏதுக்களாக விளங்கின என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்தியாவில் பிரித்தானிய காலனித்துவம் போக்கு வரத்து முறைமை மூலமாக ஏற்படுத்திய நவீனமயவாக்கம், சமத்துவ உணர்வு ஆகியன பற்றி கார்ல் மார்க்ஸ் குறிப்பிடுவதையும் இங்கு நினைவுகூரல்வேண்டும். உண்மையில் இது ஒரு மிகமிக முக்கியமான அம்சமாகும். இந்த ஜனநாயக மயப்பாட்டின் உள்ளார்ந்த வளர்ச்சி எவ்வாறு இந்த மக்களுக்கும் சில நன்மைகளைச் செய்துள்ளது என்பதனை இந்நூல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

vi. கி. பி. 2004 ஆம் ஆண்டில் வாழ்ந்துகொண்டு 1950 இற்கு முன்னர் இலங்கையில் நிலவிய ஆசிரிய சம்பளம் பற்றிய தகவல்களைப் பார்க்கும் போது மிகுந்த ஆச்சரியமே ஏற்படுகின்றது. மாதச் சம்பளம் ரூபாய் 20 மாத்திரமே பெற்று வந்த ஒரு வித்தியாதரிசிக்கான இலஞ்சப் பணம் ரூபாய் 50 மட்டுமே. யாழ்ப்பாணத்திற்கு நெல்லியடியிலிருந்து காரில் போவதற்கு ரூபாய் 5 கொடுத்துப் போனதாக சூரன் குறிப்பிடு கின்றார். (1956, 57 இல் கரவெட்டியிலிருந்து கொடிகாமத்திற்குச் செல்ல கார் வாடகைக் காசு ரூபாய் 5 ஆகும். அதேவேளை கொடிகாமத் திலிருந்து கொழும்பு செல்வதற்கான 3ஆம் வகுப்பு புகையிரதப் பயணச் சீட்டின் விலையும் 5 ரூபாவே)

vii. கரவெட்டி, வதிரியின் நவீனமயவாக்கத்தில் முக்கிய இடம்பெறுவது நெல்லியடிச் சந்தியின் வளர்ச்சியேயாகும். பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறையிலிருந்து கொடிகாமத்திற்கும் போகின்ற பாதையில் நெல்லியடி ஒரு முக்கிய இடமாகும். நெல்லியடிச் சந்தை படிப்படியாக முக்கிய இடத்தைப் பெறத் தொடங் கியது. இந்த வளர்ச்சி பற்றிய குறிப்பினை ஓரளவிற்கேனும் சூரன் அவர்கள் தருவனவற்றிலிருந்து உய்த்துணரக்கூடியதாக உள்ளது.

viii. இம் மீள்நினைவுக் குறிப்பின் ஒரு பெருமுக்கியத்துவம் இக் குறிப்பில் கையாளப்பட்டுள்ள வடமராட்சியிலுள்ள சில வழக்குச் சொற்களாகும்.

| | |
|---|---|
| கல்லிழுத்து | - வீடு கட்டும்பொழுது வண்டியில் வீட்டுக்கான கற் களைக் கொண்டுவருதல். |
| கதியால் | - நீண்ட மரக்கிளை (Branch) |
| அலம்பல் | - வேலி கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் சிறு பற்றைச்செடி. இது தென்மராட்சியிலிருந்து கொண்டு வரப்பட்டு விற்கப்படுவதுண்டு |
| சொட்டை | - நக்கலான கிண்டற் சொல் |
| வாய்ப்பிறப்பு | - வாய்மொழிச் சாட்சியம் |
| கட்டை | - மைல் தூரம் (Mile) |
| கூப்பிடுதூரம் | - தூர அளவைக் குறிப்பதற்கான ஒரு மரபுத் தொடர் |
| பிறணி | - ஓயாத நச்சரிப்பு |
| பதகழிப்பு | - அந்தரப்படுதல் |
| நயினார் | - வெள்ளாள மக்களை தாழ்த்தப்பட்டோர் அழைக்கும் விழிமுறை |
| காணும் | - சமமானவரிடத்தே பயன்படுத்தப்படும் ஒரு விழிச் சொல். உம்: "என்ன காணும்" |
| செலவு சித்தாயம் | - செலவு ஏற்படுத்துவதற்கான சமூக வைபவங்கள், சந்தர்ப்பங்கள். |
| பைம்பல் | - ஏறத்தாழ ஆரவாரம். |
| சங்கடம் | - வீட்டுக்கான மரத்தினால் அல்லது உலோகத்தி னாலான கேற் (Gate) |
| வெட்டை | - மரஞ்செடிகள் பெரிதாக வளராதிருக்கின்ற வெளி இடம். |
| வாரக்காரன் | - வார அடிமையாக இருப்பவன் |
| குஞ்சி | - அம்மாவின் இளைய சகோதரி அல்லது இளைய சகோதரி முறையில் உள்ளவர் குஞ்சியப்புவின் மனைவி. |
| சிண் | - ஒருவருக்கு உதவியாக அவர் ஏவும் இடங்களுக் கெல்லாம் சென்றுவருபவர். |

தேவரையாளிப் பாடசாலை பெரும்பாலும் வதிரி, அல்வாய், கொற்றா வத்தையிலுள்ள இச் சமூக மாணவர்களுக்கே உதவிற்று. அக்காலத்தில் சைவாங்கிலப் பாடசாலைகளில் இச் சமூகப் பிள்ளைகள் சேர்க்கப் படுவதில்லை. கிறிஸ்தவ கல்லூரிகளிலேயே அவர்கள் படித்து வந்தனர். நிலைமை இவ்வாறிருக்கும்போது 1944, 45 இல் கரவெட்டி, விக்னேஸ்வராக் கல்லூரியில் இச்சமூகத்தைச் சேர்ந்த ஆனால் கரவெட்டி கிராமத்தில் வசிப்பவர்களான நான்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தின் சில முக்கிய சைவக் கல்லூரி களுடன் ஒப்பிடும்பொழுது விக்னேஸ்வராவின் இந்நடவடிக்கை முக்கியத்துவமுடைய ஒன்றாகும். அவர்கள் வந்து சேர்ந்தபொழுது அவர்களுக்கென தனியாக வாங்கு, மேசை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணச் சமூக மாற்றம் பற்றிய வரலாற்றினை யாழ் பல்கலைக்கழகத்து தொழின்முறை வரலாற்றாசிரியர்கள் பெரிதும் சிந்திக்காமலிருப்பது ஆச்சரியத் தைத் தருவதாகவே உள்ளது.

**பின்குறிப்பு:** இம் மீள்நினைவுக் குறிப்பில் 70 ஆம் பக்கத்தில் இறுதிப் பந்தியின் முதலிரு வரிகளில் வரும் ''கரவெட்டிக் கார்த்திகேசு - ஆங்கிலம் பிறிலிம் பாசு பண்ணின கரையாரப் பொடியன் - மாணிக்கமென்பது ஊர்ப் பெயர்'' எனக் குறிப்பிடப்படும் கார்த்திகேசு என்னுடைய தகப்பனார். தாய் தந்தையர் சிறு வயதிலேயே காலமாக, தாயின் சொந்த ஊரான கரணவாய் - சோளங்கனைவிட்டு கரவெட்டி மேற்கில் தகப்பனின் சகோதரி லட்சுமி என்பவரால் வளர்க்கப்பட்டு வந்த இவர், விக்கினேஸ்வரா கல்லூரியில் ஆங்கில J. S. C. வகுப்பு சித்தியடைந் ததன் பின்னர் சித்தமணியம் என்னும் சிற்றம்பல முதலியாரின் பரிந்துரை காரணமாக சூரன் ஆசாரியாரின் தேவரையாளிப் பள்ளிக்கூடத்தில் தான் படிப்பிக்கச் சென்றது பற்றி எங்களுக்குச் சொல்லியுள்ளார். முதலில் வாங்கிய சம்பளம் மாதத்துக்கு ரூபாய் 10 என்பதையும் கூறியிருந்தார். இவருடன் நெல்லியடியைச் சேர்ந்த இருவர் அங்கு படிப்பிக்கச் சென்றதாக தகப்பனார் கூறுவார். அவர்களுள் ஒருவர் பிற்காலத்தில் துணிக்கடை வைத்திருந்த குருமன் சின்னத்தம்பி அண்ணனாவார், அவர் வெள்ளாளர்.

1925 இல் எனது தகப்பனார் அரசினர் பாடசாலை ஆசிரியராகச் செல்கிறார். எனவே இவர் தேவரையாளிப் பாடசாலையில் இரண்டு, மூன்று வருடங்கள் படிப்பித்திருக்கவேண்டும். தான் அங்கு சில காலமேனும் தலைமை ஆசிரியராக இருந்ததாக எமக்குத் தகப்பனார் சொல்லவில்லையென்றே நம்புகின்றேன். இந்த நியமனத்தில் உள்ள நெருடல்கள் ''தலைமை ஆசிரியராக மிக வில்லங்கப்பட்டு வைத்தேன்'' என்பதினூடாக சிறிது கசிகிறது.

தகப்பனார் சில காலமே தேவரையாளியில் படிப்பித்திருந்தாலும் தேவரையாளியில் தனது காலத்தில் தான் படிப்பித்தவர்களுடன் நீண்ட காலம் தொடர்ச்சியான நட்பினைப் பேணிவந்தார். கவிஞர் மு. செல்லையா, சைவப் புலவர் சி. வல்லிபுரம், கலாவினோதன் பெ. அண்ணாச்சாமி இவர்களைவிட இன்னும் ஒரு மூன்று பேரின் பெயர்கள் ஞாபகம் வரவில்லை. தகப்பனார் விடுமுறை நாட்களில் வீட்டில் வந்து நிற்கும்பொழுது ஒரு மாத லீவென்றால் குறைந்தது இரண்டு நாட்களாவது அதிகாலையில் வந்து ஏறத்தாழ பத்துமணி வரை உரையாடிக்கொண்டிருப்பார்கள். தன்னுடைய மாணவர்களிற் சிலர் தனக்கு முன்னரே ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றவர்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நினைவுக் குறிப்பை வாசிக்கும் பொழுதுதான் பின்புலம் துலக்கம் பெறுகிறது.

திரு. சூரன் அவர்கள் ஓரிரு தடவைக்குமேல் எங்கள் வீட்டிற்கு வரவில்லை. ஆனால் வந்த நேரம் வரவேற்கும்பொழுது 'ஆசாரியார்' என்று தகப்பனார்



சொல்லி வரவேற்பது ஞாபகம் இருக்கிறது. சூரன் அவர்களது மகள் சிவபாக்கியம் தகப்பனார் லீவில் நிற்கும்பொழுது சந்திப்பதுண்டு. அப்பொழுது அந்தப் பாடசாலையின் ''அரசியல்தான்'' நிறையப் பேசுவார்கள். வெளியிடங் களில் என்னைக் கண்டால் மிக்க அன்பு ஆதரவுடன் பேசுவார். அந்த நினைவுகள் மனதின் ஆழத்திலிருந்து மீட்டு எடுக்கப்பட்டதும் அந்த நினைவு அதிர்வுகளிலிருந்து விடுபடுவது சிரமமாகவே இருக்கிறது. நான் கொழும்பு ஸஹிராக் கல்லூரியிற் சேர்ந்தபொழுது பாக்கியமலர் பூட் எம்போறிய முதலாளி தான் எனக்குப் பாதுகாவலராக இருந்தார். அப்பொழுதுகூட தகப்பனாரிடம் கல்வி கற்ற சில மாணவர்கள் அங்கே வந்தனர்.

இம் முயற்சியினை அந்த நினைவுகளின் நிழலில் நின்றுகொண்டு தேவரை யாளிச் சமூகத்திற்கு என் மரியாதை, கௌரவமாக முன்வைக்கிறேன்.

2004. 01. 30.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரன் சுயசரிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1881 ஆவணி

### வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாலய வரலாறும் எனது நிலைமையும்

**நா**ன் *1881 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஓராந் திகதி (1881 . 08. 01) கரவெட்டி மேற்கிலே திரு வே. காத்தார் அவர்களுக்கும் வள்ளியாருக்கும் மூத்த புத்திரனாகப் பிறந்தேன். எனது ஐந்தாம் வயதில் எம் வீட்டருகேயுள்ள நுகவிலென்றழைக்கப்படும் உவெல்சியன் மிஷன் பாடசாலையில் கற்று ஐந்தாம் வகுப்புச் சித்தியடைந்ததும் அடுத்த வகுப்புக்கள் அப்பாடசாலையிலில்லாமையாலும் அக்கால நாட்டமின்மையாலும் எனது கல்வி அவ்வளவில் நின்றுவிட்டது. பின்னர் எனது தகப்பனாரின் தூண்டுதலால் கரவெட்டி மேற்கு (நாவேலர் மடம்) கரவெட்டி கிழக்கு (சண்டில்) இப்பாடசாலைகளில் மேல் வகுப்புண்டு. அப்பாடசாலைகளும் மேற்படி மிஷன் பாடசாலைகளாயிருந்தும் எம் சமூகப் பிள்ளைகள் உள்ளே புகமுடியாது. அதனால் மேல் வகுப்புப் படிக்க முடியாது நிறுத்தினேன். எனது விளையாட்டுக்கு நல்ல இடை வாய்ந்தது. அம்பெறிதல் எனக்குச் சுத்த சூனியம். கிட்டியடி மத்திமம், பாடியுமப்படி, தட்டுக்கொத்தல், கிந்துவான டித்தல், எகிறிப்பாய்தல், கரணம் பலவடித்தல், அரைப்பாய்தல், ஓட்டத்தில் முந்தல் இவைகளில் விஷேசம். கடதாசிப் பட்டம், எட்டுமூலைத் தேர்க் கொடி, கொக்குப் பட்டம் இவைகளில் மிக விஷேசம். பதினாறாம் வயது நடந்து அப்பு என்னைத் தச்சுவேலை செய்யும்படி வற்புறுத்தித் தன்னுடன் கூட்டிச் சென்று பழக்கப் பழகி வந்தேன். சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்க மென்றதற்கிணங்கத் தச்சு வேலையில் சித்திரவேலைகளும் செந்தமிழில் தமிழ்க் கல்விமான்களின் சகவாசமும் பெற்றுவந்தேன். பாப்பூச்செடி வேலை, உருவங் கொத்துதல், கூத்துச் சோடினை, சப்ரம், திருவாசி, வாகனம் முதலிய பல வேலைகள் செய்து வந்தேன். இருபத்திரண்டு வயதில் மாமிச உணவை நிற்பாட்டினேன். முன்னே கிறிஸ்த மதத்தை ஓரளவு நம்பிய யான் இருபத்திரண்டு வயதின் பின் சைவாபிமானியாயினேன். பின்னர் அக்காலங்களில் யாரும் சைவ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தைத் தூற்றினால் பெரும் ஆத்திரங்கொண்டு அவர்களுடன் நெருங்கிப் பேசுவேன். அக்காலம் பெரிய மனிதரின் சகவாசத்தால் நன்மதிப்பிருந்தது. அக்காலங்களில் பல கல்யாணங்கள் பேசிக் குழம்பின. கரவெட்டி தேவமாதா கோயிலுக்கு மாதாவின் லிங்கம் வைக்க இரண்டடி அகலம் மூன்றடி உயரத்தில் ஓர் கண்ணாடிக் கூடு, இரண்டு சிகரம், மத்தியில் சிலுவை ஸ்பிரீத்துச் சாந்து (புறாஉருவம் கீழ்நோக்கிப் பறந்தபடி) ரூபா ஐம்பது (50 ரூபா)வாகச் செய்து கொடுத்தேன். அக்கால ஐம்பது ரூபா (50 ரூபா) இக்காலம் 500 ரூபா போலிருக்கும். இக்கூட்டை மேற்படி மாதா கோயிலுக்குள் வந்து பார்த்த கத்தோலிக்கக் கிறிஸ்தவ வேளாளர் பலரில் கறுவல் மாவடியா ரென்பவர் சொன்னார், ''சரி இதைச் சூரன் செய்ததென்று சொல்லா தீர்கள்.'' அப்போ நான் பின்பக்கம் நின்றேன். அவரப்படிச் சொன்னது சைவ வேளாளருக்கஞ்சி. நான் நிற்பதை அவருக்காரோ காட்டி விட்டார்கள். அவரென்னைப் பார்க்க நான் சொன்னேன். எனக்குப் பேர் வேண்டா மென்று. நிற்க.

## 1913 ஆவணி மாதம்

### குருஞானப்ரகாசர்

வதிரியென்றழைக்கப்படும் வடலியந்தை கதலிஸ் அந்தோனியா ராலய வீதியில் கிழக்கு மேற்காக இருமேடைகளில் மேற்கில் குரு ஞானப்ரகாச சுவாமியென்பவரும் கிழக்கில் மரசிலின் சுவாமி யென்ப வரும் நின்று மறுபிறப்பாட்சேபம் என்னும் விஷயத்தைத் தற்கப் பிரசங்கமாக வாதாடிப்பேசினார்கள். கடைசி மறு பிறப்பில்லை யென்றே முடிவுசெய்தனர். மறுபிறப்பில்லையென்று வாதித்தவர் குருஞானப்ரகாச சுவாமியாவார். இதற்கிடையில் கரவெட்டி சைவ வாலிபர் சிலர் தாங்கள் சில கேள்வி கேட்க அனுமதி கேட்டார்கள். தாங்கள் மேற்படி விஷயம் பேசவந்ததுதான் நேரமென்றும் கேட்குங் கேள்விகளைச் சா. ஞானப்ரகாச சுவாமி பாணன்குளம், நல்லூர் என்ற விலாசத்துக்கனுப்பினால் மறுமொழி தரலாமென்று சொல்லி முடித்தார். அதன்பின் கேட்ட வாலிபர் அதிற் பிரவேசிக்கவில்லை.

அக்காலம் சமயாபிமானம் என்னை உறுத்தியதால் மேற்படி அவாயாரின் தற்கப் பிரசங்கத்திலுள்ள சில கேள்விகளை எழுதி மைத்துனர் சி. சிலம்பு வைத்தியரைக்கொண்டு நல்ல கடதாசியில் எழுதிவித்து க. வே. சின்னப்பிள்ளை வைத்தியரென்று ஒப்பமிட்டு (வ. சி. வைத்தியரின் மாமன்) மேற்படி சுவாமியாருக்கனுப்பினோம். அதற்குப் பதிலாக மறுபிறப்பாட்சேபமென்றும் புதுச் சைவமென்றும்



இரு புத்தகங்களும் கடிதமும் அனுப்பினார் சுவாமியார். மேற்படி புத்தகங்களில் மறுமொழியும் பிறவுமறியலாமென்று கடிதத்திற் காட்டினார்.

அதன்பின் அப்புத்தகங்களிலுள்ள பொருந்தா நியாயங்களையும் சுருதியுக்தி அனுபவங்கட்கடங்காத பல விளக்கங்களையுமெடுத்துக் கேள்வியாகப் போட்டெழுதி அனுப்பினோம். அதற்கவர் பொருந்தா முரட்டு மறுமொழி எழுதியனுப்பினார். அந்த மறுமொழியைக் கண்டித்தெழுதினோம். அதற்கிடையில் அங்குள்ள கத்தோலிக்க உபாத்திமார் எழுதினார்கள், சுவாமியுடன் எழுதுப்படுபவர்கள் பள்ள ரென்று. அதன்பின் சுவாமியவர்கள் மிக அன்பாகவும் ஆறுதல் வசன மாகவும் எழுதலானார். அப்படி அவர் எழுத நேர்ந்தது பள்ளரென்ற மையால் எங்களையும் வேதத்தில் சேர்க்கலாமென்ற மனப்ராந்தி. இனி நான் கேட்கும் கேள்விகளுக்குச் சில மனிதர் பூசகர் கோயில் நடைமுறை களைச் சமயப் பிழையாகவுங் காட்டினார். அதற்குகந்த நியாயங்களைக் காட்டி எழுதியபின் தனக்குத் தலைநிரம்பிய வேலை இருப்பதால் எழுத நேரமில்லையென்றும் நேரே வந்து தன்னுடன் பேசும்படியும் எழுதினார். நானொரு வைத்தியனானமையால் எனக்கு வரமுடியாதென் றெழுதியபின் தர்க்கம் நின்றது.

### கத்தோலிக்கர் கோபம்

மேற்படி தர்க்கம் எழுதிக்கொண்டிருக்கையில் தற்செயலாகச் சில கத்தோலிக்கர் நான் போய்க்கொண்டிருக்கும் வழியில் என்னைச் சந்தித்து ஞானப்ரகாச சுவாமியுடன் வாதாட உங்களுக்கு வலிமை யுண்டா, அவர் லேசான ஆளா, எத்தனையோ சைவ வேளாளர், பிராமணர் முதலானோர் அவருடன் பேசமுடியாது வாய்பொத்திக் கொண்டு போனார்கள், 'நீங்கள் பள்ளர், உங்களால் முடியுமோ அவருடன் பேசி வெல்லவென்றொருவர்' கர்ச்சித்தார். அவர் கற்றவர் தான், தருக்க விற்பன்னர்தான், அவரெழுதிய புத்தகங்களில் பொய்யும் புழுகும் பொருந்தாக் குதர்க்கங்களும் பொலிந்திருக்கென்றேன். வந்தது ஆசாமிக்கு அடங்காக் கோபம். 'நீயும் சைவனா? சைவ சமயத்தவனா? உனக்குக் கோயிலில்லை, தீட்சை யில்லை, குருக்களில்லை' என்றவாறு கர்ச்சித்தார். உவையொன்றும் எனக்குத் தேவையில்லை நான் சைவன்தானென்றேன். 'எங்கை சித்தமணி வைத்தியன்ரை சைவப் பள்ளிக்கூடத்துக்குள்ளே போ பார்ப்போம்' என்றார். உதைத்தானே முன்னஞ் சொன்னேனென்றும் உப்படியான நியாயங்களைத்தான் உங்கள் சுவாமியாரும் எழுதினா ரென்றும் பரிகசித்தவர்களை விட்டகன்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனதபிமானம்**

வீ. மு. சிற்றம்பல முதலியார் (சித்தமணியம்) அவர்களை அவர் வீட்டிற் சந்தித்துக் கரவெட்டி நளவர் சைவசமயம், உங்கள் பிள்ளையார் ஆலயத்திற்கு வெகுபணமுதவுகிறவர்கள், அவர்கள் பிள்ளைகள் கத்தோலிக்க கிறிஸ்த பாடசாலையில் படிப்பது நியாயமா? ஏன் ஒரு கிளைப் பாடசாலை உண்டாக்கி அப்பிள்ளை களை அதிலை வைத்துப் படிப்பித்துச் சோதனைக்குப் பெரிய பாடசாலையில் சோதிக்கலாமே யென்றேன். நீ படிப்பிக்கிறியா வென்று கேட்டார். ஒரு ஆளைத் தருகிறே னென்றேன். சரி நீ போ எல்லாம் சொல்லுகிறேனென்றார் பின்னொரு நாள் எனக்கு ஆள் அனுப்பினார், போனேன். நீயும் பரியாரி கணபதிப் பிள்ளையும் ஞானியா வீட்டாள்வாரும் மேற்படி நளப் பிள்ளைகளைப் பிடித்து வாருங்களென்றார். உடனே நாங்கள் மூன்று பேரும் போய்க் கத்தோலிக்கப் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளின் பெற்றோருக்குச் சொன்னோம். அவர்கள் மிகக் குதூகலத்துடன் பிள்ளைகளைக் கூட்டி வந்து (50 ஐம்பதுக்கு மேலிருக்கும்) மணியகாரன் பாடசாலையில் விட்டார்கள்.

அப்போ அப்பாடசாலையின் பெயர் **''புதுப்பள்ளிக்கூடம்''** பின்பு **''மாணிக்க வாசக வித்தியாலயம்''** மேற்படி பிள்ளைகளுக்குப் பிறிம்பான கொட்டில் பாடசாலை. அந்நாளையில் தாழ்ந்த சாதிப் பிள்ளைகளை உயர் சாதிச் சைவஉபாத்திமார் படிப்பித்தால் அது அவர்களுக்குப் பெரும் வடுவெனக் கூசுவர். அதையிட்டுத்தான் நீ படிப்பிப்பாயோவென்று மணியகாரன் என்னை முன்னம் கேட்டிருந்தார்.

**எங்கள் பாடசாலை ஆரம்பம்**

இடையிடையே நான் மணியகாரன் (வீ.மு.சி.) வீட்டுக்குப் போவது வழக்கம். அவருக்கு அலுமாரி, கட்டில், கதிரை முதலிய வீட்டுத் தளபாடங்கள் செய்துகொடுத்திருக்கிறேன். ஒரு நாள் நான் போன பொழுது அவருக்குச் சொன்னேன். **வதிரியில் எம் சமுகத்தில் முன்னூறுக்கு மேற்பட்ட குடிகளுண்டு. அதற்கு வடக்கு மேற்கில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட குடிகளுண்டு. இதற்கிடையில் இரண்டு குடி கிறிஸ்தவராயிருக்கின்றனர். அவர்கள் மற்றையோரையும் கிறிஸ்த வராக்க முயலுகின்றனர். ஆகையால் வதிரியில் ஓர் சைவப்பாடசாலை உண்டாக்கலாமென்றெண்ணுகிறேன் அதற்காகிய வழிதுறைகளைச் சொல்லி உதவிசெய்ய முடியுமோவென்று கேட்டேன்.** மிச்சம் நல்ல காரியம் என்னாலானமட்டும் உதவிசெய்வேன் தொடங்கென்றார். உடனே மீண்டு வீட்டுக்கு வந்தேன். மைத்துனர் வ. சி. சிலம்பு வைத்தியருக்கு விஷயத்தைச் சொல்லி யோசித்தோம். இருவரும் கூடிக்கொண்டு வதிரிக்குப் போனோம் அப்போ க. வே. சின்னப்பிள்ளை வைத்தியர் இப்படியான விஷயங்களுக்கு முன்நிற்பர்



அவரைச் சந்தித்து விஷயத்தை வெளியிட்டோம். சரி தொடங்குவோ மென்றார். அன்னாரையும் கூட்டிக்கொண்டு மணியகாரனிடம் போனோம் மணியகாரன் உற்சாகமாக வைத்தியருக்குச் சில கதைகளைச் சொல்லி விளக்கினார்.

## 1914 ம் ஆண்டு (பிரமாதீச வருஷம்)
## தை மாதம் 4 ம் திகதி

ஒரு கொட்டில் பாடசாலையை முதலில் கட்டுவோமென்று யோசித்தோம். அதற்கு வைத்தியரிருவரும் பனைகள் தந்தார்கள். மூன்று பேரும் ரூபா.75 எழுபத்தைந்து செலவுசெய்தோம். அடிக்கடி மணிய காரன் வீட்டுக்குப்போவதே எனது தொழிலாயிருந்தது. ஒருநாள் மணியகாரன் கேட்டார் பாடசாலை விஷயம் எம்மட்டிலிருக் கென்று, ஓர் கொட்டகை போடத் தயார் செய்கிறோமென்றேன். அதைப் பின்பு கட்டுங்கள். முதலில் அப்பாடசாலையால் பிள்ளை களை மறிக்க வேண்டும். அதற்கு வழி மிஷன் பாடசாலையில் படிக்கும் உங்கள் பிள்ளைகளுக்குக் கிறிஸ்த வேதம் படிப்பிக்கப் படாதென்று வற்புறுத்துங்கள். மறுத்துப் படிப்பிப்பார்கள். அப்போ பிள்ளைகளை மறியுங்களென்றார். இந்த வேலைக்குச் சின்னப்பிள்ளை வைத்தியரை ஏவினோம். அவர் அப்பாடசாலை உபாத்தியாயர் பெ. யோசேப்புக்குக் சொன்னார் எங்கள் பிள்ளைகளுக்கு உங்கள் வேதம் படிப்பிக்கப் படாதென்று. அவர் சொன்னாராம் அதெப்படி படிப்பியாவிட்டால் பிள்ளைகளைச் சோதனைக்கு விடமுடியா தென்று. அதை மேற்படி வைத்தியர் வந்தெனக்குச் சொன்னார். அது முடியாது படிப்பிக்கப்படா தென்றால் அவர் நிற்பாட்டவேண்டியது என்று அதற்குரிய பிரமாணங் களை விளக்கிக்காட்டி இது எங்களுக்கு விஷயம் தெரியாதென்று அணாப்பிப் பேய்ப்பட்டமுங் கட்டுகிறார் என்று சொல்லி மறுமுறையும் வைத்தியரை ஏவினேன். மறுமுறையும் வைத்தியர் போய்ச்சொல்ல மிஷன் இங்கே வந்தது வேதம் பரப்பவென்றும் நாங்கள் படிப்பியாமல் விடமாட்டோமென்றும் அந்த உபாத்தியாயர் யோசேப்பு சொன்னதாக வந்து சொன்னார் வைத்தியர். **உடனே நாங்கள் பிள்ளைகளை மறித்து மேற்படி சின்னப்பிள்ளை வைத்தியர் வீட்டுத் தலைவாசலில் பிள்ளை களைப் படிப்பிக்க க.சின்னத்தம்பி (எனது மைத்துனர்) என்பவரை நியமித்து விட்டோம். பின்னர்** ஒரு கிழமைக்கிடையில் 18 பதினெட்டு **முழத்தில் ஓர் கொட்டகை போட்டு இரண்டடி உயரத்தில் குட்டிச்சிவரும் வைத்து** எட்டு வாங்கு ஒரு மேசையுடன் பாடசாலை நடைபெற்று வர **நம்பிக்கையற்று ஊரவரும் மிஷன் பாடசாலையாரும் பரிகசித்துச் சிரித்தனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலுச்சோதிடர்

வதிரி மிஷன் பாடசாலையில் சில வருஷமாகப் படிப்பித்துவந்த அல்வாய் வேலுச்சோதிடர் ஏதோ பாடசாலைக்கு கிரமந் தப்பியமை யால் அவரைப் பாதிரிமார் வேலையால் விலக்கி விட்டனர். அதனால் அவர் தனக்கிசைந்த பிள்ளைகளை மறித்து அல்வாய் குழாம்பென்னும் வீட்டில் (நல்லார் வீடு) வைத்துப் படிப்பிக்கிறாரென்று கேள்விப் பட்டு அங்கு சென்றோம். அவரது நிகழ்ச்சி எங்கள் ஆரம்பத்துக்கு முந்தியது. பின்பு தான் நாங்கள் கேள்விப்பட்டு அவரைத் தேடிப் போனோம். எங்களுக்கும் மிஷன் பாடசாலை ஆசிரியருக்கும் நடைபெற்ற வாக்குவாதத்தை அவருக்குச் சொன்னோம். அவர் தனக்கும் அவர்களுக்கும் நிகழ்ந்ததை எங்களுக்குச் சொன்னார்.

**பின்னர் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு எங்கள் கொட்டகைப் பாடசாலைக்கு (வண்ணாஞ்சீமா மூ. சி. கிணற்றடி) வந்தார்.** தானொரு உபாத்தியாக இருக்க முடியாதென்றும் மகன் தம்பையாவைப் படிக்க விடப் போகிறேனென்றும் தெகனை மு. கந்தப்பரைத் (முருகேசு ஆசிரியர் தகப்பன்) தரலாமென்று அவரைக் கூட்டிவந்து உபாத்தி யாக்கிவிட்டார். அப்போ பிள்ளைகள் 50 ஐம்பதுக்குள்ளாகும். உபாத்திமார் க.சின்னத்தம்பி, மு.கந்தப்பு ஆகிய இருவர் பௌரணை காலங்களில் சமயப் பிரசங்கம் நடைபெற்று வந்தது. பேச்சாளர் க. வே. சோதிடர், க.வே.சி.வைத்தியர், வ. சி. சி. வைத்தியர், கா. சூ (நான்) மிகமுக்கியமாக நடைபெற்றுவந்தது.

## நிலையான கட்டிடம்

நாங்கள் ஆரம்பிக்கும்பொழுதே எம்சமூகத்தவர் அனைவருக்கும் பாடசாலை கட்டவேண்டிய அவசியத்தைச் சொல்லிவிட்டோம். இனிப் பாடசாலை கட்டவேண்டிய இடம் மேற்படி மிஷன் பாடசாலைக்குக் கால் மையிலுக்கப்பால் கட்டவேண்டுமென்ற பிரமாணப்படி எங்கள் பாடசாலை இருக்கும் காணியை உத்தேசித்து ஒன்றரைப்பரப்பு போதுமென்றும் அதை எனது மாமனார் சி.பொன்னர் அவர்கள் பேரில் அறுதி எழுதிப்பின் கட்டிடத்தை முடித்து ஓர் சபையை உண்டாக்கி அந்தச் சபைக்குத் தருமசாதன உறுதியை எழுதிவிடலாமெனத் தீர்மானித்தோம். காணிக்காக ரூபா 25 நான் கொடுத்தேன்.

## வேலுச்சோதிடர் அவநம்பிக்கை

மேற்கூறிய யோசனைகளைக் கேட்டுக்கொண்டிருந்த வேலுச் சோதிடர் மாமனார் சி. பொன்னரைத் தனிப்படக் கூட்டிக்கொண்டு போய் குறித்த காணியில் தனக்குமேதும் சோந்தை காட்டினால்தான் தங்கள் பகுதியில் தானேதும் பணஞ் சேர்க்கலாமென்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். மேற்படி மாமனார் சி.பொ.அவர்கள் வந்து அவர்சொன்னதை (சோதிடர்) எங்களுக்குச் சொன்னார். அப்பொழுது நான் சொன்னேன் வேலுச்சோதிடர் உங்களுடன் அத்தியந்த நண்பர் என்ற காரணத்தால் அவருக்கும் க. வே. சி. வைத்தியருக்கும் வ. சி. சி. வைத்தியருக்கும் கா. சூ (எனக்கும்) வுக்கும் பொதுவான ஆள் நீங்கள் என்றமையால் தான் உங்கள் பேருக்கு அறுதி முடிக்கப் பேசினோம். சரி அவரின் அவநம்பிக்கையை மாற்றுவோம் இரண்டுபேர்படவும் அறுதியை முடிப்போமென்று மறுநாள் இருவர்பேருக்கும் காணி அறுதி எழுதியாயிற்று.

## பாடசாலைப் பெயர்

இதற்கிடையில் மணியகாரன் வீட்டுக்குப் போனேன். இடாப்பு வைத்துப் பிள்ளைகளைப் பதிவுசெய்து வருகிறீர்களா வென்று கேட்டார் மணியம். இன்னுமில்லையென்றேன். என்ன மண் விளையாட்டா பிள்ளைகளைப் பதியாமல் விடுவது சரியில்லை யென்று என்னைக் கோபித்துப் பேசிவிட்டுத் தங்கள் பாடசாலைக்கு அழைப்பித்த சென்னைப் பட்டணம் இடாப்பொன்று மிஞ்சியிருந்ததை எடுப்பித்துப் பாடசாலையின் பெயர் என்னென்று கேட்டார். இனிமேல்தான் வைக்க வேண்டும், மிஷன் பாடசாலை வதிரி வ...க்கு கத்தோலிக்கப் பாடசாலை, இதற்கு வதிரி மேற்கென்று வைத்தாலென்னவென்றேன். றோட்டுக்கு மேற்கானபடியால் அது எவ்விடமென்றார் அந்தப் பெரிய வெள்ள வாய்க்கால் மதவடியென்றேன். தேவரையாளி அம்மன் கோயிலுக்குக் கிட்டவோ என்றார். ஓமென்றேன். அப்ப வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாசாலை யென்றெழுதட்டோ என்றார். ஆம் மிச்சம் நல்லது என்றேன். உடனே அப்படி அந்த இடாப்பில் **வதிரி தேவரையாளி சைவ வித்தியாசாலை** என்றெழுதி இடாப்பை என் கையில் தந்தார். இந்தப் பெயரே உறுதியிலும் எழுதப்பட்டது.

## அத்திவாரம்

அத்திவாரம் போட ஆயத்தம் பண்ணும்போது எங்களுக்குள் நடைபெற்ற பேச்சு வதிரியிலுள்ள பொதுசனங்களிடம் அறவாக்கும் பணம் பொதுவாகவும் அல்வாய்ப் பகுதிகளில் சோதிடர் அறவிடும் பணமும் அவர் பிறவிடங்களில் அறவிடும் பணமும் அவரது சொந்த வகை யென்றும் (க.வே.சி.), (கா.சூ), (வ.சி.சி.) ஆகியோர் பிறவிடங்களில் அறவிடும் பணம் அவரவர் சொந்தமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மேற்படி வருடம் வைகாசி மாதம் ஓர் நன்நாளில் எனது மூத்தமாமனார் சி.வல்லியப்பர், கரவெட்டியானென்று அழைப்பதுமுண்டு. அவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே அத்திவாரக் கல் வைப்பித்தோம். கல்லிழுத்து வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கவும் சோதிடர் வகையால் பணம் ஒரு சதமும் வரவில்லை. காணியை அடைக்கப் பூவரசம் கதியால் வேண்டுமென்று மேற்படி மணியகாரனைக் கேட்க அவர் ஒரு வேலியைக் காட்டினார். தனது வீட்டு வேலி 400 நாநூறு கதியால் வெட்டி ஏற்றிவந்து போட்டோம். சி. பொ. நான்வ. சி. சி. பின்பு அலம்பலும் கரவெட்டியில் எடுத்து வேலி அடைத்தோம்.

### தரும கைங்கரிய விளம்பரம்

பாடசாலைக் கட்டிடம் தளபாடம் முதலியவைகளின் பெறுமதி 1500 ரூபா ஆயிரத்தஞ்நூறு என்று ஓர் விளம்பர விண்ணப்பம் எழுதிக் கலாநிதியில் அச்சடித்துவந்தவிடத்தில் மு. சண்முகம் மடத்துக் கடவை அவர் மிஷன் பாடசாலையில் மாணவஆசிரியன். அவரிடம் ஓர் பத்திரத்தைக் கொடுத்தேன். அவரதைத் தலைமை ஆசிரியர் யோசேப்பாசிரியரிடங் கொடுத்தார். மேற்படி ஆசிரியருக்கு அப்பொழுதிருந்த ஆத்திரத்தினால் எங்களுடன் உரோஞ்ச அவருக்கு அந்தத் தரும கைங்கரியப் பத்திரமே (நோட்டீஸ்) உபகரணமாயின. அதில் சோதிடரென்றும் வைத்தியரென்றும் சிற்பனென்றும் பெயர் களுடன் பட்ட நாமங்கள் இடப்பட்டிருந்தது. அவைகளைக் கொண்டு எங்கள் நால்வருக்கும் தனித்தனி கண்டனக் கடிதங்கள் எழுதியிருந்தார். அதாவது உங்களுக்குக் கல்வியைப்பற்றிய அறிவு எவ்வளவிருக்கும் அதில் தேறித்தெளிந்தா பாடசாலை கட்ட ஆரம்பித்தீர்கள் வசனநடை வெண்பாச் செய்யுள் பிழையென்றும் கண்டித்து மறுமொழி எதிர்பார்ப்பதாகவும் எழுதியிருந்தார்.

நாங்கள் அதற்காகிய மறுமொழியும் சில சொட்டைகளும் எழுதியனுப்பிவிட்டோம். அவர் எழுதிய கடிதம் பின்னுக்கு எங்கள் பாடசாலை உதவி நன்கொடைப் பணம் பெற உதவியளித்தது. இப்படியே அவருக்கும் எங்களுக்கும் பல கடிதப் போக்குவரத்திருந்தும் கருமமே கண்ணாயினார் என்றதற்கிணங்கக் கோபத்தை அடக்கிக் கொண்டோம். அவரது மனைவி கிணற்றடியில் எங்கள் பெண்களுக்குச் சொன்ன திருமந்திரம் எங்கள் பாடசாலையால் மறித்த பிள்ளைகளைத் திருப்பி விட்டால் உங்கள் ஆண்பிள்ளைகள் மானங் கெட்டவர்களென்ற சாரப்பட அதை இதில் எழுதக்கூடாதென நிறுத்தியிருக்கு அதைக் கேள்விப்பட்டவுடன் அளவுகடந்த ஆத்திரம் கொண்டும் பாடசாலையைக் கட்டிமுடிக்க வேண்டுமென்ற உற்சாகம் அதிகப்படலாயின. அந்த மனிஷி சொன்னதற்குப் போதிய ஆதாரமுண்டு. 1 ஆவது, இப்படியான பெரிய விஷயத்தை நிறைவேற்ற அவர்களது மிஷன் சபைபோல் ஓர் பெரிய சபைவேண்டும். 2 ஆவது, இதில் ஈடுபட்ட நாங்கள் பெரும்



பணக்காரராயிருக்க வேண்டும். 3 ஆவது, யோசேப் சாமுவேல் ஆசிரியர்களின் தகப்பன்மார் பசுபதி பண்டாரம் என்ற ஆசிரியர்களுடன் கோபித்துக்கொண்டு எம்மாட்கள் இரண்டு மூன்றுமுறை பிள்ளைகளை மறித்துப் படிப்பித்துக் கைவிட்டமை. இந்த அனுபவங்களைக் கொண்டே மனுஷி துணிவுடன் சொன்னமை.

மேற்படி விஷயம் உண்மையென்று நாமும் கேள்விப்பட்டோம். க.வே.சின்னப்பிள்ளை வைத்தியரின் தகப்பன் இவர் சட்டம்பிவேலர் அவரது மூத்தமகன் ஆள்வார்ப் பரியாரியென்பவர் திரு. வே. ஆ. கதிரவேல் அவர்களின் தந்தை இதைவிட வேலுச்சோதிடரும் மேற்படி பாடசாலையில் படிப்பிக்கமுன் மடத்துக்கடவை முருகர் (சண்முகச் சட்டம்பியாரின் தந்தை) இவர்களும் பள்ளிக்கூடம் வைத்து அலுத்துக் கைவிட்டவர்கள். இந்த அனுபவங்களைக்கொண்டே மேற்படி மனுஷி மாத்திரமல்ல ஊரவர்களுக்கும் எம்பாடசாலையில் அவநம்பிக்கை.

### பெற்றோர் திகில்

அப்பொழுது பிள்ளைகளை மறித்த பெற்றோர் சில வதந்திகளைக் கேட்டுத் திகிலடைந்தனர். அதாவது ஓர் பாடசாலையில் படித்த பிள்ளைகளை மறித்தால் அப்பிள்ளையால் உபாத்திமாருக்கு வரும் நஷ்டத்தைப் பேற்றோரே இறுக்க வேண்டுமென்பதாம். இவ்வதந்தியினால் பெற்றோருக்கு நடுக்கம் எமக்கும் ஐமிச்சம். ஏன் அப்போ எமக்கும் பிரமாணம் தெரியாது. இதையறிய மணியகாரனைக்கண்டு கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டு அப்படியொன்றும் இல்லை என்று சொல்லி என்னைத் தைரியப்படுத்துதற்காகப் பருத்தித்துறை மனேச்சர் வேலாயுதம்பிள்ளையைக் கண்டு கேட்டுப்பாரென்று சொன்னார். அப்போ மணியம் பாடசாலைக்கும் அவர்தான் மானேஜர்.

### வேலாயுதம்பிள்ளை கர்ச்சனை

வேலாயுதம்பிள்ளை மானேஜரைச் சந்தித்துக்கேட்டேன் பிள்ளைகளைப் பாடசாலையால் மறித்தால் அப்பிள்ளைகளால் உபாத்தி மாருக்கு வரும் நஷ்டத்தைப் பெற்றோர் இறுக்கவேண்டுமாம் அது உண்மையா என்று அவனார் சொன்னவன் உணாவடித் தெய்வானையின் மகனாவென்று கர்ச்சித்தார். (உணாவடித் தெய்வானை மகன் ஆள்வாப்பிள்ளை உபதேசியார்) இஞ்சிப்பற்றர் சோதித்துக் கொண்டிருக்கவும் பிள்ளைகளைப் பெற்றோர் இழுத்துவரலாமென்றார்.

### வித்தியாகர்த்தர் டன்னாம்

நாளைக்கு வித்தியாகர்த்தர் வாடிவீட்டிலிருப்பார் அவரிடம் ஓர் பிட்டீசம் எழுதிக்கொடுங்கள் உங்களைத் தாழ்ந்த சாதிச் சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தவரென்றும் எங்கள் சமயவளர்ச்சிக்காக எங்களுக்கோர் சைவப் பாடசாலை வேண்டுமென்றும் அதற்கு ம. வேலாயுதம்பிள்ளை என்பவரை மானேஜராக்குவோமென்றும் எழுதி ஒருமணிக்கு வாடி வீட்டிலிருப்பார் பிட்டீசத்தைக்கொடுங்களென்று மேற்படி மனேஜர் வேலாயுதம்பிள்ளை சொன்னார். மறுநாள் என்னையே முதலாளாகக் கொண்டு எட்டுப் பேர் கையொப்பமிட்டு ஒரு மணிக்கு வாடிவீட்டில் வித்தியாகர்த்தரிடம் பிட்டீசத்தைக் கொடுத்தோம். அவரதைப் பார்த்த பின் மறுமொழி வரும் நீங்கள் போகலாமென்றபின் சில கேள்வி கேட்டார் அப்பொழுது அவருடன் நின்றவர்கள் கிறிக்கன்பேக் டிவிசன் இஞ்சுப்பெஸ்டர் அவர்தான் எங்களுக்குத் தமிழில் சொன்னவர் மற்றவர் பாக்கரையர் மிஷநெரி எங்கள் எதிரி அவர் கேட்ட கேள்விகள் உங்களில் எவ்வளவு சனமுண்டு? எங்கள் கிராமத்தில் 1000 ஆயிரத்துக்கு மேற்பட்ட எங்கள் சமூகக்குடும்பமிருக்கு. (அவர்) என்ன தொழில்? கமம், தச்சு வேலை, செருப்புச் சப்பாத்து, மரமேறல், வியாபாரம் முதலிய பல தொழில்கள் என்றேன்.

வித்தியாகர்த்தரைக் கண்டு மீண்டோம். அவர் அன்றைக்கே கொழும்புக்குப் போய்விட்டார். பத்து நாளைக்குள் எனக்கொரு கவுண்மேந்துக் காகிதம் வந்தது. அது இங்கிலீஸ், தமிழில் எழுதிவித் தேன். மிஸ்ரர் சூரனுக்கு உம்முடன் எட்டுப்பேர் சேர்ந்தெழுதிய கடிதத்துக்குப் பதில், பாடசாலைக் கட்டிடம் தளபாடம் முதலிய சகல ஆயத்தங்களையும் முடித்தபின் மானேஜர் எழுதட்டும். அதைக் கண்டவுடன் ஏதோ பாடசாலைக்காகிய சகல வேலைகளும் முடிந்து உதவி நன்கொடைப்பணமும் (கிறான்று) எடுத்ததுபோலத் துள்ளிக் குதித்தது என்மனம். பலருக்கும் கடிதத்தைக் காட்டினேன். விஷய மென்ன, அடடா... விதியாகர்த்தர் எனக்குக் கடிதமெழுதினார் என்ற அக்காலப் பேய்ப்பிராந்தி புதிய புதிர். கடிதத்தைக் கண்ட என் மைத்துனர், மூத்த மாமனார், மகன் வ. நாகமுத்தர் மேனாவீட்டார் என்றும் சொல்வர், அவர் சொன்னார் கட்டிடவேலையை முடியுங்கள் ஓடு நான் போடுகிறேனென்று.

**மிஷன் பாடசாலை தீக்கிரை**

*1914* ஆம் ஆண்டு ஆவணி மாதமிரவு **9** மணிவரையிருக்கும். நெல்லியடிக் கடை வீதியில் (றோட்டில்) யாழ்ப்பாணம் பருத்தித் துறை றோட்டில் நிற்கும்பொழுது வடக்குப்புறமாக பெரும் அனல் எழும்பலைக் கண்டேன். காளிகோயிலடியில் வீடெரிகிறதென்று சிலர் ஓடினார்கள் நானும் ஓடினேன். அவ்விடம் போக அப்பால் வடக்கே எரிகிறதெனக்கண்டு மீண்டோம். நெல்லியடியை விட்டு வீட்டுக்குப் போனேன். அரிக்கன் விளக்குடன் பெரியவனந்தோட்டத்துக்கூடாகச் சென்று தெருவிலிறங்கும்பொழுது வடக்குப் பக்கமாக ஒரு குரல் கூ... வென்றுகேட்டது. திரும்பிப்பார்த்தபடி நடக்க மறுமுறையும் அந்தக் குரல் கேட்டது, நின்றேன். குரல் வ. சி. சி. வைத்தியரின் குரல். குரல் வந்த திசையால் விளக்கொன்று கெதியாக வருகிறது. கிட்டிவந்த சில ஆட்கள் எனக்கு முன் வந்ததும் பாடசாலை எரிந்து போயிற்று என்றார்கள். எங்கள் கொட்டகைப் பாடசாலையை யாரோ சுட்டாரென நான் நினைப்பதற் கிடையில், மிஷன் பாடசாலையென்றார்கள் வந்தவர்கள். மாமனார் சி. பொன்னு, வ.வெள்ளையர், வைத்தியர் க. வே. சின்னப்பிள்ளை, வ. சி. சிலம்பு, சி. க. ஆறுமுகம் எப்படி என்னையென்றறிந்து குரல் வைத்தீர்களென்றேன். நெல்லியடியிலிருந்து நீர் வரும் நேரம் வழக்கமென்றார் வ. சி. சி வைத்தியர். அவரும் அக்காலம் தாய் வீட்டுக்கு (வதிரிக்கு) அடிக்கடி போய் வருவது வழக்கம்; ஆனதால்தான் அவரும் அங்குநின்ற மற்றையோருடன் கூடிவந்தார். எல்லோரும் கூடிக்கொண்டு எங்கள் வீடு வந்து சேர்ந்தோம். அவர்கள் சாப்பிட்டுவிட்டு வந்தார்கள். நானும் சி. சி. வைத்தியரும் சாப்பிட்டோம்.

**எதிரிகள் நாங்கள் தானென்றொழித்தல்**

கரவெட்டியில் எங்கள் வீட்டு முற்றத்திலிருந்து எல்லாரும் பலவாறாக யோசித்தோம். நாங்கள் கட்டிடத்திற்கு அத்திவாரம் போட்டதைக் கண்டு இதுவரை பொய்யென்றெண்ணியிருந்தார்கள்; இப்போ உண்மையில் கட்டிடம் கட்டப்போகிறார்கள் ஆகையால் இப்படிச்செய்து வழக்கில் இழுபடச்செய்துவிட்டால் பாடசாலை கட்டும் முயற்சி நின்றுவிமென்று டேவிட் ஆறுமுகம் தனிப்பட்ட முறையில் யோசித்திப்படிச் செய்திருக் கலாமென்று நாங்கள் யோசித்தோம். (நாங்கள் சந்தேகப்பட்டு யோசித் தோம். பின்பு உண்மையில் ஆறுமுகத்தின் வேலையென்று அவர் சொந்தக்காரரும் ஒப்புக்கொண்டனர்).

இந்த யோசனையில் எங்களையே எதிரிகளென்று பொலிஸ் காரருக்குக் காட்டிப் பிடித்தடைப்பிக்கக் கூடுமென்று இரண்டு மூன்று நாளைக்கு மறைந்திருப்போமென்று யோசித்து சொற்பநேரம் எங்கள் வீட்டு முற்றத்திலேயே படுத்துறங்கினோம். விடியமுன் எழுந்து தெற்கு நோக்கிச் சென்றோம்; விடிய வெற்றிகாட்டுப் பிள்ளையார் கோயிலுக் கண்மையான ஓர் மணல் தரையிலிருந்து நடப்பதெது என்றறியாது நாங்களே எங்களைக் கள்ளராக்கி ஒழிக்க எத்தனித்தோமென்று நல்லாய் எல்லாரும் சிரித்துக்கொண்டெழுந்து கரணவாய் தெற்குக் கந்தவன விதானை வீட்டையடைந்து அவருக்கு நடந்த விஷயத்தை வெளி யிட்டோம். தலையாரி வீட்டிலொழித்த கள்வர் போலத் தலைமைக்காரன் வீட்டிலேயே ஒளித்திருந்தோம். சி. க. ஆறுமுகம் ஒளிக்கவில்லை. அவரங்குமிங்கும் உளவுக்காரனாக நின்றார். விதானை வீட்டில் ஒன்றரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் தங்கினோம். பாடசாலை சுட்ட ஆட்களைத் தெரியாதென்று யோசேப்பாசிரியரும் தகப்பனும் விதானைக்குச் சொன்னார்களென அறிந்து மறுநாள் பொழுதுபட விதானையார் வீட்டால் கிளம்பி எங்கள் வீடுகளுக்கு வந்தோம்.

**வழக்கு**

பாடசாலை எரிந்த மூன்றாம் நாள் வீ. மு. சிற்றம்பலமணியகாரன் (சித்தமணியம்) கிறைம் என்ற பதினாறு குற்றவிசாரணை அவர் பொறுப்பானமையால் தான் அவ்விடம் விசாரணைக்கு வருவதால் என்னை அவ்விடம் வரப்படாதென்று சொன்னார். என்னை அவர்கள் காட்டி இவர் சுட்டவரென்றால் உடனே தான் என்னைப்பிடித்துக் கோட்டில் ஒப்பிக்கவேண்டுமென்றார். மேற்படியந்த விசாரணையிலும் எதிரிகளைச் சொல்லவில்லை. மறுநாள் நான் மணியகாரனைக் கண்டு என்ன நடந்ததெனக் கேட்டேன். இப்போ ஆட்களைத் தெரியாதென் றார்கள் இனிமேல் ஆரும் சாட்சிகளை ஒழுங்குசெய்து வழக்கெடுக்கலா மென்றார். பாடசாலை எரிந்த எட்டாம் நாள் கரவெட்டியில் நான் படித்த நுகவில் பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்த தலைமை ஆசிரியர் குமரேசு என்பவருடன் பாடசாலை எரிந்த விஷயமாக அவரென்னைக் கேட்டதற்கு நாங்கள் பாடசாலைக் கட்டிடம் தொடங்க ஆரோ இடையிலுள்ளவன் எங்களை நினைக்கட் டென்று சுட்டுப்போட்டான். அவர்கள் எங்களை நினைக்கவில்லை யென்று ஆசிரியருக்குச் சொன்னேன். சுட்டவன் வெளியாக நின்றல்லவோ சுடவேணும் ஒழித்து நின்று சுட்டவனும் மனிதனா வென்று பாடசாலையின் பின்பக்கத் திலிருந்தொரு பெண்குரல் வந்தது. இது எனது பேச்சின் பின்வந்தமை யால் உடனே எனக்குக் கோபம்மூண்டு சுட்டவன் நான்தான் என்ன செய்யப்போகிறாய் நான் ஒழிக்கவில்லை யென்று அந்தப் பெண்ணைக் கதிகலங்கப் பேசி விட்டேன். அப்பெண் யோசேப் ஆசிரியரின் உடன் பிறவாச் சகோதரி. இப்பெண் வாயிலாக அப்போ கட்டைவேலிக் கோவிலிலிருந்த முருகேசுப் போதகருக்கு நான் பேசியது தெரிந்து அவர் குமரேசு ஆசிரியரை விசாரித்தார். அவர் நான் சொன்ன விபரத்தையும் சொல்லி அப்பெண் பேசிய விபரத்தையும் உண்மைப்படி சொல்லி விட்டார். போதகர் அக்கறையெடுக்கவில்லை ஆனாலும் டேவிட் ஆறுமுகம் விசாரணைக்கு வந்த சாஷன் செல்லையா முன் சில சாட்சிகளை விட்டு வாய்ப் பிறப்புச் சொல்லுவித்து வழக்காய் கட்டளை பிறந்தது.

1 கா. சூரன்

2 வ. வெள்ளையன்

3 வே. சின்னப்பிள்ளை

4 சி. பொன்னர்

5 சி. சிலம்பர்

6 க. வேலுச்சோதிடர்

இந்த ஆறுபேரும் எதிரிகளானோம்.

இந்த வழக்கிற்குச் சாட்சிகள்

1. கந்தர் குருநாதர்
2. ஆறன் நாகன்
3. கதிரிப்பிள்ளை கார்த்திகேசு

இவற்றுள் 1ம் சாட்சி குருநாதர், குறணங்கவாளி வெள்ளாளன். 2ம் சாட்சி ஆறன் நாகன் , மாயக்கைப் பள்ளன். 3 ம் சாட்சி கதிரிப்பிள்ளை கார்த்திகேசு, அத்தாய் வெள்ளாளன். இந்தச் சாட்சிகளைக் கொடுத்த பனைக்கந்தர் என்பவர் அத்தாய் வெள்ளாளன். இந்தச் சாட்சிகளை எடுப்பதற்காக பனைக்கந்தருக்கு இறைச்சிக்குடலை, கள்ளு, பணமும் ஒரு சிறுதொகை டேவிட் ஆறுமுகத்தால் வழங்கப்பட்டது. சாட்சிகள் பனைக்கந்தரின் காலால் நடக்கும் கையாட்கள்.

**வழக்கு விளக்கம்**

எங்களுக்குப் பிறக்கிராசி சி. சுப்ரமணியம் (மருதடி) அப்புக்காத்து உடுப்பிட்டிப் பணக்காரன் அப்பா (இராமலிங்கம்) மகன் சின்னத்துரை (கந்தையா) அவர்களுக்கு பிறக்கிராசி மினாசி கணபதிப்பிள்ளை இவர் கோவியன் பரியாரி சீனி வல்லிபுரம் அவர்களின் மைத்துனர் அப்புக்காத்து குறோசத் தம்பையா என்பவர் அவர்களுக்குச் சாஷன் வாய்ப்பிறப்புதான். மாலிசந்திப் பிள்ளையார் கோயிலுக்கப்பால் ஒழுங்கையொன்று வடக்குப்புறமாக வந்து றோட்டில் சந்திக்கு மிடத்தில் நான் நிற்கும்பொழுது குருநாதபிள்ளை ஒழுங்கை வழியாக வந்தார். வதிரியில் ஓர் பள்ளிக்கூடத்தை யாரோ சுட்டுப் போட்டார்கள் அதைப் பற்றி விசாரித்து வருகிறேன் ஆட்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை யென்றேன். மேற்படி குருநாதபிள்ளை தனக்கந்தாட்களைத் தெரியு மென்றும் தானும் ஆறன் நாகனும் கதிரிப்பிள்ளை கார்த்திகேசுவும் பொலிகண்டிக் கந்தசுவாமி கோயிலடியில் ஒரு ஆளை வருத்தம் பார்த்துக்கொண்டு வரும்பொழுது இந்த எதிரிகள் பள்ளிக் கூடத்தைச் சுட்டதைத் தாங்கள் கண்டதாகவும் 1 ம் எதிரி நெருப்புத் தடியைக் கீறி கூரையில் கொழுத்தியதாகவும் 2 ம் எதிரி அதில் மண்ணெண்ணை ஊற்றியதாகவும் மற்றும் எதிரிகள் கல்லுப்பொல்லு கம்பி துவக்கு வைத்துக்கொண்டு நின்றதாகவும் சொன்னார். பின்னர் குருநாத பிள்ளையை விட்டு ஆறன் நாகனை வரச்செய்து அவனை விசாரித்தேன். அவனும் அப்படியே சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாட் காலை அவர்களைக் கூட்டிக்கொண்டு சாவுகச்சேரிக் கோட்டில் வழக்கு வைத்தேன். சாஷன் பெயர் செல்லையா அப்புக்காத்து குறுக்குக் கேள்வி சாவுகச்சேரிக்கு எவ்வழியாய் போனீர்கள் (சாஷன்) மந்திகையில் கோச்சேறிப் போனோம். (கேள்வி) சாட்சிக்காரருக்கு சாப்பாடு முதலிய செலவு (சாஷன்) எல்லாம் என் செலவு. இன்னுஞ் சில கேள்வி குருநாதபிள்ளை கூட்டிலேறிச் சத்தியம் செய்து சாஷன் சொன்னபடி சொல்லி முடித்தார். (குறுக்குக் கேள்வி) சாஷன் உன்னை எங்கே சந்தித்துக் கேட்டார். (மறுமொழி) எனது வீட்டில். (கேள்வி) ஆறன் நாகனை எங்கே சந்தித்தார். (மறுமொழி) அவன் வீட்டுக்குச் சாஷனைக் கூட்டிக் கொண்டு போய்விட்டேன். (கேள்வி) சாவுகச்சேரிக்கு எவ்வழியாகப் போனீர்கள். (மறுமொழி) ஓர் மாட்டு வண்டியிலேறிக் கரவெட்டி வழியாகச் சென்று வரணியில் றோட்டிலேறிப் போனோம். (கேள்வி) ஆறன் நாகன் வீட்டுக்கும் உன்வீட்டுக்குமுள்ள தூரம் எவ்வள விருக்கும். (மறு) கிட்ட. (கேள்வி) காற்கட்டை. (மறு) இன்னும் கிட்ட. (கேள்வி) கூப்பிடு தூரம். (மறு) இன்னுங்கிட்ட. (கேள்வி) கிட்ட வென்றால் எவ்வளவு. (மறு) ஒரு மையிலிருக்கும்.

நீதவான் முதல் கோடுவளவு ஒரே சிரிப்பு. (கேள்வி) நீ நிற்குமிடத் திலிருந்து எவ்வளவு தூரம் சொல்லு. (மறு) தான் நிற்கும் கூட்டிலிருந்து வழக்காளியாக நிற்கும் சாஷன் நிற்குமிடத்தை சுட்டிக்காட்டினார். (கேள்வி) நீ சொன்னதும் சாஷன் சொன்னதும் மாறுபாடாயிருப்பதால் ஆர் சொன்னது மெய். (மறு) ஐயா சொன்னது. ஆறன் நாகனும் முறண்பாடாகச் சொன்னான். டேவிட் ஆறுமுகம் சாவுகச்சேரிக் கோட்டடிக்கு உங்களுடன் வந்தாராவென்று கேட்டதற்குச் சாஷன் இல்லையென்றான். குருநாதனும் நாகனும் வந்ததென்றார்கள். 3 ஆம் சாட்சி கதிரிப்பிள்ளை கார்த்திகேசு இவர் பனைக்கந்தரின் மைத்துனன். அவர் எனக்கு மாறாகச் சாட்சி சொல்ல முடியாதென்று முதல் நாள் எங்களைக் கேட்டார். நானெப்படிச் சொல்லவேண்டுமென்று இதைப்பற்றி எனக்கொன்றும் தெரியா தென்றதால் சரியென்றோம். அவர் அதை வாய்ப்பாடம் பண்ணிய படியாற் போலும் அவரைக்கூப்பிட்டுச் சத்தியம் வாங்கிய பின் வயதென்னவென்று கேட்க, எனக்கிதைப்பற்றி ஒன்றுந் தெரியா தென்றார். முதலியார், என்ன காணும் வயது கேட்கவென வயது நாற்பத்தைந்தென்றார். நீ போவென்றுவிட்டு எதிரிகள் விடுதலை என்றார் நீதவான் பிரசாத். திகைத்துப்போன பெருவாரி சனக்கும்பல் இந்த வழக்குடன் கோட்டைவிட்டகன்றது.

இந்த வழக்கிற்கோரிணக்கம் எவ்வாறெனின் மேற்படி சாட்சிகள் பாடசாலையைச் சுட்டவர்கள் இவர்களல்ல இந்த எதிரிகளல்ல வென்று சொன்னால் உடுப்பிட்டி உடையார் (தம்புடையார்) பனைக்கந்தர் சாட்சிக்காரரின் எசமான் அவருக்கு ரூபா 60 அறுபது கொடுக்கவேண்டும். உடையாருக்கு எங்கள் சார்பில் நின்று வழக்கு நடத்திய உடுப்பிட்டி சடைக்குத்தகைக்காரன் (இவர் சித்தமணியத்தின் தமையன்) இவர் ரூபா 60 அறுபது கொடுக்கவேண்டும். மேற்படி உடையாரிடம் இந்த இணக்கம் எனக்குச் சம்மதமில்லை. ஏனெனில் பொய்க்குப் பணம் கொடுத்து மீளவேண்டுமென்பது என் சுபாவமில்லை மற்றையோருக்காக உடன்பட்டேன். ரூபா 60 வேண்டிக் கொண்டுபோக வண்டில் கட்டிவந்து காத்துக்கிடந்த தம்புடையாரும் பனைக்கந்தரும் அணிலேறக் காத்திருந்த நாய்கள்போலக் காத்திருந்து மண்ணைக் கௌவிக்கொண்டு போனார்கள்.

**வழக்கு வைத்ததினால் பிள்ளைகளை மறித்தல்**

வழக்கு வைத்ததில் அபிமானங்கொண்டு வதிரி, அல்வாய், கொற்றாவத்தை முதலியவிடங்களிலுள்ள பிள்ளைகள் எல்லாவற்றை யும் மறித்துச் சோதனைக்குப் போகவிடவில்லை. அப்போ அவர்களது வருடாந்தச் சோதனைக்குப் போன பிள்ளைகள் 11. பதினொரு பிள்ளைகள், இவை வதிரி மேற்குப் பிள்ளைகள் மாத்திரம். மேற்படி சோதனை வழக்குத் தள்ளுப்பட்ட அன்றே நடைபெற்றது.

## 1915 ம் ஆண்டு கட்டிடவேலை

கட்டிடத்தைக் கட்டி முடிக்க வேண்டுமென்று குருநாகல், கொழும்பு, காலி முதலிய இடங்களுக்கு எம் மக்களிடம் பணம் சேர்த்து வரும்படி க.வே.சின்னப்பிள்ளை வைத்தியரை அனுப்பினோம். இங்கே நின்று கட்டிட வேலையை நடப்பிக்க சி.பொன்னரை (மாமனார்) அவர்களை நியமித்து நாங்கள் இடையிடையே வந்து பார்ப்போமென்ற பேச்சில் ஆசையம்மானே நின்று (சி.பொன்னர்) கட்டிட வேலையைச் செய்வித்து வருகிறார். அப்போ எனக்கு வயது 34 முப்பத்திநாலு. நான் என் முயற்சியும் பார்த்து இடைவேளையில் வதிரிக்குச் சென்று கட்டிட வேலையைப் பார்த்துவருவேன். கொட்டில் பாடசாலையில் படிப்பித்த உபாத்திமாருக்கு முறையாகச் சம்பளம் கொடுபடாமையால் அவர்கள் ஆர்வமற்றவர்களானார்கள்.

இந்த இடையில் பெரியண்ணா (மூ.பெரியபொடி), சி.க. ஆறுமுகம் முதலியோர் நல்லதங்காள் நாடகம் ஆரம்பித்துக் கொட்டில் பாடசாலை யில் பழகினார்கள். பாடசாலைக்குள் நாடகமடித்துத் துவைக்கிறர்க ளென்று வைத்தியர் வ.சி.சி. புறுபுறுக்க நாடகமோ பாடசாலையோ விசேஷமென்று சி.க.ஆறுமுகம் கேட்டு இருவரும் தர்க்கிக்க நானும் ஆசையம்மானும் சரி ஆடிமுடிக்கட்டென்று சமாதானப்படுத்தினோம். மேற்படி நாடகம் படக்காட்சிபோல் சில தந்திரக்காட்சிகள் மூழி அரண்மனை, தாழிட்ட கதவு, நல்லதங்காள் பாடிய கற்பின் வைராக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தக் கடைசியில் அதிர்வெடியுடன் கதவு சடக்கெனத் திறக்கப்பட்ட அற்புதக் காட்சி, பாம்போடியமை, வேடன் எரிந்த தந்திரக்காட்சி இவை யெல்லாம் என்னாலாக்கப்பட்டது.

பணம் சேர்க்கப்போன க.வே.சின்னப்பிள்ளை வைத்தியரவர்கள் வந்து மாமனார் சி.பொன்னரிடம் ஓர் தொகைப்பணம் கொடுத்தார். இவ்வளவுந்தானாவென்று கேட்டார் மேற்படி சி. பொ. இன்னுமிருக் கென்றார் வைத்தியர். கட்டிடவேலை நடைபெற்றுவரப் பணத்தைக் கேட்டார் சி.பொ. வைத்தியரிடம். வந்தது கோபம் வைத்தியருக்கு இதனால் சி.பொ., வ.சி.சி. வைத்தியர், க.வே.சி.வைத்தியர் மூன்று பேருக்கும் சில நாள் கலகம் நடைபெற்றுப் பின்னும் கொஞ்சப்பணம் கொடுத்து இனிச்சரியென்றார். சரியென்றால் கணக்கைக் காட்டே னென்று சி.பொ.வும், வ.சி.சி.யும் கேட்டார்கள். மேற்படியார் (க.வே.சி.வைத்தியர்) குதர்க்கம் பேசினார். சரி போகட்டென்று விட்டாயிற்று. அத்துடன் எங்கள் கூட்டையும் விட்டகன்றார். இந்த இடையில் கொட்டில் பாடசாலை கலைந்து சில பிள்ளைகள் பழையபடி மிஷன் பாடசாலைக்குப் போய்விட்டார்கள். அபிமானம் உடையோர் விடவில்லை.

**ஊரவர் வதந்தி**

பாடசாலைக் கட்டிடவேலை (சிவர்க்கட்டு) நடைபெற்றுக் கொண்டுவர பொன்னர் மகளுக்கு வீடு கட்டுகிறாரென்பாரும் வேலுச்சோதிடர் சாஸ்திரம் சொல்லக் கட்டுப்படுகிறதென்று சொல்ப வரும் பாடசாலையைக் கட்டினாலும் பின் பாதிரிமாருக்குக் கொடுத்து விடுவார்களென்பாரும் எத்தனை நாளைக்குப் படிப்பிப்பார்களென் பாரும் கிறான்ராக்கப் பாதிரிமார் விடமாட்டார்களென்பாரும் இப்படியான கதைகளைக் கேட்கக்கேட்க விசை அதிகப்பட்டது எமக்கு.

**எங்கள் காணிவீடு (ஈடு)**

எங்கள் காணி அப்புவின் அறுதிக்கொள்விலை தம்பி மயிலேறி ஆசிரியர் ம.செ., ம.வடிவேல் இவர்கள் தந்தை. அவர் பேருக்கு நம்பிக்கைக்கு அறுதி எழுதப்பட்டிருந்தது. அதைக் கா. வாரித்தம்பி அவர்களுக்கு ரூபா 100 நூற்றுக்கு ஈடெழுதிப் பணமெடுத்து வந்து பாடசாலைக் கட்டிடச் செலவுக்காக மாமனார் சி.பொ.விடங் கொடுத்தேன். வ.சி.சி. வைத்தியரும் மாமனைக் கொண்டு ஈடு வைப்பித்து சி.பொ.மாமனாரிடம் பணம் கொடுத்தார். வேலுச் சோதிடரால் ஒரு சதமும் வரவில்லை அவரும் மேற்படி அவநம்பிக்கை யாளரில் ஒருவர். பாடசாலைக் கட்டிடம் முக்கால் பாகத்தில் நின்று விட்டது.



**ஒரு இக்றிமென்**

க.வே. சின்னப்பிள்ளை வைத்தியர் எங்களால் பிரிந்து நிற்கின்றமை யால் அவரை அமர்த்தவேண்டுமென்று ஒரு யோசனை பண்ணினார்கள். எங்கள் கொட்டில் பாடசாலை கலைந்த பின் மிஷன் பாடசாலைக்குப் போகாது நிற்கும் எங்கள் பிள்ளைகளை அவகதிக்கு உள்ளாக்காமல் கட்டிட வேலையைக் கெதியாக முடிக்க வேண்டியதால் இவ்வளவு காலத்துக்குள் முடிப்போமென்று க.மூ.சி. பேருக்குகொரு இக்றிமென் றெழுதிக் கொடுக்கவேண்டும் மேற்படி நால்வரும் என்பதே அவர்களது யோசனை (க.வே.சின்னப்பிள்ளை வைத்தியர் க.வேலுச்சோதிடர் கா.சூரன், வ.சி.சிலம்பு வைத்தியர்) நான் கேட்டேன் தவணைக்குள் முடிப்பதற்குப் பணம்விடுவது யார். நீங்கள் நால்வரும் தானென்றார்கள். நாங்கள் பணம்விட்டுச் செய்கிறதற்கு இன்னொருவருக்கேன் பொருத்த மெழுதுவானென்று கேட்டேன். மற்றவர்கள் ஒத்துக் கொண்டார்கள் நீயேன் குழப்பு கிறாயென்று சினத்துக் கேட்டார் மாமனார் சி.பொ. ஒத்துக் கொண்டவர்கள் திகைத்தார்கள். அப்போ இதை முடியாமல் பிள்ளைகளை மூடப் பிள்ளைகளாய் விடவாவென்றார் மூ.சி. நாங்கள் நாலு பேரும் முன்நின்று தொடங்கியது மெய் மற்றச்சனங்களும் உதவி செய்வோமென்றதும் மெய். ஆகவே எல்லாரும் பணம் விட்டால் சட்டென முடிக்கலாமென்றேன் இத்துடன் அப்பேச்சு நின்றது.

## 1915 ம் ஆண்டு ஆனிமாதம்

**எனது சுற்றுப்பிரயாணம்**

பாடசாலை கட்டிக் குறைவேலையை முடிக்கவேண்டுமென்று கொழும்பு முதலிய இடங்களுக்குப் பணம் சேர்க்கப் புறப்பட்டேன். க.வே.சி. வைத்தியர் முன்னம் பணம் சேர்த்ததில் சொற்ப பிசகு நேர்ந்தமையால் எனக்கு மனக் கூச்சமிருந்தும் புறப்பட்டேன். இதற்கு முன் கடை வைத்திருப்பவர்களிடம் போட்ட வீதம் ஆளுக்கு ரூபா 20. குருநாகல் முதலாளிமார் வ.சின்னப்பொடி, ஆ.மயிலேறி, சி.க. ஆறுமுகம் மூவரிடமும் ரூபா 60 அறுபது. கொழும்பு ஐ.ஆழ்வார்ப் பிள்ளை, வெ.வல்லிக்குட்டி இருவரிலும் ரூபா 40 நாற்பது, காலி வ.நாகமுத்து, மூ.சின்னத்தம்பி இருவரும் ரூபா 40 நாற்பது, மாத்துறை நா.சின்னத்தம்பி ரூபா 20 இருபது, இரத்தினபுரி க.வ.கந்தையா ரூபா 20 இருபது, நீர்கொழும்பு வே.மாரிமுத்து ரூபா 20 இருபது இவர்கள் நான் போனதற்குச்சில நியாயங்கள்பேசி (கொட்டில் பாடசாலை கலைந்தமை, க.வே.சி.வைத்தியர் பணம் சேர்த்த லட்சியம் செய்தமையும்) இன்னுஞ் சில நியாயங்கள் பேசி முன் க.வே.சியிடம் கொடுத்த பணத்தைக் கழித்து மிகுதிப் பணம் தந்தார்கள். கடை முதலாளிகளை ஒழிந்த ஏனையோரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் கேட்டதில் சிலர் பொருந்தாச் சிகரங்கள் பேசி என்னைப் பழிகாரனாக்கினார்கள். ஒருவர் என்னைக் கேட்டார் நீங்கள் தருமஞ் செய்யத் தொடங்கிப் பாடசாலைக்கு ஒன்றரைப் பரப்பு காணிகேட்டு 3 மூன்று பரப்பென்று எழுதுவித்தீர்களென்று, அந்த விஷயமாக ஊரிலே பேச்சு நடந்து அந்தக் காணிக்காரர் நியாயங் கேட்டுப் பேசியவரெல்லாம் சமரசப்பட்டுப் பாடசாலைக்குப் பணமுதவுகிறார்கள். அதைக் கேட்டவர் மேற்படி விஷயத்துக்குத் தூரமானவராதலால் அவர் கேட்க அவசிய மில்லையென்றமைபற்றி உதென்ன மூக்கு மயிர் பிடுங்கிய நியாய மென்றேன். அது அவருக்குக் குழப்படி பண்ணப் போதுமான பெருங் கதையானது. உடனே அவர் சொன்னார் மூக்கு மயிர் பிடுங்கி ஆள்ப் பாரம் குறையுமாவென்ற கருத்தை வைத்துப் பேசியதாகவும் அந்த மூக்கு மயிர் தன்னையும் சேர்ந்தவர்களையுமாகப் பாவித்துப் பேசினேனைப் பலருக்குஞ்சொல்லித் தம்மைச் சேர்ந்தோர் பணங்களையும் தடை செய்தார். சிலர் அந்தரங்கமாகத் தந்தனர். (பணம்). இந்த நியாயம் இரண்டு வருஷம் வரையில் நின்று நிலவியது. ஆனால் என்னிலும் பிழை யென்று சொல்லுதற்கிடமுண்டெனப் பின்பு நானும் உணர்ந்தேன்.

எப்படியெனில் மேற்படி காணி விஷயமாகக் கேட்டபொழுது சகித்தற் தன்மையை விரவி ஆறுதலாக நியாயத்தைக் காட்டி அவரைச் சமரசப் படுத்துவதைவிட்டுத் திடீரென உதுதான் மூக்குமயிர் பிடுங்கிய நியாய மென்று நான் சொன்னது பிழையென்று மீண்டும் சொல்கிறேன். (இந்த இடையில் நான் ஓர் பணச்சடங்கு கரவெட்டியில் வைத்தேன், பாடசாலைக்கோர் பகுதி எடுபட்டது) இந்த நியாயங்களைச் சரித்திரத்தில் சேர்த்தெழுத வேண்டிய காரணம் இப்பேற்பட்ட பொது விஷயங்களில் இடந்தப்பிக் கதைபேசி குத்திக் குழப்படி செய்பவரையும் மேற்படி விஷயத்தில் ஈடுபட்டவர்க்கு இடந்தப்பிக் கோபம் மூண்டு கதைபேசி மேற்படியார் கிளப்பிய கோளுக்கு இடங்கொடுத்த என் போன்றோரை யும் மற்றையோர் நினைக்கட்டுமென்றமை பற்றியேயாம்.

நான் பணத்தைச் சேர்த்து வந்தபின் கட்டிடவேலை வளை வைக்கும் எல்லையில் முடிவுற்றது. இனிப் பனைகள் தறிக்க ஆரம்பித்தோம் 1916ம் ஆண்டு தை மாதத்தின் பின் நான் கரவெட்டி மேற்கு, கிழக்கிலும் வைத்தியர் சி.சி. கரணவாய் சோழங்கனிலும் க.வே.சோதிடர் வரணிப் பகுதியிலும் பனைகளைத் தறித்தோம். கரவெட்டி கிழக்கில் வேர்க்குத்திப் பள்ளற்குரிய காணியொன்றுள் ஒரு பனை எத்தனையோ வெள்ளாளர் கோயிலுக்கும் பாடசாலைக்கும் கேட்டுக் கொடாது நின்ற பனை பாடசாலைப் பெரிய வளைக்கென்று எனது சினேகிதன் வைத்தியர் சின்னத்தம்பியென்பவரைக் கேட்டேன். அவர் தறிக்கும்படி சொன்னார். உடனே தறிப்பித்தேன். அந்தக் காணி மேற்படி பகுதி பள்ளர்



பலருக்காயினும் மேற்படி வைத்தியர் சின்னத்தம்பி அவர்கள் பகுதிக்குள் வயது குறைந்தவராயினும் தலைவராக விளங்கினார். அவர் என்னை அண்ணனென்று அன்றித் தம்பியென்று சொல்ல மார்க்கமின்றி என் தொழில் தச்சுவேலை முதலிய சிற்பவேலை பற்றி ஆசாரியாரென் றென்னை அழைத்து வந்தார். அப்பெயர் எங்கள் சமூகத்தவருக்கும் வாய்ப்பானது.

அப் பனையை முப்பது முழத்தில் துண்டாடி இரு பாதியாகப் பிளந்து அதையேற்ற ஒரு வண்டி கொண்டுபோனோம். பனை கிடக்கும் காணிக்கும் றோட்டுக்கும் தூரம் அரைக்கால் மையிலிருக் கும். (வல்லை கரவெட்டி முள்ளி றோட்டு) இடையில் வயல்க் காணி, உயர வரம்புகள், பனையும் அடிவீங்காப் பருமம் அடிப்பனைக்கு அப்பு (என் தந்தை), நுனிப்பனைக்கு வண்டிக்காரன் (வெள்ளாளன் பெரிய பகுதி), நடுப் பகுதிக்கு நான் ஒவ்வொரு பாதியாகக் காவிக் கொண்டு வரும்பொழுது சில இடங்களில் என்னை நெருடி இருத்தினபொழுது, போதும் பள்ளிக்கூடம் கட்டினதென மனதில் எண்ணினேன். அதுதான் முதற் பாடசாலையில் பொருத்தில்லாத் தண்டிகை வளைத் தாய் வளை. அதன் உட்பக்கச் சின்ன வளைகள் வேலுச்சோதிடர் வரணியால் கொண்டு வந்தவைகள். நட்டாணியின்றி, தறைசில்லின்றி மூடிப் பொருத்தி; தண்டிகைத் தீராந்திகளாக்கியது அப்புவின் வேலை யாகுமென்பது என்றைக்கும் கவனிக்கத்தக்கது. குறுக்குத் தீராந்தித் தண்டிகை வளைகள் கிழக்கு, மேற்கு மூ. சி. விடம் நாளுக்குத் தறித்த பனை. மூலைக்கை விறாந்தையான்கள் நாலும் குறையன்பருத்தியில் ஓர் ஆண் பனை காலஞ் சென்ற மைத்துனர் நீ. விஸ்வநாதி தந்த உபகாரம். கட்டிட மேல்க் கோப்பிற்காகிய சகலமும் ஊசிக்கால் இராச மல்லுக்காகிய சாதிமரங்கள் எல்லாம் வந்து விட்டன. ஆனால், வேலுச்சோதிடர் அல்வாய், கொற்றா வத்தை, முல்லைத்தீவு, முள்ளியவளை முதலிய இடங்களில் பாடசாலைக்குப் பணம் சேர்த்தாரென்ற கேள்வியிருந்தும் பணமாக இன்னும் ஒரு சதமும் வரவில்லை.

## 1916 ம் ஆண்டு ஆவணிமாதம்

### திருவிழாப் பணம் கேட்டதால் வந்த பிழவு

மேலே சொல்லப்பட்ட மேற்கோப்பு வேலைக்காகிய மரச்சாமான்கள் எல்லாம் வந்து விட்டன. இனிமேல் வேலையைச் சட்டென முடித்துக் கையோடை ஓட்டையும் போட்டுவிடலாம். ஆகையால் இந்தமுறை நாங்கள் எட்டாந் திருவிழாவை (உல்லியனொல்லை) டாம்பீகமின்றி ஓர் அளவுபடுத்தி நடைபெறச் செய்து மீட்ட பணத்துக்கு ஓடு வேண்டிப் பாடசாலைக்குப் போட்டு விட்டால் ஒரே செலவாகுமென்று மேற்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாவை பொறுப்பேற்று நடத்தும் தம்பி மூ.சி. வைக்கேட்டேன். என்னையேன் கேட்கிறீர்கள் கடுக்கண்டவர்களைக் கேளுங்கோ (வயது மூத்தவர்களை) என்றார். நானும் வ.சி.சி.வைத்தியரும் எங்கள் பெரியாட்களிடம் போனோம். அவர்கள் சி.வல்லியப்பா, எனது மூத்த மாமன் பாடசாலைக்கு அத்திவாரக் கல் வைத்தவர் குளிப்பாண்டிதோட்டம், க.கறுத்தார் புளியடி, வ. வெள்ளையர் பறையங்கன்வளவு, நா. சின்னக்குட்டியர் பெரியதோட்டம் இவர்களும் எனக்கு மாமன் முறையானவர்கள். இவர்களை ஓரிடத்தில் கூட்டி குளிப்பாண்டித் தோட்டத்தில் மூ.சி.வுக்குச் சொன்ன விதமாகச் சொல்லித் திருவிழாவை ஓரளவுபட நடத்தி ஓர் சிறு தொகைப் பணத்தை மீட்டுத் தந்தால் பாடசாலைக்கு ஓடு வேண்டிப் போட்டுவிடலாமென்று சொன்னோம். திருவிழாவைக் குறைக்க முடியாது, பாடசாலைக்குப் பின் பணம் சேர்க்கலாம், இப்போ திருவிழா நடந்ததுபோல் நடக்கட்டுமென்றார்கள். பின்பு பணம் சேர்ப்பது பெரும் கஷ்டமாகும். அது காலத்தை நீட்டிப் போடும். இதிலையே ஒரு சிறுபகுதியை எடுத்துவிட்டால் இரண்டு காரியமும் இலகுவாக முடிந்துவிடுமென்று பல நியாயங்களைக் காட்டிப் பேசினேன். பெரியதோட்டப் பகுதியார், பரியாரி வீட்டார் சம்மதியார்களென்று முன் சொன்னபடி சொன்னார்கள். அவர்களுக்குந் தானே பள்ளிக்கூடமென்று அவர்களுக்கும் இந்த நியாயத்தைச் சொல்லி சம்மதிக்கச் செய்து இரண்டு காரியங்களும் நிறைவேற இது ஒரு நல்ல தருணமென்றோம். அது முடியாது, திருவிழா நடந்ததுபோல் நடக்க வேண்டும் அதைக் குறைக்க முடியாதென்று முதலைப்பிடியாய் நின்றார்கள். சரி நீங்கள் திருவிழாவை நடத்துங்கள் பாடசாலைக்கு நாட்டமுள்ளவர்களிடம் பணத்தை வேண்டிப் பாடசாலைக் குறை வேலையை முடிக்கப் போகிறோம். எங்களிடம் திருவிழாப் பணத்துக்கு வரவேண்டாம் என்று அவ்விடத்தால் மீண்டோம். திருவிழாப் பணத்துக்கு வருவோம் என்றார் மூ.சி. மௌனமாக வந்தோம்.

பின்னர் திருவிழாப் பணமறவிடத் திரிந்தார்கள். தாரிக்கப்பத்து, சந்திவளவு, கோணாண்டிவளவு, கரவெட்டி இந்த நாலு இடத்தாரும் திருவிழாப் பணம் கொடுக்கவில்லை. இதனால் அவர்கள் அதிக வீம்பு கொண்டு அதிக பணத்தைச் செலவிட்டுச் சின்னமேளம் இராசன் மகளுடன் இன்னுமொருதி. பெரியமேளம் அண்ணாசாமியைவிடப் பெரிய மாணிக்கம், கிணுக்கிட்டி என்ற ஓர் புதிய மேளவாத்தியம், திருபூந்தொட்டி ஒரு தண்டிகை, வாணங்களும் அதிகம். முன் வருடங்களிலும் மிகடாம்பீகமான முறையில் அணிவகுத்துத் திருவிழா மிகவிமரிசையாக ஆரம்பமானது. மேளக்கச்சேரியை நானும் வ.சி.சி. வைத்தியரும் பார்த்துக் கொண்டு சின்னமேளமாட வர இருவரும் வீட்டுக்கு (கரவெட்டி) வந்து சாப்பிட்டுப் படுத்துவிட்டோம்.



ஏதோ குளிர்ந்தெழுந்தேன் நான் இருந்த இடமுந்தெரியவில்லை நேரமும் தெரியவில்லை. ஒரு காலமுமில்லாதமுறையில் வீம்பு கொண்டு நினைத்து எப்படித் திருவிழாவை நடத்தத் தொடங்கினார் களோ அப்படியே ஒரு காலமுமில்லாத முறையில் மழையும் பொழிந்து கொண்டே நின்றது. எவ்வளவோ பணத்தையெல்லாம் செலவிட்ட திருவிழாக்காரர் ஒருவரேனும் கோவிலடியில்லாது வீடு போயினர். மறுநாள் விடிய ஏழுமணி போலத்தான் மழை ஒருவிதமாய் ஆறியது. சுவாமி வெளிவீதிக்கு வரவேயில்லை. இதனால் அன்றைய திருவிழா நடைபெறவில்லை.

## மேல் கோப்புவேலை

பாடசாலைக்கு மேற்கோப்பு மரவேலை செய்தது நான், அப்பு, தம்பி நாகமுத்து, கோணப்பன் (தச்சன்) இந்த நால்வருந்தான் முழுவேலையும் நாங்களே செய்கிறோம். சில நாளைக்கிடையில் நிலத்தில் வைத்து மேல் வேலைக்கோர்வை முடித்தோம். இனித் தீராந்தி ஏற்றுதல். (வளை வைத்தல்)

நாள்க் குறிப்பில் பிசகு முதலாவது தன்னுடன் யோசியாமல் நாள் நியமித்தது. க.வே சோதிடருக்கு மனஸ்தாபமேற்பட்டது. அவரோடு யோசியாமல் விட்டது வேணுமென்றல்ல அப்போ இடையிடையே கலாநிதி யந்திரசாலைக்குப் போக நேர்வதுண்டு. அப்படிப் போன சமயம் அவர், சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்க கணிதரானமையால் ஐப்பசி அன்றிக் கார்த்திகையில் எங்கள் பாடசாலைக்கு வளைவைக்க ஒரு நல்ல நாள் பார்த்துத் தரவேண்டுமெனக் கேட்டேன். ஐப்பசி மாத நாட்களிலும் கார்த்திகை 17ம் திகதியே நல்ல நாளென்றார். அதை மாமனார் சி.பொ.விடம் சொன்னேன். அவர் சோதிடருக்குச் சொன்னார். க.வே.சோதிடர் நாங்கள் நியமித்த நாள் சரியில்லை யென்றும் அவிட்ட நட்சத்திரமென்றும் அது ஆறு வருட எல்லையில் நின்றுவிடுமென்றும் ஒரு பாட்டும் பாடிக்காட்டித் தானொரு நாளை நியமித்து மாமனாரிடம் சொல்லிவிட்டார். நானும் சி.சி.வைத்தியரும் கலாநிதிக்குச் சென்று க.வே.சோதிடர் சொன்னவைகளைச் சொல்லி ஆறு வருஷத்துக்கப்பால் நின்றுவிடுமென்றுஞ் சொன்னதாகச் சாஸ்திரிகளுக்குச் சொன்னோம். (சுப்ரமணிய சாஸ்திரிகள்) அவர் உள்ளமுடையானென்னுமோர் புத்தகத்தை விரித்து வாசிக்கும்படி காட்டினார். அதில் அவிட்ட நட்சத்திரத்துக்கும் திருவாதிரை நட்சத்திரத்துக்கும் அம்சம் பேதமில்லை யென்பதையும் அபரபட்சத்திலும் பூர்வபட்சம் விசேஷமென்பதைக் கண்டோம். பின்பு அவர் சொன்னார், எனது பஞ்சாங்கத்தில் போட்ட நாளுக்கு விதிகாட்டி விட்டேனென்றும் உங்கள் சோதிடர் குறித்தநாள் திருவாதிரை யென்றும் அவிட்டத்துக்கும் திருவாதிரைக்கும் வேற்றுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்றும் எனது பஞ்சாங்க நாள் பூர்வபஷ்சமென்றும் உங்கள் ஜோதிடர் குறித்த நாள் அபரபட்சமென்றும் அபரபட்சத்திலும் பூர்வபட்சம் விசேஷமென்றுஞ் சொல்லி இனி உங்கள் விருப்பமென்றார். இன்றுந் தமிழ்ச் சோதிடர்கள் அப்படித்தான் சொல்வார்கள் அவர்கள் சொல்வதும் குற்றமில்லை நான் எனது பஞ்சாங்கத்திற் போட்ட நாளுக்கு விதி காட்டினேனினி உங்கள் விருப்பமென்று மீட்டும் சொன்னார். நாங்கள் மீண்டு வதிரிக்குச் சென்று மாமனார் சி.பொ. மூலம் மேற்படி சோதிடருக்கு ஆளனுப்பினோம்.

**அப்படியானால் சரி**

மேற்படி சோதிடர் மாமனார் சி.பொ.வீட்டுக்கு வந்து சேர்ந்தார். சுப்பிரமணிய சாஸ்திரிகள் சொன்னதையெல்லாம் சொல்லி அவர் எங்களிடம் உள்ளமுடையானென்ற புத்தகத்தில் சில இடங்களைச் சுட்டிக்காட்டி நாங்கள் வாசித்தளவில் அவரெடுத்த நாள் அவிட்டம் நீங்களெடுத்த நாள் திருவாதிரை இந்த இரண்டு நட்சத்திரமும் ஒரே அம்சமென்று மேற்படி உள்ளமுடையானில் கண்டோம். நீங்கள் எடுத்த நாள் அபரபட்சம் அவரெடுத்த நாள் பூர்வபட்சம். அபர பஷ்சத்திலும் பூர்வபஷ்சம் விசேஷமென்றும் அவர் சொன்னார். பஞ்சாங்கத்திற் போட்ட நாளுக்கு விதிகாட்டி விட்டேன் இனி உங்கள் விருப்பமென்றுஞ் சொன்னார் என்று சொல்லிமுடித்தோம்.

அவருடைய பஞ்சாங்கத்தில் குறித்த நாள் போட்டிருக்காவென்று க.வே. சோதிடர் என்னிடம் கேட்டார் ஆமென்றேன். யோசித்தார் நாள் வைத்திருப்பது இரகுநாதருடையதென்று அவருடைய பஞ்சாங்கத்தில் போட்டிருக்கென்கிறீர்கள் அப்படியானால் சரியென்றார். நாளும் கிட்டிக்கிட்டிவருகிறது.

**வளையேற்றல்**

இராஷத வருஷம் கார்த்திகை மாதம் கள.ம்திகதி *(1.12.1916)* வெள்ளிக்கிழமை இரவு மூன்று 3 மணிக்கு அவிட்ட நட்சத்திரம் சத்தமித் திதி மகரலக்கினத்தில் வந்த சுபமுகூர்த்தத்தில் மேற்படி க.வே.சோதிடர் தேவரையாளி அம்மன் கோயிலில் நின்று நேரந் தவறாது கோயில் பூசகர்களையும் ஆயத்தம் செய்து அதே நேரத்தில் அம்மாளுக்குப் பூஜை நடைபெறவும் அதே நேரத்தில் சங்கநாதம், மணியோசை எங்களுக்குக் கேட்க அம்மன் பூசாபயனை முன்னிட்டுக் குறித்த நேரந் தவறாது சுற்றோட்டத் (நாற்புற) தீராந்திகளையும் ஏற்றி முடித்தோம். பின்னர் க.வே.சோதிடர் மேற்படி கோயில் பிரசாதம், விபூதி, சந்தனம், தாம்பூலம், அமுது, மோதகம் முதலியவைகளுடன் எங்களிடம் வந்தார். உடனே நாங்கள் எல்லோரும் (அதில் நின்ற ஐந்தாறுபேர்) முகம் கழுவி



மேற்படி பிரசாதத்தை உபயோகித்தோம். இனி ஊசிக்கால் இராசமல் தீராந்தி ஏற்ற ஆயத்தம் செய்து நானும் ஆசையம்மானும் (சி. பொ.) அவை வீட்டிலிருந்து (கோணாண்டி வளவு) ஒரு மரம் காவிக்கொண்டு வந்தோம் அப்போ மழை தூறியது (விடிந்தபின்) ஆ...ஆ... வென்ற சத்தம் தட்டித்தடியிலிருந்து ஒலித்தது. தீராந்தியில் நின்ற ஒருவரால் அரக்கப்பட்ட மரம் பொறிந்து கீழே கிடங்கு பொறித்துக் கொண்டிருந்த தம்பி சீனியின் தலையை நோக்கிவர ஆ...ஆ... என்ற அபச்சத்தம் அங்குமிங்குமாக ஒலித்தது. ஓர் மயிரிடையில் சீனியின் தலை தப்பியது. மேற்படி சீனியென்பவர் பொன்னம்மா ஆசிரியையின் தகப்பன்.

**ஆபத்திடையே தப்பிவரும்**

ஊசிக்கால் ராசமல் தீராந்தி ஏற்றி மற்றைய மரங்களையும் ஏற்றித் தொற்றுத் தைக்கிற எல்லையில் விட்டு மேற்படி சுப்பிரமணிய சாஸ்திரிகளைச் சந்தித்து வளை ஏற்றியபின் நடைபெற்ற அபச்சத்த விஷயத்தை விபரித்துச் சொன்னேன். அப்போதவர் சொன்னார் இப்பாடசாலைக்கு இடையடையே சில ஆபத்துக்கள் வரும் அந்த ஆபத்திடையே தப்பிவரும் என்றார். அதன் பின் எனக்கு வெகு சந்தோஷம் ஏற்பட்டது. அதை மாமனார் சி.பொ.முதலியோருக்குஞ் சொன்னேன். விஷயம் அவ்வாறே நடைபெற்று வருகின்றது. பாடசாலை ஆரம்பித்த காலம் தொட்டு இப்பாட சாலைக்கு இடைபல ஆபத்துக்கள் (கலகங்கள்) வந்து கொண்டுதானிருக்கிறது. இதனால் சுப்பிரமணிய சாஸ்திரிகள் சொன்ன ஆரூடம் பொய்க்கவில்லை.

**பழையகொட்டில் பாடசாலை**

மேற்படி கொட்டகை கூரையின்றிக் கட்டுக்கோப்புடனிருந்ததை க.வே.சின்னப்பிள்ளை வைத்தியர் புடுங்கிக் கொண்டுபோய்த் தனது வீட்டில் மன்னாதோட்டத்தில் அடுக்கியிருக்கிறாரென்று கேள்விப் பட்டு ஒருநாள் விடியமுன் கரவெட்டியிலிருந்து நானும் வ.சி.சி. வைத்தியரும் எழுந்து வதிரிக்கு வந்து வே.ஆ.மயிலேறியையும் (மயிலு) கூட்டிக் கொண்டு அல்வாய் தெற்கு விதானையிடம் (கந்தையா) சென்று அவரைக் கூட்டிவந்து மரங்களை நடுக்கட்டும்படி சொன்னோம். அவர் (வைத்தியர்) எங்களையும் பேசிப் பிறிம்பாக மயிலேறியையும் பேசினார். விதானை அவரை அதட்டிப் பேசாதை யென்றார். பின்பு விதானைக்குச் சொன்னார் இனி இவர்களுக்கும் எனக்கும் வழிபோகாது பாடசாலைக் கட்டிடத் துக்கு நானும் பணம் கொடுத்திருக்கிறேன் அதை நான் விடுகிறேன் இந்த மரங்களை நானெடுக்கிறேனென்றார். சரி அப்படியே போங்களென்றார் விதானை. அத்துடன் நாங்கள் வந்துவிட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒடுவேண்டிப் போடல்

மேல்க்கட்டுக்கோப்பு வேலையை முடித்து ஓடு வேண்டப் புறப்பட்டோம். திருவிழாவுக்குக் கொடாத எங்கள் பணம் கரவெட்டி, தாரிக்கப்பத்து, சந்திவளவு, கோணாண்டிவளவு இந்த நாலு பகுதி யாலும் ரூபா 250 இருநூற்றைம்பது சேர்ந்தது அப்போ ஓட்டின் விலை 10 சதம்.

## க. வே. சி. வைத்தியருக்காக சி. க. ஆறுமுகம் சேர்ந்தார்.

இதுவரையில் கூடமாட நிற்கிறார் மரங்களும் தந்தார் ஊருக்குள் பணமும் சேர்த்தார் ஆனால் இதுவரை நடைபெற்ற வேலைகளுக்கு ஒரு சதமும் தராதிருக்கும் க.வே.சோதிடரிடம் சி.க.ஆறுமுகம் விடாப் பிடியாக நெருங்கி ஓட்டுக்குப் பணம் வேண்டுமென்று ரூபா 50 ஐம்பது தானும் ரூபா 50 ஐம்பது, திருவிழாப் பணம் ரூபா 250 இருநூற்றைம்பது மொத்தம் ரூபா 350 முன்னூற்றைம்பது சேர்த்துத் தந்தார்.

## ஓடு வேண்ட வண்டி

அப்போ யாழ்ப்பாணத்திலையே ஓடு வேண்டவேண்டும். இரண்டு வண்டி கொண்டுபோய்க் கன்னியாஸ்திரி மடத்தடியில் 9 ஒன்பது சதப் படி இரட்டை யானை அடையாள ஓடு 1000 ஆயிரம் ஏற்றிவந்தோம் ரூபா 90 முகட்டோடு சதம் 15 பதினைந்து. மறுமுறை நாலு வண்டி கொண்டு புறப்பட்டோம் அப்பொழுதும் சோதிடரிடம் சி. க. ஆறுமுகம் ரூபா 50 ஐம்பது வேண்டிக்கொண்டார். சி. பொ. மாமனாருக்கு க. வே. சோதிடர் சொன்னாராம் இந்த ஆறுமுகத்தோடு காலம் விட முடியாதென்று. நானும் ஆறுமுகமும் நாலு வண்டியுடன் வந்து வ. சி. வைத்தியரை எழுப்பித் திருவிழாப்பணம் அவரிடமானமையால் பணத்தையுங்கொண்டு எங்களுடன் வரும்படி கேட்டோம். பணமில்லை யாருக்கோ கைமாற்றுக் கொடுத்தது இன்னும் வேண்ட வில்லையென்றார். சரி பணத்தை நாளை பத்துமணிக்கு முத்தையா கொம்பனிக்குத் தந்தியில் அனுப்பும்படி சொல்லிவிட்டு நாங்கள் இருவரும் போனோம். வண்டிகள் விடியப் பெரியகடையை அடைந்தது. ஓட்டுக்காரனைச் சந்தித்து விலை பேசினோம். ஒரு ஓடு சதம் 8 எட்டு. 2000 இரண்டாயிரம் ஓடு ஏற்றினோம் வ.சி.சி.வைத்தியர் பணம் அனுப்பவில்லை ஆசையம்மானும் (சி.பொ.) சங்குவேலியி லிருந்து வருகிறோமென்று வரவில்லை நேரமும் போகிறது. சி. க. ஆறுமுகம் தனது கடுக்கனையும் மோதிரம் இரட்சா பந்தனத்தையும் கழற்ற ஓட்டுக்காரன் கழற்றாதை வெள்ளிக்கிழமை யென்றான். ஓட்டைவிட்டுப் போகமுடியாது காரியமில்லையென்று 100 நூறு ரூபாவுக்கு ரூபா 60 அறுபதும் கொடுத்து ஓடுகளுடன் வந்து சேர்ந்தோம். மறுநாள் வ.சி.சி வைத்தியரிடம் ரூபா 100 நூறுரூபா வேண்டிக் கொண்டு அவரும் ஆறுமுகமும் நானும் எங்கள் வண்டியில்



போய் யாழ்ப்பாணத்தில் நகைகளையுமெடுத்துக் கொண்டு சங்கு வேலிக்குப் போனோம். அங்கு நின்று தொழிலாற்றியவரிடமும் பணம் சேர்த்துக்கொண்டு மாமனார் சி.பொ.வையுங் கூட்டிக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தோம். பின்னர் முதல் வேண்டிய இரட்டை யானை மார்க் ஓடுகளைக் குறுக்குப்பத்திக்கும் பிறகு வேண்டிய நட்சத்திர மார்க் ஓட்டை நெடும்பத்திக்குமாக அடுக்கி முடித்தோம் மூலையோடு போடவில்லை.

## இதற்கிடையில் எனக்கொரு வேலை

நெல்லியடி வயிரவகோயிலடிச் சந்தியிலிருந்து வதிரி வேதக் கோயிலுக்கு விஸ்ப்பாண்டவரையும் இரு குருமாரையும் ஏற்றிச் செல்ல ஒரு இரதம் என்னால் செய்யப்பட்டது. அதன் வடிவம் சகடை போன்றது நாலுசில்லு இருசில்லில் முடக்குச்சாவி அந்த முடக்குச் சாவிகளால்தான் ரதத்தை இயக்குவது. குறித்த சகடை போன்ற இரதத்துக்கு மேற் பாப்பலகை பரவி அதற்குமேல் மூன்று கதிரைகள் வைத்து அக்கதிரை களிலேயே மேற்படி மூவரும் அமர்ந்திருப்பர் அவர்களுக்கு மேல் ஓர் வட்டக் குடைபோலப் பந்தல், இரதம் இயங்கும் பொழுது சுழன்றபடி நிற்கும். சகடை ரதத்துள்ளே மூன்று பேர் முடக்குச் சாவிகளால் சில்லை உருள இயக்குபவர் இருவர் மேலே சுழரும் குடைப்பந்தரின் அச்சுக் கம்பை இயக்க ஒருவர் இரதத்தை இயங்கச் செய்பவர் மூவரும் அங்கிருப் பதை ஒருவரும் காணமுடியாது. இரதம் மேளவொத்தியத்துடன் ஆமை அட்டை வேகத்தில் நகர்ந்து செல்லத் தெருக்கான்களுக்குச் செல்லாமலும் மூட்டுகளில் அதட்டித் திருப்பி விடவுமாக முன்னுக்கு நான் ஒரு கம்பிற் பிடித்தபடி சென்றேன். இந்த ரதம் சென்ற காட்சி அக்காலம் (1916) இல் சனங்களுக்குப் பெரிய அதிசயமும் அற்புதமுமாக விருந்தது.

## பள்ளிக்கூடத்துக்குப் பொடியள் வேண்டாமோ

மேலே சொல்லப்பட்டபடி ரதம் நகர்ந்துவர எம்மவருளொருவர் வந்து நான் பிடித்துவருங்கம்பில் பிடித்தார். இங்கே ஆட்கள் தேவையில்லை இதில் பிடிக்கக்கூடாதென்றேன். அவர் என்னுடன் கோபித்துக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் பொடியள் வேண்டாமோ வென்று சொல்லி விலகிப் போனார். அந்நேரம் அவருக்குச் சொற்ப வெறி ரதஞ்செல்லும் பவனியைக் கண்டு சந்தோஷத்தில் எனக்கு உதவிக்கு வந்திருக்கலாம். அன்றித் தான் எனதாளென்று காட்ட வந்திருக்கலாம். நான் மறுத்தது, இன்னும் அவருடன் வந்த ஆட்கள் வந்து பிடிப்பார்கள். அது பார்பவருக்கு எல்லாரும் கூடி அதை இழுக்கு மாப் போயிருக்கும். இதை ஏன் இதில் எழுதவேண்டுமெனின் அப்போ பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்காக நான் எவருடனும் எதுவும் பேசக்கூடாதென்ற கொள்கை எம் ஊருக்குள் ளிருந்தது. திருவிழாவுக்குப் பணம் கொடாத மேலே சொல்லப்பட்ட 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தைந்து குடும்பங்களையும் (எங்களை) திருவிழா நடத்திய 150 நூற்றைம்பதுக்கு மேல் குடும்பங்களையும் கூறாக்கித் திருவிழாப் பணம் கொடுத்தவர்களைத் திருவிழாக்காரரென்றும் கொடாத எம்மவரைப் பள்ளிக்கூடக் காரரென்றும் பொதுசனங்கள் சொல்லித் திரிந்தனர். அது இரு பகுதிக்கும் சந்தோஷமாயிருந்தது. பள்ளிக்கூடமென்றால் எங்களுக் குச் சந்தோஷமாயிருந்தது. திருவிழா என்றால் அவர்களுக்குச் சந்தோஷ மாயிருந்தது.

## மார்சல் லோ

குறித்த மார்சல் லோ மேலே சொல்லப்பட்ட திருவிழாக்காரர் பள்ளிக்கூடக்காரருக்கு வைத்த சட்டம் அதாவது திருவிழாக்காசு கொடாத அத்தனை பேர்களையும் தங்கள் சபை சந்திகளுக்கெடாமலும் அவர்கள் சொன்னால் திருவிழாக்காரர் பள்ளிக்கூடக்காரர் வீடுகளுக்குப் போகப்படாதென்பதுவுமே அவர்களது மார்சல் லோச் சட்டம் இந்த மார்சல் லோவென்ற சொல் 1915 ம் ஆண்டு சிங்கள சோனக கலகத்தில் அடக்குமுறைச் சட்டத்தை மீறியவர்க்குக் கேள்வியின்றிச் சுடுதல். இந்த மார்சல் லோவென்ற சொல்லைக் கொழும்பிலிருந்து கொண்டுவந்து வதிரியில் போட்டுப் பரவினார்கள். திருவிழாக்காரர் (க.மூ.சி).

## பாடசாலை ப்ரவேசமும் சமாதான முயற்சியும்

பள்ளிக்கூடக்காரருக்கு மார்சல் லோ பாசாக்கியிருக்கிறோமென்று சொல்லித் திரிந்தார்கள் திருவிழாக்காரர் நாங்களதைப் பறவாய் பண்ணாமல் கூடியளவு ஒற்றுமையாக்கவே வெகு பிரயாசைப் பட்டோம். ஆனால் திருவிழாக் காசு தந்தாலன்றி ஒற்றுமையாக முடியாதென்று மூ.சி.யும் சேர்ந்தவர்களும் முற்றாய் மறுத்துப் பிடிவாதம் செய்தார்கள். நானும் பல பெரிய மனிதர்களைப் பிடித்து நியாயம் பேசுவித்தேன். அவர்கள் சொல்லும் நியாயத்தை ஒப்புக் கொள்வார் எவருமில்லை. அதாவது திருவிழாக் காசைக் கொடுக்கத் தான் வேண்டுமென்று எந்த நியாயக்காரரும் எங்களுக்குச் சொல்ல முன்வரவில்லை. ஏனென்றால் அவ்வளவு பணமும் பாடசாலையில் ஓடாகக்கிடக்கின்றன. அவர்களது விதண்டவாதப் பிடிக்காச் சூரியன் மேற்கே உதித்தாலும் திருவிழாப் பணம் மாத்திரம் கொடுக்க முடியாதென்று நானும் கடைசியாகச் சொல்லிவிட்டுப் பாடசாலைப் பிரவேசத்தைக் கவனிக்க வேண்டியதால் அந்த அலுவல்களைப் பார்க்க ஆரம்பித்தோம்.

## பாடசாலை குடிபுகல்

நளவருஷம் தை மாதம் உஎ.ம் திகதி (8.2.1917) வியாழக்கிழமை பூர்வ பிரதமைத்திதி மக நட்சத்திரம் சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில் பிள்ளைகள் உபாத்திமார் பிரவேசித்தனர். அறிவித்தல் பத்திரத்தின்படி



வதிரி, அல்வாய், வடசுத்து, பூமாஞ்சோலை, கொற்றாவத்தை முதலிய இடங்களிலுள்ள பிள்ளைகளின் பெற்றார் மற்றோரனைவரும் வந்து கொண்டாட்டத்தைச் சிறப்பித்தனர். நட்டுவ மேளம், சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றன. இத்திகதிக்கு முதல் நாளும் அன்றைய காலையிலும் கட்சி பிரிந்து நிற்கும் திருவிழாக்கட்சி வயது மூத்த சில பெரியார்களிடம் நானும் மைத்துனர் வ.சி.சி யும் போய் மன்றாடிக் கேட்டோம். மூ.சி. வின் பிடிவாத குணத்தை நீங்களே நியாயத்தைச் சொல்லி - அதாவது பள்ளிக்கூட வேலையை முடிப்பதற்காகவே அவர்கள் திருவிழாக் காசைத் தராதுவிட்டு அதற்கு ஓடு வேண்டிப் போட்டுவிட்டார்கள் ஆகையால் அப்பணத்தை அவர்களிடம் கேட்பது சரியில்லை. இனி நாங்கள் சமாதானப்படவேண்டுமெனச் சொல்லி எல்லாரும் பள்ளிக்கூடப் பிரவேசத்துக்கு வரவேண்டுமெனச் சொன்னோம். அவைகளில் ஒரு பெரியாரின் மகன் இவ்வளவு நாளும் எங்கே கிடந்துவிட்டு வாறீர்களென்று துள்ளினார். மற்றையோர் ஏதோ பேசிப்பார்ப்போ மென்றார்கள். வ.சி.சி துள்ளியவரைக் கேட்டார் உன்னிடம் ஏதோ பிச்சை கேட்க வந்ததென்று துள்ளுகிறியாவென்று இருவருமவ்விடத்தால் மீண்டோம். அவர்கள் பள்ளிக்கூடப் பிரவேசத்துக்கு வரவில்லை.

## தரும சாதனம்

க.வேலுச்சோதிடர் பேரிலும் சி.பொன்னர் பேரிலும் அறுதி முடித்திருந்த பாடசாலைக் காணியைத் தருமசாதனம் செய்யவேண்டு மென்றும் அதற்கோர் சபை வேண்டுமென்றும் சபைக்கு அங்கத்தவர் வேண்டுமென்றும் கரவெட்டி மாணிக்கவாசகர் சைவவித்தியாலத் துக்கு (மணியம்) முடிந்த சபை உறுதிக் கொப்பியில் கண்ட முறைப் படி அங்கத்தவர் பெயர் அட்டவணை ஒன்று தயாரித்தோம். (மேற்படி உறுதிக்கொப்பி வி.மு.சி.மணியகாரன் என்னிடம் தந்த காகிதத்தைக் கொண்டு பருத்தித்துறை பிறக்டர் நொத்தாரிசு மருதடி சி.சுப்பிரமணியம் அவர்களிடம் நான் வேண்டிவந்த கொப்பி) நாங்கள் தயாரித்த பெயர் வழி அட்டவணையில் வதிரி, அல்வாய், பூமாஞ்சி யொல்லை, கொற்றா வத்தை, அத்தாய் முதலிய இடங்களிலுள்ள ஆட்களின் பெயர்களை எழுதி வாசித்தோம். அவைகளில் அல்வாய், கிழானை சி.சடையர், சி.கந்தாசை, வ.முத்து, க. ஐயாக்குட்டி இவர்களைச் சேர்த்தால் தான் விலகிவிடுவேனென்றார் க. வே. சோதிடர். விலகவேண்டிய நியாயம் எதற்காகவென்று நாங்கள் கேட்டதற்கு அவர் சொன்ன நியாயம் அவர்கள் தனது பகைவரென்றும் அவர்களுடன் தான் பந்தி போசனமில்லை யென்றும் இன்னும் சில சொன்னார். உப்படியான நியாயம் இந்தப் பொது விஷயத்துக்குப் பேசக் கூடாதென்று அதற்காகிய சில நியாயங்களை எடுத்துக் காட்டினோம். அதாவது அவர்களால் அங்கத்துவப் பணம் மாத்திரமல்ல அவர்கள் பிள்ளைகளும் இங்கே பாடசாலையில் படிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமெனப் பல நியாயங்களை எடுத்துக் காட்டினோம். அவர் தன் பிடியைக் கைவிடாது நிற்கிறார். இதற்கிடையில் வதிரியில் ஆட்களை உறுதியில் சேராது தடுத்து நிற்கும் மூ.சி. மேற்குறித்த கிழானையார் நால்வரையும் உறுதியில் சேரவேண்டா மென்று அடிக்கடி அவர்களிடம் போய் வருகிறார். நாங்களும் அவர்களை எதுவிதமும் சேர்த்தே தீரவேண்டுமென்று அடிக்கடி அவர்களிடம் சென்று வருகிறோம். இதற்குமிடையில் எங்களோடு நிற்கவேண்டிய சோதிடரும் அவர்களைச் சேர்க்கக் கூடாதென்ற முதலைப்பிடி பிடிக்கிறார். எனது மாமனார் சி.பொ. சொன்னார் க.வே.சோதிடர் கையொப்பமின்றி உறுதி முடிப்பதெப்படி ஆதலால் கிழானையாரை விட்டு உறுதியை முடிப்போமென்றார். நான் சொன்னேன் அவர்கள் நாங்கள் சேரவில்லை யென்றால் விடுவதன்றிக் கிழானையார் நாங்களும் சேருகிறோமென்றால் கட்டாயம் அவர்களைச் சேர்க்கவேண்டு மென்றும் அவர்களைச் சேர்த்தால் நான் விலகுவேனென்றவரை விடவேண்டியதே நீதி யென்றேன். மூ.சி. வுக்கும் எங்களுக்கும் நடைபெற்ற போட்டியில் கிழானையார் விஷயத்தில் எங்களுக்குப் பெருஞ் சந்தேகமிருந்தது. கிழானையார் உறுதியில் சேர மறுத்தால் எங்களுக்கு இரட்டை விழுக்காடு (க.வே. சோதிடருக்கும் மூ.சி.வுக் கும் வெற்றி) ஆனால் மேற்படி நால்வரும் (கிழா) மூ.சி.வை முற்றாய்க் கடத்திவிட்டனரென்ற பின் க.வே. சோதிடரை உறுதி முடிக்க வரவேண்டுமென்றார். நீங்கள் சொல்லும் நியாயத்தை ஆரும் அறிவாளிகள் சரியென்றால் அதன்படி செய்யலாம். உங்கள் விருப்பப்படி ஒருவரைச் சொல்லுங்கோவென்றேன். வீ.மு. சிற்றம்பல மணியகாரனிடம் போவோமென்றார். அப்படியாகட்டு மென்று எல்லாரும் அங்கு சென்றோம். வந்த காரணத்தைக் கேட்டு மேற்படி விஷய வாக்குவாதத்தைச் சோதிடரே சொன்னார். மணியகாரன் முதலில் என்னிலை பிழையென்று என்னைக் கோபித்தார். காரணம் இப்படியான மனிசர் பேரில்காணியை அறுதி எழுதியதற்காக. சோதிடர் எண்ணினார் மணியகாரன் தனது நியாயத்தைச் சரியென்றும் என்னை அவர் கோபித்ததை உண்மையென்றும். பின்னர் எங்கள் வாக்கு மூலத்தைக் கேட்டார்கள். நான் சோன்னேன் இவர்கள் சொந்த ஆட்கள் நாலுபேர் பாடசாலைச் சபைக்கு அங்கத்தவர்களாகச் சம்மதித்திருக் கிறார்கள். அவர்கள் நாலு பேரும் தனது பகைவரான மையால் அவர்களை அதற்குச் சேர்க்கக் கூடாதென்று பிடிவாதம் செய்கிறார் சோதிடர் என்றேன்.

மணியகாரன் பவ்யமாகச் சில உபமானக் கதைகள் சொல்லிக் கொண்டுபோய்க் கடைசியில் நான் சொன்னதுபோலவே அவரும் சொல்லிவிட்டார். அதாவது பொதுத் தர்ம விஷயத்துக்கு வருகிறோம்



என்றவர்களைக் கட்டாயம் சேர்க்கவேண்டும், அதை மறுப்பவர்கள் இல்லாமலும் போகலாமென்றும் வீட்டுத் தகராறுகளை இப்படியான பொது விஷயங்களுக்கு இழுக்கக்கூடாதென்றும் சொல்லி முடித்தார். அத்துடன் சோதிடர் மனோநிலை மாற்றமடைந்தது. உறுதி முடிக்கச் சமாதானமானார். மூ.சி.வின் தடையில் நின்றவர்கள்போக வதிரியில் உள்ளவர்களிடமும் அல்வாய், கொற்றாவத்தை, பூமாஞ்சியொல்லை, அத்தாயிலுள்ளவர்களில் அன்று வந்தவர்களிடம் நொத்தாரிசு கையொப்பங்களை வேண்டினார். மறுமறு நாட்களிலும் நொத்தாரிசு கந்தோரில் போய்க் கையொப்பமிட்டனர்.

முன்னுக்கு ஐம்பது 50 பெயர்கள் எழுதப்பட்டது. அதில் மூ.சி. முதலியோரும் உறுதியில் எழுதப்பட்டனர். அவர்கள் கையொப்பமிட வில்லை. கையொப்பமிட்டவர்கள் 37 முப்பத்தேழு பெயர்கள் நொத்தாரிசு பா.ச. வேலுப்பிள்ளை அவர்களால் 1917 ம் ஆண்டு ஆனி மீ 15ம் திகதி 123ம் இலக்கம் கட்டி உறுதி எழுதி நிறைவேற்றப்பட்டது. மேற்குறித்த காணியைக் குறித்த கதிரன் வேலன் பேரிலும் சின்னப் பொடியன் பொன்னன் பேரிலும் குறித்த வித்தியாசாலைச் சங்கத்துக் காக அறுதி எழுதப்பட்டதென்றும் குறித்த கதிரன் வேலனும் சின்னப் பொடியன். பொன்னனும் காத்தான் சூரனும் சின்னப் பொடியன் சிலம்பனும் கந்தன் ஆறுமுகமாகிய நாங்கள் எங்கள் பணமாக ரூபா 1000 ஆயிரமும் மிகுதி ரூபா 500 ஐஞ்நூறையும் ஊரவர்களிடம் வேண்டிக் குறித்த காணி, கட்டிடம் முதலியவைக்குச் செலவழித்தோமென்றும் இவ்விரு தொகையும் சேர்ந்து ரூபா 1500 ஆயிரத்தஞ்நூறு மொத்தச் செலவென்றும் குறித்த காணி கட்டிடம் தளபாடம் முதலிய அனைத்தும் இன்று தொடக்கம் குறித்த சங்கத்துக்குரியதென்று (தேவரையாளிச் சைவ கலைஞான சங்கம்) ஐந்து பேரும்கூடித் தரும சாதனம் செய்துவிட்டோம். இச்சாதனத்தோடு இந்தக் காணியைத் தங்கள் பேரில் அறுதி எழுதுவித்திருந்த க.வே.சோதிடரும் சி.பொ.மாமனாரவர்களும் முன்னே இந்தக் காணி தங்களுடையதென்றும் தாங்கள் இருவரும் பாடசாலைக்குத் தருமசாதனம் செய்த தென்றும் ஒருபோதும் சொல்ல முடியாத முறையில் மேற்படி உறுதி முடித்திருக்கின்றது.

அப்படி இருந்தும் இடையிடையே மேற்படி காணியைத் தங்களு டையதென்றும் சொல்லுகிறார்கள். இவ்வுறுதிக்கு ரூபா 22.50 சதம் இருபத்திரண்டரை ரூபா முத்திரையும் மூலப்பிரதிக்கு ஒரு ரூபா முத்திரையுமாக 23 ரூபா 50 சதம் இருபத்திமூன்றரை ரூபா முத்திரை ஒட்டப்பட்டது. எழுத்துக் கூலி (நொத்தாரிஸ் செலவு) ரூபா 30 முப்பது இருதொகையுமாக ரூபா 53.50 ஐம்பத்தி மூன்றரை உறுதிச்செலவு முடிந்தது. இந்த உறுதியை எந்த அறிவாளியோ பிறரோ எவர் பார்த்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதுவாது அழியாதொன்றுமில்லாச் சுத்தமான சாதனமென்பர். இதில் சில சூதுகள் செய்யவேண்டுமென்றால் நான் செய்திருக்கலாம். எப்படி யெனின் அப்போ இதை ஊன்றிக் கவனிப்பார் எவரொருவருமில்லை. என்னையும் தம்பியார் மூ. ம. குத்தகைகாரன் இருவரையுமே தனக்குத் தெரிந்தவர்களென்று நொத்தாரிசு குறித்த பெயர்வழிகாரரில் காத்தான் சூரனையும் மூத்தவன் மண்டலத்தையுமே எனக்குத் தெரியுமென்றும் மற்றையோரைச் சாட்சிக்காரருக்குத் தெரியுமென்றும் தனது சத்திய வாசகத்தில் காட்டியிருக்கிறார். மேற்படி உறுதியில் காட்டிய விதி நிபந்தனைகளாகியவைகளைவிட ஏனைய வாசகங்கள் என்னால் சொல்லப் பட்டவைகளையே நொத்தாரிசு எழுதினார்.

**பொதுக்கூட்டத்தில் உறுதி வாசித்தல்**

மேற்படி தருமசாசன உறுதியைச் சேர்ந்த அங்கத்தவருக்கும் இனியினிச் சேரவேண்டியவர்களுக்கும் பகிரங்கமாக வாசித்துக் காட்ட வேண்டுமென்று ஓர் பொதுக் கூட்டம் பாடசாலைக்குள் வைத்து மைத்துனர் சி.க.ஆறுமுகமென்பவரால் வாசித்துக் காட்டப் பட்டது. பின்பு இந்த தருமசாசன உறுதிப்படி இப்பாடசாலையையும் சேர்ந்த அனைத்தையும் தேவரையாளிச் சைவ கலைஞான சபைக்கு என்றே ஒப்பிக்கப்பட்டிருக்கென்றும் அந்தச் சபை எம் சமூகத்தவரு மென்று என்னால் விளக்கிக் காட்டப்பட்டது. அன்று கூட்டத்துக்கு வராத சிலருக்கும் உறுதியை வாசிக்கும்படி அவர்களிடம் நான் கொண்டு போய்க் காட்டிவந்தேன். **இப் பாடசாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று நானே நினைத்தாரம்பித்தபோதும் நாம் நாலுபேர் முன்நின்று கட்டத் தொடங்கினோம்.** இடையில் க.வே.சி.வைத்தியர் விலகிவிட்டார். அப்போ க.வே.சோதிடர் சொன்னார் நாலில் ஒரு பங்கு செலவு தான் தருவதாக அந்த இடையைச் சி.க.ஆ (மைத்துனர் ஆறுமுகம்) வந்து நிரவினார்.ஓய்... இந்தப்பங்கென்ன காணும் ஒரு நாள் நானும் கொற்றாவத்தை வ.கந்தரென்ற கிழவனும் பாடசாலைக்குள் பேசிக் கொண்டிருந்தோம் அன்று படிப்பில்லை உறுதியைப் பார்க்க வேண்டு மென்று வந்தேனென்று எங்களுக்குப் பிந்திவந்த க.வே.சோதிடர் உறுதியைக் கேட்டார். என் கையில் இருந்த உறுதியை அவரிடம் கொடுத்தேன். (அப்போ சில நாளாக உறுதியைக் கையில் கொண்டுதான் திரிந்தேன் பாராதவர் பார்க்கும்படி) மேற்படி உறுதியை வாசித்த சோதிடர் ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி அதை வாசிக்கும்படி என்னிடம் உறுதியைத் தந்தார். குறித்த கதிரன் வேலனும் சின்னப் பொடியன் பொன்னனும் காத்தான் சூரனும் சின்னப் பொடியன் சிலம்பனும் கந்தன் ஆறுமுகமுமாகிய நாங்கள் எங்கள் பணமாக ரூபா 1000 ஆயிரமும் மிகுதி ரூபா 500 ஐஞ்நூறும் ஊரவர்களிடம் வேண்டி என்றவுடன் நிறுத்தும்படி



சொன்னார், நிறுத்தினேன். நாங்கள் நாலு பேர் தொடங்கினதற்கு இப்ப ஐந்துபேரேன் தருமசாதனம் செய்வானென்று கேட்டார். க.வே.சின்னப் பிள்ளை வைத்தியரின் இடத்துக்குச் சி.க.ஆறுமுகமும் சி.பொ.மாமனார் காணியையுடையவரானமையினால் ஐந்து பேர்தானென்றேன் நாலுபேருக்கு ஐந்து பேரெழுதுவானேன் என்றார். எத்தனை பேர் எழுதினாலும் அதிலென்னென்றேன். ஓயிந்தப்பங்கென்ன காணுமென் றார் இனி எவருக்காயினும் என்ன பங்கு என்றேன். அவருக்கெழுந்த கோபாவேசத்துடன் உறுதியைத் தரும்படி கேட்டார் தரமுடியாது என்று மறுத்தேன். உடனே எழுந்து சங்கார உருத்திரர்போல இப்படிச் சூது செய்யலாமாவென்று விசையாக நடந்தார்.

முன்னே தனக்கும் இந்தக் காணியில் ஏதும் சோந்தை காட்டினால் தான் தன்பகுதியில் பணம் சேர்க்கலாமென்ற இவர் பேருக்கு பணம் ஒரு சதமும் தராதிருந்தும் அரைவாசிக்காணி இவர் வேண்டுகோளின் படி எழுதிவித்துவிட அடுத்த வருஷம் காணியை பாடசாலைச் சபைக்குத் தருமசாதனம் செய்யவேண்டுமென்றதற்கு அவர்விட்ட கெருடியும் வஞ்சனையும் எம்மை அலைக்கழித்தமையும் எல்லாம்கூடி என் மனதில் அடங்கிக்கிடந்து அன்று இவர் பங்குகேட்டுக் கிளற எனக்குப் புதிதாய் எழுந்த கோபத்தால் மேற்சொன்ன நியாயத்தைக் கடுஞ்சொற் பிரயோகமாகச் சொல்லிவிட்டேன்.

**பகைவரை அடைந்தார்**

ஆவேசத்தோடு பாடசாலையைவிட்டு வெளியேறிய சோதிடர் தன் பகுதிக்கு அன்றித் தன் வீட்டுக்குப் போனாரல்லர். திருவிழாவுக்குப் பணம் கொடாது பாடசாலையை நிறைவேற்றிநிற்கும் எம்மவருக்கும் பாடசாலைக்கும் மூன்று பகுதியான தீமைகளை விளைத்து நிற்கும் அப்போ எம்பகைவராகிய மூ.சி., க.வே.சி.வைத்தியரிருவரையு மடைந்தார். நானும் சேர்ந்தவர்களும் ஏதோ தனக்குப் பெருஞ்சூது முறையில்த் தீமைசெய்ததாகவும் அத்தீமை தர்மசாதனமெழுதிய பாடசாலைச் சபை உறுதியில் தான் கண்டதாகவும் அவர்களுக்கு முறையிட்டாரெனக் கேள்விப்பட்டோம்.

**மூன்று பகுதி தீமை**

(1) பாடசாலைக்குப் பிள்ளைகளை விடாமை வந்த பிள்ளைகளைத் தடைசெய்தமை (2) பாடசாலைச் செலவுக்குப் பணந்தராமை தரவேண்டியவர்களைத் தடைசெய்தமை (3) என்னையும் சேர்ந்தவர் களையும் சபை சந்திக்கு இல்லாது கழித்தொடுக்கி விட்டமை. இந்த மூன்றும் சேர்ந்ததுதான் அவர்கள் சொன்ன மார்சல் லோ எங்களுக்கு வைத்தசட்டம் இந்தச் சட்டம் இரண்டு வருடம் அமுலிலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்னுடனிருந்த கிழவன்**

மேற்படி சோதிடர் என்னுடன் கோபித்துக் கொண்டுபோக என்னுட னிருந்த கிழவன் எங்கள் சபை உறுதியில் ஐந்து காரியஸ்தரிலொருவரா கவும் வயிரவன் கந்தனென்று உறுதியில் ஒப்பமிட்ட வருமான அந்தக் கந்தனென்றவரைச் சோதிடரே கூட்டிவந்து எங்களுக்கு அறிமுகப் படுத்திக் கொற்றாவத்தைப் பகுதியிலுள்ள பெரும்பாகமான பிள்ளை களை மேற்படி கந்தக் கிழவனால் எங்கள் பாடசாலைக்கு வரச் செய்தி ருக்கிறார். அப்படியாக அந்தக் கிழவனாருக்கும் சோதிடரின் பேச்சும் போக்கும் கொஞ்சமும் பிடிக்கவில்லையானமையாற்றான் சோதிடர் என்னுடன் கோபித்துக் கொண்டுபோகக் கிழவன் சுக் இவற்றை மாதிரி எனக்குப் பிடிக்கவில்லையென்று புறுபுறுத்தார் கிழவனார். மேற்படி கிழவனின் சுக்கென்ற சொல் சரியற்றவைக்குப் பாவிப்பது.

**உறுதியைத் திருத்த வேண்டும்**

பின்பு உறுதியை வேண்டித்தரும்படி மாமனார் சி.பொ.விடஞ் சொல்லி என்னிடம் வேண்டுவித்து உறுதியின் தன்மை நோக்கம் தெரிந்த பல வேளாளருக்குக் காட்டினார். ஒரு நொத்தாரிசுவுக்குங் காட்டினார். இதைத் திருத்தி எழுதினால் தனக்கொரு தொகைப் பணம் வருமென்றெண்ணிய அந்த நொந்தாரிசு உறுதி பிழையென்றாராம்.

மற்றையோர் சிலர் பிழையென்றும் சிலர் பிழையில்லையென்றும் சொன்னார்களாம். இந்தப் பிழையென்றமைகள் சோதிடருக்கொரு வெற்றியைக் கொடுத்திருக்கின்றது. ஏனெனில் தான் எங்களில் கண்டு பிடித்த பிழை பிழையாகவே முடிந்ததென்று. இவற்றைக்கொண்டு என் மனம் கொஞ்சமேனும் தைரியம் குறையவில்லை அதிக தைரியமாக இருந்தது. ஏனெனில் இந்த உறுதி முதலில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையை ஆக்கியது. இரண்டாவது கரவெட்டிச் சைவ பரிபாலன சபையை ஆக்கியது. மூன்றாவது தேவரையாளிச் சைவ கலைஞான சபையை ஸ்தாபித்தது. இந்த உறுதியைவிடப் பாரபட்ச மில்லாத தங்கமான உறுதி வேறெதுவுமில்லையென்பது எனக்கு நல்ல நம்பிக்கை. இந்த உறுதி 1917 ம் ஆண்டு அக்காலம் பிரபல வழக்கறிஞ ராக விளங்கிய அப்புக்காத்து நாகலிங்கமென்பவரால் அக்காலச் சட்ட நிரூபணசபையாரால் தயாரிப்பித்துச் சைவ பரிபாலன சபைக்கு உறுதி யாக்கப்பட்டது.

இந்த உறுதியைத் திருத்தி எழுதவேண்டுமென்றும் திருத்தி எழுதாவிடில் தான் விலகிவிடுவதாகப் பலருக்கும் சொல்லி வருகிறார். மாமனார் சி.பொன்னர் அவர்களுக்கும் சொல்லிவிட்டார் அன்றிலும் பிள்ளைகளையும் மறித்தார். தான் மறித்த மறுநாள் மகன் தம்பையாவைக்



கொற்றாவத்தைக்கனுப்பினார் அங்குள்ள பிள்ளை களை மறித்துவிட்டு வரும்படி. தம்பையா பிள்ளைகள் வீடுகளுக்குப் போகமுன் அந்தக் கிழவன் (வ.கந்தர் என்பவர்) எல்லாப் பிள்ளைகளையுங் கூட்டிக் கொண்டு பாடசாலையை நோக்கி வர மேற்படி தம்பையா அவைகளைக் கண்டு கையில் தட்டி நிற்பாட்டிக் கிட்டப் போய் அப்பையா பிள்ளை களைப் பாடசாலைக்கு விடவேண்டாமென்று மறித்துப்போட்டு வரச் சொன்னதென்றாராம். உடனே கிழவன் அவர்களைப் பேசிப் போட்டுப் பிள்ளைகளைப் பாடசாலையில் கொண்டுவந்து விட்டார்.

நாங்கள் எப்படி விளங்கப்படுத்தினும் அதை அவர் நம்பாது உறுதி பிழையென்றும் திருத்தி எழுதவேண்டுமென்றும் விடாப்பிடியாக நின்றார். பின்பு வீ.மு.சி.மணியகாரனிடம் போய் முறையிட்டார். அவர் உறுதியுடன் எங்களையும் கூட்டிவரும்படி சொல்லிவிட்டார். குறித்த நாளுக்கு எல்லாரும் அங்கு போனோம் மணியகாரன் இரு பகுதியில் நியாயங்களையும் கேட்டார். பின்பு சோதிடரைக் கேட்டார் இந்த உறுதியைப் பிழையென்ற சொன்னது யாரென்று. பலர் சொன்னார்கள் நொத்தாரிசு சபாரத்தினமுஞ் சொன்னாரென்றார். எப்போ அவரிடம் போவோமென்றார் மணியம், அவரை இங்கே கூட்டி வருகிறேனென்றார் சோதிடர். இந்த உறுதியைச் சரியில்லையென்ற அந்த நொத்தாரிசுவை இங்கே கூட்டி வருவது சரியில்லை அது அவரின் கௌரவத்துக்குக் குறைவேற்படும் நாங்களே போய் அவரைச் சந்திக்க வேண்டுமென்றார் மணியகாரர். இத்துடன் சோதிடர் மௌனங்கொண்டார். ஏன் சாத்திரி பேசாயாம் என்றார் மணியகாரர், அப்ப இந்த உறுதி பிழையில்லையா வென்றார். நாம் சரியென் றால்...சரி.

உறுதியை வாசிக்கிறேன் கேள் என்று மணியகாரன் உறுதியை வாசித்தார், நாங்கள் கேட்டுக்கொண்டு நின்றோம் 1917 ம் ஆண்டு வைகாசி மாதம் 15 ந் திகதி வதிரி தேவரையாளிச் சைவ வித்தியா சாலையில் ஓர் சர்வசன சபை கூடிற்று அந்தச் சபையிலே தேவரை யாளிச் சைவ கலைஞான சங்கமென்று ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் கருத்தென்ன சாஸ்திரியென்றார் மேற்படி மணியகாரன், மௌனங் கொண்டார் சோதிடர். இந்தச் சங்கத்துக்கே காணி கட்டிடம் தளபாடம் முதலிய சகலமும் எழுதப்பட்டாயிற்று. இனி இவைகள் ஓர் சங்கத்துக் குரியதேயன்றி எவரொருவருக்கும் சொந்தங் கிடையாது. இதை ஆரெழு தினாலும் எத்தனை பேரெழுதினாலும் அதிலென்ன அதற்கினிப் பங்கென்ன ஏன் இந்த வீண்வாதமென்றார் மணியகாரன். நாம் சரியென் றால் சரியென்றார் மேற்படி சோதிடர் இத்துடன் வாக்குவாதம் நின்று விடச் சமரசமானோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1917 ம் ஆண்டு ஆடிமாதம்

### பிரிந்து நிற்கும் நம்வருடன் சமரசப்பேச்சு

பாடசாலைக்கு அத்திவாரக் கல்லுவைத்தவரும் எமது மூத்த மாமனாருமான சி. வல்லியப்பரின் மகன் எனது சொந்த மைத்துனன் மூ.சி.வுக்கும் சொந்த மைத்துனன் சி.க.ஆறுமுகத்தின் பெரிய தகப்பன் மகன் சி.வ.நாகமுத்தரென்பவரிடம் நானும் மைத்துனர் வ.சி.சிலம்பு வைத்தியரும் சி.க.ஆறுமுகமும் அவர் வீட்டுக்குப் போனோம். நான்தான் அவருடன் அழுத்திப் பேசுவேன். அவரெனக்கு மூத்தவரா யிருந்தாலும் என்னுடன் பெரும் நட்புடையராயிருந்தவர். அவரது கல்வீட்டு மேல்க்கோப்பு மரவேலை கதவு யன்னல் கதவு முதலிய மரவேலைகளெல்லாம் நான்தான் செய்து முடித்தது. வதிரியிலல்ல வடமராட்சி முழுமைக்கும் எம் சமூகத்தவருள் அவர்தான் (சி.வ.நா.) முதல் முதல் கல்வீடு கட்டியவர். இதனால் அவரைக் கல்வீட்டான் என்றுஞ் சொல்வர். மேற்படியாரைக் கண்டு சொன்னேன் ஓய்.. மைச்சான் நடந்தது, நடந்து போனது போகட்டும் இனிமேல் நாங்கள் சமாதானமாயிருப்போம், எல்லாத்தையும் நடத்துவோம் என்றேன். அவர் சொன்னார் நானென்ன செய்கிறது அந்தப் பொடியன் ஒன்றுக்கும் சம்மதியாதாம் என்றார். திருவிழாக் காசைக் கொடுத்தால் தான் பொடியனைத் (மூ.சி.வை) திருப்பலா மென்றார். நான் சொன்னேன் திருவிழாக்காசை நாங்கள் என்ன செய்தது அந்தக் காசுக்குத்தானே ஓடு வேண்டிப் பாடசாலைக்குப் போட்டாயிற்று, அன்றியும் திருவிழாவுக்கு முந்தியே நாங்கள் சொல்லிப் போட்டோம் இந்தமுறை திருவிழாக்காசு தரமாட்டோமென்றும் பாடசாலைக்கு ஓடு வேண்டிப் போடப்போகிறோமென்றும் இதைக் கேட்பது நீதியல்லவேயென்றேன். அவர் சொன்னார் அது நீதியல்லத்தான் பொடியனை வெறுக்க என்னால் முடியவில்லைப் பொடியனால்தான் நானும் மனுஷனாகக் காணப்படுகிறேனென்றார்.

மற்ற இருவரின் யோசனைப்படியும் நான்தான் அவருடன் பேசினேன். வ.சி.சி. வைத்தியர் சி.க.ஆ. இவர்கள் அவருடன் பிறவாத் தம்பிமார் நான் சொன்னேன் மூ.சி.வின் இளைய தமக்கையை நீர் முடித்திருக்கிறீர். உமக்கவர் இளையவருமாகையால் உம்முடைய சொல்லையே அவர் கேட்கவேண்டும். திருவிழாக்காசு கொடுக்கப் பட்டிருந்தால் பிரிவேன் வருகுது உம்மிடமேன் நாங்கள் வரவேண்டும் என்றேன். அன்றியும் வித்தியாகர்த்தர் பாடசாலை ஆரம்பத்தில் கட்டிடத்தை முடித்தபின் எழுதுங்கோ என்ற கடிதத்தை உமக்குக் காட்டியபொழுது கட்டிடத்தை முடியுங்கோ ஓடு என் பொறுப்பென்றீர் அல்லவா, அதுவும் உமக்கொரு லாபம் இப்படியெல்லாம் பிடிவாதம் செய்வது சரியல்ல. ஊரவருடைய கோயிலுக்கு எம்மவருடைய பணங்களை அறவிட்டு ஆயிரக்கணக்கில்



செலவழித்து இரவு விடிய மண்ணும் சாம்பலும் கூடக்கிடையாத விழல் வேலைக்காக எங்கள் சொந்தமானதும் எம் சமூகத்துக்கில்லாததும் எங்களுக்கு அருமை யானதுமாகிய ஒரு சைவப் பாடசாலைக்குக் கெடுதி விளைவிப்பது நீதியாகுமாவென்றேன். இதற்கவர் நியாயம் சொல்ல முடியாமல் நீங்கள் என்ன சொன்னாலும் திருவிழாக்காசு வைத்தால்தான் நானெழும்புவேனென்று தனது கல்வீட்டுத் திண்ணையில் உறைக்க அடித்தார். உடனே நீர் எழும்பாமல் பாடசாலை கிடப்பதையும் திருவிழாக்காசு வைப்பிப்பதையும் பார்ப்போமென்று நாம் சொல்லி விட்டு அவ்விடத்தால் மீண்டு அவரவர் வீடு சென்றோம்.

### பத்திரிகையில்

எங்கள் பாடசாலையைப் பற்றிப் பத்திரிகையில் வெளியிட வேண்டுமென்று விரும்பி அப்போ யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சைவப் புதினப் பத்திரிகை **'இந்துசாதனம்'** ஒன்றுதான், அந்தப் பத்திரிகையில் எங்கள் பாடசாலை விஷயம் போடுவார்களோ என்பது எங்களுக்குச் சந்தேகமாயிருந்தது. ஏனெனில் அவர்கள் வைதீக சைவர் அக்கால நிலமை எங்களுக்கும் அவர்களுக்கும் யாழ்ப்பாணமும் நெல்லியடியும் போல வெகுதூரம் இங்குள்ள சைவக் குருமாருக்கு ஒழுங்கைத் தெருக்களைக் கடந்து காணிகளில் நாங்கள் புகுந்து நின்ற காலம். ஆகவே அதையொரு தரம் பார்ப்போமென்று நானும் மைத்துனர் வ.சி.சி. வைத்தியரும் சி.க.ஆறுமுகமும் மேற்படி பத்திரிகையாலயத்துக்குப் போனோம். அங்கே எனக்கு ஐக்கியமுடையவரும் வீ.மு.சி.மணியகாரனின் மைத்துனருமான தா.சிதம்பரப் பிள்ளை யென்பவர் இந்துக் கல்லூரியில் படிப்பிக்கிறார். அவர் வாயிலாகத்தான் இதைச் செய்விக்க வேண்டுமென்றும் அதற்குப் பணமும் கொடுக்க வேண்டுமென்றும் எண்ணிக் கொண்டு பதுங்கிப் பதுங்கி அவ்விடத்தை யடைந்தோம். அப்போ இந்துக் கல்லூரியின் கீழ் வீட்டில் தெற்குப்புற அறைகளிலேயே இந்து சாதனக் காரியாலயமிருந்தது. நாங்கள் போன நேரம் அதிகாலையாய் இருந்ததினால் மேற்படி சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் அங்கில்லை. அவரிருக்குமிட மெங்கேயென்று விசாரித்துக் கொண்டு நீர்வாவியடிக்குச் சென்று அவரைக் கண்டு நான் எழுதிக் கொண்டுபோன விஷயத்தை அவரிடம் கொடுத்தேன். அவரதை வாசித்த பின் வேறொரு கடதாசியில் எங்கள் சுருக்க விஷயத்தோடு தானும் சில வசனங்களைச் சேர்த்து விரிவாக எழுதிக்கொண்டு பத்திரிகையாலயத்தில் சென்று அப்போ உப பத்திரதிபராயிருந்த ம.க.திருஞானசம்பந்தரிடம் எங்கள் விஷயத்தைக் கொடுத்தார் தா.சி.ஆசிரியர். அவர் கேட்டார் விளம்பரமோவென்று (பத்திரதிபர்) இல்லைப் புதினமென்றார். தா.சி.ஆசிரியர். விளம்பரமென்றால் பணங்கட்ட வேண்டும். புதினமென்றால் பணமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாகுபாடு அப்போ எங்களுக்குத் தெரியாது. ஏன் இப்பொழுதும் சிலர் கேட்கிறார்கள் பத்திரிகையில் நானெழுதும் விஷயங்களுக்குப் பணங்கொடுக்கிறதா வென்று.

பின்னர் அந்த இடத்தில் பதுங்கிநின்ற எங்களை அங்கு படிப்பிக்கும் பிராமணர், வேளாளர் முதலியோர் நெருங்கி வந்து மேற்படி பாடசாலை விஷயம் நாங்கள் இருக்குமிடம் முதலிய விசாரித்து மிக அதிசயப் பட்டனர். காரணம் மறு மறு இடங்களிலுள்ள பள், பறை, நள சாதியினர் சைவவேளாளர் நெருக்கிடையால் பிறமதம் புக நாங்கள் அங்ஙனமின்றிச் சுயாதீனமாக ஒரு சைவப் பாடசாலையை ஸ்தாபித்தோமென்பதே அவர்களது ஆச்சரியம்.

பத்திரிகைக்கு நாங்கள் கொடுத்த விஷயம் எங்கள் பாடசாலை இருக்குமிடம், சாதிசமயம், பாடசாலையை ஸ்தாபித்த காரணம் முதலியவைகளைக் காட்டியதாகும். எதிரே வெளிவந்த பத்திரிகையில் நாங்கள் கொடுத்த விஷயம் வெளியிடப்பட்டு வந்தது. கிரகிக்கக்கூடிய அதைக் கண்டதும் எங்கள் பாடசாலையைப் பற்றி இந்துசாதனப் பத்திரிகையில் போட்டு வெளியிட்டிருக்கிறார்களென்று கிரகிக்கக்கூடிய எம்மவர் ஒவ்வொருவருக்கும் காட்டியும் வாசித்துக் காட்டியும் குதூகலமடைந்தோம். தம்பி வே.ஆ.மயிலேறிக்கு ஒரு கிழமையாக ஆட்களுக்கு வாசித்துக் காட்டுதலே முயற்சியாயின.

## 1917 ம் ஆண்டு ஆவணிமாதம் 22 ம் திகதி

### பத்திகையில் வந்த விஷயம்

### வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாசாலை

இவ் வித்தியாசாலை மேற்படி பகுதியிலுள்ள பள்ளர் வகுப்பினரால் சைவ சமய அபிமானங் காரணமாக 1914 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஓர் பொய்க் கொட்டகைப் பாடசாலையில் பிள்ளைகள் படித்து நளவருஷம் தை மாதம் 27 ந் திகதி (8.2.1917) வியாழக்கிழமை பூர்வ பிரதமைத்திதி மகநட்சத்திரம் கூடிய சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில் நிலையான கட்டிடத்தில் மேற்படி பாடசாலைப் பிள்ளைகள் பெற்றார் ஆசிரியர் மற்றுஞ் சுற்றத்தார் மங்கள ஆரவாரத்துடன் பாடசாலையுட் பிரவேசமாயினர். அன்று பாட்டுக் கச்சேரி நாகசுர மேளவாத்தியம் முதலிய சங்கீத வாத்தியங்களுடன் கொண்டாட்டம் மிக விமரிசையாக நடைபெற்றது.

இதற்குச் சுமார் 80 வருடங்களுக்கு முன் மேற்படி பகுதிப் பிள்ளைகள் படித்துவந்த உவெல்சியன் மிஷனரிமாரால் ஸ்தாபிக்கப் பட்ட கிறீஸ்தவ பாடசாலையாகும். இப்பாடசாலை ஆசிரியர்களின் போதனைகள் சைவ சமய இகட்சியும் கிறிஸ்த மதப் புகழ்ச்சியும் காட்டிச் சைவ சமயப் பிள்ளைகளை கிறிஸ்த மதமாக்கக் கொண்ட நோக்கமும் கத்தோலிக்க குரு ஞானப்பிரகாசரின் மறுபிறப்பாட்சேப மென்றதற்காகப் பிரசங்கச் சேட்டையின் விளைவாலுமே மேற்படி பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது.



### எனது விவாகம்

இதற்கிடையில் 1916 ம் ஆண்டு முதல் பேசிவந்த எனது விவாகம் நளவருடம் ஆவணி மாதம் உச திகதி (13.9.1917) வியாழக்கிழமை இரவு உ.மணிக்கும் உ உக்கும் இடையிலுள்ள சுபமுகூர்த்தத்தில் நிறைவேறியது.

### உனக்குப் பெருஞ்சுமை

1914 ம்ஆண்டு வித்தியாகர்த்தர் எனக்கெழுதிய கடிதம் நீரும் 8 எட்டுப்பேரும் சேர்ந்தெழுதியதற்குப் பதில் பாடசாலையைக் கட்டிச் சகல ஆயத்தங்களுடன் மனேச்சர் எழுதட்டும் என்றதைக் காட்டிப் பாடசாலை கட்டி முடித்ததென்று மனேஜர் நெல்லியடி சி. சபாபதிப் பிள்ளையவர்கள் (கயிலச்சட்டம்பியார்) வித்தியாகர்த்தருக்கு எழுதி னார். ஞாபகத்துக்கு என்னுடைய பேரும் அதில் சேர்க்கப்பட்டது.

அதன் பயனாக வித்தியாதரிசி எஸ்.கே.இராசசிங்கம் பாடசாலை யைப் பார்வையிடவந்து சில குறைகளை எழுதிவிட்டார். அவைகளை (சரிவு மேசைகள், வாங்குகள், விளாய்ப்போட்டுகள்) மர வேலை களைச் செய்து முடித்துச் சுவரில் விளாப்போட்டுச் செய்ததற்காக சீமெந்தெடுப்பதற்காக நானும் தம்பி மயிலுவும் (வே. ஆ. மயிலேறி) பருத்தித்துறைக்குப் போனோம் சைவ பரிபாலன சபையார் பாலபாடப் புத்தகங்களும் (2.ம்.,3.ம், 4.ம்) 10 பத்து றாத்தல் சீமெந்தும் வேண்டிப் புத்தகங்களை மயிலுவிடமும் சீமெந்தை நானும் கொண்டு வந்தோம். இரு தோளிலும் மாறி மாறிக் கொண்டுவந்த சீமெந்து கனத்தமையால் மந்திகை அம்மன் கோயில் வாசலுக்கு நேரே சீமெந்துமலையிறக்கி நின்றநிலையில் சற்று ஆறிச் சீமெந்துமலை நான் தூக்கும்போது உனக்குப் பெருஞ் சுமையென்றார் தம்பி மயிலேறி (இவர் கரவில்லா தவர்). இருவரும் வந்து தாரிக்கப்பத்தில் சின்னம்மான் வீட்டு முற்றத்தில் சீமெந்தை இறக்கிவிட்டு அவர்களின் கிணற்றிலையே தண்ணீர் குடித்தோம். சின்னம்மானும் மக்களும் வந்து புத்தகங்களையும் சீமெந்தையும் பார்த்து எங்களுடன் சம்பாஷித்தார்கள். சின்னம்மானின் மூத்த மகன் சோமு என்பவர் சீமெந்து மலைத் தூக்கிப்பார்த்து நல்ல கனமென்றார். இடைவழியில் உனக்குப் பெருஞ்சுமையென்று மயிலுவும் சொன்னதென்றேன். அப்பொழுது அவர்கள் சிரித்தார்கள். அப்பொழுதான் மயிலுவுக்கு ஊறிப்பிடித்தது. இடையில் என்னிடமிருந்து தான் மாறிக்கொண்டு வரவில்லையென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் தானினிக்கொண்டு வரப்போகிறேனென்று சீமெந்து மலை மயிலு தூக்க நான் மறுத்தேன். இல்லை நான் வேணுமென்று பிழை விடவில்லை இனி நான் கொண்டுவரப்போகிறேனென்று மறுமுறை தூக்க நான் பின்பு தடுக்கவில்லை. பின்பு அவரே சீமெந்தைக் கொண்டு வந்தார். அந்தச் சீமெந்தால் மேற்குப் பெரிய சுவரில் இரண்டும் வடக்குத் தெற்கில் இரண்டுமாக நாலுவிளாய்ப் போட்டுச் செய்து முடிந்தது.

## 1917 ம் ஆண்டு புரட்டாதி மாதம்

### உடைந்த ஓடுகள் ஏற்றிவந்தோம்

மூலைச்சந்துகள் நிரவுதற்காக எங்கள் வண்டியைக் கட்டிக் கொண்டு (எங்களிடம் நின்ற பேர்பெற்ற கறுவல் சிவலை மாடுகள்) உடைந்த ஓடுகள் ஏற்ற யாழ்ப்பாணம் நானும் மைத்துனர் வ.சி.சி. வைத்தியரும் தம்பி நாகமுத்துவும் சென்று கன்னியாஸ்திரி மடத்தடி யில் மேற்படி ஓடுகளை ஏற்றிவரும்போது நீர்வேலி முடிவில் சிறுப்புட்டி தொடக்கம் வண்டிச் சில்லொன்றின் வளையம் கக்கத் தொடங்கியது. அதைக் கல்லால் இடையிடையே தட்டி அடக்கிக் கொண்டு புத்தூர் ஒன்பதாங் கட்டையடியில் வர இரவு ஒன்பது மணிவரையிருக்கும். வண்டியை நிற்பாட்டிப் புத்தகலட்டியிலிருக்கும் வ.தம்பியரிடம் (விதானைப் பொடியர்) சென்று வாச்சி உளி மரத் துண்டு முதலிய எடுத்துக்கொண்டு அவரையுங் கூட்டிக்கொண்டு வந்து மேற்படி வண்டிச்சில்லைப் பிழைபார்த்து வண்டியை மெதுவாக விட்டுக்கொண்டு வந்தோம். மேற்படி விதானையார் ஆவரங்கால் மட்டும் எங்களுடன் வந்து மீண்டார். நாங்கள் பய்ய மெள்ள வண்டியை விட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்துசேர (கரவெட்டி) இரவு மணி மூன்றுவரையானது. மறுநாள் விடிய ஒட்டு வண்டியுடன் வதிரிக்குச்சென்று பாடசாலையில் ஓடுகளைப் பறித்து மீண்டோம்.

### சீனியண்ணன் பெரிய முதலையும் நான் சின்னமுதலையும் படிப்பிப்போம்

ம.செல்வத்துரை, பெ.அண்ணாசாமி இவர்கள் இடாப்பில் சேர்ந்த சில நாளையால் பாடசாலையின் பின்பக்க அறைக்குள் நான் மூலைச்சந்து ஓடுகளை வெட்டிச் சரிப்பண்ணிக்கொண்டிருக்கையில் மேற்படி செல்வத்துரையும் அண்ணாசாமியும் இன்னுங் சில பிள்ளைகளும் நான் ஓடு வெட்டிக்கொண்டிருக்குமிடத்தில் வந்து பார்த்துக் கொண்டிருக்கை யில் அண்ணாசாமி, சீனியண்ணன் பெரிய முதலைப் படிப்பிக்கும் நான் சின்னமுதலைப் படிப்பிப்பேன் என்று சொல்ல நான் திரும்பிப் பார்த்தேன். இதற்கு முன் அவர்களைப் பாராமல் மேற்படி கதை



என்காதில் விழுந்தவுடன் பார்த்த அவர்கள் சிரித்தார்கள் நானும் சிரித்த போதும் என் கண்கள் கலங்கின, பலவாறு சிந்தித்தேன். கண்கள் கலங்கி யதன் காரணம் இச் சிறுகுழந்தையின் வாயிலிருந்து (வயது ஐந்துக்குள்) வந்த இந்தச் சொல்லின்படி இப்பாடசாலை நடைபெறுமோ (கிறான்று) இச்சிறுவன் (அண்ணாசாமி) தானொரு உபாத்தியாக வந்து இப் பாடசாலையில் படிப்பிப்ப தென்றமை ஒரு தெய்வசங்கற்பமா அவர்கள் நினைத்தபடி உபாத்திமாராக வந்து படிப்பிக்கினும் நான் சாகாதிருந்து அதைக் காண்பேனோ எம்பெருமானே இறைவாவென்று சிந்தித்த முடிவில் கண்களில் கலங்கிநின்ற நீர்த்திவலை வெளியில் குதித்தது. மறுநாள் மூலைச் சந்தோடுகள் போட்டு முடித்தேன். மேற்படி செல்வத் துரை அண்ணாசாமியவர்களின் முடிவையும் 1934 - 1936க்கிடையில் கண்டு மகிழ்ந்தேன்.

1917 புரட்டாதி, தனக்கு மூக்குப்போனாலும் சத்துராதிக்குச் சகுனப் பிழையாகட்டும் உவர்கள் நடத்தமாட்டார்கள் மிஷனுக்குக் கொடுத்து விடுவார்கள் மேற்படி பாடசாலைப் பிரவேசம் முதல் இதுவரை க.சின்னத்தம்பியும் க.பெரியதம்பியுமாக இரு உபாத்தியாருமே 50 ஐம்பதுக்குட்பட்ட பிள்ளைகளைப் படிப்பித்து வருகிறார்கள், சராசரி 35 முப்பத்தைந்துக்குள்ளாகும். இரண்டாசிரியரும் தராதரப் பத்திரம் இல்லாதவர்கள் (சேட்டிவிக்கட்) ஆகையால் எங்களுக்கோர் தராதரப் பத்திர உபாத்திக்கு அவசியம். அப்போ பயிற்றப்பட்டவரும் எனது நண்பருமாகிய இராயப்பரும் அவர் மனைவியும் களுத்துறையில் படிப்பித்துக்கொண்டிருந்தனர். மேற்படி ஆசிரியரின் மாமி (மனைவி யின் தாய்) ஒரு நாள் என்னைக் கண்டபொழுது கேட்டார் எனது மகளையும் மருமகனையும் உங்கள் பள்ளிக்கூடத்தில் படிப்பிக்க இடம் கொடுப்பீர்களாவென்று. அவர்கள் கவுண்மேந்துப் பள்ளிக்கூடத்தில் படிப்பிப்பவர்கள் எம் கிறான்ற்றில்லாப் பாடசாலைக்கு வருவார்களா வென்றேன். எப்படியிருந்தாலும் எனது ஒரேயொரு பிள்ளை என் கண்முன்னே நின்றால்போதும். முந்தின லீவில் மருமகன் சொன்னார் உங்கள் பாடசாலையில் படிப்பிக்கலாமென்றும் இடமுங்கிட்ட வென்றும் மறுமுறை வந்து உன்னைக் கண்டு பேசுவோமென்றும் சொல்லிப்போலிருக்கிறார். சரிவரட்டுமென்று சொல்லி மீண்டேன். பின்பொரு பதினைந்து நாளையால் அந்த மனுஷியின் படலை றோட்டால் நான் வந்துகொண்டிருக்கும்போது மனுஷி தன் படலையில் நின்று என்னைக் கேட்டா மருமகனுக்கெழுதினாயா வென்று. இல்லை இங்கே வந்தபின் பேசுவோமென்றேன். இன்னும் ஒரு கதை எங்கள் மரஞ்சீவும் ஆறுமுகம் உங்காள்தானேயென்றா ஓமென்றேன். அந்த ஆறுமுகம் சொன்னது நீங்கள் பள்ளிக்கூடம் நடத்தமாட்டீர்களாம் கடைசி மிஷனுக்குக் கொடுத்துவிடுவீர்களாம் என்று சொன்னா. அந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஆள்தான் தனக்கு மூக்குப் போனாலும் சத்துராதிக்கு சகுனப் பிழையாகட்டுமென்று தன் மூக்கை அரிந்தவன் போன்ற ஆளென்றும் மிஷன்பாடசாலைத் தலைமை ஆசிரியரின் தமையன் முறையான ஆளென்றும் சொல்லி மீண்டேன்.

**எங்கள் பாடசாலையை மிஷனுக்குக் கொடுக்கப்பார்க்கிறார் உங்கள் மருமகன் இது சரியாகுமா?**

அந்த நாளையில் நெல்லியடியில் தம்பியார் மூ.மண்டலம் குத்தகைக்காரன் அங்குள்ள கள்ளுக் குதத்தில் நிற்கிறார். இடை யிடையே பணமாற்றத்துக்காக அங்கே நான் வ.சி.சி வைத்தியர் சி.க.ஆறுமுகம் க.வ.கந்தையா வே.ஆ.மயிலு இவர்களில் சிலர் என்னுடன் மேற்படி கள்ளுத் தவறணைக்கு வருவார்கள் இப்படியே போய்க்கொண்டிருக்கும் போது ஒரு நாள் இரவு நான் வ.சி.சி வைத்தியர் சி.க.ஆறுமுகம் க.வ.கந்தையா ஆகிய நாங்கள் நிற்கும் பொழுது ஏற்றுக்காரர்கள் கள்ளு களைக் கொண்டுவந்தார்கள். முன்னே பாடசாலையை மிஷனுக்குக் கொடுத்துவிடுவார்கள் என்ற ஆறுமுகமும் கள்ளுக் கொண்டு வந்தார். அவருடைய மாமன் முன்னுக்குக் கள்ளைக்கொடுத்து வீட்டுக்குப்போக வெளிக்கிட்டார். அவரை மறித்தேன் நானும் வருகிறேனென்று. சற்றுப் பின் ஆறுமுகம் கள்ளைக் கொடுத்து வெளிக்கிடப்பார்த்தார் நில் தம்பி கதையிருக்கென்றேன். என்ன கதையென்று நின்றார். முன்னுக்கு நான் மறித்த அவர் மாமனைப் பார்த்து தம்பியண்ணே (அவர் பெயர் தம்பியர்) நாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு அதிக பணமும் செலவிட்டுக் கட்டிமுடித்த எங்கள் பாடசாலையை எங்களை அறியாமல் மிஷனுக்குக் கொடுக்கப் பார்க்கிறார் உங்கள் மருமகன் இது சரியாவென்றேன். அப்பொழுது என்னுடன் வந்தவர்கள் மூ.ம.குத்தகைக்காரன் எல்லோரும் திகைத்தனர். விஷயம் முன் எவருக்கும் தெரியாது இதென்ன கதை ஒன்றுந் தெரியவில்லையென்றார் மாமன் தம்பியர். மருமகனைக் கேளேன் என்றேன். இதென்ன கதை உங்கள் பாடசாலையை நானேன் மிஷனுக்குக் கொடுக்கப்போகிறேன் பெரும் புதினமாயிருக்கென்றார் மேற்படி ஆறுமுகம். ஓம் புதினந்தான் ஆசிரியர் இராயப்பனின் மாமியார் சின்னனுக்குச் சொன்னாயாமே உவை நடத்தமாட்டினம் கடைசி மிஷனுக்குப் போய்விடும் பாடசாலையென்று நாங்கள் அவர்களுக்குக் கொடுக்கமாட்டோம். ஆகையால் இப்போ நீதானே என்னையறியாமல் மிஷனுக்குக் கொடுக்க எத்தனிக்கிறாயென்றெண்ணிக் கேட்டே னென்றேன். அவர் என்னைக் கேட்டார் சூரனவையின் பாடசாலை வேலைமுடிந்ததோ மகளும் மருமகனும் அதிலை படிப்பிக்கப் போகிறார்களென்று இன்னும் வேலை முடியவில்லை யென்றேன் கீழ்ப்பாகம் ஓடு போடு முன் கேட்டா அப்பதான் சொன்னேன்.



மிஷனுக்கென்ற கதையை நான் சொல்லவில்லையென்றார். இல்லைத் தம்பி எங்களுக்கு ஒரு உபாத்தியாயர் தேவை. இப்படியான கதைகளால் வருகிறவரும் வரத் தடைபடுவார் என்றமையால் சொன்னேனென்றேன். நானப்படிச் சொல்லவில்லையென்றார். சரி போவோமென்றெல்லோரும் அவ்விடத்தால் அகன்றோம். (மேற்படி கதை, குறித்த ஆறுமுகம் மாத்திரமல்ல ஊரில் பலர் கதைத்த கதை).

## 1917 ஐப்பசி

**எங்களுக்குச் சொந்த உபாத்தி வேண்டும்**

தகுதிப் பத்திரம் பெற்ற உபாத்தி எங்கள் சொந்தத்திலன்றிப் பிற உபாத்திமாரை நம்பியிருப்பது சரியில்லையென்று உறுதியில் சேர்ந்த அங்கத்தவர் காரியஸ்தர்களைக் கூட்டி விஷயத்தைச் சொல்லி யோசித்தோம் காரியஸ்தர் ஐந்துபேர்.

1. மூ.செல்லப்பா 2. சி.சின்னத்தம்பி 3. வ.கந்தர் 4. வே.தம்பையா 5. வ.நாகமுத்து இந்த நாகமுத்து என்பவர் உறுதியில் எழுதப்பட்டாரே யன்றி உறுதியில் அவர் கையொப்பமில்லை. காரணம் மூ.சின்னத் தம்பி (மூ.சி) அப்போ அவர் பக்கம் நின்றமையால் அவர் ஒப்பமிடவில்லை. திருவிழாப் பணம் கொடாத பிரிவு மேற்படி ஐந்து காரியஸ்தரையும் விளங்கப்படுத்த வேண்டியதால் இவர்கள் ஆரெனக் குறிக்கின்றேன். 1. மூ.செல்லப்பா வதிரி கோணாண்டி சி.பொன்னர் மருமகன் 2. சி.சின்னத்தம்பி எனது மாமன் சி.மாரிமுத்தர் தகப்பன் தாரிக்கப்பத்து 3. வ.கந்தர் கொற்றாவத்தை (கிழவன்) 4.வே.தம்பையா அல்வாய் வேலுச்சோதிடர் மகன் 5. வ.நாகமுத்து வதிரி எனக்கும் மூ.சி வுக்கும் மைத்துனன். பள்ளந்தோட்டம் கல்வீடு.

1917 ஐப்பசி மேற்படி காரியஸ்தர்களையும் அங்கத்தவர்களையும் கூட்டி யோசிக்கும் பொழுதெல்லாம் சொல்வார்கள் இது விஷயம் எங்களுக்கென்ன தெரியும் ஏதோ நீதான் பார் நாங்கள் உதவி செய்கிறோ மென்பார்கள். அக்காலம் சைவ வேளாள உபாத்திமார் சும்மா நின்றாலும் தங்களுக்குக் கௌரவக் குறைவென்று வர மாட்டார்கள். வேலையின்றி நிற்கும் கிறிஸ்த உபாத்திமாரை வைத்தால் மிஷன் ஒரு கிழமைக் கிடையில் அவர்களை மறித்து தங்கள் பாடசாலை ஒன்றில் வைத்திடு வார்கள். இப்படியே பலமுறை பல உபாத்திமாரை வைத்து ஏமாற்ற மடைந்து இனியென்ன கஷ்டப்பட்டும் சொந்த உபாத்தி ஆக்க வேண்டு மென்று எங்கள் பாடசாலையில் மேல்வகுப்பில் படித்துக் கொண்டிருந்த என் மைத்துனன் சி.மாரிமுத்துவையும் கொற்றாவத்தை வெ.ஆறுமுகம் என்பவரையும் வதிரி கத்தோலிக்கத் தமிழ் பாடசாலையில் சேர்த்து விட்டேன். ஒரு வருடம் இருவரும் படித்தார்கள். சோதனைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வருடாந்தப் பரீட்சை) ஒரு மாதமிருக்க மாரிமுத்துவுக்குச் காய்ச்சல் நோய். மேற்படி சோதனைக்கு ஒரு கிழமையிருக்கக் கொற்றாவத்தை ஆறுமுகமும் பாடசாலைக்கு வரவில்லையென்று மேற்படி பாடசாலையார் எனக்கறிவித்தார்கள். உடனே ஆறுமுகத்தையும் தகப்பனையுஞ் சந்தித்துக் (அவர்கள் வீட்டில்) கேட்டேன். தகப்பன் சொன்னார் அவன் வேள்வியைச் சாட்டி நிற்கிறான். எங்கள் கோயிலில் வேள்வி அதற்கின்னும் இரண்டு கிழமையிருக்கு அதிருக்கட்டும் நீ படிக்கப் போவென்று நான் பலவாறு சொன்னேன் அவன் கொஞ்சமேனும் சம்மதியானாம் நானென்ன செய்கிறதென்றார் தகப்பன். உன்னை எங்கள் பாடசாலையால் பிரித்து மாரிமுத்துவையுஞ் சேர்த்து அந்தப் பாடசாலையில் படிக்கவிட்டது நீங்கள் அதில் படித்துத் தேறி எங்கள் பாடசாலைக்கு உபாத்திமாராக வரவேண்டும் என்று. மனதார மாரிமுத்துவுக்குக் காச்சல் உனக்கப்படியில்லை வேள்வியை நீ சாட்டுவது ஒரு வெட்கமான சாட்டு. ஒரு வருடப்படிப்பை வீணாக்காமல் போ பாடசாலைக்குச் சோதனைக்கு இன்னும் நாலைந்து நாளிருக்கும் போ பாடசாலைக்கென்றேன் மேற்படி ஆறுமுகத்தை. வேள்வி வந்துவிட்டது நான் போகவில்லையென்று ஆறுமுகம் சிணுங்கியழ நான் பேசிப் போட்டு 'வருந்தியழைத்தாலும் வாராது வாராவென்று' அவ்விடத்தால் மீண்டு ஏதோ சில நொண்டிச் சமாதானம்.

மேற்படி பாடசாலை உபாத்தியாயருக்குச் சொல்லி மறுமுறை சோதனையெடுக்கட்டுமென்று சொல்லிவந்தேன். வேள்வியைச் சாட்டிநின்ற ஆறுமுகப் பேயனை இனியேனென்று மாரிமுத்துவைக் கட்டாயம் படிக்கவிட்டுப் பாசுபண்ணுவிப்பேனென்ற துணிவுடன் போனேன் சின்னம்மானிடம். மாரிமுத்து சின்னம்மானின் மகனென்றமையால் நான் துணிவுடன் சென்றேன். அப்போ சின்னம்மான் சொன்னது அவனைப் படிக்கப்போவென்று சொன்னேன் பெண்கள் அவனைக் கெடுத்துப் போட்டார்கள். படிக்கப் போக வெளிக்கிடப் பல்லி சொன்னதென்றும் இனிப் படிப்புப் போதுமென்றும் ஏதும் உழைக்கலாமென்றும் இப்படியே பெண்கள் சொல்ல அவனுமதில் ஈடுபட்டு மறுத்துவிட்டான். நானினியென்ன செய்வதென்று சின்னம்மான் மனவேதனையுடன் சொல்ல நானும் மன வேதனை யுடன் மீண்டேன்.

ஏனிந்த மனவேதனை எங்களுக்கானால் எங்கள் பாடசாலைக் கொரு உபாத்தியைச் சிருட்டித்தற்காக இதற்கிடையில் அங்கத்தவரிடம் பணம் சேர்க்கப் போவேன் சிலர் தருவார்கள் பலர் தவணை சொல்வார்கள். ஒரு அங்கத்தவர் கேட்டார் ஒரு ஆளுக்கு மாதம் 10 பத்து ரூபா வருமோ அங்கத்தவர் பணமென்று. இல்லை ஒரு 1ரூபா என்றோம் (அன்று என்னுடன் வேறுமாட்கள் வந்தார்கள்) அப்பொழுது அவர் சொன்னார்



ஐயோ உங்களைக் கும்பிட்டன் இனிமேல் என்னிடம் ஒருநாளும் வர வேண்டாம் ஒவ்வோர் மாதமும் தவறாமல் என்பணம் வருமென்றார். அதன்பின் அவர் பணமாக ரூபா 1 ஒன்றுதான் வந்தது. (அவர்தான் பூமாஞ்சோலைக் கணபதியான்) கிழானை அங்கத்தவர் நால்வர் மாதாமாதம் ரூபா 1 ஒன்று தவறாமல் பன்னிரண்டு ரூபா ஒரு வருஷம் தந்தார்கள். வதிரி அங்க்த்தவர் சேர்ந்த பலர் தந்தனர் சிலர் (நிலை) தவறி விட்டார்கள் அல்வாய் கொற்றா வத்தையுமப்படியே நிலைதவறினார்கள். இப்படியே அங்கத்தவர் பணம் உலக்கை தேய்ந்து உளிப்பிடியாயின போலாயிற்று.

## 1918 ம் ஆண்டு

முறையாகப் பணம் கொடுக்கவில்லையென்று உபாத்திமார் நெருக்கிடை பக்கபலமாக நின்றவர்களும் நழுவிவிட்டனர். நானும் ஒரு அங்கத்தவனேயன்றிக் காரியஸ்தரில் ஒருவரல்ல. நான் தனிமையில் நின்று தத்தளிப்பதைக் கண்ட என் பெற்றோரும் என் மாமன்மாரும் என்னைப் பார்த்துப் பள்ளிக்கூடம் உனக்கோ சொந்தம் மற்றவர்கள் விலகியதுபோல நீயும் விட்டுவிட்டு விலகு உன் பிளைப்பைப் பாரேன் என்றார்கள். நான் அதைப் பறவாய்ப் பண்ணாமல் பாடசாலையை நடத்தி வந்தேன். க.சின்னத்தம்பி கரவெட்டி (என் மைத்துனர்) க.பெரியதம்பி அல்வாய் மேற்கு (வேர்க்குத்தி) இந்த இரண்டு உபாத்திமாருக்கும் முறையே 5ம் 4ம் ஒன்பது ரூபா கொடுக்கவேண்டும் இதில் பெரிய தம்பிக்கு ரூபா 4 நிரையாகக் கொடுபட்டுவந்தது. சின்னத்தம்பி எனது சொந்த மைத்துனரானமையாலும் பணமின்மையாலும் நிரை தவறியது. அவர் பணத்துக்கு என்னை நெருங்கிக் கேளாமல் பாடசாலைக்கு வராது நின்றுவிட்டார். அதனால் எம் சொந்த அங்கத்தவர் சிலரிடம் விஷயத்தைச் சொல்லி இரண்டு மாதக் காசு ரூபா 10 பத்துரூபா கொண்டு கரவெட்டிக்குப் போனேன் மேற்படி சின்னத்தம்பி உபாத்தியாருக்குக் கொடுக்க வென்று குறித்த உபாத்தியாயரின் பெற்றோர் என்னைப்பற்றி ஏதோ பிறணி பேசியதினாலோ தெரியாது உனக்கேனிந்த வில்லங்கம் உன் பிளைப்பையும் விட்டு உபாத்திமாருக்குச் சம்பளம் கொடுக்காமல் அவதிப்பட வேண்டியதேன். பள்ளிக்கூடம் உனக்கு மாத்திரமோ பிரியமானால் நீ படிப்பி உனக்குச் சாப்பாடு தரலாமென்று என் தாயார் சொன்னது சீனியம்மானுக்குக் கேட்டுவிட்டது.(மேற்படி உபாத்தியாரின் தகப்பன்) நான் பணத்தைக் கொண்டுபோய் சின்னத்தம்பியிடம் நீட்டினேன். கொண்டு போ அவனுக்குப் பணம் வேண்டாம் அவனினிப் படிப்பிக்க வரான் உன்னைப் படிப்பிக்கச் சொல்லியிருக்கிறானாம் கோச்சி இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதான் படிப்பி அவனினி வரமாட்டானென்று பணத்தையும் வேண்ட மறுத்து விட்டார்கள். மகனை விடப் படிப்பிக்கக்கூடிய பேர்வழி எம்முள் எவருமில்லையென்பதுதான் மேற்படி மாமனார் கொண்ட ஆவேசம் உண்மையும் ஓரளவுண்டு. அதன்பின் அந்த இடத்துக்கு நானே உபாத்தியானேன். வித்தியா பகுதிக்கு மானேச்சரைக் கொண்டு எழுதினேன். வித்தியாதரிசி சதாசிவ ஐயர் வந்தார், பிள்ளைகளை எண்ணிப் பார்த்தார் பெண் பிள்ளைகள் இருபதுக்கு மேலிருக்க பதினைந்து பிள்ளைகளிருந்தால் கட்டாயம் ஒரு பெண் உபாத்தியாயர் வேண்டுமென்றும் இப்போதைக்கொரு ஐந்தாம் வகுப்புப் படித்த ஆளை வைத்தால் போதுமென்றுந்தான் றிப்போட் டெழுத அடுத்த கிழமை வருவேன் ஒரு பெண் உபாத்தியாயர் ஊசி, நூல், தீதாள் முதலிய தையல் வேலை தயாராகியிருக்க வேண்டுமென்று போனார். அவர் சொன்ன குறிப்பளவு பெண்ணுபாத்தி என் பெண்சாதி போதுமாயிருந்தது. ஐயர் அடுத்த கிழமை வருவதற்குமுன் எனது பெண்சாதியை இடாப்பில் எழுதித் தையல் வேலைக்குரிய சீலை, நூலூசி, தீதாள் முதலிய உபகாரங் களையுந் தயார் செய்திருந்தேன்.

பதினைந்து நாளையால் மேற்படி வித்தியாதரிசி (ஐயர்) வந்தார் பெண்ணுபாத்தியாயர் தையல் வேலை நடத்தட்டும் எல்லாப் பிள்ளை களுக்கும் கையில் தீதாளிருக்கவேண்டுமென்றார். அப்படியே வேலை நடைபெற்றது. அவருக்குத் திருப்தியேற்பட்டது குறிப்புப் புத்தகத் திலுமெழுதிப் போனார் றிப்போட்டும் திருப்தியாய் எழுதி விட்டார். இதற்கிடையில் மிஷனெரிமாரின் சூழ்ச்சியாயிருக்கலாம். கிராமப் பாடசாலைத் தலைவரால் (ஸ்கூல் கமிட்டித் தலைவர்) உதவி நன்கொடை (கிறான்று) பெறத்தகுதியென்று பதியப்படாத பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளின் பெற்றோருக்கு வழக்கெழுத வேண்டுமென்று கிராமச் சங்கத் தலைவரென்ற முறையில் எம்பகுதி மணியகாரனுக்கு அறிவித்தல் வந்தது. அவர் விதானைமாருக்கறிவித்தார். அல்வாய் தெற்கு விதானை வீடுவீடாகச் சென்று தேவரையாளிப் பள்ளிக்கூடத்திற் படிக்கும் பிள்ளை களுக்கு வழக்குவருமென்று பறைசாற்றினார். எங்கள் பாடசாலை சைவப் பாடசாலையென்றமையால் அக்காலம் அனேக வேளாளருக்கு எளிய தோணியாமை (பொறாமை) அல்வாய் மேற்கு விதானை கொற்றாவத்தை யிலுள்ள இரண்டு பிள்ளைகளை வழக்குவைத்து விட்டார். அப்போ விதானைமார்தான் வழக்கெழுதுவது குறித்த இரண்டு பிள்ளைகளில் வீரன் கந்தன் பசுபதியென்ற பெண்பிள்ளை எம்பாடசாலையில் படிக்கிறது. மற்றது ஆள்வான் சின்னி இது ஒரு பாடசாலையிலும் படிக்கவில்லை.



**எனது கலக்கம்**

குறித்த வீரன் கந்தனென்பவர் தனது மகள் பசுபதிக்கு வழக்கென்று கட்டளையுடன் என்னிடம் வந்தார். நான் அக்கட்டளையை வேண்டிக் கொண்டு மணியகாரனிடம் போனேன். போன விஷயத்தைச் சொன்னேன் அவர் ஒரு கடதாசியை எடுத்து வாசித்தார். அது கிராமப் பாடசாலைத் தலைவர் கட்டளை (டிஸ்திறி ஸ்கூல் கொமிட்டித் தலைவர்) இவர் ஆனைக்கோட்டை சின்னையா முதலியார். மேற்படி மணியகாரன் வாசித்ததைக் கேட்டு ஐயோ எங்கள் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளுக்கு வழக்கென்றால் பிள்ளைகலெல்லாம் கலைந்துவிடுமே நானென்ன செய்வேனென்று சொல்லிநின்று கலங்கினேன். இரவு 9 ஒன்பது மணியிருக்கும் மணியகாரன் சொன்னார் நேரம்போய்விட்டது போய்க் காலமை வா என்றார். நான் அவ்விடத்தால் மீண்டு எந்தெந்த இடங்களைத் தாண்டிவந்தேனென்று அறியாமல் வீட்டுக்குள் புகுந்து படுத்துவிட்டேன் (குழுப்பியா வத்தையில்) சுமார் 11 பதினொரு மணியிருக்கும் என்னை இன்னும் வரக்காணேனென்று வழி பார்த் திருந்த எனது மனைவி ஏதோ தேவைப்பட்டு விளக்குடன் வந்து நான் படுத்துறங்கியதைக் கண்டு என்னை எழுப்பிப் பேசாமல் வந்து படுத்துவிட்டாய் நீ இன்னும் வரவில்லையென்று நான் நெடுக வழி பார்த்திருக்கவென்று சொல்லிச் சாப்பிடக் கேட்க நானிப்ப சாப்பிட வில்லை நீ சாப்பிடென்றேன். என் முகத்தை ஏறிட்டுப் பார்த்து என்ன சங்கதி ஏதோ துக்கப்படுமாப்போலிருக்கென்றா. ஒன்றுமில்லை முகம் எரிகிறது வயிற்றிலும் ஏதோ குழப்படியென்று நீ சாப்பிடு நான் பிறகு சாப்பிடுகிறேனென்றேன். நானும் பிறகு சாப்பிடுகிறேனென்றா. சற்று வேளையால் இருவரும் சாப்பிட்டோம். உண்மையாக அன்று என் மூளை கலங்கியதுபோல் முன்னுமில்லை பின்னுமில்லை. காரணம் எங்கள் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளுக்கு வழக்கென்றால் எல்லாப் பிள்ளைகளையும் பெற்றார் மறித்துப் போடுவார்கள். எதிர்க் கட்சியாக எங்களுடன் பிரிந்து நிற்கும் எம்மவர்க்கும் மிஷநெரிக் கிறிஸ்தவர்க்கும் கேலிக்கிட மாகவும் எம்முயற்சி மண் விளையாட்டாய் முடிந்ததோ வென எண்ணி விட்டேன்.

## 1918 ம் ஆண்டு கார்த்திகை மாதம்

### எங்கள் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளுக்கு வழக்கு

இரவு மணியகாரன் விடிய வா என்றதின்படி விடிந்த பின் ஏழு மணிபோல தம்பி வே. ஆ. மயிலுவையுங் கூட்டிக்கொண்டு மணியம் வீட்டுக்குப் போனோம். அவர் தன் வீட்டுக்குக் கிழக்குப் பக்கமாக உள்ள தோட்டத்துள் நின்ற செய்த பயிருக்குப் பாதுகாப்பு வேலை செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நின்றார். அவர் கிட்டப் போனவுடன் சொன்னேன் எங்கள் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளுக்கு வழக்கென்று ஊர் முழுவதும் கதை பரவிவிட்டதென்றும் நானிதற்கென்ன செய்யத் தக்கதென்றும் மனவேதனையுடன் மேற்படி மணியகாரனுக்குச் சொன்னேன். வரும் வழக்குகட்குப் பத்துச் சதம் குற்றம் போடுகிறேன். அப் பணத்தை நீ கொடு. இதற்கிடையில் வித்தியாதரிசிமாரைக் கண்டு வழக்கு வராமல் தடுக்கும் வேலையைப் பாரென்றார். பணங் கட்டத் தயக்கமில்லை ஆனால் எங்கள் பாடசாலை பெறுமதியற்று மதிப்புக் கெட்டுவிடுமே யென்றுதான் மனவேதனையென்றேன். இப்பொழுது ஒரு பிள்ளைக்குத் தானே மற்றப் பிள்ளைகளுக்கு வழக்கு வருமுன் வித்தியாதரிசிமாரைக் கண்டு வழக்கைத் தடுக்கும்படி செய்யென்றார். அவ்விடத்தாலகன்று வீ.மு.சி.மணியகாரனிடம் சென்றோம். இடைவழியில் மயிலுவைப் பார்த்தேன் ஐயோ கடவுளேயென்றார். அண்ணே எங்கள் பாடசாலையின் கதியிப்படியானால் என்று சொல்லும் பொழுது அவரது முகத்தைக் கண்ட எனக்கு வயிற்றில் அக்கினிச்சுவாலை எழும்பியது. இருந்தும் விசரா நீயேன் பயப்படுகிறாய் உன்முகம் பேய் பிடித்தவன் போல் காணப் படுகிறது. இப்படியான காரியங்களுக்கு இதிலும் பெரிய ஆபத்து வந்து மீழும் என்னை உற்சாகப்படுத்துவதையிட்டு நீ என்னையும் தைரியங் கெடப் பண்ணுமாப்போலிருக்கென்று சில நியாயங்களைச் சொல்லிக் கொண்டு மேற்படி மணியகாரனைக் கண்டு விஷயமெல்லாவற்றையும் சொன்னேன்.

அவரும் துக்கப்பட்டபடி, வந்த வித்தியாதரிசிமார் கந்தையா சதாசிவ ஐயர் அவர்கள் என்ன சொன்னார்களென்றார். அவர்கள் பிழையொன்றுஞ் சொல்லவில்லைத் திருப்தியுடன் போனதுபோல் காணப்பட்டதென்றேன். என்ன வரப்போகிறது அவர்களைக் கண்டு விஷயத்தைச் சொல்லி அவர் சொல்வதைக் கேட்டு வந்து சொல் என்றார். அவ்விடத்தால் மீண்டு மறுநாள் மாலிசந்தைப் பிராமண வீட்டில் வித்தியாதரிசி சதாசிவ ஐயரைக் கண்டு பாடசாலைக்கு வந்த நிலைமையைச் சொன்னேன். நான் நல்ல திருப்தியென்று றிப்போட்டெழுதியிருக்கிறேன் ஏனவர்கள் இப்படி எழுதுவான். என்னைச் சொன்னதாக மணியகாரனுக்குச் சொல்லென்று சொன்னார். இது விஷயத்தை மணியகாரன் மாரிருவருக்குஞ் சொல்லி வீட்டுக்கு வந்தேன். மயிலு வந்து கூப்பிட்டதாக வீட்டில் சொன்னார்கள். பின்நேரம் மயிலு வந்து ஏனண்ணே என்னை விட்டிட்டெங்கே போனீர் களென்றார். எனக்கிருக்கும் பதகழிப்பில் எதையும் நினைக்க முடியாது, மாலிசந்தைப் பிராமண வீட்டுக்குப் போனேன்னென்று நிகழ்ந்த பேச்சுக்களைச் சொன்னேன்.

மயிலுவைக் காணாமல் போனதற்கு நியாயம் பாடசாலைக்கு மாறான செய்திகளை யாருஞ் சொன்னால் மயிலு தொட்டால் சுருங்கியென்ற செடி



போலச் சரீரம் ஒருவித முகம்வாடி என்னையும் கலங்கச் செய்யு மென்றமையினால். அதற்காகச் சில விஷய சந்தற்பங்களுக்கு மயிலு வைக் காணாமல் போவது வழக்கமாய் விட்டது. மறுநாள் யாழ்ப்பாணம் போனேன். வித்தியாதரிசி ச.கந்தையாவைக் கண்டு பாடசாலைக் கிருக்கும் கஷ்டநிலைமையைச் சொன்னேன். ஏனப்படி வருவான் நான் நல்லமாதிரி எழுதினேன் கிட்டடியில் மனேசருக்கு மறுமொழிவரும் மணியகாரனுக்கு என்னைச் சொன்னதாகச் சொல்லு அவசரப்பட வேண்டாமென்றும் சொல்லச் சொன்னார். அவரிடம் விடைபெற்று மீண்டு மணியகாரனிடம் அவர் (கந்தையா) சொன்னவைகளைச் சொன்னேன்.

**வழக்கு**

மேலே சொல்லப்பட்ட வீ. கந்தன் பசுபதியென்ற எங்கள் பாடசாலை மாணவிக்கும் படிக்கவிடாத ஆள்வான் சின்னியென்ற பெண் பிள்ளைக்கும் வந்த கட்டளைத் தவணைக்கு நானும் குற்றக் காசுடன் போனேன். முதல் எங்கள் பாடசாலையில் படிக்கும் பசுபதியின் தகப்பன் வீரன் கந்தனென்ற ஆளைக் கூப்பிட்டுக் கேட்டார் ஏன் பிள்ளைகளைப் படிக்கவிடாமல் மறித்தாயென்று. அந்ததாள் அல்வாய் மேற்கு விதானை யைக் காட்டி விதானை நயினாருக்கும் தெரியும் பிள்ளைகளுக்குச் சுகமில்லையென்று சொல்ல மேற்படி விதானையார் சொன்னார் அவள் தேவரையாளியில் படிக்கிறாளென்று விதானையார் வைத்தவழக்கு படிக்கவிடவில்லையென்று சாட்சி சொல்லுகிறார். படிக்கிறாளென்ற அந்த வழக்கை மணியம் தள்ளிவிட சின்னியின் தகப்பன் ஆள்வானென் றாளைக் கூப்பிட்டுக் கேட்டார் அவளை நான் படிக்கவிடவில்லை யென்றும் அவளுக்குக் காது கேளாதென்றும் சொல்ல அப்படிச் சொல்லப்படாதென்று 50 ஐம்பது சதம் குற்றம் போட்டு இனிக்கட்டாயம் படிக்கவிடவேண்டுமென்றும் எச்சரித்துவிட்டார். நாங்கள் வரும் வழியில் பசுபதியின் தகப்பன் வீரன் கந்தனென்றவர் ஆள்வானென்றவர்க்குச் சொன்னார் கண்டியே காணும் தேவரையாளியில் படிக்கிற பொடியளுக்கு வழக்கு வருமெண்டெல்லாரும் சொல்லிச்சினம் விதானை நயினார் அதிலை (தேவரையாளி) படிக்கிதெண்டு சொன்னபடியால்தானே எனக்குக் குற்றம் போடவில்லை இனி உன்ரை மேளையும் தேவரை யாளிக்குத் தான் விடுகாணுமென்று பேசிக்கொண்டு வந்தார்கள். அதன் படி ஆள்வான் சின்னியென்றதை மாற்றிச் சின்னாச்சியென்று எங்கள் பாடசாலை இடாப்பில் சேர்த்துப் படிக்கலாயினர்.

**சி. க. ஆறுமுகத்தின் கடிதம்**

மேற்படி ஆறுமுகம் பாடசாலைப் பிரவேசத்துக்கு முன்னும் பின்னும் நின்று பாடசாலைக்குதவிசெய்து பின்னர் தனது வியாபார ஸ்தலமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாகலுக்குச் சென்றுவிட்டார். சில நாளையால் கேள்விப்பட்டோம் அவரொரு நாடகக் குழுவினரை எடுத்துப் பலவிடங்களுக்குக் கொண்டு சென்று நாடகமாடித் திரிகிறாரென்று. பின்பு சில நாளையால் கேள்விப் பட்டோம் ஆளுக்கு அதிக நட்டம் அடித்ததென்றும். ஊருக்குக்கூட வரமார்க்கமின்றி இருக்கிறா ரென்றும் அப்படியிருக்க எனக்கொரு கடிதம் வந்தது பாடசாலையின் நிலையெப்படி இருக்கென்றும் தனது நிலைமை யுஞ் சில எழுதியிருந் தார் மேற்படி சி.க.ஆறுமுகம். அதற்கு நானெழுதிய பதில் ஒருவன் ஓர் மலையடிவாரத்திலிருந்து மலையின் உச்சியை அடையப் பல கஷ்டத்துடன் தன் மூச்சையூஞ்சியவிடங்களில் தம்மடக்கி மண்டியிட்டேறவும் வரும் அப்படியே ஏறி மலையின் உச்சியையடைந்து அன்றைக்குத்தானவன் நிமிர்ந்து நின்று தாராளமாகத் தன் மூச்சை விடுவான். அதேபோலத்தான் பாடசாலை நடைவழியுமென அறிக.

**உதவிகள், நன்கொடைப் பணம் பெறவே மலை உச்சி பாட்டு**

**அனாதி நித்தியனேகன் அவனருள் அறிவேயானால்**
**அனாதியாந் தர்மம் வேறன்றவனியில் கல்வியீகை**
**மனோதிட மொன்றேயெம் கண்மாறிலா திருக்குமாயின்**
**புனலென வெங்கள் கூடம் பொங்கிடும் மங்காதென்றே.**

மேற்படி பதிலுடன் இப்பாடலையுமெழுதியனுப்பினேன் அதன் பின் அவருமொரு கடிதமெழுதிச் சிலகாலத்தால் இங்கு வந்து மேற்படி பாடலைத் தவறவிட்டேனென்று பாடலை என்னைக் கொண் டெழுதிவித்துக் கொண்டார்.

**பிரிந்தவர்களுடன் சமாதானம் 1918 ம் ஆண்டு**

1916ம் வருஷம் திருவிழாப்பணம் கொடுக்கவில்லையென்று எங்களைப் பிரிந்து நின்ற மூ.சி.கட்சியோடு சமாதானமாக்கப் பாடசாலை மானேசர் சி.சபாபதிப்பிள்ளை (கயிலச்சட்டம்பியார்) அல்வாய் கார்த்திகேயர் வாரித்தம்பியார் அவர்களையுங் கூட்டிக் கொண்டு வந்து பாடசாலைக்குள் நின்றுகொண்டு எனக்காளனுப் பினார். ஒருபின்னேரம் நாலு மணியிருக்கும் நான் போனேன். அன்றுதான் வாரித்தம்பியாருடன் நான் முகம்கொண்டு பேசியநாள். எங்களுக்குள் நடைபெற்ற வாக்கு வாதத்தைப்பற்றிச் சொல்லும்படி கேட்டார்கள் இக்கொப்பியில் ***49, 50* ஆம்** பக்கத்திலெழுதியிருக்கும் அவ்வளவையும் ஆதியோடந்த மாகச் சொல்லி முடித்தேன். கேட்டுக் கொண்டிருந்த மானேசர் சி.ச.கயிலச் சட்டம்பியார் புன்சிரிப்புடன் கா.வா.தம்பியாரைப் பார்க்க மேற்படி வாரித்தம்பியார் மனேசரை நோக்கித் தன் கண் மடல்களை மேலிமைத் துக் கீழே மடக்கினார். சரி விஷயமெல்லாம் அறிந்து கொண்டேன் எப்படியும் நானிதைச் சமாதானமாக்கிப் போடுவேனென்று



மானேசருக்குச் சொல்லி (கா.வா) இருவரும் போயினர். அப்போ மூ.சி.வுக்கும் கா.வா.வுக்கும் பெருமன்னியோன்யமுண்டு பணமாற்றமு முண்டு. கா.வா.வின் சொல்லை மூ.சி. தட்டிக்கழிக்க மாட்டாத காலம்.

இரண்டு மூன்று நாளுக்கிடையில் மூ.சி.வுடன் மேற்படி வாரித் தம்பியார் பேசிமுடித்தபின் இருபக்கமும் அவர் வீட்டுக்கு ஒருநாள் மாலை நேரம் போனோம். மேற்படி வாரித்தம்பியாரும் ஆசையம்மா னும் (சி.பொன்னர்) அவர்கள் வருமுன் எனக்குச் சொன்னார்கள் நீ ஒன்றும் பேசிப்போடாதேயென்று. அதனால் நான் மௌனமாகவிருந் தேன். அன்று அங்கு நடந்த பேச்சு மூ.சி. புளியடி கறுவலம்மானுக்குச் சொன்னார் எங்களைச் சமாதானமாகும்படி நயினார் கேட்குதென்று. அப்போ திருவிழாக்காசு வேண்டிப் போட்டீர்களோவென்று மூ.சி.வைக் கேட்டார் கறுவலம்மான். ஆமென்றார் மூ.சி. அத்துடன் சமாதானம் சரியாய்விட்டது. திருவிழாப் பணம் நாங்கள் கொடுக்கவில்லை மேற்படி பணத்தை நீங்கள் கொடுக்கத்தான் வேண்டுமென்று எந்த மத்திஷ்தரும் எங்களுக்குச் சொல்ல முன் வரரார்கள். அந்த நீதி பிரிந்துநின்ற அவர்களுக்குமே தெரியும். அந்தப் பணம் பாடசாலைக் கூரையிலே ஓடுகளாயிருப்பது சகலருக்கும் தெரியும். தாங்கள் கொண்டபிடிவாதத் திற்கோர் சாந்தியாகப் பணம் வேண்டியதாகச் சமாளித்தார்கள். ஆதலால் தான் என்னைப் பேசாதையென்று முன்னுக்குச் சொன்னார்கள்.

அடேயப்பா இரண்டு வருடமாக இந்த அற்ப விஷயம் பெருஞ் சிக்குப்பாடாயிருந்தது. இதன் பின் மூன்றாம் நாள் வித்தியாபகுதியால் எங்கள் பாடசாலையை உதவி நன்கொடைப் பணம் பெறும் (கிறான்று) தகுதிப் பாடசாலையென அங்கீகரிக்கப்பட்டிருக்கென்று மானேசருக்கு வந்த கடிதத்தை மானேசர் கொண்டுவந்து என்னிடம் இங்கேயே தந்தார். தந்தபின் சொன்னார் இதற்காக நீங்கள் ஒரு கொண்டாட்டம் நடத்த வேண்டுமென்றும் அது நல்செய்திக் கொண்டாட்டமென்ற பெயருடன் நடக்கட்டுமென்று சொல்லிப் போனார் (மானேசர்). அப்படியே பிரிந்துநின்ற பிள்ளைகள் பெற்றார் மற்றையோர் எல்லாரும் ஒன்றாக நல்செய்திக் கொண்டாட்டத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடி னோம். மேளவாத்தியம் பாட்டுக் கச்சேரி ஊர்வலம் முதலிய நடை பெற்றன. எல்லாம் புருடாவென்று மிஷன் உபாத்திமாரும் அவர்களைச் சேர்ந்த அனுதாபிகளும் பேசித் திருப்திப்பட்டனர்.

**பிரிந்துநின்ற (1918 ம் ஆண்டு ஆவணி) பிள்ளைகளின் விடுகைப்பத்திரம்**

மேற்படி பிள்ளைகளின் பெற்றார் மிஷன் பாடசாலை ஆசிரியரிடஞ் சென்று (யோசேப்பாசிரியர்) தம்பிள்ளைகளின் விடுகைப் பத்திரங் களைத் தரும்படி கேட்கச் சோதனை முடியத்தரலாமென்று சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். அவர்கள் பாடசாலைச் சோதனைக்கு ஆறுமாதமிருக்கு அவ்வளவும் மறிபட்ட பிள்ளைகளை இங்கே இடாப்பில் எழுதாது சும்மா வைத்திருக்கமுடியாதென்றும் பெற்றோர் கேட்டவுடன் ஏதொரு சாட்டுச் சொல்லாமல் உடனே விடுகைப் பத்திரத்தை ஆசிரியர் கொடுக்கவேண்டுமென்ற பிரமாணத்தையும் மேற்படி பெற்றோருக்கு விளங்கப்படுத்தித் திருப்பிக் கேட்கும்படி விட்டேன் அவர் கொடுக்கிற மார்க்கமின்றிப் போலிச்சமாதானங்கள் சொல்லி ஆட்களை ஏமாற்றினார். அதனால் பெற்றோரின் கையொப்பமெடுத்து வித்தியா பகுதிக்கெழு தினோம். அவரைக்கொடுக்கும்படி எழுதியிருக்கு தருவார் போய்க் கேளுங்களென்று மறுமொழி வந்தது. அதன் பின்னுங்கேட்டுக் கொடுக்கவில்லை பிறகும் எழுதினோம். வித்தியாதரிசி சதாசிவஐயர் எங்கள் காடசாலைக்கு வந்தார். என்னைக் கேட்டார் அந்த ஆசிரியர் விடுகைப் பத்திரம் கொடுத்தாரோவென்று இல்லை யென்றேன். பெட்டீசமெழுதிய ஆட்களுடன் அந்தப் பள்ளிக் கூடத்துக்கு வாவென்று அவர் சைக்கிளில் போனார். பெற்றோர் மூ.சி.வும் சேர்ந்தவர்களும் வந்தார்கள் யோசேப்பாசிரியரை ஐயர் கேட்டார் இவர்களின் விடுகைப் பத்திங்களை ஏன் கொடுக்கவில்லை யென்று. இவர்கள் ஒரு நாள் வந்து கேட்டார்கள் பின்பு வரவில்லையென்றார் ஆசிரியர். ஐயர் அதை நம்பாமல் கேட்ட உடனே கொடாமல் நீரேன் தவணைபோடுவானென்று கண்டித்துப் பேசினார். அப்போ மேற்படி ஆசிரியரின் மனைவி கேட்டா ஆர்வந்து கேட்டாலும் கொடுக்கவேண்டாமென்று பிரமாணம் தெரியாத உங்களுக்கு அப்படியுஞ் சொல்லலாமென்று பரிகாசக்குறிப்புடன் சொன்னார் ஐயர் மேற்படி யோசேப்பாசிரியர் மூ.சி.வைச்சுட்டி இவர்கள் பிள்ளைகளை விடும்பொழுது படிப்பு முடியும்வரை பிள்ளைகளை மறிக்கமாட்டோமென்று எனக்குச் சொல்லி பிள்ளைகளை விட்டவர்கள். இப்போ அதைத் தவறிவிட்டார்கள் என்றார். அப்படிச் சொன்னது மெய்தான் இப்போ எங்களுக்குள் சமாதானம் வந்தபடியால் பிள்ளை களை மறிக்கவேண்டியதாயிற்று என்றார் மூ.சி. சரி உவைகளைப் பேசிப் பயனில்லை சேட்டிவிக்கற்றுக்களை கொடுத்துவிடென்று ஐயர் புறப்பட்டார். நான் அவர் பின்செல்ல யோசேப்பாசிரியரும் வந்தார். ஐயாவுக்குத் தனிமையில் சில கதை சொல்லவேண்டியிருக்கென்றார் மேற்படி ஆசிரியர். என்னை நில்லென்றார் ஐயர் நான் நின்றுவிட்டேன்.

மறுநாள் ஐயரிடம் மாலிசந்தை பிராமண வீட்டுக்குப் போனேன். (ஐயர் அளவெட்டியிலுள்ளவர் இரண்டாந் தாரம் மாலிசந்தைப் பிராமண வீட்டில் விவாகஞ் செய்தவர்) ஐயர் என்னைக் கண்டவுடன் கேட்டார் சேட்டிவிக்கற் வேண்டிப்போட்டீர்களோவென்று. இன்று பின்நேரம் தரலாமென்றாராமென்றேன். அந்த ஆசிரியர் ஏதோ இரகசியம் சொல்ல வந்தார் அதை நானனறியக்கூடாதாவென்றேன். ஏனறியக்கூடாது தங்கள்



பாடசாலையில் படிப்பித்த ஒரு உபாத்தியைப் பாதிரிமார் வேலையால் நீக்கிவிட்டதினால் தன்னைக் கெடுக்க வெண்ணி நீங்களெல்லாரும் சேர்ந்து தொடங்கியதாம் எங்கள் பாடசாலையென்று சொன்னதாகச் சொன்னார் ஐயர். தான் சொன்னாராம் இப்போ நான் சொன்னவர்களின் சேட்டிவிக்கட்டைக் கொடும். பின்பும் வந்துகேட்கும் பிள்ளைகளுக்கும் கொடுத்துவிடும் எங்களுக்குச் சோலிவையாதையுமென்றுஞ் சொல்லி விட்டேன் என்றார் ஐயர். அவருக்கு எங்கள் பாடசாலையில் கூடிய கவர்ச்சி யிருந்தது. தன்னால் இயன்ற உதவி எங்கள் பாடசாலைக்குச் செய்ய நல்ல விருப்பமிருந்ததென்று அவர் குறிப்பாலும் செயலாலும் கண்டேன். அதுபோலவே அப்பொழுதிருந்த வித்தியாதரிசிமார் தேவாரக் கந்தையா (பெரிய), சின்னக்கந்தையா, அ.பொன்னையா ஆகியோருக் கும் இருந்தது. அன்று பின்நேரம் கேட்டிருந்த சேட்டிவிக்கட்டெல்லாம் கொடுத்தாயிற்று.

எங்களுடன் பிரிந்து நின்ற சிலர் சமாதானமாகியும் பிள்ளைகளை அப் பாடசாலையால் மறித்து எங்கள் பாடசாலைக்கு விடவில்லை. செலவுசித்தாயங்களுக்கு முன்னுக்கு நின்றார்கள். இவைகளையிட்டு நான் சிலவேளை கேட்பேன் நாங்கள் பிரிந்து நின்று சமாதானமாகியது எதற்கு சோத்துக்கும் சாத்துக்குமோ பிள்ளைகளை மறித்து நாங்கள் பாடசாலைக்கு விடுங்கோவென்றால் போலி நியாயம் சொல்லிக் கடத்துகிறார்கள் கலியாணவீடு முதலிய செலவுசித்தாயங்களுக்குப் பின்வாங்காது முன்னுக்கு நிற்கிறார்களென்று. அதற்கு நியாயம் சொல்லாமல் மௌனம் சாதிப்பார்கள் மனதில் கோவம் கொள்வார்கள். அப்பொழுது நான் படும் கஷ்டங்களில் சகித்தல் தன்மையைலிழந்து ஆத்திரமேலீட்டால் பேசியதும் பயனற்றதாகும். இதுநிற்க, பாடசாலை நன்கு நடைபெற்று வந்துகொண்டிருந்த போதிலும் எங்கள் பாடசாலைக் கொரு சேட்டிவிக்கற் உபாத்தியில்லையென்றமை பெரும் கவலைக்கிட மாயிருந்தது. அதனால் எங்கள் பாடசாலையில் மேல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த வ.நா.ஆழ்வாப்பிள்ளை, மூ.சி.கந்தவனம், சி.வல்லிபுரம் ஆகிய இந்த மூன்று பேரையும் வதிரி கத்தோலிக்கப் பாடசாலையில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டேன். இவர்கள் படித்துக்கொண்டு வருகையில் இவர்கள் தகப்பன்மாராகிய வ.நா.வும் மூ.சி.யும் தங்கள் பிள்ளைகளாகிய ஆழ்பாப்பிள்ளையையும் கந்தவனத்தையும் மறித்துத் தாங்கள் வியாபாரம் செய்யுங் காலியில் ஆங்கிலம் படிப்பிக்க வென்று கொண்டு போனார்கள். இதைக்கண்டு சி.வல்லிபுரமும் மாமன் சி.க.ஆறுமுகம் வியாபாரஞ் செய்யும் குருநாகலுக்குப் போனார். மூன்று பேரும் ஆங்கிலம் படித்துவந்தார்கள். மேற்படி ஆழ்வாப் பிள்ளையையும் கந்தவனத்தையும் பாடசாலையால் மறிக்கும் பொழுது நான் சொன்னேன் இவர்களை (பிள்ளைகளை) எங்கள் பாடசாலைக்கு உபாத்திமாராக்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்கப் பாடசாலை யில் சேர்த்தேன். இப்போ நீங்கள் அவர்களை மறித்து இங்கிலீஸ் படிப்பிக்கப்போகிறோமென்கிறீர்கள் ஏதோ ஒரு எல்லை காணும்வரை படிப்பிக்கவேண்டும் இடையில் நிற்பாட்டினால் மேற்படி பிள்ளைகள் தமிழிலும் இங்கிலீசிலும் குறைக்குடம்போல் தழம்புவார்கள் நீங்கள் இடையில் நிற்பாட்டுவதாயிருந்தால் அவர்களைக் கூட்டிக்கொண்டு போகவேண்டாம். நான் அவர்களை உபாத்திமாராக்கிப் போடுவே னென்றேன். அப்பொழுது வ.நா.வும் மூ.சி.யும் சொன்னார்கள் (1918ம் ஆண்டு புரட்டாதி மாதம்) எங்களுக்குக் கடையிருக்கு ஆகையால் நாங்கள் பிள்ளைகளை இடையில் நிற்பாட்டாது ஓர் எல்லை காணும் வரையும் படிப்பிப்போமென்று கூட்டிக்கொண்டுபோய் மேற்படி பிள்ளைகளை ஓர் ஆங்கிலப் பாடசாலையில் சேர்த்துப் பிள்ளைகள் படித்துவரலாயினர்.

ஆழ்வாப்பிள்ளையும் கந்தவனமும் காலியில் இங்கிலீஸ் படிக்கிறார்கள் என்றறிந்த சி.வல்லிபுரமும் தனது மாமன் சி.க.ஆறுமுகம் வியாபாரஞ்செய்யும் குருநாகலுக்குப் போய் இங்கிலீஸ் படிக்க வேண்டுமென்று புறப்பட்டார். அது எனக்குப் பெரும் வேதனையாயிந்தது. ஏனெனில் எங்கள் பாடசாலைக்குத் தகுதிப் பத்திரம் பெற்ற உபாத்திமாரை ஆக்கவேண்டுமென்று முன்னே மாரிமுத்து ஆறுமுகமென்றவர்களை குழப்பினார்கள் இப்போ ஆழ்பாப்பிள்ளை, கந்தவனம் குழப்பிப் போனாலும் வல்லிபுரம் படிப்பில் தீவிரவாதி யென்றும் அவர்கள் போனாலும் வல்லிபுரம் நின்று படித்துக் கெதியில் உபாத்தியாகக்கூடுமென்றும் நல்லாய் நம்பியிருந்துவிட்டேன். ஆகையால் வல்லிபுரத்தைக் கூடியளவு மறித்தேன். கேட்கவில்லை. வல்லிபுரமும் குருநாகல் சென்று ஓர் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து படித்துவரலாயினர். இரண்டு வருடத்துக்கிடையில் வ.நா.வும் மூ.சி.வும் ஏதோ மனஸ்தாபப்பட்டு ஒரு கடையில் வியாபாரம் செய்தவர்கள் பிரிந்து இரு கடை வியாபாரிகளாயினர். பிள்ளைகளின் படிப்பையும் நிற்பாட்டிக் கடையில் வைத்துக் கொண்டனர். சி. வல்லிபுரமும் மாமன் ஆறுமுகத்தின் கடுஞ்சட்டங்களுக்கஞ்சிக் கொழும்பில் இளைய மாமன் சி. க. அப்பாக்குட்டி வியாபாரக் கடையில் சேர்த்துவிட்டார்.

### 1919 ம் ஆண்டு நிகழ்ச்சிகள்

பாடசாலை மானேசர் சி.சபாபதிப்பிள்ளை அவர்கள் சிங்கப்பூருக் குப் போகும்பொழுது பாடசாலை மனேச்மென்ரை வடமராட்சி மணியகாரன் க.சின்னத்தம்பி (பொன்னையா) அவர்களுக்கு அயிட்டிங்கெழுதி விட்டுப் போயினர். அப்பொழுது டிவிசன் இஞ்சிப்பற்ரர் (பெரும்பகுதி வித்தியாதரிசி)யாக தில்லைநாயகம் வந்திருந்தார் அவருக்கு ஏதோ கைவிரித்தால் காரியம் பெறலாமென்று பலரும் சொன்னார்கள்



போஸ்மாஸ்ரர் சிற்றம்பலம் (இளையதம்பி). இவர் எங்கள் பாடசாலைக்குச் சிலகாலம் மானேசராயிருந்த சின்னையாவின் தம்பி சக்கடத்தார் ஆழ்வாப் பிள்ளையின் தமையன் மகேசனின் தகப்பன். இவர் அப்பொழுது யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோரில் பெரிய போஸ்மாஸ்ரராய் இருக்கிறார். மேற்படியாருமிருக்க மணியகாரன் மாரிருவரும் நானும் குறித்த தில்லைநாயகத்துடன் பேச ஒரு தூதன் வேண்டுமென்று ஆலோசித்தோம். அவர் தன்னுடன் வெகுஐக்கியமென்றும் தான் அவரை எங்கள் பாடசாலைக்குக் கூட்டிவருகிறேனென்றும் மேற்படி போஸ்மாஸ்ரர் சிற்றம்பலம் சொன்னார். அப்படிச் செய்யுமென்றார் வீ.மு.சி.மணியகாரன் ஒருநாள் விடிய 6-7 மணிக்கிடையில் எங்கள் பாடசாலை வாசலில் ஒரு கார் வந்து நிற்பதாகவும் இரண்டு சட்டைக்காரர் பாடசாலைக்குள் போவதாகவும் ஒரு பொடியன் சொல்ல நான் தடுதாடிப்பட இன்னோரு பொடியன் ஓடிவந்து இடாப்புடன் வரட்டாமென்றும் இரண்டுபேர் பள்ளிக்கூடத்துள் நின்று சொன்னார் களென்றுஞ் சொல்ல நான் இடாப்புடன் விரைந்து சென்றேன். மேடைக் கதிரையில் தில்லைநாயகம் இருக்கிறார் போஸ்மாஸ்ரர் நிற்கிறார் நான் போனவுடன் ஓர் நாற்காலி (ஸ்டூல்) எடுத்து அதிலிருக்க வேண்டு மென்று போஸ்மாஸ்ரருக்குச் சொல்லி இடாப்பை மேசை மேல் வைத்து தில்லைநாயகத்துக்கு ஒரு வணக்கம்செய்து நின்றேன். இருவரும் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டார்கள். மேற்படி இன்சிப்பற்ரர் இடாப்பை விரித்து T. S. E. (20 V 1919) இப்படியே குறித்து ஆண்டு வைகாசி மாதப் பக்கத்தில் ஓர் தொங்கலில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுப்போனார். உடனே ரூபா 20 இருபது போஸ்மாஸ்ரர் கைக்குள் இரகசியமாகவைத்துப் பிறகு காண்போமென்று சொல்லி வழிவிட்டனுப்பினேன். தில்லைநாயகத்தின் வாகனம் ஓர் பாரிய குதிரையும் வண்டியும் அன்று அவர் காரெடுத்தது வடமராட்சியில் பல பாடசாலைகளை விசிற் பண்ண. அன்று பின்னேரம் எனது மாமன் (சி.கறுத்தார்) மேற்படி சின்னத்தம்பி உபாத்தியாயரின் தந்தை நெல்லியடி கொல்லகம்மாலையில் இருக்க அவருக்கொரு கொல்மனிதன் சொன்னாராம் தான் அதிகாலையில் திக்கத்துக்குப் போனபொழுது உங்கள் பள்ளிக்கூட வாசலில் ஓர் கார் நின்றது இரண்டு சட்டைக்காரர் அக்காரால் இறங்கிப் பள்ளிக்கூடத்துக்குள்ளே போனார்களென்று. உடனே சுவாமிக்கந்தர் (அல்வாய்) சொன்னாராம் ஒரு பீத்தல் காரில் பிறுதல் சட்டை போட்டவன் ஆரோ போறான் களென்று மேற்படி சுவாமிக்கந்தர் எங்கள் பாடசாலைத் தலைமை ஆசிரியர் மு.செல்லையா பெண்சாதியின் தகப்பனின் தந்தை இப்பாடசாலைக்குக் கிறான்றுவர மிஷன் விடாதென்ற ஆசிரியர் மடத்துக்கடவை சண்முகத்தின் சொந்தம். பாவம் அந்தமனிதன் மாத்திரமல்ல அவரைப் போன்ற பலர் மிஷன் அனுதாபிகளாய் எங்கள் பாடசாலையில் வெறுப்புடையவராயிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1919 ம் ஆண்டு புரட்டாதி மாதம்**

வித்தியாகர்த்தர் யாழ்ப்பாணம் வருவார் போஸ்மாஸ்ரரும் வீ.மு.சி.மணியகாரனும் சொன்னபடி எங்கள் வண்டியில் உடுவிலுக்கு நானும் வைத்தியர் வ.சி.சி.வும் சென்று விடிய ஆறுமணிக்கு வித்தியாதரிசி தில்லைநாயகம் வீட்டையடைந்தோம். அவர் வான் கோழிகள் கூட்டடியில் நின்று அவைகளைப் பார்வையிட்டார் எங்களைக் கண்டவுடன் வந்தார். (அவர் மேல்மீசையில் பாலாடை யிருந்தது. அப்பொழுதேயவர் கோப்பி குடித்தாரென்று அனுமானித் தோம்) அவரிடம் ஒரு நீண்ட தபாலுறையைக் கொடுத்தேன் போஸ்மாஸ்ரர் கொடுக்கச் சொன்னதென்று சொல்லி. நில்லு வாறேனென்று உள்ளே போனார்(வீட்டுள்) வெளியில் வந்து சொன்னார். நீங்கள் போகலாம் வித்தியாகர்த்தர் யாழ்ப்பாணம் வருவார் உங்கள் விஷயமாக நான் அவருடன் வடிவாகப் பேசுவேனென்றார் (தபாலுறைக்குள் ரூபா 50 ஐம்பது) அவரதை மறக்கவில்லை.

இதற்கிடை, மேற்படி பாடசாலை ஸ்தாபகராகத் தோற்றிய நால்வரிலொருவரான க.வே.சோதிடர் மோசம்போய்விட்டார். அவர் மகன் க.வே.தம்பையா பாடசாலையில் மிக மிக அலட்சியங் காட்டினார். அவரைத் தேடித்தேடி நாங்களே (எனது கேள்விக்கு வ.சி.சி. வைத்தியர் சி.க. ஆறுமுகம், சி.பொன்னர் ஆசையம்மான்) இவர்கள் இடை யிடையே அவரிடம்போக என்னுடன் வருவார்கள். தம்பையாவை நாங்கள் தேடுவது அவர் தகப்பனில்லாமையால். முன்னே அவர் படித்த கொடிகாமம் சைவப் பாடசாலையில் நின்றுபடி அன்றிப் பாடசாலையில் வந்து படிப்பி பிள்ளைகளைப் பிடிக்க வேண்டும் கூட்டிவரவேண்டும். இவரது அலட்சியத்திற்காக அவரது தாய்மாமன்மார் குட்டியென்பவரை யும் செல்லரையுங்கண்டு அவரது குறைகளைச் சொல்லுவோம். இப்படிச் சில காலத்தால் அவரை உபாத்தியாக்கிவிட்டேன்.

## 1919 இல்

எங்கள் வடமராட்சி மணியகாரன் (பொன்னையா) க.சின்னத்தம்பி எனக்காளனுப்பினார் நான் போய்க்கண்டேன். எங்கள் பாடசாலைக் குத் தற்காலிக மானேசர் அவர் என்னைக் கண்டவுடன் சொன்னார் தான் உடுப்புட்டி புறாப்பொறுக்கியடி கிராமக்கோட்டில் வழக்கு விளங்கிக் கொண்டிருக்க டிவிசன் இஞ்சிப்பற்றர் (பள்ளிக்கூட) தில்லைநாயகம் தன்குனாவண்டியை நிற்பாட்டித் தனக்குச் சொன்னாராம் எனக்குச் சொல்லும்படி (சூரனுக்கு) யாழ்ப்பாணத்தில் கோட்டை வீட்டில் வித்தியாகர்த்தர் வந்திருக்கிறாரென்றும் ஒரு பிட்டீசத்துடன் சூரன் போய் அவரைக் காணட்டுமென்று சொல்லிப் போனாரென்றார். உடனே நான்



ஒரு பிட்டீசம் தமிழில் எழுதிக் கொண்டு நான், சீனியம்மான், சி.கறுத்தார் ஆசையம்மான், சி.பொன்னர், வைத்தியர் சி.சிலம்பு, கா.நாகமுத்து (என்தம்பி) அப்போ சவாரியில் பேர்வாங்கி நின்ற எங்கள் கறுவல் சிவலை மாடுகளைப் பூட்டி எங்கள் வண்டியில் போனோம். நாங்கள் மறைந்து போனபொழுதும் தொடர்ந்து வந்தான் கமறனென்ற சோனகன் (மெய்யங்கண்டு) அவனுக்கப்போ பயித்தியம் இவன் சில காலம் நெல்லியடியில் கடைவைத்து மரியாதையாக வியாபாரஞ் செய்தவன். இரவு போன நாங்கள் விடிய (19.9.19) பலகாரம் தேநீர் கோப்பி சாப்பிட்டுக்கொண்டு பெரிய தபால்க் கந்தோரில் போஸ்மாஸ்ரர் சிற்றம்பலத்தாரைக் கண்டோம்.

கொண்டுபோன பிட்டீசத்தை அவரிடம் கொடுத்தேன். அவரதை வாசித்தபின் தானும் கொஞ்சஞ் சேர்த்தெழுத இதைக் கொண்டுபோய் மொழி பெயர்த்துவரும்படி சொன்னார் கோட்டடிப் பக்கத்தில் ஒரு வெள்ளாளன் பறங்கிப் பெண்ணைக் கட்டியிருக்கிறார் அந்தாள் மொழிபெயர்க்கக் கெட்டிக்காரனென்றார்கள். அங்குசென்று அந்தாள் மொழிபெயர்த்து நாங்கள் ஐந்துபேரும் கையொப்பமிட்டோம் மேற்படி பிட்டீசத்தில். அப்போ எங்களுடன் வந்த சோனகக் கமறனென்ற பயித்தியக்காரன் தானும் கையொப்பமிட வேண்டுமென் றெங்களைக் கேட்டார் எங்களுக்குச் சிரிப்பு வந்தது அடக்கிக்கொண்டு வேண்டா மென்றோம். எழுத்துக்காரனைக் கேட்டேன் செலவு எவ்வளவென்று அக்காலம் அதற்கு 50 ஐம்பது சதம் அதிகம். அவர் ஒரு ரூபாவென்றார். நான் அரைரூபாவென்றேன் உடனே என் கையிலிருந்த பிட்டீசக் கடதாசியை அந்தாள் அபக்கெனப் பறித்தார். நாங்கள் விட்டுவிலகிப் போகச் சீனியம்மான் (கறுத்தார்) எழுபத்தைந்து சதம் கொடுத்து அதை வேண்டிவந்தார். அது சொற்பம் கயங்குண்டதால் அதைச் சாடை அழுத்தி நிமிர்த்தி ஒரு உறையிலிட்டுப் போஸ்மாஸ்ரருடன் கோட்டைக்குப் போனோம். அங்கே நின்ற வேலைக்கார சிங்களஆள் சொன்னார் துரை வட்டுக்கோட்டைப் பக்கம் போய் விட்டார் சாப்பாடும் அங்கேதான் இரண்டு மணிக்கு இங்கே வருவாரென்று. மீண்டு வெளியில் வந்தபின் போஸ்மாஸ்ரர் சொன்னார் நீங்கள் சாப்பிட்டுக்கொண்டு இரண்டு மணிக்கு இங்கு நின்று அவர் வந்தவுடன் என்னிடம் ஒராள் வந்தறிவிக்க வேண்டுமென்று கந்தோருக்குப் போனார். அப்போ பகல் 10 மணி யிருக்கும். நாங்கள் பய்ய மெல்ல ஆடியலைந்து சிவன் கோயிலடியில் சைவ விடுதியில் சாப்பிட்டுக்கொண்டு கோட்டை வாசலடியில் வந்து தெருக்கான் மரநிழலிருந்தோம். அப்போ ஒரு மணியிருக்கும். சரி இரண்டு மணிக்கு ஒருகார் எங்களடியால் தாண்டிக் கோட்டைக்குள் சென்றது. அதற்குள் ஒரு வெள்ளைகாரத் துரை இருந்ததைக் கண்டோம். உடனே நான் விரைந்துசென்று போஸ்மாஸ்ரருக்குச் சொன்னேன் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டாரென்று. அவரும் தாமதியாமல் உடனே எழுந்து வந்தார் ஒரு றிச்சோவில் போகும்படி ஓர் றிச்சோக்காரனைக் கூப்பிட்டேன். அவர் வேண்டாமென்று மிக வேகமாக நடந்தார். யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோருக்கும் கோட்டைக் கும் முக்கால் மைல் தூரமிருக்கும். அவரும் நாங்களும் கோட்டைக்குள்ளே போனோம். முன்னம் எங்களைக் கண்ட வேலைகாரச் சிங்களமனிதன் எங்களைக் கண்டதும் அவர் வந்துவிட்டார் நான் போய் அறிவித்து வருகிறேனென்று சொல்லிநிற்க இரண்டு நிமிஷத்தின் பின் வெளியில் வந்தார் போஸ்மாஸ்ரர் அவருக்கு வணக்கம்செய்து எங்கள் பிட்டிசத்தை அவரிடம் கொடுத்து அவர் அதை வாசிக்கத் தானும் சில இங்கிலீசு சொல்லிக்கொண்டு நின்றார். போஸ்மாஸ்ரர் பேசியது எங்கள் நிலைமையைப்பற்றி. பிட்டிசத்தை வாசித்தபின் உங்கள் கேள்வி சட்டவிரோதமென்றும் கிறான்று கொடுக்க முடியாதென்றும் சொன்னார். அவர் சொல்வதை எங்களுக்கும் நாங்கள் சொல்வதை அவருக்கும் போஸ்மாஸ்ரர் மொழிபெயர்த்துச் சொல்லிக் கொண்டு நின்றார். பிட்டிசத்திலுள்ள விஷயங்களை விரித்து விளங்கப் படுத்தியதுவே எங்கள் சம்பாசணை எப்படியிருந்தாலும் எங்கள் கேள்வி சட்டப் பிரமாணம் விரோதமானதால் வருந்துகிறேனென்றார். அப்போ எங்கள் பாடசாலைப் பிள்ளைகளின் கதியென்னாகு மென்றேன். பக்கத்தில் பாடசாலைக்கு விடுங்களென்றார். அதெப்படி விடுவது தங்கள் வேதம் படிக்க மறுத்த பிள்ளைகளைப் பிடித்து வெளியில் விட்டபடியால் தானே நாங்கள் இப் பாடசாலையைக் கட்டினோமென்றார் சீனியம்மான். (கறுத்தார்) அதை அப்படியே வித்தியாகர்த்தருக்குச் சொல்லிவிட்டார் போஸ்மாஸ்ரர். உடனே துரைக்கு முகம் கண் சிவந்தது மீசை துடித்தது. இதை ஒப்பிக்க முடியுமோ வென்றார் துரை போஸ்மாஸ்ரர் எங்களைக் கேட்டார். ஆம் என்றோம். போஸ்மாஸ்ரர் அவருக்கு யெஸ் என்றார். அப்படியானால்கிறான்று தரலாமென்றார் துரை. அதைப் பிட்டிசத்தில் எழுதும்படி சொன்னார் போஸ்மாஸ்ரர். உடனே குனிந்தெழுதினார் துரை. எனது விலாசம் கேட்டார் கா.சூரன், வதிரி தேவரையாழிச் சைவ வித்தியாசாலை, கரவெட்டியென்றேன். அவர் காறனாச் சூறன் என்றெழுதிக் கொண்டு போனார்.

**எங்கள் பிட்டிச விபரம்**

எங்கள் பாடசாலைக்கருகில் (கால் மையிலுக்கு அப்பால்) உவெல்சியன் மிசெனெரிமாரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை யொன்று முன்பலகாலமாக நடைபெற்று வருகின்றது. எங்கள் முன்னோரும் நாங்களும் அப் பாடசாலையிலேயே படித்துவந்தோம். இப்பொழுது மேற்படி பாடசாலையில் படிப்பிக்கும் உபாத்திமார் கிறிஸ்தவர்கள். எங்கள் பிள்ளைகளுக்கு கிறிஸ்த சமய பாடத்தைக் கவனமாகப் படிப்பித்தார்கள். பெற்றோர் தடைசெய்தும் கேளாமல் படிப்பித்தார்கள்.



அதன் பின் நாங்கள் பிள்ளைகளை மறித்து வித்தியா கர்த்தர் துரைக்கும் அறிவித்து எம் பாடசாலையை ஆரம்பித்துக் கட்டிடத்தைக் கட்டி முடித்தோம்.

இப்போ எங்கள் பாடசாலையில் 100 நூறு பிள்ளைகள் 4 நாலு உபாத்திமார் அதிலொன்று பெண். ஒருவருக்கும் தராதரப் பத்திர மில்லை. வித்தியா பிரமாணப்படி புதுப் பிள்ளைகள் 60 அறுபது பிள்ளைகள் சராசரியில்லை. நாங்கள் பள்ளர் சாதி சைவசமயந் தாழ்ந்த வகுப்பு எங்களுக்குள் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர் ஒருவரும் கிடையாது. சைவ உயர்சாதி ஆசிரியர் எங்கள் பாடசாலையில் படிப்பித்தல் தங்களுக்கு இழிவென்று வரரார்கள். கிறிஸ்த உபாத்திமாரைப் பாதிரிமார் விடார்கள் ஆகையால் எங்களுக்கிருக்கும் பேரிடர்களைத் துரையவர்கள் நோக்கி நன்கு சிந்தித்து வித்தியாகர்த்தருக்கு விஷேச சலுகையை (அதிகாரத்தை) உபயோகித்துப் பிரமாணத்தைக் கவனியாமல் எங்கள் பாடசாலை இந் நிலையிலிருக்க கிறான்றுக்குப் பதிந்து தரும்படி துரையவர்களை மன்றாடி வணக்கத்துடன் வேண்டுகின்றோம்.

அப்பொழுது வித்திகர்த்தராயிருந்தவரின் பெயர் டன்னாம் நாங்கள் கண்டு சம்பாசித்தவர் இரண்டாவது வித்தியாகர்த்தர். அவர் பெயர் இவான்ஸ் முதல் வித்தியாகர்த்தர் கவுணராக வேறூருக்குப் போக இவான்ஸ்சு அயிட்டிங்கில் முதல்வராக இங்குவந்தார்.

**மணியகாரனிடம் விளக்கம்**

மேற்படி வித்தியாகர்த்தர் எங்கள் பிட்டிசத்தைக் கொழும்பியிருந்து யாழ்ப்பாணம் கவுண்மென்று ஏச்சண்டருக்கு அனுப்பினார். ஏச்சண்டருக்கு அனுப்பியதை அவர் மணியகாரனுக்குமனுப்பினார். மணியகாரன் எங்களுக்கும் மிஷன் பாடசாலைத் தலைமை ஆசிரிய ருக்கும் கட்டளை அனுப்பினார். விஷயம் நாங்கள் வித்தியாகர்த்தருக்கு யாழ்ப்பாணக் கோட்டை வீட்டில் 19 .9. 1919 ல் கொடுத்த பிட்டிசத்துடன் வாயால் சொன்ன விஷயம். வேதம் படிக்க மறுத்த எங்கள் பிள்ளை களைத் தங்கள் பாடசாலையால் வெளியேற்றினார். இதன் மெய் பொய் அறியவே மேற்படி மணியகாரனிடம் விளக்கத் துக்கு வந்தது. எங்களில் சுமார் (வதிரி, அல்வாய், கொற்றாவத்தை) ஆகிய இடங்களிலிருந்து 50 ஐம்பதுக்கு மேற்பட்டோர் மணியகாரன் வீட்டில் போய்நின்றோம். அப்பொழுது மிஷன் பாடசாலை உதவி ஆசிரியர் மு. சண்முகமென்பவர் (மடத்துக் கடவை) ஒரு காகிதத்தைக் கொண்டு வந்து மணியகாரனிடம் கொடுத்தார். அக் காகிதத்தை மணியகாரன் உடைத்து வாசித்தார். அதன் சாரம், ஐயா தங்கள் கட்டளைக்கு நல்வரவெண்ணி எம் மனேசரை உத்தரவு கேட்டேன். அவர் போகவேண்டாமென்று மறித்தமையால் நான் வரமுடியவில்லை யென்பதைத் தாழ்மையுடன் அறியத்தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தலைமை யாசிரியர் பெ.யோசேப்பெழுதி இருந்தார். அதன் பின் மணியகாரன் எங்களைப் போகும்படி சொன்னார். நான் கொண்டு போன கடிதங்கள் சில மணியகாரனிடம் கொடுத்தேன். அக்கடிதங்கள் பாடசாலை ஆரம்பத்தின் வாக்குவாதக் கடிதங்கள் அக்கடிதங்களில் எங்களை நையாண்டி பண்ணியமை தலைமை ஆசிரியர் யோசேப்பரால் எழுதப்பட்ட கடிதங்கள்.

மேற்படி ஆசிரியர் வராதுவிட்டமை எங்களுக்கு வெகு சாதகமானது. மணியகாரன் எங்களைப் போகலாமென்றார். நாங்களும் விடைபெற்று மீண்டோம். தமிழிலேயுள்ள பிட்டீசங்கள் காகிதங்களை மொழி பெயர்க்க அண்ணாமலையென்ற கிளார்க் கொருவர் முதலியார் கந்தோரி லிருந்தார் அவர் எங்கள் பாடசாலைகிறான்றாக வேண்டுமென்று பெரும் பிரயாசையெடுத்து நின்றார். இவர் எங்களைக் கண்டவுடன் அவரை நாங்கள் பார்க்கும் பொழுது அவர் முகம் பூரணசந்திரன் போலிருக்கும். இவரிடம் ஆரும் கைக்கூலி பேசினால் அவருக்கு அடங்காக்கோபம் உண்டாகும். அவர் எங்கள் பாடசாலை விஷயமான பல பிட்டீசம் காகிதங்கள் எங்கள் பாடசாலைக்குச் சாதகமாகவே மொழிபெயர்த்து விடுவார்.

### 20.12.19. டிஸ்றிக் ஸ்கூல் கமிட்டி

மேற்படி கூட்டம் குறித்த திகதிகளில் கூடுமென்றறிந்தோம் அதற்குரிய அங்கத்தவர் யாரென்றால் சைவப்பாடசாலைகளுக்காக வடமாகாணப்ரதிநிதி கௌரவ அ.சபாபதியவர்கள் உவெல்சியன் மிஷன் பாடசாலைகளுக்காக றிம்மர் ஐயரவர்கள், அமெரிக்கன் சேஷ் மிஷன் களுக்காக அந்தத்தப் பாதிரிமார் கத்தோலிக்கப் பாடசாலைகளுக்காக மத்யூஸ்சுவாமியென்ற குருவானவர், ஆனைக்கோட்டைச் சின்னையா முதலியார், கைதடி முத்துக்குமாரசாமி முதலியார் (மணியம்) வித்தியா தரிசி தில்லைநாயகம் அரசினர்க்காகப் பொது கவண்மென் ஏசண்டு அக்ராசனம் இவர்களில் நாங்கள் காணவேண்டிய ஆட்கள் சின்னையா முதலியார் (ஆனைக்கோட்டடி) கௌரவ சபாபதி (தலையாளி) முத்துக்குமாரசாமி மணியம் (கைதடி) இந்த மூன்று பேரையும் நாங்கள் காணவேண்டும்.

நானும் தம்பி மயிலுவும் யாழ்ப்பாணம் போனோம். இந்துக் கல்லூரியில் தா.சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் படிப்பிக்கிறார். அவர் கரவெட்டிவாசி சித்தாமணியத்துக்கு மைத்துனன் என்னுடன் மிக அன்புடைவர். அவரைக்கூட்டிக்கொண்டு ஆனைக்கோட்டை சின்னையா முதலியாரையும் கண்டு தலையாளியில் வந்து கௌரவ சபாபதி அவர்களையும் கண்டு வந்தோம். அதற்கு எங்களைக் கொண்டு சென்ற வாகனம் எங்கள் வண்டிமாடுகள். சில நாளையால் மைத்துனர் வ.சி.சி



வைத்தியரும் நானும் யாழ்ப்பாணம் சென்று ஓர் குதிரை வண்டி யெடுத்துப் போஸ்மாஸ்டர் சிற்றம்பலத்துடன் (இளையதம்பி) ஆனைக்கோட்டைத் தலையாளி சென்று சின்னையா முதலியாரையும் சபாபதியவர்களையும் கண்டுவந்தோம். பின்னர் நானும் மைத்துனர் சி.சி.வைத்தியரும் ஓர் திருக்கல் வண்டிகட்டிப் பின்நேரம் கைதடிக்குச் சென்றோம். மாடு நடக்கப் பஞ்சிப்பட்டமையால் சரசாலையில் ஓர் வளவுக்குள் வண்டிமாடுகளை விட்டுக் கால்நடையில் சென்று இரவு எட்டுமணியளவில் மணியகாரனை (முத்துக்குமாரசாமி) சந்தித்து நாங்கள் போனவிஷயத்தைச் சொன்னோம். அவர் கூட்டத்தில் தான் எங்கள் பாடசாலையைச் சார்பாகப் பேசுவேனென்றும் கௌரவ சபாபதியவர்களைக் காணும்படியும் சொன்னார். அன்று மார்கழித் தவம் நிலவு கூட்டத்தின் முதல்நாள் (14.12.19) சித்தமணியந் தந்த தவாலையுங் கொண்டு கால்நடையில் ஆனைக்கோட்டை சின்னையா முதலியாரிடம் சென்று தவாலை அவரிடம் கொடுத்தேன். வாசித்த பின் சொன்னார் நீ பயப்பிடாதேயென்று. உடனே எனக்கொரு மூச்சுப் புதிதாக ஏறி மிக நிம்மதி கொண்டேன். நியாயம் அக்கூட்டத்தவருள் சின்னையா முதலியா ருக்கே அதிக பொறுப்பும் மரியாதையும் . மணியகாரனுக்குச் சொன்னார் சின்னையாமுதலியார் சொன்னால் நம்பிக்கையாக வெற்றியென்று. அவரிடம் விடைபெற்று மீண்டும் கால்நடையில் பொழுதுநிற்க இங்கு வந்து மணியகாரனுக்கும் முதலியார் சொன்னதைச் சொல்லி வதிரிக்குப் போனேன். அப்போ பஸ் கிடையாது இன்னும் அனேக பயணம் கால்நடை நடந்தேன் அலுப்பில்லை.

### மறுநாள்

*20.12.19.* கச்சேரியில் மேற்படி கூட்டம் கூடியது. போஸ்மாஸ்ரர் சிற்றம்பலம் அவ்விடம் நின்று நடைபெற்ற விஷயங்களை இங்கே மணியகாரனவைக்கும் எனக்கும் சொன்னார். கூட்டத்துக்கு உவெல்சியன் மிஷன் பிரதிநிதி றிம்மர் ஐயரும் சேஷ்மிஷன் பிரதிநிதியும் வரவில்லையென்றும் மற்றையோர் வந்தனரென்றும் சொல்லி வாதாட்டத்தின்பின் பாடசாலை வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறிய தென்றார். முதலில் அக்ராசனம் (ஜேமன்) கவுன்டின் றேசன்ட் கொட்றின்றன் இங்கிலீஸ்காரன் உவெல்சியன் மிஷனை மிகக்கடிமை யாக வைது பள்ளிக்கூடம் வேண்டுமென்று கை உயர்த்த தில்லைநாயகம் போக (வித்தியாதரிசி) மற்றையோரனைவரும் உயர்த்தினதென்றார். இந்தக்கூட்டம் ஏன் நடைபெற்றதெனின் எங்கள் பிட்டீசமும் அதைச் சேர்ந்த இன்னும் பல கடதாசிகளும் (கடிதம் முதலிய) சேர்த்த பயிலை கூட்டப் பிரதிநிகளுக்கு அபிப்பிராயம் கேட்டனுப்பப்பட்டது (கவுன்மேன்ஏசென்டரால்) அவர் அபிப்பிராயம் வேறுபட்டதாலும் உவெல்சியன் மிஷன் பிரதிநிதி றிம்மரையர் அப்பாடசாலை தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்றெழுதியதாலுமே மேற்படி கூட்டம் நடைபெற்றது. இத்துடன் வித்தியாபகுதிக்கும் எங்களுக்கும் கடிதப் போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. பாடசாலை நடைபெற்று வருகின்றது.

1920 ம் ஆண்டு பங்குனி மாதம் ஒருநாள் மணியகாரன் வீட்டில் அவரைக்கேட்டேன் எங்கள் பாடசாலை விஷயமாக ஒன்றுந் தெரிவில்லையென்று. உடனே அவர் ஏன் உனக்கின்னுந்தெரியாதா அதுகிறான்றாய்விட்டது என்றார். எனக்கு நாக்கடைத்தமாதிரி எப்படித் தெரியுமென்றேன் இந்தமாத கசற் பத்திரிகையிலிருக் கென்றார். பத்திரிகை எங்கேயென்றேன் அது சித்தமணியத்துக்கு அனுப்பிப் போட்டேன் அவரிடம் போய்க் கேளென்றார். மணியம் அப்பொழுதும் எங்கள் பாடசாலைக்கு அயிட்டிங் மானேசராக யிருக்கிறார். வருகிறே னென்று மணியகாரனுக்கு அவதியுடன் சொல்லிவிட்டுச் சித்தமணிய காரனிடம் போகிறேன் கால்கள் பின்னுக்கிழுக்குமாப் போலிருக்கு. உச்சில் அம்மன் கோயில் வாசலைத் தாண்டி மேற்படியார் வீட்டை நோக்கி நடக்க மணியகாரன் வீட்டுக்கு வடக்கே உச்சில் வயலுள் ஆட்களைக்கொண்டு பாய் போடுவிக்கிறார் சூடுமிதிக்க 100 நூறு யாருக்கிப்பால் நான் போய்க் கொண்டிருக்க என்னைப் பார்த்தவுடன் ‘சூரன் தட்டிப்போட்டாய் வட்டக்கையிலில் தட்டென்றார்.’ முன்பின் தெரியாதவன்போல் என்னவென்றேன். உன்ரை பள்ளிக்கூடம் கிறான்றாப் போச்சு உனக்குத் தெரியாதா நீ அதைப்பற்றி எனக்குச் சொல்லவருகிறா யென்று நினைத்தேனென்றார். நமக்கார் சொன்னது எப்படித் தெரியும் என்றேன். கசற் பத்திரிகையில் வெளியிட்டாயிற் றென்றார். பத்திரிகை எங்கேயென்றேன். அது கைதடி மணியத்துக்கு அனுப்பிப்போட்டேன் என்றார். பத்திரிகை கோட்டடியில் போய்ப் பாரென்றார். (அப்போ கடதாசிப் பஞ்சத்தால் யாழ்பாணத்தில் பன்னிரண்டு மணியகாரருக்கு ஒரு பத்திரிகை சுற்றித்திரியும் கோட்டுக் கொன்று நிசமாயிருக்கும்) ஒருமணி அரைமணி நேரம் அவருடன் நின்று பலதும் பேசிப்போகும் நான் அன்று சற்றுந்தாமதியாமல் வருகிறேனென்று மணியகாரனுக்குச் சொல்ல மறுவேளை அவதிப்படுகிறாயென்று சொல்லிமறிப்பவர் எனது பதட்டத்தைக்கண்டு ஓடிப்போய்க் கோட்டில் பாரென்று சொன்னார். அவ்விடத்தால் கிறுகிறென்று வதிரிக்குச் சென்று வீட்டில் முகத்தைக் கழுவி கோப்பி குடித்துவிட்டு எவருக்கும் எதுவும் சொல்லாமல் கோட்டடிக்குப் போனேன். அப்போ பெரும்பத்து ஆறுமுகப் பரியாரியார் மகன் சம்பந்தரென்பவர் (உடுப்பிட்டி) புத்தகம் கட்டும் கிழாக்காகக் கசற் பத்திரிகையில் இருக்கிறார். அவரை சென்ற வெள்ளிக்கிழமை கசற் பத்திரிகையில் எங்கள் பாடசாலை கிறான்றுக்குப் பதியப்பட்டிருகா மென்று கேள்வி யாயிருக்கு அதைப் பார்த்துச் சொல்லும்படி கேட்டேன். பாடசாலைப் பெயரென்ன நீ எங்கேயிருக்கிறதென்று கேட்டார் நான்



இருக்கிறது வதிரி பாடசாலையின் பெயர் வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாசாலை யென்றேன். அவர் பத்திரிகையை எடுத்துப் பார்த்துச் சொன்னார். **1920 ம் ஆண்டு மாசிமாதம் 22 ம் திகதி பதியப் பட்டிருக்கென்று** பின்பு என்னை அவர் ஆரென்றறிந்தார் பாடசாலையைப் பற்றிய விபரங்களைக் கேட்டறிந்தார். மிச்சம் சந்தோஷப்பட்டார். நான் வருகிறேனென்று அவரிடம் சொல்லி விடைபெற்று மீழும்பொழுது மலையின் உச்சியை அடைந்தேனென்று தெய்வத்திருவருளைப் போற்றி வீடுவந்து சேர்ந்தேன். அந்தரத்தில் சிற்சிலருக்கு விஷயத்தைவெளியிட்டு எங்களுக்கு அறிவித்தல் வரும்வரைக்கும் இரகசியமாயிருக்கட்டு மென்று வற்புறுத்தினேன்.

எனக்கு 1919 ம் ஆண்டு கார்த்திகை மாதம் பிறந்த பெண்குழந்தை யொன்று 1920 பங்குனி மாதம் இறந்தமையால் இரண்டு மூன்று நாள் வீட்டிலேயே இருந்துவிட்டேன். நாலாம்நாள் சி.க.ஆறுமுகத்துடன் (மைத்துனர்) கதைப்போமென்று அவர் வீட்டுக்குப் (திருவெண்பாதி) போனேன். அவரும் மனைவியும் வேலியடைத்துக்கொண்டு நின்றமை யால் நான் சட்டெனத்திரும்பி வீட்டைநோக்கி வந்தேன். பண்டாரச்சீமா ஒழுங்கையால் சிவியான் வெட்டையில் மிதக்க எங்கள் வீட்டுவளவு வடக்குமூலை வழிச்சந்தியில் ஓர் வெள்ளைத்தூண் தோற்றம் தெரிந்தது அப்போ என் சிறியதகப்பனார் என்னைத்தேடி பனைகளுக் கூடே வரும் வழியால் வந்து என்னைக்கண்டு நின்று விட்டார். நான் கண்ட தூணுருவம் மனிதரூபமாத் தோன்றியது. இன்னுஞ் சில யார் நான் தாண்டிச்செல்ல எங்கள் பாடசாலை மானேஜர் சி.ச.கயிலைச்சட்டம்பி யாரைக் கண்டு கிட்டப்போனவுடன் வணக்க ஒடுக்கத்துடன் என்ன இந்த நேரமென் றேன். சுபசோபனஞ் சொல்ல வந்தேனென்று சொல்லி வித்தியா கந்தோரால் வந்த கடிதத்தை என்னிடம் தந்து அதற்காகப் பாடசாலையில் ஒரு கொண்டாட்டம் நடத்துங்களென்று சொல்லி மீண்டார். பின்னர் பாடசாலை கிறான்றா யிற்றென்று சிலருக்குச் சொல்ல இதுவரை இரகசியத்திலிருந்த விஷயம் பரகசியமாயிற்று. ஆனாலும் மிஷன் பாட்டியார் அவரைச் சார்ந்த நம்மவர் அவநம்பிக்கையுடன் தானிருந் தார்கள்.

ஓர் நல்ல நாள் கொண்டாட்டம் வைத்தோம். பாடசாலையில் நட்டுவமேளக்கச்சேரி பாட்டுக்கச்சேரி முதலிய பைம்பலுடன் கொண்டாட்டம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. சரி கிறான்றான தென அறிவித்தார்கள். பாடசாலைச் சோதனை எப்போ நடைபெறும் என்று அறிவிக்கவில்லை இதை எப்படி அறியலாமென்று சிந்தித்தேன். வித்தியாதரசி அ.பொன்னையா என்பவர் என்னுடன் நல்ல ஐக்கிய முடையவர் அவர் வாயிலாக எதையுமறியலாமென்று யாழ்ப்பாணம் நல்லூர் தேர்த்தீர்த்தத்தோடு போனோம். அப்போ பொன்னையா பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாதரிசியாக கந்தர்மடத்தடியில் இருக்கிறாரென்றறிந்து அங்கு நான், சி.சி.வைத்தியர், சி.க.ஆறுமுகம், க.வ.கந்தையா, ஆ.வ.சிறிய தகப்பனார் ஆகியோர் கோயிலடியில் இருந்து கந்தர்மடத்தடிக்கு மேற்படி பொன்னையாவிருக்கும் வீட்டுக்குப் போனோம். அங்கே தா.சிதம்பரப் பிள்ளை ஆசிரியரும் அவருடனிருந்து இந்துக் கல்லூரியில் படிப்பிக்கிறார். நாங்கள் போனபொழுது அவர்கள் இருவரும் இருந்தனர். எங்களைக் கண்டதும் குதூகலத்துடன் வரவேற்றனர். எங்கள் பாடசாலை கிறான்றானது அவர்களிருவருக்கம் தங்கள் பாடசாலை கிறான்றானது போயிருந்தது.

நான் வினவமுன் வித்தியாதரிசி அ.பொ.தானாகச் சொன்னார் உங்கள் பாடசாலைக்கு எம்மாதத்தில் பரீட்சை வைக்கலாமென்று வித்தியாகந்தோரிலிருந்து எனக்குக் கேள்வி வந்தது. தை மாதத்தை அண்டினால் காலம் நீழுமென்று ஆடி மாதத்தையண்டிப் புரட்டாதிக்கு வைக்கலாமென்று எழுதிப்போட்டேன்று சொன்னார். மேற்படி யாரும் தா.சி.ஆசிரியரும் எங்கள் பாடசாலைக்கு எப்பொழுதும் உதவி செய்யவேண்டுமென்ற அனுதாபிகள். அவர்களுடன் பேச வேண்டியதைப் பேசிக்கொண்டு விடைபெற்று மீண்டோம்.

## 1920 ம் ஆண்டு புரட்டாதி மாதம்

### வித்தியாதரிசி தம்பிப்பிள்ளையைச் சந்தித்தல்

மேற்படி தம்பிப்பிள்ளை கரவெட்டிப் பகுதி பாடசாலைகளைச் சோதிப்பதற்காக வந்து சித்தமணியகாரன் பழைய வீட்டிலிருக்கிறாறென்றறிந்து ஒரு நாள் பொழுதுபட்டபின் மணியகாரன் வீட்டுக்குப் போனேன். அங்கே அவருடன் சில உபாத்திமார் கதைத்துக் கொண்டிருந்தனர். அவருக்கென்னையும் எனக்கு அவரையும் முன்பின் தெரியாது அவர்கள் உள்ளேயிருந்து கதைத்தமையால் நான் யன்னலில் நின்று பார்த்தேன். சிற்றம்பல ஆசிரியர் உதாரென்று கேட்டார் அது நானென்றேன் உடனே அவர் என்கிட்டவந்தார். நான் கொண்டுபோன கிறான்றுக் கடதாசியை அவரிடம் கொடுக்கும்படி சிற்றம்பலத்திடம் கொடுத்தேன். வித்தியாதரிசி அக்கடதாசியைப் பார்த்தபின் தன்னிடமிருந்த பாடசாலைகள் அட்டவணைப் புத்தகத்தைப் பார்த்தார் அதில் எங்கள் பாடசாலையில்லை. காரியமில்லை பாடசாலையை நான் வந்து சோதிக்கிறேனென்றார். பின்னர் பாடசாலை மானேஜர் விலாசத்தைக் கேட்டெழுதிக்கொண்டு என்னைப் போகும்படி சொன்னார். நான் வீடு வந்துசேர இரவு 9 ஒன்பது மணியானது.

சில நாள் சென்றபின் 17.10.20 ஐப்பசி மாதம் மேற்படி திகதி சோதனையென்று எங்கள் பாடசாலை மானேஜருக்கு வந்த கடிதப்படி



மேற்படி வித்தியாதரிசி சிதம்பரப்பிள்ளை பாடசாலையில் வந்து பிள்ளைகளைச் சோதித்தார். அப்பொழுது பாடசாலை ஆசிரியர்கள், கா.சூரன், வே.தம்பையா, பெண் ஆசிரியை சூ.மாணிக்கம் (எனது மனைவி) அன்று எம் பாடசாலையைச் சூழ்ந்து நின்ற ஆண் பெண் பெற்றோர் மற்றோர் பலர் பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொண்டுவந்த தாய்மார் எல்லாரும் பெரும் புதினமாகவும் குதூகலமாகவும் பாடசாலைச் சோதனை முடியும்வரையும் பார்த்துக்கொண்டிருந்த காட்சி மிக விசித்திரமாயிருந்தது. சோதனைக்கு விடப்பட்ட வகுப்பு 4 நாலு, பிள்ளைகள் 45 நாற்பத்தைந்து 12 மணிவரையில் சோதனையை முடித்துப்போட்டார். சோதனையில் பிள்ளைகள் 84 வீதம் பாஸ் பண்ணினார்கள். அக்கால மாதிரியில் அது மிக ஏற்றம். மூன்று மாதத்தால் வரவேண்டிய உதவி நன்கொடைப் பணம் (கிறான்று) வரவில்லை. பல கடிதங்கள் தந்திகள் போயும் பணம் வரவில்லை. நியாயம் வித்தியாதரிசியின் அறிக்கை(றிப்போட்டு) தராதரப்பத்திர மில்லா உபாத்திமார் என்றமை வித்தியாகந்தோரிலுள்ளவர்க்கு நூதனமாயிருந்தது. 8 ம் மாதம் சோதனைமுடிந்த எட்டாம் மாதம் ஆனி கிறான்றுக்குப் பதிந்த கடிதத்தை அனுப்பும்படி எழுதினார்கள். நாங்கள் அதன் கொப்பியை அனுப்பிவிட்டோம். 9ஆம் மாதம் 225 ரூபா அனுப்பினார்கள். அக்காலம் பாடசாலை நடைமுறைப்படி 84 வீதப் படிக்குப் பணம் சரி. அப்போ பாஸ் பெயில் போட்டுச் சோதனையை முடிப்பார்கள். பாசுபண்ணிய ஒரு பிள்ளைக்கு அதாவது 1 ம் வகுப்பு ஒரு பிள்ளைக்கு ரூபா1.50 சதம் அடுத்த வகுப்பு ரூபா 1 கூட அப்படியே 4 வகுப்புக்கும்தான் பணம் வந்தது. சரி மேற்படி பரீட்சை நடந்தன்றும் மறுநாட்களிலும் எதிர்கட்சியாரின் சொற்பிரயோகங்களால் ஆரோ ஒருவனைக் கூட்டிவந்து மெய் போலப் புருடாப்பண்ணிச் சோதனையை நடத்தினார்களென்று வற்புறுத்தினர். அதைச் சிலர் நம்பிவிட்டார்கள். ஏனெனில் அவர்களே பாடசாலை அனுபவத்தில் கூடியவர்கள். புதிய பிள்ளைகள் 60 சராசரியில்லாமலும் தராதரப் பத்திரம் (சேட்டிவிக்கட்) பெற்ற ஒரு உபாத்தியில்லாமலும் ஒரு பாடசாலைக்குக் கிறான்று கொடுக்கமாட்டார்கள். ஆகையால் பாடசாலை கிறான்றாய் விட்டதென்பதும் வெறும் பொய்யென்றே வற்புறுத்தினர். அப்படியவர்கள் சொன்னது தவறாயினும் சட்டப்படி சரி.

ஆனால் நாங்கள் காட்டிய நியாயங்களை வித்தியாகர்த்தர் ஏற்றுத் தனது விசேஷ அதிகாரத்தை பிரயோகித்துப் பிரமாணத்தை மீறிப் பாடசாலையைப் பதிந்தாரென்பது அவர்களுக்கெப்படித் தெரியும். சில நாள் சென்றபின் தம்பிப்பிள்ளை வித்தியாதரிசிதானென்றும் தாங்கள் பொய்யென்றதெல்லாம் மெய்தானென்றும் எல்லாம் மெய்யாயின. மு.செல்லையா ஆசிரியர், மேற்படியார் 3 ம் வகுப்புப் பாசுபண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாம் வகுப்புப் படித்துக்கொண்டிருக்க அவர் படிப்பைப் பெற்றோர் நிற்பாட்டினர். எனது முயற்சி தச்சுவேலை, மேற்படி வேலையிலும் சாமானிய வேலைகாரனல்ல. கூத்துச் சோடினை, சப்ரம், வாகனம், திருவாசி, செடிப்பலகை வேலைகள் முதலிய பல வேலைகளையும் செய்து நல்ல சம்பளங்களையும் பெற்றுவந்தேன். பாடசாலை ஆரம்பித்த நாள்முதல் மேற்படி வேலைகள் தேய்ந்துகொண்டு வந்து 18 ம் ஆண்டு வரையில் முற்றாய்த்தம்மிட்டுப் போயின. அதன் பின் அங்கத்தவர் பணங்களும் தேய்ந்துகொண்டுவந்தது. என்பாடும் பெருங்கஷ்ட நிலைமை ஏற்பட்டது. பகல் கோப்பியுடன் பகலைக் கழித்து இரவு கரவெட்டியில் பெற்றோர் வீட்டில் சாப்பிட்டுவந்தேன். தாலியைக் கூட கா.வா.விடம் அடைவுவைத்துவிட்டேன். கயிலைச் சட்டம்பியா ரிடம் (மானேஜர்) ஐந்து கதவும் நாலு யன்னல் கதவும் ஒப்பந்தம் எடுத்தேன். (ரூபா 150) பலகை அவருடையது. பாடசாலைப் பின் அறையில் வைத்து வேலைசெய்தேன். அதனால் நான் படிப்பித்தது குறைவு. தம்பையாவை நம்பினேன் அவரும் அலட்சியம் பண்ணி விட்டார். ஆகவே அவ்வருடப் பிள்ளைகளின் படிப்பு குறைந்து போனது.

**அடுத்த வருடப்பலன்**

1921 ம் ஆண்டு வித்தியாதரிசி தம்பிப்பிள்ளையே பாடசாலையைப் பரீட்சித்தார் சென்ற வருடத்திலிருந்து பாடசாலையின் நிலைமை திருப்தியில்லை அத்துடன் வித்தியாதரிசியும் என்னுடன் வெறுப்புக் கொண்டிருந்தார். நியாயம் கிறிஸ்த பாடசாலையில் படித்த எங்கள் பகுதிப் பிள்ளைகளின் விடுகைப் பத்திரத்தை அந்த ஆசிரியர் கொடாததையிட்டு வித்தியாகர்த்தருக்கு நாங்கள் எழுதிய பிட்டீசம் மேற்படி தம்பிப்பிள்ளையிடம் வந்தது. கிறிஸ்த பாடசாலை ஆசிரியர் யோசேப்புவில் அனுதாபங்கொண்ட வித்தியாதரிசி எனக்குச் சொன்னார் அப் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளைக் குழப்ப வேண்டா மென்றும் இனிமேலுள்ள பிள்ளைகளைச் சேர்த்துப் படிப்பியென்று மறுப்பேசினார். நான் சம்மதிக்கவில்லை. இது காரணமாக என்னை வெறுத்தார். எனக்கு மாறாக வித்தியாகர்த்தருக்கு எழுதினார். அதாவது வதிரி தேவரையாளிச் சைவவித்தியாசாலையில் படிப்பிக்கும் தலைமை ஆசிரியர் சூரன் என்பவர் தராதரப் பத்திரமில்லாத ஆசிரியர் அந்த இடத்துக்கு அவசியம் சேட்டிவிக்கட் உபாத்தியை வைக்கவேண்டு மென்று.

அதனால் வித்தியாகர்த்தரால் எங்களுக்குக் கண்டிப்பாகக் கடிதம் வந்தது. கட்டாயம் சேட்டிவிக்கட் உபாத்தியை வைக்கவேண்டு மென்று. அந்நாளையில் சைவ வேளாள உபாத்திமார் எங்கள் பாடசாலையில் படிப்பிப்பது தங்களுக்கு அவமானமென்று வர மாட்டார்கள். கிறிஸ்த உபாத்திமார் வந்தாலும் சில நாளுக்கிடையில் பாதிரிமார் மறித்துப் போடுவார்கள். இப்படியான நிலையில் மிகக் கஷ்டப்பட்டேன். (1922 ம் ஆண்டு ) ஆடி மாதம் நான் கொழும்புக்குப் போனேன். வித்தியாதரிசி இராசசிங்கத்தை அங்கே சந்தித்தேன். பாடசாலைக்கிருக்கும் நெருக் கிடையை அவருக்குச் சொல்ல அவர் என்னையும் கூட்டிக் கொண்டு வித்தியாகந்தோருக்குப் போனோம். என்னுடன் சி.க.ஆறுமுகம், ஐ.ஆழ்வாப்பிள்ளை, க.வ.கந்தையா ஆகியோரும் கூடவந்தார்கள். அப்போ உதவி நன்கொடைப் பணம் பெறும் பாடசாலைகளின் சிவில் இஞ்சிப்பற்றர் (உதவி வித்தியாகர்த்தர்) வேலாயுதன் என்பவர் மேல் மாடியில் இருக்கிறார். அங்கே எங்களைக் கூட்டிக்கொண்டு போய்விட்டு முதலில் அவருடன் எங்களைக் காட்டிப் பேசியவுடன் என்னை அவருடன் பேசும்படி சொன்னார் இராசசிங்கம்.

மேற்படி சிவில் இஞ்சிப்பற்றர் வேலாயுதன் என்னைக் கேட்டார், என்ன கேட்கிறீர் முதலில் அதைச் சொல்லுமென்று. எங்கள் சாதி பள்ளர் வகுப்பு. எங்கள் சமூகத்தில் சைவசமயத்தவரில் பயிற்றப்பட்ட அல்லது வேறெவ்வித தராதரப் பத்திரமுடைய ஆசிரியர் கிடையாது. சைவ உயர்சாதி ஆசிரியர் எவரும் வரார், வருவது தங்கள் சாதிக்கு அவமான மென எண்ணி. கிறிஸ்த உபாத்திமாரைப் பாதிரிமார் விடார்கள் தங்களுக்கு எதிர்ப் பள்ளிக்கூடமென்று. இவைகளையே நாங்கள் 1919 ம் ஆண்டு வித்தியாகர்த்தருக்கு முறையிட்டெழுதிய பிட்டீசத்தை அலசி ஆராய்ந்தே வித்தியாகர்த்தர்த் துரையவர்கள் தனது விசேஷ அதிகாரத் தைப் பிரயோகித்து எங்கள் பாடசாலையைப் பதிந்துதந்தார்.

மேலே சொல்லப்பட்ட நிலைமையிலையே இப்பொழுதும் எங்களால் ஒரு உபாத்தியை வைக்கமுடியாதிருக்கிறோம். ஒரு சைவ உயர்சாதிப் பாடசாலைக்கு அன்றிக் கிறிஸ்த பாடசாலைக்கு எங்களுக் கெழுதியதுபோல் வித்தியாபகுதியால் ஒரு கடிதம் எழுதப்படுமாயின் உடனே அவர்கள் ஒரு உபாத்தியாரை வைத்துவிடுவார்கள் அவர்களிடம் உபாத்திமார் மலிந்திருக்கின்றமையால் என்று இன்னும் பல நியாயங் களைச் சொல்லிமுடித்தேன். சரி இந்த நியாயங்களைக் காட்டி எழுதும்படி சொன்னார் மேற்படி சிவில் இஞ்சிப்பற்றர். அவரை விடைபெற்று மீண்டோம். பின்னர் நான் ஊரில் வந்து சிவில் இஞ்சிப்பற்றர் வேலாயுதன் சொன்னபடி மேற்படி நியாயங்களைக் காட்டி வித்தியாபகுதிக்கு எழுதினேன். சபை எழுதினதாக எழுதி மானேஜர் மூலமாக அனுப்பி னேன். அதற்கிடையில் வித்தியாதரிசி தம்பிப்பிள்ளை வித்தியாகர்தர் மைக்கிறேக்கு நேரே எழுதியமையால் நாங்கள் கண்டு பேசிய உதவி வித்தியாகர்த்தர் வேலாயுதன் அவர்களால் எங்கள் பாடசாலைக்கு ஏதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியுஞ் செய்ய முடியாது சட்டத்தையே பற்ற வேண்டியதால் இது கண்டவுடன் சேட்டிவிக்கட் உபாத்தியை வைக்க வேண்டுமென்று வையாவிடில் கிறான்ற் தரமுடியாதென்று வேலாயுதன் அவர்களே எழுதியிருந்தார்.

மேற்படி காகிதத்தைத் தரும்பொழுது மானேஜர் (கைலச் சட்டம்பி யார்) சொன்னார் இனிமேல் அவர்களுக்கு இப்படியான நியாயங்களைக் காட்டினாலும் ஒத்துக்கொள்ளார்கள் ஒரு உபாத்தியைத் தேடி வைக்கப்பாரென்றார். பார்ப்போமென்று மீண்டு போன நான் எங்கள் சைவகலைஞானசபை எழுதியதாகப் பல நியாயங்கள் காட்டி ஒரு கொப்பி போட்டுக்கொண்டு வித்தியாதரிசி இராசசிங்கத்திடம் அவர் வீட்டுக்குப் போனேன். அங்கே சித்தமணியம் பாடசாலை மானேசர் (கைலைச்சட்டம்பியார்) இராசசிங்கம் மூன்றுபேரும் சொன்னார்கள் இனிமேல் அவர்களுக் கெழுதி வீணாக அலையாதே எங்கேனும் ஒரு உபாத்தியைத் தேடி வைக்கப்பாரென்று. அப்படித்தான் நானும் ஆயத்தப் படுத்துகிறேன் இதையெனக்கு இங்கிலீஸ் படுத்தித் தர வேண்டு மென்றேன். அவர்கள் தடுத்தும் நான் விடவில்லை. பின்னர் இராசசிங்கம் தனது மைத்துனர் மயில்வாகனம் என்ற பையனைக் கூப்பிட்டுத் தான் இங்கிலீசில் சொல்ல மயில்வாகனம் எழுதிக் கொண்டிருந்தார். ஓரிடையில் இராசசிங்கம் சொன்னார் ஒருவேளை வாய்க்கிலும் வாய்க்கு மென்று எழுதி முடித்துத் தந்தார்.

அக் கொப்பியைக் கொண்டுபோய் ஆறுமுகம், வேலாயுதமென் பவரைக் கொண்டு வடிவாக எழுதிவித்து நானும் இன்னுஞ் சிலரும் கையொப்பமிட்டு மானேசர் மூலம் அனுப்பினேன். அதை வித்தியா கர்த்தர் பார்த்து இங்கே கவுண்மென்று ஏசண்டருக்கனுப் பினார். ஏசண்டு வடமராட்சி மணியகாரனுக்கு அனுப்பினார். மணியகாரன் எனக்காள னுப்பினார் போனேன். தன்னிடம் எங்கள் பிட்டீசமும் வித்தியாகர்த்தர் கேள்வியும் கவுண்மென்று ஏசண்டர் கேள்வியும் வந்திருக்கென்று என்னைச் சில கேள்விகள் கேட்டார். அதாவது எங்களால் சேட்டிவிக்கட் உபாத்தி வைக்கமுடியாவிடின் பள்ளிக் கூடத்தை மூடவேண்டுமென்றார். அதில் படிக்கும் பிள்ளைகளின் கதியெப்படியாகுமென்றேன். (மணியம்) மிஷன் பாடசாலைக் கனுப்பலாமென்றார். (நான்) அவர்கள் எங்கள் பிள்ளைகளுக்குத் தங்கள் வேதம் படிப்பித்தார்களென்ற வாக்குவாதத் தால் இப் பாடசாலையை நாங்கள் கட்டிமுடித்தும் அதையே நாங்கள் விபரமாக வித்தியாகர்த்தருக்குத் தெரிவித்து அவர் இப் பாடசாலைக்குக் கிறான்று தந்ததும் இப்போ எங்களை இடையில் நெருக்கினால் நான் என்ன செய்யமுடியுமென்றேன்.



மணியம் மேசை லாச்சியை இழுத்து ஒரு கடதாசியை அதற்குள் ளாலிழுத்து வாசித்தார். அவர் வாசிக்க வாசிக்க எனக்குத் தலை விறைப் பெழும்பியது. அவர் வாசித்த கொப்பி எனக்காள்விட முன் தனக்கு வந்த கேள்விக்கு என்னைக் கூப்பிடமுன் அவர் ஏசண்டருக்கும் வித்தியா கர்த்தருக்கும் பொதுவாக எழுதியனுப்பிய றிப்போட்டின் கொப்பி அதன் சாரம் நானெழுதிய பிட்டீசம் வித்தியாகர்த்தரை முக்கிளிக்கச் செய்து விட்டது. வித்தியாகர்த்தர் ஏசண்டரைக் கேட்டார் அப்பகுதிக்கு ஒரு பாடசாலை போதாதோ இரண்டு பாடசாலையும் அவசியம் வேண்டு மோவென்று. ஏசண்டர் மணியகாரனைக் கேட்டார் அந்தப்பகுதிக்கு மிஷன் பாடசாலையொன்றில் எல்லாப் பிள்ளைகளும் படிக்கலாம்தானே யென்று. இவைதான் அவர்களின் விசாரணை மணியகாரனின் றிப்போட்டு மேற்படி றிப்போட்டில் வித்தியா கர்த்தருக்கு ஒரு வெட்டு ஏசண்டுத் துரைக்கு ஒரு வெட்டு வெட்டி எழுதிய றிப்போட்டை மணியகாரன் அவர்கள் வாசிக்கும் பொழுது எனக்குத் தலைவிறைத்த தென்றமை அந்த றிப்போட்டின் சாரம் என்னை ஆனந்த சாகரத்தில் மூழ்கடிக்கச் செய்தமையால் தலைவிறைப்பெழும்பியது. றிப்போட்டின் சாராம்சம் இங்கே ஒருபாடசாலை போதாதென்ற காரணத்தால் வதிரி தேவரையாளிப் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டதல்ல, சமய சம்பந்தமான வருக்கு வாக்குவாதமேற்பட்டதின் காரணமாகவே வித்தியாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. (இதுவே ஏசண்டுக்கு வெட்டிய வெட்டு). இவைகளை விபரமாக அறிந்தே இப்பாடசாலைக்குக் கிறான்று வழங்கினார் வித்தியாகர்த்தர் என்பதை ஞாபகப்படுத்துகிறேன். (இதுவே வித்தியாகர்த்தருக்கு வெட்டிய வெட்டாகும்). ஆகையால் இவர்களுக்கு இன்னுஞ் சிலகாலம் இப்படியே பாடசாலையை நடக்க அனுமதிக்க வேண்டும். இல்லாவிடில் இரண்டு பாடசாலையையும் ஒன்றாக்கிக் கவுண்மேன்றுப் பொறுப்பில் தேவரையாளிப் பாடசாலைக் கட்டிடத்தி லேயே நடத்தலாம். இரண்டு பாடசாலைக் கிறான்றும் செலவுக்கு மேலதிகமாகும் என்பதே மணியகாரனின் றிப்போட்டு.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமுமாற்றல் அரிது என்பது திருக்குறள் எங்கள் பாடசாலையின் நன்மையைநாடி மணிய காரனவர்கள் சுமந்து இவ் றிப்போட்டெழுதினாரென்பது பெரும் புதினமாயின வேறுஎதற்கும் ரூபா 150 கொடுத்தாலும் இப்படியொரு றிப்போட்டைச் சுமந்தெழுதமாட்டாரென்பது உண்மை. இப்படியான மனிதனுக்கு மாறாகவும் எங்கள் பாடசாலைக்குள் ஏதொரு விஷயத்துக் கும் உட்பிரவேசியாதவரும் உதவாதவருமாகிய நாகலிங்க உடையார் மகன் செல்லையாவுக்குச் சாதகமாகவும் கிராமச்சங்க விஷயத்தில் ஒருமுறையல்ல பல முறைகளில் நின்று ஆள்க்கூட்டினார்கள் மூ.சி.வின் தலைமையில் எம்சமூகத்தவர் பலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச் செய்நன்றி கொன்ற மகர்க்கு'' என்பது திருக்குறள் இது எம்சமூகத்தவர் நன்றியின் பாகுபாட்டை விளக்கியது. மேற்படி மணியகாரனின் றிப்போட் வித்தியாகர்த்தருக்குப் போனபின் எங்களுக்கு வித்தியாகர்த்தரால் வந்த மறுமொழி இந்த வருடம்போக அடுத்த வருடத்துக்காயினும் ஒரு சேட்டிவிக்கற் உபாத்தியை வைக்கவேண்டும் என்று எழுதினார்கள். இந்த மறுமொழியை நல்லூரில் பெரியகந்தையா (வித்தியாதரிசி) அவர்களுக்குக் காட்டினேன். மிகச் சந்தோஷப்பட்டார், அதிசயப் பட்டார். ஏனெனின் வித்தியாபகுதியின் நெருக்கிடை சட்டப்படி எவரும் நியாயங் காட்ட வழியின்மையால் இன்னொரு நாள் வித்தியாதரிசி தம்பிப்பிள்ளை என்னைக்கண்டு நாணத்துடன் தட்டிப் போட்டாயென்றார்.

## 1922 ம் ஆண்டு ஆவணி மாதம்

### கூடியகூட்டம்

மேற்படி கூட்டம் சி.பொன்னர் (ஆசையம்மான்), சி.க.ஆறுமுகம் ஆகிய இருவராலும் கூட்டப்பட்டது. கூட்டத்தில் பேசிமுடித்த விஷயம் நாங்கள் பத்துப் (10) பேர் கூடித் தலைவீதம் ரூபா 50 எடுத்தால் ரூபா 500 ஐஞ்நூறு இந்த ஐஞ்நூற்றையும் உபாத்திமாருக்குச் சம்பளமாக ஒரு வருடம் கொடுக்வேண்டும். இந்தமுறை வரும் கிறான்றுப் பணத்தை கா.சூ.ஆசாரியார் எடுத்துக்கொண்டு உபாத்தியாகப் படிப்பித்தலை விட்டுப் பாடசாலையை மனேச்சுப் பண்ணவேண்டும் என்பதாக. இந்தப் பேச்சில் சொற்ப மாறுதலை உண்டாக்கினார் மூ.சி. எப்படியென்றால் 2 இரண்டுபேர் கூடி நூறு ரூபா 100 ரூபா என்றதை 3 மூன்றுபேர்கூடி நூறு ரூபாவென வீதம் போடப்பட்டது. மூ.சின்னத் தம்பி, சி.க.ஆறுமுகம், க.வ.கந்தையா இவை 100 ரூபா. ஐ.ஆறுமுகம்(ஆழ்வாப்பிள்ளை) வெ.வல்லிக்குட்டி, நா.சின்னத் தம்பி இவை 100 சி.பொன்னர் இவர் நூறு 100, வ.சி.சிலம்பு 33 ரூபா 33 சதம் வ.நாகமுத்தர் ஆ.க.வேலுப்பிள்ளை இவை ரூபா 50 ஐம்பது ரூபா கா.சூரன் (நான்) 116 ரூபா 67 சதம், இவைகூடிய மொத்தம் ரூபா 500 இந்த ரூபா ஐஞ்நூற்றையும் சி.பொன்னரிடம் ஒப்படைத்து அவரே உபாத்திமாருக்குப் பின்வரும் வீதப்படி ஒரு வருஷத்துக்குக் கொடுத்துக் கணக்கு முடிக்கத் தீர்மானமாயின.

### புதிய உபாத்திமார் நியமனம் (1922 ஆவணி)

கரவெட்டி வல்லிபுரம் வேலுப்பிள்ளையென்பவர் மிஷன் பாடசாலையில் படித்து கிறிஸ்தவனாகி அவர்களது ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்டு வந்தவர். அவர் சைவனாக மாறியமையால் அவருக்குப் பாதிரி பள்ளிக்கூடங்களில் இடமின்மையால் எங்கள்



பாடசாலையில் படிப்பிக்கச் சம்மதித்தார் சம்பளம் மாதம் 25 ரூபா தரும்படி கேட்டார். அப்போ அவர்தரவளி உபாத்திமாரின் சம்பளம் பழைய உபாத்திமாருக்கு 10 ரூபா புதிய உபாத்திமாருக்கு 8 ரூபா இதையே மனேச்சர்மார் கொடுப்பது. சைவமனேச்சர்மார் இன்னுங் குறைத்தே கொடுப்பார்கள். எங்களுக்கொரு உபாத்தியில்லாமை யாலும் வித்தியா பகுதியின் நெருக்கிடையாலுமே இவருக்கு 25 ரூபாவுக்குக் கதையொன்றும் பேசாது சம்மதித்தோம். இவர் மேற்படி ஆவணி மாதம் எனது இடத்துக்கு நியமனமானார்.

க.சின்னத்தம்பி, பெரியதம்பியின் இடத்துக்கு நியமிக்கப்பட்டார். தம்பையா இருந்தபடியிருக்க பெண்ணுபாத்தி, எனது மனைவியை நிற்பாட்டி (சூ.மாணிக்கம்) அவ்விடத்துக்கு சீ.பொன்னம்மாவை நியமித்து தலைமையாசிரியர் வேலுப்பிள்ளைக்கு 25 ரூபாவும் க.சின்னத்தம்பிக்குப் 10 ரூபாவும் பொன்னம்மாவுக்கு 5 ரூபாவும் தம்பையாவின் சம்பளம் மேற்குறித்த கூட்டத்தில் பேசியபடி அவர் பகுதியாட்களின் வீதப்பணம் வேண்டும் அன்றியவர் ஒரு வருஷம் படிப்பிக்கவேண்டும். தான் சம்பளமின்றிப் படிப்பிப்பேனென்றார்.

### படிப்பை நிற்பாட்டிய மு.செல்லையாவைக் கூப்பிடல்

இரவல் உபாத்திமாரை நம்பமுடியாதென்ற காரணத்தால் மூன்றாம் வகுப்பில் படித்துச் சித்தியடைந்து படிப்பை நிற்பாட்டிய செல்லையாவிற்கு மாதம் 3 ரூபா தருவதாகக் கூப்பிட்டோம். அந்தப் பணம் நான் ரூபா 1, மூ.மண்டலக்குத்தகைக்காரன் ரூபா 1, சி.க.ஆறுமுகம் ரூபா 1. இது ஒரு வருஷம் கொடுத்தோம். அப்பால் அவர் சம்பளம் வேண்டாமென்று ஒழுங்காகப் படித்தார். அவ் வருடம் தம்பிப்பிள்ளை மா.சாமுவேல் என்ற வித்தியாதரிசி பரீஷ்சைக்கு வந்தார். கார்த்திகை மாதம் சோதனை நடைபெற்றது சோதனை பிழையில்லை 84 வீதம் பிள்ளைகள் பாஸ் பண்ணினர்.

### அவனுமொரு பள்ளன்

தலைமை ஆசிரியர் வேலுப்பிள்ளையென்பவர் எங்கள் பாடசாலைக்குப் படிப்பிக்க வருவதையறிந்த வேளாளக் காடையர் மூவர் நாச்சி செல்லர், சொத்தி அருளம்பலம் இவர் சாணக்கமூலை, வதிரி எரிந்தார் மணியம். இம்மூவரும் நெல்லியடிச் சந்தியில் தேநீர்க்கடை யிலிருந்து மேற்படி ஆசிரியர் குறித்த கடையைத்தாண்டிப் பாடசாலைக்கு வந்து கொண்டிருக்கக் குறித்த மூவரில் ஒருவர் உதிலை போறவன் பள்ளற்ரை பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கிறான் மற்றவர் உவனார், அடுத்தவர் அவனுமொரு பள்ளன் என்றாராம். இவைகளைக் கேட்டுக்கொண்டுவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் எங்கள் பகுதி வாலிபர் சிலருக்குச் சொன்னாராம். அவர்கள் மிடுமிக்க நான் சொன்னேன் இவர் திரும்பி அவர்களுக்கு மறுமொழி சொல்லாமல் இங்கே வந்து உங்களுக்கேன் சொல்லுவான் நீங்கள் ஒன்றும் பேசவேண்டாமென்று அவர்களைத் தடுத்தேன்.

### நாங்களல்ல வதிரியில் மணியன்

இச் சம்பவம் நடந்த இரண்டாம் நாள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் சுவாமி உரித்திர கோடீஸ்வரர் ''மக்களும் மாக்களும்'' என்ற விஷயத்தைப் பிரசங்கித்தார். நாங்களும் சிலர் போய்ப் பார்த்தோம். மறுநாள் காலை நான் கரவெட்டியிலிருந்து வதிரிக்குப் போனேன். நெல்லியடிச் சந்திக்கடையில் மேற்சொல்லப்பட்ட மூவரில் நாச்சி செல்லரும் அருளருமிருந்தனர். என்னைக் கண்டவுடன் செல்லர் கேட்டார் என்னை விழித்து ராத்திரி சுவாமி உரித்திர கோடீஸ்வரர் கரவெட்டி விக்கினேஸ்வராவில் பிரசங்கமாம் போனியோவென்று ஓமென்றேன் (செல்) என்ன பேசினார் (நான்) இங்குள்ள வேளாளர் சரியான வேளாளரல்லவென்றார் (செல் சிரித்தபடி) ஏனாம் (நான்) பள்ளர் சைவப் பள்ளிக்கூடத்தில் வெள்ளாள உபாத்தி படிப்பிக்க அதைப் பார்த்துப் பேசாமலிருப்பவனும் வேளாளனாவென்று கடிமையாய்ப் பேசினார். (செல்) உங்கள் பள்ளிக்கூடத்துக்குப் படிப்பிக்க வாறவனை நாங்கள் ஏதோ பேசினதென்று சொல்லுகிறாய். நாங்களல்ல வதிரியில் மணியன் பேசினதென்றார். (நான்) நீங்கள் சாதி அபிமானங் கொள்ளலாம். எங்கள் பாடசாலையில் ஒரு மேடையில் கதிரையில் ஆசிரியர் இருந்து படிப்பிக்கிறார் மேடையிறக்கத்தில் பிள்ளைகள் நின்று படிக் கிறார்கள். அவர்களின் காற்றுக்கூட அந்த ஆசிரியரை அணுகாது. இந்தத் தெருவாலைதானே அனேக வெள்ளாளர்கள் எங்கள் கள்ளுத் தவறணைக் குப் போய் பொன்னண்ணை கள்ளைவார், மண்டலம் கள்ளைவாரென்று பிளாவை நீட்டி வேண்டிக் குடித்து மீழுகிறார்கள். அவர்களையல்லவோ முதல் மறிக்கவேண்டுமென்றேன். (செல்லர்) உன்னாணை சத்தியமாக நாங்கள் பேசவில்லை, மணியன்தான் ஏதோ பேசினதென்றார். (நான்) மணியம் பேசுவார்தான் தவறணையில் போய்க் குடிப்பது வெட்கமென்று அயலில் பள்ள வீட்டிலிருந்து முட்டியில் கள்ளையெடுப்பித்து அங்கு செய்த சம்பலுடன் குடிப்பவர் சொல்லுவர்தானென்று சொல்லி அவ்விடத்தால் மீண்டேன். மேற்படி இருவரின் செயலையே மணியத்தின் செயலெனப் பேசினேன். இருவர் முகங்களும் கறுத்தன.

### நத்தார் விடுதலைக்குத் தலைமையாசிரியர் கொழும்பு செல்லல்

எங்கள் பாடசாலைக்கு ஒரு சபையிருக்கென்றும் அச்சபை அங்கத்தவர் பலர் கொழும்பு, காலி குருநாகல் முதலிய இடங்களில்



முதலாளிகளும் தொழிலாளிகளுமாயிருக்கின்றனரென்றும் மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியர் வ.வேலுப்பிள்ளையென்பவர் மேற்குறித்த ஊர்களுக்கு இந்த நத்தார் விடுதலைக்குப் போய்வர வேண்டுமென்று எனக்குச்சொன்னார். சரி போய்வரலாம் நான் ஒரு காகிதம் தருகிறேன் அதை அங்கேயுள்ள நம்மாட்களுக்குக் காட்டினால் அவர்கள் தகுந்த மரியாதை செய்தனுப்புவார்களென்று பொதுவாக அங்குள்ள எல்லாருக்குமாக ஒரு காகிதம் எழுதி அவரிடம் கொடுத்து விட்டேன். அக் காகிதத்துடன் சென்ற ஆசிரியர் போன போன இடங்களி லெல்லாம் கண்டகண்ட நம்மவரெல்லாம் அவரை மிகக் கௌரவமாக மரியாதை செய்து பணமுமுதவி அனுப்பினார்கள். சுமார் ரூபா 200 வரை அவருக்குப் பணம் சேர்ந்தது.

### மத்திய பாடசாலை

இதுவரையில் எங்கள் பகுதியார் ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிப்பதில்லை. ஏனெனில் அக்கால நோக்கம் மிஷன் பாடசாலையில் மேல் வகுப்பு வைத்து நடாத்தாதமையுமாம். ஆகவே எங்கள் பாடசாலையை மத்திய பாடசாலையாக்கினால்தான் வகுப்பு எட்டளவும் வைத்து எட்டாம் வகுப்புப் பாசுபண்ணிய பிள்ளைகளை ஆசிரிய கலாசாலைக்கு விட்டுப் பயிற்றுவித்துத் தராதரப் பத்திரம் பெற்ற உபாத்தியாகச் செய்யலாமென்ற அவசியம் எங்களுக்கு இருந்தமையால் அந்த விஷயத்தில் பிரவேசித்தேன்.

மேற்படி விஷயத்துக்கு அப்பொழுது தமிழுக்கு டிவிஷன் இஞ்சிப்பற்றராயிருந்தவர் பெரியகந்தையா (நல்லூர்) அவரைப் போய்க் கண்டேன். எங்கள் பாடசாலையில் வகுப்பு எட்டளவும் வைக்கவேண்டு மென்றேன். பாடசாலையை மிடில்ஆக்குகில் கட்டிடம் போதாது. இன்னுமொரு கட்டிடம் வேண்டுமென்றார். (மிடில் என்பது மத்திய பாடசாலையென்ற தமிழ்ச் சொல்லின் ஆங்கிலச்சொல்) பாடசாலைக் கட்டிடத்துக்கு வடக்கே ஒரு கட்டிடத்துக்கு வளையேற்றிச் சில மரங் களும் போட்டிருக்கென்றேன். நான் அவரைக் கண்டது அவர் வீட்டில் ஒரு சனிக்கிழமை. அவர் சொன்னார் வருகிற செவ்வாய்க்கிழமை நெல்லியடி மொடல் ஸ்கூலுக்கு வருவேன் அங்கே வந்து என்னைக் காணென்று சொல்லியென்னை அனுப்பினார். அவர் சொன்னபடி குறித்த செவ்வாய்க் கிழமை நெல்லியடி மொடல் ஸ்கூலில் அவரைக் கண்டேன். 12 மணிக்கு அவர் சொன்னார் இன்றைக்கு உன் பாடசாலைக்குவர நேரமில்லை. இந்தக் கிழமைக்குள் நீ சொன்ன கட்டிடத்தை வேலை முடிப்பாயா வென்றார். நான் ஓமென்றேன். சரி உன்னை நம்பி எழுதுகிறேன் வேறெங்கும் இப்படிச் செய்யமாட்டேன் கட்டாயம் வேலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்துப்போடென்று சொன்னார். அவர் சொன்னபடி கட்டிடத்தை முடித்தேன். அடுத்த கிழமை மத்திய பாடசாலையாகப் பதிந்த மறுமொழியும் வந்துவிட்டது.

இந்த விதமாக எங்கள் பாடசாலைக்கு வித்தியாதரிசிமாரும் வேறு உத்தியோகத்தரும் தங்களால் செய்யக்கூடிய உதவிகளை அதி தீவிரமாகச் செய்துதவினர். அந்த வருடச் சோதனை வீதப்படி கிறான்றுப் பணம் ரூபா 300 முன்னூறுக்கு முன்பின் வருமென்றும் அந்தப் பணம் எனக்குரிய தென்றும் முந்தியே ஓர் கூட்டத்தில் தீர்த்தாயிற்று. ஆனால் அவ்வருடம் பாசுபெயிலென்ற வீதப் பிரமாணத்தை மாற்றி ஆசிரியரும் சராசரியு மென்ற பிரமாணத்தை உண்டாக்கி அதன்படி ரூபா 810 அனுப்பினார்கள். இதையறிந்த தலைமையாசிரியர் வேலுப்பிள்ளை எனக்கெழுதினார் ரூபா 150 தனக்குத் தரும்படியும் மாதம் ரூபா 10 தனது சம்பளத்தில் பத்துக்கழிக்கும்படியுமிருந்தது. நான் பதிலெழுதவில்லை. வாயாலை சொல்லிவிட்டேன். வந்த பணம் கடன்காரருக்குக் கொடுத்து விட்டேன். இன்னமும் கடனிருக்கென்றேன். அது மேற்படி ஆசிரியருக்குத் திருப்தி யில்லை சில நாளையால் அவர் பாடசாலையால் விலகுகிறேனென்று விடுகைப் பத்திரந்தந்து விலகிவிட்டார்.

அதன் பின் கிறிஸ்த பாடசாலையால் விலக்கப்பட்டிருந்த டீ.எம்.கந்தையா என்பவர் தானாகக் கேட்டு வந்தார். இவர் பயிற்றப் படாத இரண்டாந்தராதரப் பத்திரம் பெற்றவர். இவருக்குச் சம்பளம் பிரமாணப்படி ரூபா 40 நாற்பது கொடுக்கவேண்டும். மாதம் முடிய அரிசியள்ளிய காகம்போல் நிற்பார். எங்கள் பாடசாலையிலிருக்கவே மேற்படி ஆசிரியர் முதலாம் தராதரப் பத்திரமுடையவராயினார். (பொஸ்கிழாஸ்) சம்பளம் 60 ரூபா அறுபதும் மாதம் முடியப் பத்துக்குள் கொடுத்தே தீரவேண்டும். பணப்பிணக்கால் இவர் மூன்று முறை விலகி விலகிவந்தார். இவருக்கு ஒருக்கால் சொன்னேன் உபாத்தியார் ஓடியோடி வந்தாலும் எங்கள் பாடசாலை இருந்த இடத்தை விட்டொருநாளும் ஓடவில்லையென்று. இவர் பின்னும் சில உபாத்திமார் வந்து மீண்டார்கள். வந்த பிற உபாத்திமாரனைவரும் பண விஷயமாகத் திப்பிலியாட்டினார்கள். அப்போ கிறான்று வந்த பின்தான் உபாத்தி மாருக்குப் பணங் கொடுக்கிறது. எங்கள் உபாத்திமாருக்கு அப்படிச் செய்யலாம் பிற உபாத்திமாருக்குக் காதறுத்த கூலி கைமேலென்ற கதைபோலக் கொடுத்தேதீரவேண்டும். கடன்பட்டே கொடுத்து வந்தேன். சபை இருந்தும் சபை அங்கத்தவரென்று சிலர் மாத்திரம் தந்துவந்தார்கள்.

முதலில் வந்த வேலுப்பிள்ளையென்ற உபாத்தியார் எம் சமூகத்தவரால் அதிக பணம் உபகரிகப்பெற்று என்னைக் கடனாகப்



பணங் கேட்டு நான் கொடாததினால் விலகிய (பாடசாலையால்) கோபத்தால் அவரிலோர் சிவில் வழக்குப் போட்டேன். அந்த வழக்கையவர் சிறிய தகப்பன் முருகப்பாவென்பவர் பிடித்துச் சமரச முறை கொண்டு இணங்கி எங்களுக்குத் தரவேண்டிய கையொப்பத்தை யும் தந்து சி.க. அப்பாக்குட்டியின் வேக்கையும் தந்து போனார்.

பிற உபாத்திமாரை வைத்து ஒவ்வொரு மாத முடிவிலும் நான் படும் கஷ்டம் கடவுள் ஒருவனுக்கும் எனக்குமேயல்லாது வேறொரு வருக்கும் தெரியாது. ஓரிடையில் சேட்டிவிக்கற் உபாத்தி பாடசாலை யிலில்லை. அப்பொழுது மிஷன் பாடசாலையால் வந்த பிள்ளைகளின் சேட்டிவிக்கற்ரை மேற்படி பாடசாலை ஆசிரியர் கொடுக்கவில்லை யென்ற முறைப்பாட்டைச் சொல்லுதற்காக வித்தியாதரிசி தம்பிப்பிள்ளை நெல்லியடி மொடல் ஸ்கூலில் இருக்கிறாரென்றமை யால் நானும் பாடசாலை மானேசர் சபாபதிப் பிள்ளையும் (கைலச்சட்டம்பியார்) சித்தமணியமும் பிள்ளைகளின் பெற்றோர் சிலரும் தம்பிப்பிள்ளையை மொடல் ஸ்கூலில் சந்தித்தோம். வித்தியாதரிசியுடன் சித்தமணியமே சேட்டிவிக்கற் விஷயமாகச் சம்பாஷித்தார். முடிவில் சித்தமணியகாரன் என்னைக் கூப்பிட்டு என்ன செய்யப்போகிறாயென்றார். என்னத்துக் கென்றேன். உங்கள் பாடசாலைக்கு ஒரு நல்ல சேட்டிவிக்கற் உபாத்தியை வைத்தால்தான் சேட்டிவிக்கற் கொடுக்கச் செய்யலாமென்கிறார் என்று மணியகாரன் சொன்னார்.

உடனே ஆவேசங்கொண்டவன்போல எங்கள் பாடசாலை விஷயம் பேச இங்கே வரவில்லை. தங்கள் பிள்ளைகளின் சேட்டிவிக்கட்டை அந்த உபாத்தியாயர் கொடுக்க மறுத்தார் என்பதை உங்களுக்குச் சொல்ல வந்தார்கள் பெற்றோர். அதனையே இங்கு பேசப்பட்ட தென்றேன். அவர் திகைத்தார். இதன்மேல் நியாயம்பேச அவருக்கு இடமில்லை. உப்படிச் சட்டம் பேசினால் பாடசாலை இல்லாமலும் போகுமென்றார். போனால் மயிர் போகட்டுமென்றேன். காந்தியைப் போல கடும்பிடி பிடிக்கிறா யென்றார். காந்தியின் கால்தூசு பெறுமதியற்றவன் நானென்றேன். இவ்வளவு தூரம் அவருடன் என்னைப் பேசியிருக்கக் கூடுமோவென்று எவரும் சந்தேகப்படக்கூடும். பேசியது உண்மையே உண்மை. நீதி வழங்கவேண்டிய உத்தியோகத்தன் ஓரம் பேசத் துணிந்தது பிழையின் மேல் பிழை. கடைசியில் மணியகாரன் சொன்ன சொட்டை என்னை யொரு காவோலையால் கொழுத்திச் சுட்டுத் தடவித் தோலை உரித்துவிடு வெள்ளையாய்ப் போவாய் அதன்பின் உன் காரியங்கள் வாய்க்கு மென்றார்.

அப்போ வித்தியாதரிசி கேட்டார் வெள்ளைக்காரப் பாதிரி களுக்காக நான் பாரபட்சம் பேசுவதாக எண்ணுகிறீர்கள் போலிருக்கென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் பெற்றார் தாங்கள் சேட்டிவிக்கட்டை கேட்க உபாத்தி கொடுக்கவில்லையென்று சொல்லவந்தால் சூரனைப் பாடசாலைக்கு வாத்திவையென்று சொல்வதோ நீதியான மறுமொழி யென்றார் மணியகாரன். சரி அந்த உபாத்திக்கு நான் சொல்கிறேன் சேட்டிவிக்கட்டைக் கொடுக்கும்படியென்றார் வித்தியாதரிசி. அவர் சொன்னது புருடா தம்பிப்பிள்ளை பாதிரிமாரைக்கொண்டு எழுதுவித்துப் போட்டார் அந்தப் பாடசாலைச் சோதனை முடியச் சேட்டிவிக்கட்டெல்லாம் கொடுக்கலாமென்று வித்தியாகர்த்தருக்கு. வித்தியாகர்த்தர் பெரியகந்தையாவுக்கு (வித்தியாதரிசி) எழுதியிருந்தார் சோதனை முடிய எல்லாச் சேட்டிவிக்கட்களும் கொடுத்தாயிற்று.

1923 ம் ஆண்டு சேட்டிவிக்கட் உபாத்தியில்லாத இடத்துக்கு கரவெட்டிக் கார்த்திகேசு ஆங்கிலம் பிறிலிம் பாசுபண்ணிய கரையாரப் பொடியன் மாணிக்கமென்பது ஊர்ப் பெயர். அவர் பாடசாலையில் (எங்கள்) பத்து ரூபாச் சம்பளத்துக்குப் படிப்பித்துக் கொண்டிருந்த வரைத் தற்காலிகத் தலைமை ஆசிரியராக மிக வில்லங்கப்பட்டு வைத்தேன். எங்களுக்குள் ஒரு உபாத்தியாயரை உண்டாக்க மார்க்க மின்றியிருந்தேன். இப்போ தலைமையாசிரியராயிருக்கும் மு.செல்லையா ஏழாம் வகுப்புப் பாசுபண்ணி எட்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் அவரை ஆசிரிய கலாசாலைக்கு விட்டுப் படிப்பிக்கில் எட்டாம் வகுப்புப் பாஸ் பண்ணவேண்டும் அல்லது பிரவேச பண்டிதர் பாசுபண்ணவேண்டும். அதற்காகச் செல்லையா இலக்கண இலக்கியம் படிப்பதற்காகக் கற்கும்பான் மயில்வாகனம் உபாத்தியாயரிடம் ஒப்படைத்தேன். அவர் படிப்பிக்கும் நேரம் மாலை ஆறரை தொடங்கி எட்டரை மணி நேரமாகும். செல்லையா தனிமையில் போய்வர முடியாது ஆகவே ஓர் அரிக்கன் விளக்குடன் நானே மூன்று மாதமாகக் கூட்டிக்கொண்டு சென்றேன். (கற்கும்பா னென்பது பழைய தபால்க் கந்தோர் புளியமரத் தெற்கொழுங்கை).

இதற்கிடையில் எங்கள் வதிரி பூவற்கரை அண்ணமாராலயத்தில் நெடுங்காலம் வழங்கிவந்த ஆடு கோழி வெட்டிப் படைத்துவந்த துர்வழக்கத்தை எங்கள் சைவப் பாடசாலையின் பேரால் ஒரு வேள்வித் தினத்தன்று இரவு திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரத்தைப் பிரசங்கித்து இடையிடையே மேற்படி சுவாமிகள் தேவாரங்களையும் பாடி அற்புதங் களையும் விளக்கினேன். ஆடு கோழிகளை வெட்டிப் படைப்பது எவ்வளவோ கேவலமான இழிசெயலென நியாயங்காட்டி அருவருத்துப் பேசினேன். அதை மனமொத்து நிற்பாட்டவில்லை விடிய ஏழுமணி யிருக்கும் ஆடுகள் கோழிகள் எல்லாம்வந்து சேர்ந்துவிட்டது. வெட்டுகிறவர் கத்தியுடன் வந்துநிற்கிறார் முதல் வெட்டவேண்டிய



ஆட்டுக்குப் பூமாலை கழுத்திற்கட்டிப் பூசாரியார் தண்ணீர் புரோட்சித்து வெட்ட உத்தரவிட்டார். வெட்டுகிறவருக்கும் ஆட்டுக்குமிடையே நின்று சொன்னேன் தெய்வத்தால் பழி வந்தால் என்னிடம் வரட்டும் இது சிவசன்னிதானம் ஆட்டைவெட்டுவது அநியாயம் பெரும்பழி வெட்ட வேண்டாமென்றேன் அப்பொழுது தெய்வத்தின் திருவருட் சக்தி எவர் வாயுந் திறந்து வெட்டத்தான் வேண்டுமென்று சொல்லாது எல்லா வாயும் அடைபட்டது. கத்தி வைத்திருந்தவர் எனக்குத்தான் சீதனமோவென்று சொல்லிக் கத்தியைச் சுழற்றி எறிந்துவிட்டு மீண்டார். அதன் பின் சைவாசாரப்படி வேள்வி நடைபெற்று வந்தது. தெய்வத்தால் பழிவந்தால் என்னிடம் வரட்டாமென்று எவ்விடத்தில் நின்று சொன்னேனோ அவ்விடத்தி லேயே தூபிக்கோபுரக் கோயில் எழுந்து வேலைமுடிந்து வருகிறது (1923 ல் நடந்தது).

மேற்படி மு.செல்லையாவின் பிரவேச பண்டிதர் சோதனைக்குச் சுன்னாகம் ஆரிய திராவிட பாடசாலைக்குச் செல்லையாவைக் கூட்டிச் சென்றேன். பாடசாலை வித்தியாதரிசி சதாசிவஐயரின் சொந்தப் பாடசாலை பரீட்சகரும் அவரேதான் மிச்சம் மரியாதையாகவைத்துச் சோதித்தார். ஒரு மேசையும் ஸ்டூலும் செல்லையாவுக்குக் கொடுத்துச் சோதித்தார். அப்போசமாசனமில்லாக்காலம். அதில் செல்லையா சித்தியடையவில்லை பின்னர் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குப் போய் அதிபர் பொன்னையாவையும் ஆசிரியர் தா.சிதம்பரப்பிள்ளையையுங் கண்டு எங்கள் பாடசாலைக்குப் பயிற்றப்பட்ட ஆசிரிய ரில்லாக் குறையை முறையிட்டேன். அது அவர்களுக்குமே தெரிந்த விஷயம். அப்போ பொன்னையா சொன்னார் எட்டாம் வகுப்புப் பாசுபண்ணாக் குறையை நான் பார்த்துக்கொள்ளுகிறேன் நேர்முகப் பரீட்சையில் அம்சம் பெறுவது பொடியனில் தங்கியதென்றார். அப்படியே அனுப்பினோம். குறித்த திகதி பரீட்சை நடைபெற்றது. இதற்கெல்லாம் காரோ பஸ்சோ வண்டியோ கிடையாது கால்களே நடந்துமுடிந்தது.

மேற்படி ஆசிரிய கலாசாலைப் பிரவேச நேர்முகப் பரீட்சை 1925 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்றது. சில நாளாக எப்படியாகுமோவென்று கடலலைபோல என் மனம் அலைந்தபடியிருந்தது. ஒரு நாள் லோலியொல்லை அம்மன் கோயிலில் திருவிழா. மேளச்சமா பார்த்துக்கொண்டிருந்தேன். ஆசிரியர் செல்லையா என்கிட்டவந்து தான் ஆசிரிய கலாசாலைக்கு எடுபட்டிருகிறேனாம் என்று கேட்டார். உனக்கெப்படித் தெரியுமென்றேன் ஒரு பொடியன் பருத்தித்துறையிலுள்ளவர் சொன்னதாக அறியவந்தது என்றார். நீ அதை இப்ப நம்பாதே ஒருவருக்கும் சொல்லாதே நாளைக் காலை தா.சி. வீட்டுக்குப்போவோம் விடியவாவென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியமென்பது சாமுவேல் (தம்பிமுத்து) ஆசிரியரின் உடன்தம்பி யோசேப்பாசிரியரின் சிறியதாய் தந்தையரின் மகன். இரவு பேசியபடி விடியச் செல்லையாவந்து இருவரும் தா.சி. வீட்டுக்குப்போனோம். அவர் எங்களைக் கண்டு உடனே ஏதும் புதினமுண்டோவென்றார். என்ன புதினத்தை நாங்கள் சொல்லுவது ஏதும் புதினமறியலாமென்று தானிங்கு வந்தோமென்றேன். இரவு நாங்கள் கேள்விப்பட்டதையும் சொல்லாமல் தெரியாததுபோல செல்லையாவிற்கு ஏதும் காகிதம் வந்ததாவென்று கேட்டார், இல்லையென்றோம். இன்றைக்கு இனிமேல்தான் வரும் செல்லையா 12 ம் பன்னிரண்டாம் ஆளாக எடுபட்டிருக்கென்றார்.

கரவெட்டியில் சில வெள்ளாம் பொடியன்கள் செல்லையாவை முகமனுக்கெடுத்திருக்கென்றும் அதிபருக்கு நீ ஏதோ உபகரித்த தாகவுஞ் சொன்னார்கள். நான் அவர்களைக் கடிமையாகப் பேசி நாணச் செய்தேனென்றார். அவரிடம் விடைபெற்று அவரவர் வீடு சேர்ந்தோம். சில நேரஞ்செல்ல செல்லையா காகிதத்துடன் வந்துதர அதை நான் உடைத்து வாசித்தேன். உன்னை ஆசிரிய கலாசாலைக்கு மாணவ ஆசிரினாக தெரிபட்டிருக்கென்றும் மறுகடிதத்தில் விபரம் வருமென்றும் எழுதப்பட்டிருந்தது. (சில குறிப்பு: 1925 ல் தனக்கு வந்த காகிதத்தை என்னிடம் தந்து பிரித்து வாசிக்கச்செய்த மு.செ. ஆசிரியர் 1942 ன் பின் எனது பகைவருடன் ஒத்துப் பல இரகசியங்களை நானறியாதபடி கருமமாற்றி 1953 ல் அவர்கள் சூழ்ச்சிகளையெல்லாம் ஓரளவு அறிந்து கொண்டார்)

கடிதத்தைக் கண்டதும் எனது உள்ளம் அளவுகடந்த ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தது. அன்றுமொரு பெருமூச்சுவிட்டேன். அதாவது பாடசாலை கிறான்றானதற்கொரு பெருமூச்சு. மற்றது எங்கள் சொந்த மான பயிற்றப்பட்ட ஆசிரியர் உதயமானார் என்றமை ஒரு பெருமூச்சு. அந்த வருடம் தம்பிப்பிள்ளை பரீட்சைக்கு வந்தார். பரீட்சை முடிந்தபின் ஆசிரிய கலாசாலைக்கு எங்கள் பாடசாலை மாணவர் ஒருவர் பயிற்றப் படப் போயிருப்பதாக அறிந்தேனென்று சந்தோஷம் தெரிவித்தார். ஒரு கிழமையால் ஒரு கடிதமனுப்பினார் வரவுஇடாப்புடன் சேர்விடாப்பை யுங் கொண்டு சுதுமலையில் தனது வீட்டில் சந்திக்கும்படி எழுதினார். அன்று ஒரு விளக்கீட்டு நாள் இரண்டு மணிபோலப் பச்சடியுடன் அவதிப் பட்டுக்கொண்டு கொஞ்சம் சோற்றைச் சாப்பிட்டு இடாப்புகளுடன் திக்கச் சந்திக்குப் போனேன். அப்போ பஸ் ஓட்டம் காலை 6 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து யாழ்பாணம் ஓடும் பின்நேரம் 2 மணிக்குப் பருத்தித்துறைக் கோடும் 4 மணிக்குத் தவால்கொண்டு திக்க றோட்டால் யாழ்ப்பாணம் ஓடும். அன்று இடையில் ஒரு தனிக் கார் வந்தது என்னைக் கண்டு மறித்து ஏறச் சொன்னார்கள் நான் ஏறி மட்காட்டிலிருந்தேன்



(சேறுதாங்கி) அப்போ நாங்கள் காரானாலும் பஸ்சானாலும் ஆசனங் களில் இருக்கமுடியாது. (வக்கு) நான் கோப்பாய் இருபாலைச் சந்தியில் இறங்கினேன்.

இறங்கி ஆசிரியகலாசாலை வாசற்பக்கமாகச் சென்று சுன்னாக றோட்டைச் சந்தித்து தாவடிச் சந்தியால் திரும்பிச் சுதுமலைக்குப் போய்த் தம்பிப்பிள்ளை வித்தியாதரிசியைக் கண்டேன். அவர் இடாப்புகளை வேண்டிச் சில குறிப்புகள் எழுதிக்கொண்டு இடாப்புகளைத் தந்தார். அவரிடம் விடைபெற்று றோட்டில் ஏற இருண்டு விட்டது நிலவு அன்று விளக்கீடு தெருவெல்லாம் கான் வழியே விளக்குகள் கொழுத்தப் பட்டிருந்தன. நான் விறுவிறுப்பாக நடந்து 7.30 மணிபோல கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குள் சென்றேன். தா. சி. ஆசிரியரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன் செல்லையாவும் அரியமும் வந்து பார்த்துக் கொண்டு நின்றுவிட்டுப் போய்ப் படுத்துவிட்டார்கள். நாங்கள் பேசி முடிய மணி 10 பத்துக்கு மேலானது. அன்றிரவு எனக்குச்சாப்பாடில்லை அரியம் செல்லையா அவர்களை எழுப்பி அவர்களுடன் படுத்து விடியப்புறமெழும்பிக் கால்நடையில் வீடுவந்து சேர்ந்தேன்.

மு.செல்லையா முதலாம் வருட மாணவர், அரியம் இரண்டாம் வருட மாணவனாகப் படிக்கிறார். இடையிடையே பிள்ளைகளை மறித்து என்னைப் பயமுறுத்தியும் வந்தார். அதற்கு நான் ஒருகாலமும் அஞ்ச வில்லை. கலியாணம் குழம்பினால் அதை நான் சரிப்பண்ணி விடவில்லையென்பது, கலியாண வீட்டுக்கு ஒருவருக்குச் சொல்ல வில்லையென்று, அவருக்காகப் பத்துப்பேர் நின்றுகொண்டு பாடசாலைப் பிள்ளைகளை மறித்துச் சில நாளையால் சேட்டிவிக்கட் கேட்பது, ஆடு கோழி வெட்டி ஆலயங்களில் பலியிடப்படா தென்றால் அந்தப் பேச்சுத் தங்கள் பகுதியை வம்புபண்ணிப் பேசியதென்று சில பிள்ளைகள் போய்ப் பெற்றோர் மற்றோருக்குச் சொன்னவுடன் அப் பகுதிப் பிள்ளைகளை மறித்துச் சேட்டிவிக்கட்டைத் தாவென்று கேட்பது, பிட்டீசம் வித்தியா பகுதிக்கு எழுதுவது, அவை விளங்க வருவது வந்தாலும் அவர்கள் என்னுடைய பேச்சைச் சரியென்று அவர்களுக்குப் புத்தி சொல்லுவார்கள்.

ஒருமுறை பாடசாலையில் நான் பேசினேன் ஆலயங்களில் ஆடு கோழி வெட்டிப் பலியிடப்படாது சைவசமயத்தவர் மச்சமாமிசம் சாப்பிடக்கூடாதென்று அதைச் சில பிள்ளைகள் பெற்றார் முதலி யோருக்குச் சொன்னார்கள். அவர்கள் (பெற்றார்) வித்தியாதரிசி கிருஷ்ணபிள்ளைக்கு அவர் வீட்டிலேயே போய் முறையிட்டார்கள். அங்கேயிருந்த ஒரு சைவ உபாத்தியாயர் குறித்த முறையிட்டவர்களை தன் வாயில்வந்தபடி பேசி ஏசினாராம். ஒரு சைவப் பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் பிள்ளைகளுக்கு மச்சமாமிசம் புசிக்கக்கூடாதென்று போதித்தால் அது பிழையல்லவென்று வித்தியாதரிசி சொன்னாராம். உடனே அவர்கள் கேட்டார்களாம் அது தின்னக்கூடாதென்றால் கரையாருக்குப் பிழைப்பென்னவென்று. மறுநாள் நான் போன பொழுது வித்தியாதரிசி எனக்குச்சொன்னார் நீர் பேசியது பிழையல்ல வென்று அவன்களுக்கு நான் சொல்ல அப்ப கரையாருக்குப் பிளைப்பென்ன வென்று கரையாருக்காக அனுதாபப்படுகிறான்கள் என்று சொல்லிச் சிரித்தார். இப்படியே பல கஷ்டங்களையுமனுபவித்தும் பாடசாலையை மிக ஊக்கமாக நடத்தி வந்தேன். இடையிடையே சபையைக் கூட்டிப் பாடசாலை நிலைமையை விளக்கிக்காட்டுவேன். 1917 ம் ஆண்டு தொடக்கம் வேளாளப் பிரசங்கிமாரைக் கூப்பிட்டுப் பிரசங்கங்கள் செய்வித்து வந்தேன்.

1925 ம் ஆண்டு பாடசாலைப் பாட்டு ''வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாசாலை அருள்பெறு பாக்களென்று'' பாடப்பட்டு அச்சடித்துப் புத்தக ரூபமாக்கப்பட்டது. அப் பாடல்களை நானே பாடிச் சைவ கலைஞான சபை வெளியீடெனப் பெயர் கொடுத்தேன். மேற்படி புத்தகத்திலுள்ள எல்லாப் பாடல்களும் பிள்ளைகளுக்கு வாய்ப்பாடமாயிருந்தது. பாட்டுப் போட்டி, சம்பாஷணைப் போட்டிகளைப் பிள்ளைகளுக்கு நியதியாகப் பயிற்றிவித்துவந்தேன். அவ்விதமாக நடைபெற்றுவந்தது. 1918 ம் ஆண்டு முதல் மார்கழி மாதம் முதலாகத் திருவாதிரை ஈறாக முன் பத்துத் தினங்களிலும் திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவையை ஓர் பிள்ளையார் படத்தின் முன்னிருந்து விளக்கு வெளிச்சத்தில் (விடிய முன்) ஓர் புத்தகத்தைப் பார்த்துப் படித்து வந்தேன். எம் வீட்டில் 1925 ல் எனது பிள்ளைகள் (குழந்தைகள்) வீட்டுக்குள் மலசலங் கழித்தல் நிகழ்வதால் அது எனக்கு அசங்கிதமா யிருந்தபடியால் மேற்படி தினத்தைப் பாடசாலைப் பின்பக்க அறையில் வைத்துப் படிக்க எத்தனித்தேன்.

## 1923

### பாடசாலைக் கோயில்

பாடசாலை பின்பக்க அறையில் மேற்குறித்த பிள்ளையார் படத்தை வைத்து உதயத்தின் முன் நாலு மணிபோலெழுந்து வீட்டிலிருக்கும் குடநீரில் குளித்துப் பாடசாலை அறைக்குளிருந்து படித்துவந்தேன். இதையறிந்த ஆசிரியர் மு.செல்லையா அப்போ மாணவன் தானும் வருகிறேன்று என்னுடன் சேர்ந்து இருவரும் படித்தோம். அதன் பின் அறிந்த மாணவர் சின்னத்துரை, செல்லத்துரை, அண்ணாசாமி, வடிவேல்



ஆகிய இவர்களும் வந்து நல்ல பைம்பலாகப் படித்தார்கள். இப்படியாகப் படித்துக்கொண்டிருக்கையில் எங்கள் பக்கத்துப் பெண்கள் கந்தவனக் கோயிலுக்குத் திருவெம்பாவைப் பூசைக்குப் பக்கத்து வழியாகப் போகும்பொழுது நாங்கள் படிக்கிறது அவர்களுக்கு நல்லாகக் கேட்டும், அப்படிக் கேட்டபடியால் அவர்கள் கோயிலால் வரவும் இந்த மாணவரும் படிப்பு முடிந்து வீட்டுக்குப் போய்விடுவார்கள். இந்த மாணவப் பிள்ளைகளைக் கந்தவனக் கோயிலுக்குத் திருவெம்பாவைப் பூசைக்குப் போனவர்கள் கேட்டார்களாம் நீங்கள் படிக்கும்பொழுது கடைசியில் பள்ளியெழுந்தருளாயேயென்று படிக்கிறீர்களே அது ஏன் அதென்ன வென்று பாவம் அவர்களுக்குக் கந்தவனக் கோயிலில் படிக்கிறது கேட்டாலும் அது அட்சரசுத்தமாகக் கேளாது. அதற்கு மேற்படி பிள்ளைகள் சொன்னார்களாம் (செல்லத்துரை, வடிவேல்) சிவபெருமானை நித்திரையால் எழுப்புகிறதென்று பள்ளியென்பது நித்திரை ஓ..ஓ.. சிவபெருமானே பள்ளியெழுந்தருளாயே என்றுதான் படித்தீர்கள் என்றார்களாம். இதைக் கேட்டுக்கொண்டிருந்த எனது மாமனார் சி. க. சாத்திரியார் தனது பேரப்பிள்ளைகளாகிய செல்லத்துரை, வடிவேல் என்பவருக்குச் சொன்னாராம் அந்தப் புத்தகத்தை என்னிடம் வேண்டி வரச்சொல்லி அப்படியே அவர்கள் வந்து என்னிடம் வேண்டிக்கொண்டு போனார்கள். எங்கள் திருவெம்பாவைப் படிப்பு அடுத்த வருஷம் பூசையாக மாறிப் பகுதி பகுதிப் பூசையாக பெருத்து 1000 மோதகமும் அவித்தார்கள். மேற்படி பூசையில் மணி, சங்கு, பாட்டுகள் எல்லாம் ஒரே பேரோசையுடன் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அந்த நேரம் திக்கத்துக்குப் புகையிலை நாற்றுக்குப் போகும் கரவெட்டி, நெல்லியடியிலுள்ள வேளாளர் சற்று நேரம் றோட்டில் நின்று கேட்டுப் பரசவப் பட்டுப் போவார்களென்று வெளியில் நின்ற நம்மவர்கள் சொல்லக் கேட்டுள்ளேன்.

இப் பூசாகைங்கரியப் பயனாலும் பாடசாலையின் மகத்துவத் தாலும் மேற்படி பாடசாலையில் படிப்பிக்கும் உபாத்திமார், மாணவ மாணவிகள் மாமிசம் வெறுத்த சைவர்களாயினர். இக் கிராமங்களில் ஆடு கோழி பலியிடும் ஆலயங்களெல்லாம் அப் பலியிடும் துர்ப் பழக்கங்களைத் தவிர்த்து எல்லா ஆலயங்களிலும் திருவெம்பாவைப் பூசை நடைபெற்று வரலாயின. இப் பாடசாலைக் கோயிலிலையே நித்தியம் பூசைமுடித்து நான் உணவு கொள்வேன். வெள்ளிக்கிழமை பூசையில் பாடசாலைப் பிள்ளைகள் வந்து வணங்கித் திருநீறு, சந்தனம் முதலிய பிரசாதம் பெற்றுப் பின் படிப்பை ஆரம்பிப்பார்கள். ஒரு நாள் பூசாகைங்கரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் வித்தியாதரிசி சின்னக்கந்தையா என்பவர் வந்து பூசையை நேரே கண்டு கலந்து மிகமெச்சிச் சந்தோஷப் பட்டுப் போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கே உதைத்துற உதுக்கைதானே திருவெம்பா நடத்துகிறாய்**

பாடசாலை நடைபெறாத ஒரு நாள் நான் பூசைமுடித்துக் கதவு பூட்டும் பொழுது ஒரு வேளாள வைத்தியர் வந்து எங்கே உதைத்துற உதுக்கை தானே திருவெம்பாவை நடத்துகிறாயென்றார். அவரது கேள்வி சிறு பிள்ளைகள் விளையாட்டுக் கோயிலைக் கடுக்கண்டவர் பார்க்கக் கேட்டது போலிருந்தது. அவர் நின்று கேட்டது முன் வெளியறை பின்னறையே கோயிலறை அவர் கேட்டவுடன் ஏ... இதற்குள்ளேன் பிரவேசித்தாய் இது சைவாலயம் நீயோ மதுமாமிச போசன அசுத்த மனிதன் இதற்குள் அப்படியான பிள்ளைகள்கூடப் பிரவேசிப்பதில்லை. இனிப் பிராயச்சித்தம் செய்ய இரண்டு மூன்று ரூபா வேண்டும் என்று சரமாரியாகப் பேசினேன். அந்த மனிதன் திகைத்து தான் கேட்டது குற்றம் என்று சொல்லி மீண்டார்.

## 1926 ல் ஆனி மாதம்

**எனது சுற்றுப்பிரயாணம்**

நான் பாடிய பாடசாலைப் பாட்டுப் புத்தகங்களையுங் கொண்டு கொழும்பு, காலி முதலிய இடங்களுக்குப் பணம் சேர்க்கச் சென்றேன். (பாடசாலைக்கு) போகும்பொழுது வ.சி.சி.வைத்தியரை இடை யிடையே பாடசாலையைப் பார்க்கும்படி சொல்லிப் போனேன். அப்பொழுது பாடசாலையிலிருந்த உபாத்திமார் டீ.எம்.கந்தையா, தா.சாமுவேல் (தம்பிமுத்து), க.வே.தம்பையா, சீ.பொன்னம்மா. நான் கொழும்பு சென்றதும் முதலியார் சி.ஆறுமுகம், வாரித்தம்பி, கார்த்திகேசு, வீ.கே.சிற்றம்பலம், ஆறுமுகம், சிற்றம்பலம் நெல்லியடித் தம்பிப்பிள்ளை முதலியவர்களைச் சந்தித்தேன். இவர்கள் வாயிலாகப் பல உத்தியோகத்தர்களிடம் பணம் பெற்றேன். இதற்குமுன் இந்துசாதன மனேச்சர் ச.அம்பிகைபாகனும் பத்திராதிபர் ம.வே.திருஞானசம்பந்தரும் பருத்தித்துறை சே.பீ.சி.சுப்பிரமணியம் பிறக்ரரும் வடமராட்சி மணியகாரன் க. சின்னத்தம்பி (பொன்னையா) அவர்களும், வித்தியா தரிசி இராசசிங்கமும், அப்புக்காத்து பொன்னையா அவர்களும் எனக்குத் தந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் சென்றேன். இடையிடையே இந்து சாதனப் பத்திரிகையிலும் எம் பாடசாலையைப் பற்றி எழுதியுள்ளேன். ஆகவே எனது பெயரை எல்லாரும் அறிவார்கள் ஆளை மாத்திரந் தெரியாதிருந்தனர். என்னைக் கண்டவுடன் பாடசாலையையும் என்னை யும் ஒன்றாக மதித்து மனச்சாந்தியுடன் பணமுதவினர். மு.நல்லதம்பிப் பண்டிதர் வாயிலாக கே.கனகரட்ணத்தை அறிமுகப்பட்டு அவரும் பணம்சேர்த்துதவினார்.



எங்கள் பகுதியினர் கொஞ்சப்பேர் மாத்திரம் பாடசாலைக்குப் பணமுதவினர். மற்றையோர் ஒரு கலியாண சம்பந்தமாகப் (வே.ஆ.க.) வெறுப்புற்றுப் பாடசாலையிலும் அலட்சியமாயிருந்தனர். அந்த வருடந்தான் நான் கதிர்காம யாத்திரை சென்றேன். வரும்பொழுது அம்பாந்தோட்டை, தங்காலை, திக்குவலை, மாத்துறை முதலியவிடங் களிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு முதலியார் சி.ஆறுமுகம் (கரவெட்டி கிழக்கு விதானை மகன்) அவர்கள் தந்த கடிதங்களுடன் சென்று பணம்பெற்று மீண்டேன். அப் பகுதிகள் முடிந்து கொழும்பில் வந்து நின்றபொழுது சி.க.ஆறுமுகம் (எனது மைத்துனர்) எனது கணக்குப் புத்தகத்தையெடுத்துப் பார்த்தார் (என்னையறியாமல்) தமையன் வ.சி.சிலம்பு வைத்தியருக்கெழுதியிருந்தார் சுமார் 600 ரூபா அறுநூறு வரையில் பாடசாலை வகைக்குப் பணம் சேர்த்திருக்கிறாரென்று. உண்மையில் அவ்வளவு சேரவில்லை. 350 ரூபா சதக் கணக்குச் சேர்ந்தது. ஆறுமுகமும் மூ.சி.வும் தங்கள் வகையைவிடப் பிறரிடமுஞ் சொற்பம் சேர்த்துத் தந்தார்கள். 1926 ஆவணி நான் இரத்தினபுரியில் நிற்க எனது மைத்துனன் தம்பியரும் மகனும் இறந்துவிட்டார்கள் என்றும் சின்னத்தம்பிக்கும் வல்லி புரத்திற்கும் கடுமையென்றும் தந்திவந்தது. மணி 12 அப்பொழுதே ஒரு அறையில் கொழும்புக்குப் புறப்படுவதாகச் சொன்னார்கள். உடனே சாப்பாட்டைக்கூடக் கவனியாமல் புறப்பட்டுக் கொழும்பு வந்து அங்கு அப்பாக்குட்டி முதலியோருக்கும் அறிவித்து றயிலேறி விடிய எட்டு மணிபோல் கரவெட்டி (எங்கள் வீட்டை யடைந்தேன்). வாணம் பற்றியிருக்கலாமென்று இரத்தின புரியில் அனுமானித்தேன். விஷயம் உண்மை குழந்தையர் பகுதி நாலுவீடும் நாலுஆட்களும் இரண்டுபேர் தகப்பனும் மகனும் உடனே மற்றைய இரண்டுபேரும் 8 நாளையால் வல்லிபுரமும் 15 நாளையால் சின்னத்தம்பியும் இறந்தார்கள். இழவு கொண்டாட்டம் முடிந்து மீண்டும் இரத்தினபுரிக்குப் போனேன். அங்கே (இக்காலம் சி. வ. ஆசிரியர் புலவர் கொழும்பில்) சேர்க்க வேண்டிய பணத்தைச் சேர்த்துக் கொழும்பு வந்து குருநாகல் சென்று வீடுவந்து சேர்ந்தேன்.

**படிப்பித்த தம்பையாவின் குழப்படி**

1926ம் ஆண்டு ஐப்பசி மாதம் பாடசாலை சோதனை. சோதனைத் திகதி குறித்துவந்தபின் 6 நாளைக்கு முன் ஒரு வெள்ளிக்கிழமை ஆசிரியர் தம்பையா பாடசாலைக்கு வரவில்லை. அன்று பின்னேரம் கேள்விப் பட்டேன் தம்பையா தமையன் சபாபதியார் மகள் சின்னத் தங்கத்தைப் பூமாஞ்சியொல்லைக் கிணற்றடிக்குத் தண்ணீருக்குப் போனபொழுது பலவந்தமாகக் குழறக் குழற இழுத்து ஒரு காரில் போட்டுக்கொண்டு போனதாகவும் யாழ்பாணத்தில் கறுவல் செல்லப்பனென்பவருக்குக் கல்யாணஞ்செய்யவுமென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தங்கத்தின் தாயார் வழக்கு வைத்துக் குறித்த தம்பையாவுக்கும் வ.முத்தர் வரணி கந்தப்பன் என்பவர்க்கும் விறாந்தானது. (மாப்பிளை பொம்பிளைக்கும்) அதன் பின் தம்பையா பாடசாலைக்கு வரவில்லை சோதனைக்குமில்லை பின்னரெல்லாரும் பருத்தித்துறைக் கோட்டில் வெளிப்பட்டனர். பெண்ணின் தந்தை சபாபதியார் தம்பி கதிர்காமன் அவர்கள் மைத்துனன் க.கந்தப்பர் (பிச்சாவத்தை) மூவரும் என்னிடம் வந்து தம்பையன் செய்த வேலை உங்களுக்குத் தெரியுந்தானே ஆகையால் நாங்கள் பிள்ளைகளை மறிக்கப்போகிறோமென்றார்கள். அக் காலம் உபாத்திமாருடன் கோபித்தாலும் என்னுடன் கோபித்தாலும் பிள்ளைகளைப் படிக்க விடாது மறித்தலே அவர்களது பிரதம நடவடிக்கையாயிருந்தது. நான் அவர்களுக்குச் சொன்னேன் நானே அவர் விஷயத்தில் நடவடிக்கை எடுக்கப்போகிறேன் நீங்கள் போங்களென்று அவர்களை அனுப்பி விட்டு கைநோட்டீஸ் எழுதி வதிரி, அல்வாய் வடபகுதி எங்கும் விட்டுக் குறித்த திகதி மாபெரும் கூட்டமாகச் சனங்கள் வந்து கூடினர் பாடசாலைகருள்.

தம்பையா ஆசிரியரில் 6 குற்றச்சாட்டு (ஆறு) எதிரி தரப்பென் றெழுதி வாசித்து அவரைச் சபையில் கண்டித்துத் தமையன் சபாபதியனை மன்னிப்புக் கேட்கும்படி செய்து வழக்கையும் விடுவித்துச் சமாளித்து விட்டேன். கலவரம் நடைபெற்றபொழுது சபாபதியான் முல்லைத்தீவில். இந் நிகழ்ச்சி மிகவிரிந்தது சுருக்கியே எழுதி முடித்திருக்கிறேன். இது விஷயம் சமரசமாக முடிந்தபோதிலும் குறித்த தம்பையாவுக்குத் தன் உள்ளத்தில் கறுப்பு வையிரம் அகலவில்லை (என்மேல்) சபாபதியான் என்னைத் தன்னிலும் முதியவர்போல் தன் இருதயத்தில் பதித்து வைத்துக் கொண்டார். நான் முகமன் பாராது நடுவுநிலை நின்று செயலாற்றினேன்.

## 1927 ம் ஆண்டு

ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 2 ம் வருடம் முடிந்து புரட்டாதி முடியமுன் வெளியில் வந்துவிடுவார்கள். 1925 ல் சேர்ந்து பயிற்றப்பட்ட மு.செல்லையாவும் ஆசிரியராக இரண்டு 2 வருடம் முடிந்து 1927 ம் ஆண்டு புரட்டாதி மாதமே எங்கள் பாடசாலையில் சேர்ந்துவிட்டார். இப்பாடசாலைக்குச் சொந்தமும் அனுதாபமுமுடைய ஒருவரைப் பயிற்றவேண்டுமென்ற கொள்கைப்படி மேற்படியார் பயிற்றப்பட்டு ஆசிரியரானவுடன் நேரே எம் பாடசாலையில் ஆசிரியரானார்.



**பிந்திநின்றவர் முந்தியமை**

பாடசாலைக் கட்டிடம் முடித்துப் பிள்ளைகள் பிரவேசமாகிப் பாடசாலையை நடாத்த ஒரு சபையை வகுத்து உறுதியுமெழுதி முடித்தேன். அப்போ முன்வந்தாரெவருமில்லை. அப்போநான் கரவெட்டியிலிருந்து தச்சுத்தொழில் செய்வதுடன் பாடசாலையையும் நடாத்துவது எப்படி முடியும். ஒரு வருஷம் அங்கத்தவர் பணம் நிரையாக வந்தது பின்பு தேய்ந்துகொண்டுபோனது. அப்போ திருவிழாவுக்கப் பணந்தரவில்லையென்ற காரணத்தால் மூ.சி.வும் சேர்ந்தவர்களும் பிள்ளைகளையும் மறித்துப் பணஉதவியுமற்று நின்றார்கள். நான் என் தொழிலையுமிழந்துநின்று பாடுபடுகிறே னென்றமையால் என் மாமன்மாரும் மைத்துனன்மார் சகோதரர் முதலிய என்னைக் கிட்டியவர்கள் ஏதோ சொற்ப பண உதவி செய்து வந்தார்கள். பாடசாலையைக் கிறான்றாக்கப் பாடுபட்டதில் மைத்துனர் சி.சி.வைத்தியர் தேவையான தருணங்களில் என்னுடன் ஒத்துழைத்தார். உபாத்திமாருக்குக் கொடுக்கப் பணமின்மையால் நானே தலைமை உபாத்தியாயினேன். பகலில் கோப்பியைக் குடித்துவிட்டு இரவுச் சாப்பாட்டுக்குக் கரவெட்டிக்குப் போவேன் பெற்றோரிடம். மனைவியும் தன் பெற்றோருடன் சாப்பிடுவா.

ஒரு நாள் பொழுதுபடப் பாடசாலை மானேசர் கையிலைச் சட்டம்பியார் வீட்டிலிருந்தேன். கரவெட்டிக்குப் போகவந்து மேற்படியாருடன் பேசவேண்டியதைப் பேசிக்கொண்டு புறப்பட மழை ஆரம்பித்துச் சரமாரியாகக் கொட்டுகின்றது. ஒரு மணித்தியாலம் என்னைத் தடைசெய்தது. அதன் பின் அவர்கள் தென்னம்பாளை மடலில் சூழ்கட்டிக் கொழுத்தித் தந்தார்கள். நான் புறப்பட்டு றோட்டில் வரமுன் மழை நிமித்தத்தினால் சூழ்நெருப்பவிந்தது மின்னல் வெளிச்சத்துக் குறிப்பில் நடந்து செல்கிறேன். வைரவ கோயில் பின்புறமாக ஒழுங்கையால் இறங்கினேன். அப்போ றோட்டிலை முழங்கால் மட்டில் வெள்ளம் பாய நடந்தேன். வரவரக் கால் கீழ்நோக்கிப் போவதையும் தண்ணீர் முழங்காலுக்கு மேற்படுவதையும் அனுமானித்துக் கேணிக்குள் இறங்கி விட்டேனென்று திரும்பி மீண்டு வெளியேறி மேற்கடைய நடந்து சென்றேன். மின்னலில் கேணியுந்தெரிந்தது. இப்படியே கஷ்டத்துடன் தாய்வீடு சென்று சாப்பிட்டுத் தூங்கி விடிய வதிரிக்குச் சென்றேன்.

## 1920 ம் ஆண்டு

மேற்படி ஆண்டு மாசிமாதம் பாடசாலை உதவி நன்கொடைப் பணம் பெறப் பதிவானதை நாங்கள் சித்திரை மாதம் அறிந்தோம். அதன்பின் நம்மவரெல்லாரும் மிக மனரம்மியத்துடன் காணப்பட்டனர். லோலியொல்லை அம்மன் திருவிழாவுக்குக் கொடுக்கும் பணத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் நின்றாலும் வாணம், சப்பறம், சின்னமேளம், மேல்மேளம் முதலிய பல காட்சிகளை ஒரு இரவுக்கேனும் கண்ணால் கண்டு ரசிப்பார்கள். பாடசாலைக்குக் கொடுத்த பணத்திற்கு எதைக் கண்டு ரசிப்பார்கள். பிரசங்கிமாரைக் கூப்பிட்டுப் பிரசங்கம் செய்வித்தாலும் சிலரிலும் சிலரே ரசிப்பார்கள். அதிலும் என் போன்றோர் பிரசங்கித்தால் செவிமடுத்துக் கேளார்கள். நிற்க பாடசாலை நடை பெற்றுக் கொண்டு வர சோதனைகளும் வருடங்களில் நடைபெற்று வர எல்லாரும் என்னைப் போற்றிப் புகழ்தார்கள். தியாகியென்றனர். தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் பாடசாலையின் பொருட்டு அர்ப்பணித்தவரென்றனர்.

பிற உபாத்திமாரிடம் ஒரு சதமும் கழிக்கமுடியாது எங்கள் உபாத்தி மாரிடம் ஒரு பகுதி கழிப்பதுண்டு. அதில் எனது செலவுக்கும் மட்டு மட்டாகச் சிறுபகுதி பணம் எடுத்துவந்தேன். இடையிடையே மகா சபையில் கணக்குக் காட்டிப் பதிவுப் புத்தகத்தில் பதியப்பட்டு வந்தது பலர் கையொப்பங்களுடன்.

1926 தொடக்கம் ஒரு மாதம் 22.50 ரூபா எனது செலவுக்கெடுக்கலா மென்று சபையில் தீர்த்தார்கள். அப்படியே எடுத்துக் கணக்குக் காட்டி வந்தேன். கிறான்றுப் பணம் அங்கத்தவர்கள் பணம் செலவுக்குக் கட்டாது கடன் வளர்ந்துவந்தது. கிறான்றுப் பணம் செக்காக 1000க்கு மேற்பட வந்ததைக் கண்டு அந்தப் பணச் செக்கு தங்கள் கையில் வரவேண்டியதை யிட்டு இவருடைய கையிலா போக வேண்டு மென்று எண்ணிப்போலும் சி.க.ஆறுமுகமும் மூ.சி.வும் மிக நெருங்கிப் பாடசாலைக்குப் பண உதவிசெய்ய முற்பட்டனர். அதாவது பாடசாலைச் சோதனை முடிந்த அடுத்த மாதம் தொடக்கம் உபாத்திமாருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தொகையை நான் அவர்களுக்கு எழுத வேண்டும். அத்தொகையை அவர்கள் எனக்கு அனுப்ப நானதை உபாத்திமாருக்கக் கொடுக்க வேண்டும். கிறான்று வந்தவுடன் செக்கை அவைக்கு அனுப்பவேண்டும். மூன்று மாதத்தால் செக்கு வருமென் றெண்ணிப் பேசினோம். அதுவர அந்தமுறை ஐந்து மாதமானது. இவர்கள் அனுப்பிய பணத்தைவிட சொற்ப பணந்தான் மிச்சம். அது உபாத்திமாரின்முன் மாற்றி அவர்கள் பணத்தை அவர்களுக்கனுப்பி மிச்சத்தை உபாத்திமார்முன் கடனுக்குக் கொடுத் தேன். பேசிய பேச்சை நான் மாறிவிட்டேனென்றதற்காகத் தாங்கள் செட்டியிடம் ரூபாவுக்கு ஒரு மாதம் 6 ஆறு சதப்படி பணமெடுத் தனுப்பியதென்று அந்த வட்டிப் பணத்தையும் தரும்படி கேட்டார்கள். எனக்கென்ன அவர்கள் கேட்டபடி கொடுத்துவிட்டுக் கணக்கில் பதிந்து விட்டேன்.

1927ல் செல்லையா ஆசிரிய கலாசாலையால் வெளிக்கிட்டுப் பாடசாலையில் உபாத்தியாகச் சேர்ந்தார். அப்போ ஒரு சபைக் கூட்டம்



நடைபெற்றபொழுது பள்ளிக்கூடத்தை தாங்கள் நடத்த வேண்டு மென்றெண்ணிக்கொண்டு என்னிலை அனேக குற்றங்களையும் சில நன்மைகளையும் ஒரு கடதாசியில் எழுதிக்கொண்டுவந்து சி.க. ஆறுமுகம் வாசித்தார். இவர் இதற்கு முன்னும் இவ்விதம் எழுதிக் கொண்டு வந்து வாசித்திருக்கிறார். அவர் காட்டிய குற்றங்களை யெல்லாம் பொய்யென்றும் நீதியற்றவையென்றும் கண்டித்துப் பேசுவேன். சபையிலுள்ளவர்கள் இருபகுதிக்குமுரிய சரிபிழை பேசாது மௌனமாயிருந்து போவார்கள். சில நாளையில் மேற்படி ஆறுமுகம் கொண்டுவந்து வாசிப்பதைக் குப்பைகஞ்சல் என்பேன் சில நாளையில் நல்லதைக் கீழே வடிய விட்டுக் கஞ்சலை ஏந்திநிற்கும் நெய்யரி (பன்னாடை) யென்பேன்.

மேற்படி 1927 ம் ஆண்டு பாடசாலையைத் தங்களிடம் தரும்படி கேட்டார். நான் ஓமென்றேன். வ.சி.சி.வைத்தியரைப் பாடசாலை யைப் பார்க்கும்படி ஒழுங்குசெய்து நானெடுத்த 22.50 ரூபா அவருக்குச் சம்பளம் கொடுக்கவும் ஒழுங்குபண்ணினார்கள். நான் பாடசாலை யுடன் முன்பின் பட்ட கஷ்டங்கள் சமய சம்பந்தமாகச்செய்த பிரசாரங்கள் இவற்றை யெல்லாம் கொண்டுநடத்திய என்னையும் சிலவேளை பாடசாலைக்குள் வந்து மீழும் மேற்படி வைத்தியரையும் சமமாக மதித்தனர். அவர்கள் நடத்திவந்தாலும் நான் செய்யவேண்டிய சமய போதனை சாதனைப் பிள்ளைகளுக்குக் கற்பித்து வந்தேன். இப்படியே அவர்கள் பாடசாலையை நடத்த முற்பட்டுவந்தபொழுது மு.செ.ஆசிரியரை யனுப்பி உதவியாசிரியருக்கு 43 ரூபா சம்பளம் பெறுபவருக்கு 25 ரூபா வேண்டும்படி உடன்படச்செய்தனர். இது விஷயத்தைப்பற்றி என்னுடன் அவர்களேனும் செல்லையாவேனும் கலந்தாலோசிக்கவில்லை. இது எனக்குப்பெரும் ஆத்திரத்தையும் கோபத்தையும் கிளப்பிவிட்டது. அதனால் செல்லையாவை மிகக் கடினமாகப் பேசிக் கண்டித்தேன். அதனால் ஏற்பட்ட கலவரத்தால் ஓர் கூட்டம் கூடிச் செல்லையாவுக்குப் பத்து ரூபாக்கூட்டி 35 ரூபா கொடுக்கும்படி தீர்த்தேன். பாடசாலை நடைமுறை மிகக் கேவலமாகயிருந்தது. இவர்கள் பாடசாலை ஏற்ற பொழுது சோதனைக்கு மூன்று மாதமிருந்தது. அந்த மூன்று மாதமுமே ஊக்கமாகப் படிப்பிக்க வேண்டியது. அப்படியின்மையால் சோதனை யில் மிக வீழ்ச்சியடைந்தது பாடசாலை 9 மாதம் அவர்கள் நடத்திவரச் சம்பளமின்றிப் பாடசாலையை நான் நடத்தப்போகிறே னென்றேன். சரியென்று கைவிட்டார்கள். ஒரு வருஷம் சம்பளமின்றிப் பாடசாலையை நடத்தி வந்தேன். வீழ்ந்த பாடசாலை எழுந்து விட்டது. நான் சம்பளம் எடாது விட்டபோதும் பாடசாலைக்குக் கடன் வந்துவிட்டது. இதற்குக் கணக்குப் பார்க்கிறது அவர்கள்தான். அடுத்த வருடம் எனக்கு 30 ரூபா சம்பளமென்று தீர்த்தார்கள். வரையறுத்துச் சம்பளம் வேண்டுகில் 50 ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தரவேண்டும். அப்போ எனது தச்சுத்தொழியில் ஒரு மாதத்துள் 9 செடிப்பலகை செய்துகொடுத்து 90 ரூபா வேண்டினேன். (வீ. கே. சிற்றம்பலம்) போஸ்மாற்றரிடம்.

1928 ல் சி.வல்லிபுரம் மாமன்மாருடன் கோபித்துக்கொண்டுவந்து ஊருடன் நிற்கப் பாடசாலையில் படிப்பித்துப் படிக்கவுஞ்செய்து தேட்கிழாசு சோதனை எடுக்கவுஞ்செய்தேன். படிக்க மயில்வாகனம் உபாத்தியாயரிடம் சேர்த்துவிட்டேன். அந்தாண்டு வல்லிபுரம் படித்தும் படிப்பித்தும். 1929 ம் ஆண்டு தேட்கிளாஸ் பாசு பண்ணினார். எங்கள் சமூகத்திற்காக ஒரு சைவப் பாடசாலையை ஸ்தாபித்து நடாத்துகிறோமென்ற காரணத்தால் எம் சமூக நாகரீக உயர்ச்சி கருதி அக்காலம் பத்திரிகை வாயிலாகப் பாடசாலைப் பெயரும் என் பெயரும் எங்கும் (இலங்கை, இந்தியா, சிங்கப்பூர்) அடிபட்டதினால் யாழ்ப்பாணம் வாலிப மாநாட்டில் 1929 லும் 1930 லும் இருமுறை என்னையும் அட்டவணையில் சேர்த்துப் பேச்சுக்கழைத்துப் பேசுவித்தார்கள். அங்கு என்னை நிர்வாகசபையில் ஓர் அங்கத்தவருமாக்கினார்கள். அங்கே நான் பேசியதையறிந்த எம்மூர் உயர்சாதி மக்கள் சிலர் அவ்விடத்தில் எனக்கு நல்ல அடி வீழ்ந்ததென்றும் அதனால் என்னை இறந்துவிட்டதாகவும் வதந்தி எழுப்பிவிட்டார்கள்.

**எனது சுற்றுப்பிரயாணம்**

1929 ம் ஆண்டு பாடசாலைக்குப் பணம் சேர்க்கப்போனேன். எம் சமூகத்தினரைவிட வேளாள உத்தியோகத்தவரும் பணமுதவினர். சுன்னாகம் மூத்ததம்பி விதானை மகன் தம்பிப்பிள்ளை வாயிலாகக் காராளபிள்ளை முதலியாரை அறிமுகப்பட்டேன். அவர் பாடசாலை யில் படிக்கும் வறிய ஆண் பெண் பிள்ளைகளுக்குத் தீபாவளிக்குப் பிடவை யனுப்பி வந்தார். (வறிய பிள்ளைகள் 25-30) கணக்கனுப்ப அப்படியே 6 வருடம் அனுப்பினார். பின்னர் அவருக்குச் சில தொல்லையேற்பட்டுப் பெண்சாதியுமிறந்தமையால் பிடவை விஷயம் நின்றுவிட்டது. மேற்படி ஆண்டில் நான் பல இடங்களிலும் உள்ள உத்தியோகத்தரிடம் சென்று கொண்டிருக்கையில் சிலர் என்னைக் கேட்டார்கள் புறோக்கர் செல்லமுத்துவிடம் போனாயா அவர் இப்படியான விஷயங்களுக்கு நல்லாய்க் கொடுப்பவர் போவென்று தூண்டினர். அப்போ நான் அடிக்கடி காராளபிள்ளை முதலியாரிடம் வருவேன். ஒரு நாள் முதலியாருக்குச் செல்லமுத்து விடம் (புறோக்கர்) போகும்படி பலர் சொல்லுகிறார்கள் எனக்கு வீடு தெரியாதென்றேன். உடனே அவர் தனது தோட்டக் கூலியாளைக் கூப்பிட்டு இந்தாளைக் கொண்டுபோய்ச் செல்லமுத்தர் வளவை காட்டிவாவென்றனுப்பினார். அங்கிருந்து சுமார் 2 மைல் வரை நடந்து செல்லமுத்து வீட்டுச் சங்கடத்தால் உள்ளே பிரவேசித்தோம்.



உள்ளே தலைவாசல் வெளியில் ஆங்கில உடை தரித்த ஓர் வாலிபன் எங்களைத் திரும்பிப்பார்த்து என்னவென்றார். காராளபிள்ளை ஐயா உங்கள் வீட்டை இந்தாளுக்குக் காட்டச் சொன்னாரென்று சொல்லித் தோட்டக் கூலி போய்விட்டான். என்னைக் கேட்டார்கள் என்னென்று. ஒரு பாடசாலை விஷயமாக வந்தேனென்றேன். போ..போ... என்றார் என்னிடம் இருக்கும் சாதனங்களைப் பார்க்கவேண்டுமென்றேன். அதொன்றும் வேண்டாம் போய்விடென்றார். நான் அப்படியே ஸ்தம்பித்து நின்றேன். ஆட்கள் சொன்னதென்ன இதுவென்ன 2 மைல் நடந்தென்னவென்று சிந்தித்து நிற்க மறுமுறை அவ் வாலிபன் ஏன் நிற்கிறாயென்று கர்ச்சித்தார். வெய்யில் சுட்டுப்போட்டுது சற்று ஆறுகிறேன். அடுத்த விறாந்தை யிலிருந்து ஒருவர் அதார் இங்காலை வா என்றார் அப்படிப்போக கம்பிக்கறாதி விறாந்தையுள் ஓர் பெரிய ஆள் இருந்து என்ன கேட்கிறா யென்றார். நான் யாழ்ப்பாணம் வடமராட்சி வதிரியிலிருக்கும் பள்ளன். நாங்கள் ஒரு சைவப் பள்ளிக்கூடம் கட்டி நடத்துகிறோம் அதற்குப் பணம் சேர்த்து வருகிறேன் காராளபிள்ளை முதலியாரையா இங்கேயனுப்பிய தென்றேன். அவர்தான் நல்லாய்க் கொடுப்பார் அவரிடந்தான் போய் வேண்டு யாழ்பாணத்தில் கன சைவப் பள்ளிக்கூடங்களிருக்கு உனக்கேனிந்த வேலை நீ போவென்றார். நான் மீண்டு மருதானைக்குப் போய் மறுநாள் விடிய முதலியாருக்குச் செல்லமுத்தர் வீட்டில் நிகழ்ந்தவைகளைச் சொன்னேன். முதலியார் வாறவர் போறவரெல்லாருக்கும் சூரன் பாடசாலைக்குப் பணம் கேட்கப்போனதற்குச் செல்லமுத்தன் இப்படிச் சொன்னானாமென்று நான் சொன்னவை களைச் சொல்லி ஏசினார் கீழ்ப்போக்கி.

எனக்கு முன்னே ஆட்களைத் தெரியாது. வெளியிலிருந்தவர் மகனென்றும் விறாந்தையிலிருந்தவர் தகப்பன் அவர்தான் செல்லமுத்த ரென்றும் அனுமானித்தேன். இது விஷயத்தைச் சுன்னாகம் தம்பிப் பிள்ளைக்கும் சொன்னேன். அவரும் செல்ல முத்தரின் மைத்துனன் அந்த விடுதியிலிருக்கும் ஸ்டேசன் மாஸ்டருக்குக் கிட்டச் செல்லமுத்தரைச் சிம்புபறக்க ஏசினார். பின்னர் தம்பிப்பிள்ளையைக் கேட்டேன் செல்லமுத்தரின் விலாசத்தை எஸ்.செல்லமுத்து பப்பியன் கொம்பனி யென்றால் போகுமென்றார். உடனே ஒரு காகிதமெழுதி விலாசத்தையு மெழுதி ஒரு தபால்பெட்டித் தூணுள் போட்டுவிட்டு நான் கண்டி வதுளைப்பக்கம் போனேன். பதினைந்து நாளின் பின் கண்டியால் வந்து காராளபிள்ளை முதலியார் வீட்டுக்குப் போனேன். அவர் என்னைக் கண்டவுடன் உன்னடை செல்லமுத்தரெல்லே இங்கே வந்து உன்னை எங்கேயென்று கேட்டு விசாரித்துப் போகிறாரென்றார். அதை விபரமாகச் சொல்லும்படி கேட்டேன். அவர் வந்தவுடன் நீங்கள் ஒருவனை அனுப்பினீர்கள் அவன் கம்பக் பண்ண வந்தவனென்றெண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டேன். இப்போ விஷயம் உண்மையென்றறிந்தேன். அந்நாள் எனக்கொரு காகிதமும் எழுதியிருந்தது இப்போ ஆளெங்கேயென்றார். இப்போ எட்டுப்பத்து நாளாக இங்கேவரக் காணவில்லை ஊருக்கோ வேறெங்கேனுமோ தெரியவில்லையென்றேன். ஆளிங்கே வந்தால் வரக்காட்டுங்கோ என்று சொல்லிப்போகிறாரென்று முதலியார் சொல்லிமுடித்தார்.

பின்னர் முதலியார் என்னை செல்லமுத்தரிடம் போகப்போறியா வென்று கேட்டார். ஐயாவின் விருப்பப்படியென்று முதலியாரை முன்னுக்கு வைத்தேன் (எனக்குப்போக விருப்பமில்லை) போ..போ.. உவனொரு இருபத்தைந்து ரூபா 25 தந்தானில்லையாக்கும் நீ போக வேண்டாம். நானுனக்குப் பணம் சேர்த்துத் தருகிறேன் காலை இங்கேவா வென்றார். மறுநாட் காலை முதலியார் வீட்டுக்குப் போனேன். முதலியார் புறப்படத்தயாராயிருந்தார். றைவருடன் முன்னுக்கிருவென்றார் அப்படியே காரில் ஏறி முன்னுக்கு றைவருடனிருந்தேன். சில கொம்பனிகள் வங்கிகள் முதலிய விடங்களில் என்னைக் கூட்டிச்சென்று பணஞ் சேர்த்துத்தந்தார். 150 ரூபா இத்துடன் ஊருக்கு மீண்டேன்.

1930 டீ.எம்.கந்தையா, சாமுவேல் (தம்பிமுத்து), செல்லையா, சி.வல்லிபுரம், பொன்னம்மா, தம்பையா இவர் செல்லையா ஆசிரியராக வந்த சில நாளையால் விலகிவிட்டார். தலைமையாசிரியராக இருந்த டீ.எம்.கந்தையா விலக அந்த இடத்துக்கு (தலைமை ஆசிரியர்) தா.சாமுவேல் ஆசிரியரை நியமித்தேன். இவர் பாடசாலையை நடத்தும் ஆற்றலில்லாவிடிலும் வயதில் மூத்தவரென்று வைத்தேன். பின்னர் சில பிழைகள் எங்கள் பாடசாலைக்கு மாறாகவும் தங்கள் பாடசாலைக்கு நன்மையாகவுங் கருமங்கள் செய்யத் தொடங்கினார். இதை நான் பூரணமாக அறிந்தபின் அப்போ இப்பகுதி வித்தியாதரிசி கா.கந்தையா (சின்னக்கந்தையா) அவர் கோபிக்கிறாரென்று அதாவது பயிற்றப்பட்ட ஆசிரியரை உதவி ஆசிரியராகவும் (மு.செல்லையாவை) பயிற்றப்படாத ஆசிரியரைத் தலைமையாசிரியராகவும் (தா.சாமுவேல்) தம்பிமுத்துவை தலைமையாசிரியராகவும் வைத்திருப்பது பாடசாலைக்குத் தகுதியல்ல வெனச் சினந்தாரென்று மு.செ. ஆசிரியரைத் தலைமையாசிரியராக்கி விட்டேன். பின்பு சில மாதங்கள் சென்று சாமுவேல் (தம்பிமுத்து) மிஷன் பாடசாலையில் உதவியாசிரியரானார்.

1930 ம் ஆண்டு சி.வல்லிபுரம் ஆசிரியர் கோப்பாய் ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சையில் சித்தியடைந்து அவரையங்கே வரும்படி எழுதிய கடிதத்தில் காட்டிய திகதியில் நானும் வ.சி.சி. வைத்தியரும் வல்லிபுரம் ஆசிரியரைக் கூட்டிக்கொண்டு போய் ஆசிரிய



கலாசாலையில் சேர்த்துவிட்டோம். அப்போ சாப்பாட்டுச் செலவும் கவுண்மென்றுப் பொறுப்பு அதிபர் பொன்னையா எனக்குச் சொன்னார் ஒரு சின்ன வாளியும் கயிறும் வேண்டிக்கொடு வல்லிபுரத்துக்குக் குளிப்பதற்கென்று. அப்படியே வேண்டிக் கொடுத்து வந்தோம். ஒரு கிழமையால் வல்லிபுரத்தை வீட்டுக்குப் போ பின்பு அறிவிக்கிறே னென்ற அதிபர் அனுப்பி விட்டார். காரணம் சமபோசனம் செயலில் வந்தமையால் 40 மாணவர் அதற்குடன்பட வில்லையென்று ஒரு கிழமை கலாசாலைப் படிப்பை நிற்பாட்டி யாழ்ப்பாணச் சாதித் துவேஷம்பூண்ட சிலராலும் அதிபர் முதலியோராலும் வித்தியாகர்த்தர் கவுணர் இருவருக்கும் தங்களால் ஏலக்கூடிய அளவு நியாயங்களைக் காட்டி யெழுதியும் சில பிராமணக் குருக்கள்மாரும் பிரமுகத்தர்களும் தூது போயும் இருவரும் சட்டம் சட்டம் தான் அதை இனி ஒருபோதும் மாற்ற முடியாதென்று பெலப் படுத்திவிட்டனர். பிராமண முதலியோர் காட்டிய நியாயங்கள் (1) கீழ்சாதியும் மேல்சாதியும் சமமாயிருந்துண்ணல் ஒருகாலத்திலும் வழங்காச்செயல் (2) எங்கள் சைவசமயாசாரத்துக்கு முழுமாறான கொள்கை (3) ஒரேயொரு தாழ்ந்தசாதி மாணவனுக்காக 40 மாணவர் நஷ்டமடையலாமா (4) யாழ்ப்பாணத் தேச வழக்கத்தை அரசாங்கம் மாற்றியமைப்பது நீதியாகுமா (5) அவர்களுக்கும் (தாழ்ந்தசாதிக்கும்) எங்களுக்குமிடையேயுள்ள அன்னியோன்னிய பயபக்தி மரியாதை முதலியவைகளைக் கெடுத்துப் பகைமூட்டிவிடும் செயலாகும்.

அரசினர் இப்பொழுது ஏற்படுத்திய சமாசன சமபோசனச் சட்டம் இந்த நியாயங்களையெல்லாம் குப்பைத் தொட்டியில் போட்டுப் போய் வாருங்களென்று வழிவிட்டனுப்பினர் வித்தியாகர்த்தரும் கவுணரும் இதன் பின் வடமராட்சிப் பிரதிநிதி ஸ்ரீ பத்மநாதன் யோசனைப்படி வேறுபுறமாகத் திரும்பினார்கள். அதாவது வல்லிபுரம் ஒரு ஆள்தானே ஆகையால் வல்லிபுரத்தின் பெற்றார் அன்றிப் பராமரிப்புக்காரர் வித்தியாகர்த்தருக்கு ஒரு கடிதம் எழுதவேண்டும். அதன் சாரம் எங்களின் ஒரு ஆசிரிய மாணவனின் நிமித்தம் 40 ஆசிரிய மாணவர் கவுண்மேந்து செய்யும் நன்மையை இழந்து வெளியில் தங்கள் போசனத்தை ஒழுங்கு பண்ணிச் சாப்பிடுகிறார்கள். அதைக் காண எங்களுக்குப் பெரும் பரிதாப மாயிருக்கிறது. ஆகவே எங்கள் ஆசிரிய மாணவனாகிய சி.வல்லிபுர மென்பவர் எங்களின் பாராமரிப்புக்காரனாகையால் உங்களின் உத்தரவுப் படி குறித்த வல்லிபுரத்துக்கு வெளியில் போசனம் ஒழுங்கு பண்ணிக் கொடுக்க அனுமதிக்கவேண்டுமென வித்தியாகர்த்தர் துரையவர்களைத் தாழ்மையான வணக்கத்துடன் வேண்டுகின்றோம். (இப்படியே எழுதும்படி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் பொன்னையாவும் உப அதிபர் இராசசிங்கமும் கேட்டுக் கொண்டபடி நானும் வ.சி.சி.வைத்தியரும் மேற்படியான சாரப்படி எழுதி எங்கள் கையொப்பங்களையும் போட்டு அவர்களையே அனுப்பும்படி அதிபர்களிடமே கொடுத்துவிட்டோம். பின்னர் அவர்களதை அனுப்பட்டும். எங்களுக்கு மறுமொழியே கிடையா தென்று மைத்துனர் வ.சி.சி வைத்தியருக்கும் எம்மவர் சிலருக்கும் சொன்னேன். உங்கள் கடிதம் கிடைத்ததென்ற போஸ்காட்டொன்று வந்ததேயன்றிக் கடிதத்திற்கு நான் சொன்னபடி யாதொரு பதிலும் ஒரு நாளும் வரவில்லை. இதற்கிடையில் திக்கம் ஊரப்புக்காத்துச் சண்முகம் சொன்னதாகத் தெகனைக் கந்தப்பர் (ஆசிரியர் முருகேஸ் தகப்பன்) எனக்குச் சொன்னார். ஒரு பள்ப் பொடியனுக்காக 40 வெள்ளாம் பொடியள் வெளியில் விடுதிவிட வந்துவிட்டது. இது ஊரெல்லாம் பெரும் ஆத்திரத்தை உண்டு பண்ணியிருக்கு. ஆகையால் கோண்டாவில் சுருட்டுக் கொட்டில் காடையன்கள் மேற்படி பள்ப் பொடியளை அடித்துக்கொல்லப் போகிறார்களென்று, இது விஷயம் பேசியமை உண்மையாயிருக்கும் நாங்கள் பயந்து பொடியளைக் கலாசாலையால் எடுத்துப் படிப்பை நிற்பாட்டென்று வெருட்டல் வதந்தியுமாயிருக்கலா மென்றும் எண்ணினேன். மற்றையோருக்கும் சொன்னேன்.

இருந்தாலும் நானும் வ.சி.சி.வைத்தியர், சி.க.ஆறுமுகம், க.வ.கந்தையா, மூ.சி.கந்தவனம் ஆகியோரும் மேற்படி கந்தையா வின் காரையெடுத்துக்கொண்டு கலாசாலைக்குப் போனோம். கலாசாலை வாசல் றோட்டுக்கானில் காரை நிற்பாட்டினோம். சி.க.ஆறுமுகம் காருள்ளிருக்க மற்றையோரிறங்கி உள்ளே போனோம். வல்லிபுரம் இருக்கும் அறைக்குள் போனோம். முதலாம் வருடம் படிக்கும் மாணவர் மண்டபம் வெறுமனே வெளித்திருக்க வல்லிபுரம் பிறிம்பான ஓரறையிலிருந்தார். இங்கேயுள்ள நிலமை எப்படியென்று வினவினேன். நானிங்கேயிருந்து படிக்கப் பயமாயிருக்கு எப்போதும் பெரிய பெரிய மனிதர் கார்களில் வந்து அதிபர்களுடன் குசுகுசுத்துப் போகிறார்கள். சித்தமணியம்கூட வந்து போனாரென்று பதட்டத்துடன் சொல்லித்தான் தெல்லிப்பளையில் படிக்க விரும்புவதாகச் சொன்னார் வல்லிபுரம். மருமகன் பதகழித்தலைக்கண்ட மாமன் வ.சி.சி.வைத்தியரும் பொடியனுக்கு மூளை குழம்பிப்போம் இங்கே படிக்கவேண்டாமென்று முணங் கினார். நான் கந்தையா, கந்தவனம் மூவரும் அவர்களைப்பேசி உற்சாகமெழுப்பிக் கதைத்துத் தேற்றினோம். அவர்கள் மனம் தேறிய பாடில்லை. அப்பொழுது என் மனம் பட்ட வேதனை பேர் பெற்ற வதிரியில் எம்பாடசாலையில் எம் சொந்த மாணவனை வெருட்டிக் கலாசாலையால் துரத்தினார்கள் என்ற அவப்பெயர் தெல்லிப்பளைப்



பறையர் யாழ்ப்பாணம் முதலிய பல பாகங்களிலுள்ள பள்ளர் நளவர்களால் பேசப்படப்போகின்றனவே யென்று மிக வருந்தினேன்.

பின்பு அதிபர்களையும் தா.சி.ஆசிரியரையுங் கண்டு இதே காரணமான பல விஷயங்களையும் பேசிக் கோண்டாவில் சுருட்டுக் கொட்டில் காடையர் வல்லிபுரத்தை அடித்துக் கொல்ல எத்தனிக் கிறார்கள் என்ற பேச்சுத் திக்கம் சண்முகமென்றவர் வாயிலாகப் பலவிடங்களிலும் பரவியிருக்கென்று அதிபர்களுக்குச் சொன்னேன். சண்முகத்தின் மகன் தங்கராசனென்ற மாணவனும் 40 மாணவரில் ஒருவர். மேற்படி சுருட்டுக் கொட்டிலார் கதையிருக்கிறமையால் யாழ்ப்பாணம் முதலிய வெளியிடங்களுக்கு நல்லூர்க் கந்தசாமி ஆலய தரிசனைக்கு வல்லிபுரத்தை விடப்படாதென்றும் கலாசாலையை விட்டெங்கும் விடப்படாதென்றும் வீட்டுக்கு விடுகிற அன்றைக்கு நாங்கள் வந்து கூட்டிப் போவோமென்றுஞ் சொல்லி மிக வற்புறுத்தி வல்லிபுரத்தை இன்று எங்களுடன் விடும்படி அதிபரைக்கேட்டுக் கூட்டிவந்தோம்.

### வல்லிபுரத்தையும் மாமன் வ.சி.சி.வைத்தியரையும் பயம் தெளிவித்தல்

ஆசிரிய கலாசாலையால் எல்லாரும் காரில் வரும்பொழுது இனிமேல் அதிபரவை இருவரும் இருபொலீஸ்காரர்போல உன்மேல் அதிசிரத்தை கொண்டு உன்னைப் பாதுகாப்பார்கள். உனக்கேதும் தீமை பிறரால் வரும்பட்சத்தில் அது தங்களையும் பாதிக்குமென்ற அச்சத்துடன் என்றும் விழித்தபடியிருப்பர். ஆகவே இனிமேலுங்கள் பயப்பிராந்தியை மறந்து விடுங்களென்றேன். அதையெல்லாரும் வற்புறுத்திப் பேசினர். அடுத்த படியாக சி.வ.ஆசிரியர் இந்தமுறை படியாது நிற்பாட்டினால் எங்கள் பாடசாலைக்கு வதிரியிலுள்ள எங்கள் சமூகத்திற்கு எக்காலமும் அழியாத வடுவசை ஏற்படும். அதாவது தெல்லிப்பளை யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமுள்ள பறையர், நளவர், பள்ளர் முதலிய எல்லாச் சாதி சமூகத்தினரும் வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாசாலையிலிருந்து வந்த ஓர் ஆசிரிய மாணவனைச் சமபோசனங்காரணமாக (வேளாளர்) வெருட்டிக் கலைத்துவிட்டார்களென்ற அவப்பேருக்கு இனி நாம் உயிருடனிருந் தென்ன, பாடசாலையென்று எங்களுக்கு எதற்காக வென்று ஆவேசத்துடன் பேசினேன். காரில் வந்த மற்றையோரும் உண்மையான பேச்சென்று அனுவதித்துப் பேசினர். யாழ்ப்பாணம் மாத்திரமல்ல இலங்கையில் நாமிருந்து வியாபாரஞ் செய்யும் பட்டனங்களிலுமுள்ள வருமென்று மிக வருந்திப் பேசினர். க.வ.கந்தையா இரத்தினபுரி, க.மூ.சி.கந்தவனம் காலி, சி.க.ஆறுமுகம் குருநாகல், மற்றவர் நான், வ.சி.சிலம்பு வைத்தியர், சி.வல்லிபுரம் ஆகியோர் தான் காரில் வந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேறிவிட்டார்கள்

மேற்படி வைத்தியரும் மருமகன் வல்லிபுரமும் தேறித் திடங் கொண்டுவிட்டார்கள். எல்லாரும் அவரவர் வீடுகளில் சேர்ந்தோம். பாடசாலையில் சரஸ்வதி பூசை முடிந்த மறுநாள் விஷயதசமிப்பூசை நடைபெற்று முடியச் சுமார் 2-3 மணியானது (பிற்பகல்) ஆரோ ஓர் கரவெட்டியில் ஆள் வந்து உன்னைச் சித்தமணியம் வரட்டாமென்று வ.சி.சி.வைத்தியருக்குச் சொன்னார் அப்போ நான் வைத்தியருக்கு மர்மமாகச் சொன்னேன் சி.வ. வின் ஆசிரிய கலாசாலை விஷயமாயின் நீர் ஒரு பேச்சுக்கும் முன்னிற்கவேண்டாம். என் தலையிலேயே ஏற்றி விடுமென்று சொல்லிப் போய்வரும்படி அனுப்பினேன். வந்தவர் எருமை வீரகத்தி. மணியகாரனிடம் சென்ற வைத்தியர் நாங்கள் போன விஷயங் களைச் சொல்லுவாரென்றெண்ணி அன்றிரவு 10 மணியளவில் கோப்பி குடித்துக்கொண்டிருக்கையில் ஓய்யென்று வைத்தியர் வழக்கப்படி கூப்பிடுமாப்போல் கூப்பிட்டார். நானும் வழக்கம்போல் ஓம் வாருமென் றேன். இன்னுமாள் இங்கே நிற்கிறதென்றார் நானெழுந்து பாடசாலைக் குப் போனேன். உன்னைப் பெரியவர் கூட்டிவரட்டா மென்றார் வந்தவர். அவர் கரவெட்டி வேளாளன் சாதி அபிமானம், சைவாபிமானம், கல்வியபிமானம் மூன்றிலும் முன் நிற்பவர் என்னுடன் நன்கு பழகி ஊடாடியவர் தமிழ்க் கல்வி சைவசித்தாந்தம் ஓரளவு படித்தவர். மாந்தாவத்தைச் சட்டம்பியார் மகன் ஆள்வாப்பிள்ளை இவர் பெயர்.

சரி வருகிறென்று கூடிக்கொண்டு மூன்றுபேரும் போகும்பொழுது சிவியான்வெட்டையில் மேற்படி ஆள்வாப்பிள்ளை விழித்துச் சூரன் நீயுமோர் சைவாபிமானி எங்கள் சைவசமயத்தை நாங்கள் பாதுகாக்க வேண்டுமென்றார், அதற்கென்ன தடையென்றேன். இல்லைப் பரியாரியின் மருமகன் ஒரு பொடியனால் ஆசிரிய கலாசாலை யிலிருந்து 40 சைவப்பொடியள் வெளியே போயிருக்கிறார்கள் அதுதானென்றார். இதிலிருந்து படிப்படியாகப் பல கேள்விகளை எழுப்பி அவரை மடக்கலாம். அழுத்தமாக நான் சொன்னேன், எங்கள் பொடியன் மாமிசமில்லாச் சைவப்பொடியன் வெளியேபோனதென்ற 40 சைவப் பொடியள் என்பவற்றுள் கூடிய பாகம் மீன், இறைச்சி முதலியவை புசிக்கும் பொடியள் திக்கம் சண்முகம் பள்ள வீடுகளிலிருந்துதான் கள்குடிப்பவர். அவரும் சைவனா அவரின் மகன் தங்கராசா என்ற பொடியனும் குறித்த 40 பொடியளில் ஒருவராம். அன்றியும் எத்தனையோ வேளாளர் தாங்கள் சைவமென்று பள்ள நளவ வீடுகளில் கள்ளைக் குடித்துவிட்டுச் சைவக் கோயில்களிலும் சைவ வேளாளர் வீடுகளிலும் பிரவேசித்து அத்தான், அம்மான், மகன், மருமகன் என்று முறையுங் கொண்டாடுகிறார்களே அதனால் சைவ சமயங் கெட்டுப் போகாது.



பாதுகாக்கப்பட்டு வருகின்றதுதானே ஆனால் எங்கள் பொடியன் மச்சமாமிசம் புசியாத பள்ப் பொடியன் கவுண்மேன்து ஆசிரிய கலாசாலையுட் பிரவேசித்துச் சைவ சமயத்தைப் பாழாக்கப் போகிறா னென்று நீங்களேன் பயப்பிடுவானென்றேன்.

நீ சொல்லுறது சரிதான் அதனாலொன்றுமில்லை. வழக்கத்துக்கு மாறாகயிருக்கு அவங்கடை சமபோசனச் சட்டமென்றார். அப்போது சமயத்தைக் கெடுக்கவில்லைச் சாதிக்கட்டுப்பாடு அதுவும் உங்கள் வீட்டிலுள்ள வாரக்கார நளப்பொடியன் அடுக்களைத் (குசினி) தாவாரத் திலிருந்து சாப்பிடும்பொழுது நீங்களும் அவன்கிட்டயிருந்து தானே சாப்பிடுகிறீர்கள். அதுபோலத்தானே எங்கள் பொடியனும் தனக்கென்ற பாத்திரத்தில் சாப்பிடுவது. இது சாதியையும் பாதிக்கவில்லையே யென்றேன். அவர் அத்துடன் பேச்சுமூச்சின்றி நெல்லியடிச்சந்தியினின்று எனக்குத் தூக்கம் பிடிக்கிறது நீங்கள் போங்கள் நான் வீட்டுக்குப் போகிறேன். முதல் இராசசிங்கத்தைக் கண்டு பின் மணியத்திடம் போங்களென்று போனார்.

ஆள்வாப்பிள்ளை தன் வீட்டுக்குப்போக நானும் வைத்தியரும் உப அதிபர் இராசசிங்கம் வீட்டுக்குப் போனோம். மணி 10.30 பத்தரை யிருக்கும் அவர் எங்கள் வரவை எதிர்பார்த்திருந்தார் எங்களைக் கண்ட வுடன் நன்கு வரவேற்று இருத்தி (தரையில்) கதையை ஆரம்பித்தார். மணியகாரன்மார் இருவரும் எங்கள் பாடசாலைக்குச் செய்த நன்மைகள் தான் செய்த நன்மைகள் அதிபர் பொன்னையா செய்த நன்மை இவைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார். ஒன்றையும் மறுக்காமல் ஆம் உண்மையென்றோம். ஆனால் இப்போ ஆசிரிய கலாசாலையில் வல்லிபுரம் ஒரு மாணவனால் 40 மாணவர் கவுண்மேந்து கொடுக்கும் சாப்பாட்டை இழந்து வெளியே தாங்கள் செலவுசெய்து சாப்பிடுகிறார்கள். அதைப் பார்க்க பெரும் பரிதாப மாயிருக்கு இந்தப் பரிதாபத்தை நீங்கள் தீர்க்க வேண்டுமென்று கேட்டார். நாங்கள் தீர்க்கும் வழி எப்படி யென்றோம். யாழ்ப்பாணப் பிரதிநிதி மகாதேவா சொன்னார் தான் வெளியிலிருந்து சாப்பிடுகிறே னென்று வல்லிபுரம் எழுதித் தந்தால் வித்தியாகர்த்தருடன் தான் பேசியதைச் சரிப்பண்ணிவிடுகிறேனென்று. ஆகையால் நீங்கள் செய்யுமுதவி வல்லிபுரத்தைக்கொண்டு வித்தியா கர்த்தருக்கு ஒரு கடிதம் எழுதுவித்துத் தரவேண்டுமென்றார்.

இதென்ன கேள்வி அப்படியானால் வல்லிபுரத்தைப் படியாது நிற்பாட்டிவிடுவோமென்றேன். சேய்ச்சே சாதனா பாடசாலையில் துரையப்பா வல்லிபுரத்துக்குச் சாப்பாடு கொடுக்க அதிபர் ஒழுங்கு செய்வார். அவர்களைப்போல வேறுவீட்டுக்குப் போகத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் சாதனா பாடசாலையுள்தானே அதனால் ஒரு குறையுமில்லை படிப்பை நிற்பாட்டுவோமென்றதைப் பேசவேண்டாம். இன்னுமந்த 40 மாணவரிடத்திலும் ரூபா 800 எண்ணூறு வேண்டி உங்கள் பாடசாலைக்குத் தரலாமென்றார். அதிருக்கட்டும் வித்தியாகர்த்தருக்கு வல்லிபுரம் கடிதத்தை எழுதியனுப்பிவிட நீ படிக்கவேண்டாமென்று வித்தியா கர்த்தர் எழுதிவிட்டால் அதன் பின் நடப்பதென்னவென்றேன். அப்படி வராமல் மகாதேவா பேசுவார் என்றார். மகாதேவா பேச்சை வித்தியா கர்த்தர் மறுத்தால் செய்வ தென்னவென்றேன். அப்படி யொன்றும் வராதென்று அதிபர் பொன்னையா உங்களுக்கு பொறுப்புத் தருவா ரென்றார். சரி இனி மணியகாரனைப் போய்க் காணுங்களென்று எங்களை அனுப்பினார்.

நாங்கள் புறப்பட்டு மணியகாரன் வீட்டுக்குச் சென்றோம். உச்சில் வயல் வெளிக்கடுத்த ஓடை வெல்லன் வீடு அப்போ மணி 12 கடந்தி ருக்கும் போனவுடன் செருமினோம் விளக்கொன்றும் எரியவில்லை, தலைவாசலில் படுத்திருந்த மணியகாரனின் பெறா மகன் எருமை வீரகத்தி எங்கள் அரவத்தைக் கேட்டு உதாரென்றார் நாங்கள் இருவரும் அது நாங்களென்று எங்கள் பெயர்களைச் சொன்னோம். உடனே வீரகத்தி எணை குஞ்சியென மணியம் பெண்சாதியை எழுப்பினார். மணியம் எழுந்து விளக்குடன் வெத்திலைக் கொட்டுங் கொண்டுவந்து எங்களைச் சப்புங்களென்று சொல்லிப் புதினமென் னென்று என்னைக் கேட்டார். எளிய சாதியாகப் பிறந்தோம் அதுதான் புதினமென்றேன். சாதியென்ன முன்னே கொஞ்சம் பணம் வைத்திருப் பவரை மற்றையோர் உடையாரென்றும் அவர் வீட்டை உடையார் வீடென்றும் சொல்லு வார்கள் இதுதான் பெரிய சாதி சின்னச் சாதி யென்றார். அது கிடக்குது எதற்காக என்னை வரச்சொல்லி இவரை அனுப்பியதென்றேன். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பரியாரியின் மருமகன் ஒரு பொடியனாலை 40 பொடியன்களுக்குக் கவுண்மேந்து கொடுக்கிற பணம் இல்லாமல் போகிறது ஆகையால் அந்தப் பொடியனைக்கொண்டு ஒரு காகிதம் வித்தியாகர்த்தருக்கு எழுதினால் தான் சரிப்பண்ணுவேனென் றாராம் மகாதேவா அதுதான் உன்னைக் கூப்பிட்டேனென்றார். இதாருடைய எடுப்பு நம்முடையதோவென்றேன். நீ வதிரிக்குப் போனாப்போலை என்னைப்பற்றித் தெரியாதோ உனக்கு நானேன் இதைக்கேட்கிறேன் வயிறு கழுவுகிறவன்கள் விடாங்களாமென்றார். அவருடன் அதிகம் பேசமுடியாமையால் பொடியன் (வல்லிபுரம்) வித்தியாகர்த்தருக்கு கடிதமெழுதினால் நீ படிக்க வேண்டாம் போகலா மென்று வித்தியா கர்த்தர் எழுதினால் என்ன செய்கிறதென்றேன். அப்படி ஒன்றும் வராதபடி பொன்னையா உங்களுக்குப் பொறுப்புத் தருவார் விடிய அவரைக்கண்டு அதைப் பற்றிப்பேசி ஒழுங்கு பண்ணுங்கோ



என்று சொல்லித் தன் பேச்சை முடித்தார். நாங்கள் விடைபெற்று மீண்டோம்.

மறுநாள் விடிய முன் எங்கள் கறுவல் சிவலை மாடுகளைப் பூட்டி வண்டியில் நானும் வைத்தியரும் தம்பி நாகமுத்தன் சாரதியாகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குப் போனோம். அதிபர் பொன்னையாவை 7 மணிபோல் கண்டோம். உப அதிபர் இராசசிங்கத் துடனும் வீ.மு.சி.மணியகாரனுடனும் சம்பாசித்த முடிவைச் சொன்னோம். அதாவது வல்லிபுரம் தான் வெளியிலிருந்து சாப்பிடு கிறேனென்று வித்தியாகர்த்தருக்குக் கடிதமெழுதுவது அதற்கு வித்தியாகர்த்தர் வல்லிபுரத்தை நீ படிக்கவேண்டாம் போவென்று சொல்லாமல் அன்றி வல்லிபுரத்துக்கு ஏதொரு விதத்திலும் படிப்புக்குத் தடை நேராமல் பாதுகாப்பது அதிபருடன் அதற்கவர் உங்களுக்குப் பொறுப்புத் தருவாரென்று மணியகாரனும் உப அதிபரும் சொன்னார் களென்றோம். உடனே அதிபர் திடுக்கிட்டுச் சேச்சே அவன்கள் என்னெத்தை எழுதுவான்களோ ஆர் கண்டது நானதற்குப் பொறுப்புத் தரமுடியாதென்றார். சரி நாங்கள் போக விடைகேட்டு வீடுவந்து சேர்ந்தோம்.

கலாசாலை சில நாளைக்குப் படிப்பை நிற்பாட்டியதால் வல்லிபுரமும் ஊருடன் நிற்கிறார். ஒரு நாள் இராசசிங்கம் உங்களை வரட்டாமென்று வல்லிபுரம் சொல்ல நான் வல்லிபுரத்துடன் கூடிக்கொண்டு இராசசிங்கத்திடம் போனேன். அவர் என்னைக் கண்டவுடன் சொன்னார் வெளியே நிற்கும் 40 மாணவரிடமும் 800 ரூபா உங்கள் பாடசாலைக்கு உபகரிக்கப் பண்ணலாம். வல்லிபுரத்தைக் கொண்டு தான் வெளி யிலிருந்து சாப்பிடுகிறேனென்று வித்தியாகர்த்தருக்குக் காகிதம் எழுதும்படி கேட்டார். நாங்கள் அயலவரென்றும் உங்களை வெள்ளாளரென்றும் எங்களுக்கும் உங்களுக்கும் இருக்கும் அன்பு ஐக்கியம் மாறுபடக்கூடாதென்ற கொள்கைப்படி நாங்கள் நடந்து கொள்வதானால் நீங்கள் நினைத்துக்கொள்வது இவன்கள் பள்ளன்கள் தானே காரியந் தெரியாதவன்கள் நாங்கள் சொல்லுவதெதையும் தட்டி நடவான்கள் என்று எண்ணிக் கொள்கிறீர்கள் என்றேன். ஏன் அப்படி யெல்லாம் சொல்லுகிறாயென்றார். கோப்பாய் ஆசிரிய கலாசாலை சைவவேளாளருக்குச் சொந்தமானதாவென்றேன். அப்படியார் சொன்ன தென்றார். அப்படியானபடியால்தானே எங்கள் பள்ப் பொடியன் படிக்கப் போனதற்காக 40 வெள்ளாம் பொடியளும் வெளியினாப்படியால் இவனொரு கடிதம் வித்தியாகர்த்தருக்கு எழுதும்படி நெருக்குகிறீர்கள். கற்கூசுக்குள் எங்கள் பொடியள் போகப்படாது. ஒரு வடலிக் கலட்டிக் காட்டுக்குப் போகவேண்டும். கிணற்றில் இறைக்கப்படாது ஒரு வாளியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிறும் என்னை வேண்டிக் கொடுக்கச்சொல்லி வேண்டிக்கொடுத்ததைக் கொண்டு புல்லுத் தோட்டத்தில் போய்க் குளித்துவரவேண்டும் உங்கள் வண்ணான் கலாசாலைக்குள் வந்து உடுப்புகளை எடுத்துப் போகலாம் எங்கள் வண்ணான் அங்கு வரப்படாது. பொடியன் வண்ணான் வீட்டுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். கடைசி காகித விஷயத்துக்கு அதிபர் பொறுப்புச் சொல்லவோ தரவோ முடியாதென்றா ரென்றேன். இவற்றையெல்லாம் கேட்ட உப அதிபர் இராசசிங்கம் திகைத்தார். இப்படியான கேள்விகள் வந்தால் சொல்லும் பதிலென்ன வென்றார் இப்படியெல்லாம் செய்ததாரென்றார். ஆரென்பது எனக்குத் தெரியாது இப்படியாகவே நடைபெறுகிற தென்றேன். இத்துடன் கடிதக் கேள்வி நின்றுவிட்டது. அவரிடம் விடைபெற்று வருகையில் வல்லிபுரத்துக்கு அதிக தென்பு ஏற்பட்டது. நான் சொன்ன நியாயங்கள் அவரைக் கலக்கிவிட்டது. அதிலிருந்து வல்லிபுரத்துக்கு மிக உற்சாகம் ஏற்பட்ட தாகத் தோன்றியது எனக்கு. அத்துடன் சமபோசனப் பிராந்திக் கதை கலவரங்களெல்லாம் நின்று விட்டது. அப்படியிருந்தும் வல்லிபுரம் கலாசாலையை விட்டுத் தனிமையில் போவது கட்டுப்பாடாகவே யிருந்தது.

## 1931 ல்

எங்கள் பாடசாலையில் எஸ்.எஸ். சி. பாசுபண்ணி மேற்படி வருடம் ஆசிரிய கலாசாலைப் பிரவேசத்திற்கு அப்பிளிக்கேசன் போட்ட ஆ.ம.செல்லத்துரை, வ.தருமலிங்கம் ஆகிய இரு மாணவருக்கும் மேற்படி தவணைக்கிடையில் வரவேண்டிய அப்ளிக்கேசன் வரவு மில்லை அவர்களைத் தவணைத் திகதிக்கு வரும்படி ஏதொரு மறுமொழி யுமில்லை. இது சமபோசனத் துவேசத்தால் இந்த இருவரையும் துண்டித்துவிட அதிபர்களும் அவர்களைச் சார்ந்த துவேஷிகளும் கொண்ட சூழ்ச்சியால் மேற்படி மாணவர்களின் அப்ளிக்கேசன் வரவில்லை. உடனே நான் இது விஷயத்தில் முனைந்து செல்லத்துரை யையும் தருமலிங்கத்தையும் கூட்டிக்கொண்டு வ.சி.சி.வைத்தியர், சி. க. ஆறுமுகம், மூ. மாம்பழம், க. வ. கந்தையா ஆகியோருடன் யாழ்ப்பாணம் இந்துபோட் இராசஇரத்தினத்திடம் போனோம். அவர் சில உபாயங்களைச் சொல்லி நெவின்ஸ் செல்லத் துரையிடம் போகும்படி அனுப்பினார். நெவின்ஸ் கிராமப் பாடசாலைக் கூட்டத் தலைவர். அவர் ஒரு பிட்டீசம் எழுதித் தந்தார் அதைக் கொண்டுவந்து இராச இரத்தினத்திடம் கொடுத்தோம் அவர் அதைத் தனது கிழாக்கைக் கொண்டு ரைப்படிப்பித்து (அச்சடித்து) செல்லத்துரை, தருமலிங்கம் ஆகியோரின் கையெழுத்துமிடுவித்து யாழ்ப்பாணம் பெரிய தபாற் கந்தோரில் வித்தியாகர்த்தருக்கு றிசிற்றர் பண்ணிவிட்டோம்.



சோதனைக்கு முதல் நாள் 5 மணியளவில் செல்லத்துரை, தருமலிங்கம் இருவரையும் மறுநாள் 9 மணிக்குக் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வரும்படி தந்தியடித்தார் டிவிசன் இஞ்சிப்பற்றர் சண்டிமன். குறித்தபடி மறுநாள் இருவரும் 9 மணிக்குப் போய்த் தெரிபட்டார்கள், நேர்முகப் பரீட்சையில் தெரியப்படவில்லை தட்டிவிட்டார்கள்.

## 1932 ல்

மேற்படி ஆண்டு செல்லத்துரையும் அண்ணாசாமியும் எஸ்.எஸ்.சி சேட்டிவிக்கற் உபாத்திமாராக எங்கள் பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அண்ணாசாமி சில பெண்பிள்ளைகளுடன் சேட்டை செய்ததாக மூ.சி.யும் சி.க.ஆறுமுகமும் எனக்குச்சொல்லி அண்ணாசாமியைப் பாடசாலையால் விலக்கும்படி சொன்னார்கள். இது படிக்கும் சிறுபிள்ளைகளின் கதைகளால் வந்த வதந்திக் கதைகள் நானும் கேள்விப்பட்டு அண்ணாசாமியைக் கடிமையாக எச்சரித்திருக் கிறேன் இனியினிக் கதை வந்தால் பார்ப்போமென்றேன். அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை திரும்பியும் அண்ணாசாமியை விலக்கத்தான் வேண்டு மென்று பிடிவாதம் செய்தார்கள். விஷயத்தை ஒப்பியுங்களென்றேன். சில பெண்பிள்ளைகளைக் கூட்டிவந்தார்கள் சில பிள்ளைகள் தடம் பிரண்டார்கள் சி.க.ஆறுமுகம் எடியே நீ எனக்கு வீட்டிலை இப்படிச் சொன்னாய் அதைச் சொல்லடியென்று சொன்னார். உடனே அண்ணாசாமியின் தகப்பன் (பெரியண்ணன்) நீ வீட்டிலை பொடி யளுக்குப் பாடம் பண்ணி அவர்கள் தட்டுப்பட இங்கேயும் சொல்லிக் கொடுக்க வந்தாயாவென்று ஆறுமுகத்தைப் பேசியதிலிருந்து கலவர முண்டாகிப் போய்விட்டார்கள்.

திக்கம் செல்லையாவைத் தலைவராக வைத்து ஒரு மகாசன சபைக் கூட்டம் வைத்து என்னை விலக்கித் தங்களில் 8 பேரைக் காரியஸ்த ராக்கித் தெரிவுசெய்து எனக்குக் குறித்த எட்டுப்பேரும் கையொப்ப மிட்டுப் பாடசாலைச் சபைச் சாமானைத் தங்களிடம் ஒப்பித்துப் பாடசாலையால் என்னை விலகும்படி நோட்டீஸ் அனுப்பினார்கள். நான் மௌனமாக மறுமொழி கொடாதிருந்தேன். ஊருக்குள் என்னைப் பற்றியும் அண்ணாசாமியைப் பற்றியும் அவதூறுகட்டி இல்லாத பொய்களைச் சொல்லி 100 பிள்ளைகளை மறித்துப் போட்டார்கள். வருடாந்தச் சோதனைக்கு இன்னும் பத்து நாளிருக்கு இஞ்சிப்பற்றர் சாமுவேலுக்கும் அறிவித்தார்கள் டிவிசன் இஞ்சிப் பற்றருக்கும் பிட்டீசம் எழுதினார்கள். நான் ஒன்றுக்கும் அசைய வில்லை அவர்கள் பிள்ளைகளை மறித்த காரணம் சோதனை நடைபெறாது ஏன் பிள்ளைகள் மறிபட்டமையால். ஆகையால் கிறான்றும் வராது ஆகவே இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களைச் சரணாகதியடைந்து நாங்கள் சொன்னபடியெல்லாம் நடப்பாரென்று நம்பினார்கள். பின்பு அறிந்தார்கள் உள்ள பிள்ளைகளைச் சோதிப்பார்கள் வருடக் கிறான்று முழுவதும் வருமென்று. சோதனைக்கு முதல் நாள் திக்கம் செல்லையாவையும் பிடித்துக்கொண்டு கிராமப் பாடசாலைக் கூட்டத் தலைவரென்ற முறையில் நெவின்ஸ் செல்லத்துரை யிடம் போய் முறையிட்டனர். 100 பிள்ளைகளைச் சோதனைக்கு விடாமல் பெற்றார் மறித்திருக்கிறார்கள் என்று அவருக்குச் சொன்னார்கள்.

இவர்களுக்கும் எனக்குமிடையேயுள்ள கலவரத்தைப் பற்றி தலைவர் நெவின்சருக்கு நான் முன்சொல்லி விளக்கியிருந்தேன். அவர் அவர்களை மடையர்களே பிள்ளைகளையும் பாடசாலையால் மறிக்கலாமாவென்று நாய் போலச் சீறினாராம். இந்த இடையில் திக்கம் செல்லையா தலையிட்டு தாங்கள் இரு பக்கமும் சமாதான மாகும் வழியை ஐயா செய்யக்கூடுமென்று ஐயாவைக் கூட்டிக் கொண்டுபோக வந்தவர்கள் நாளைக்குச் சோதனையானமையால் ஐயா இன்றைக்கே வந்து இவர்களைச் சமரசமாக்கிவிட வேண்டுமென்று செல்லையா தன் பல் முப்பத்திரண்டையும் காட்டினாராம்.

அப்போ பிள்ளைகளை மறித்தவர்கள் மூ.சி., ப.வ., வெ.வ., க.வே. தம்பையா அவர் பெண்பிளை கிழப்பியதில் அவருக்குச் சாதகமாக நான் நில்லாது நீதி வழங்கி அவரைக் குற்றவாளியாக்கியதிலிருந்து எப்போ என்னுடன் எதிர்ப்பதென்று காத்திருந்தார்.

இந்தச் சந்தர்ப்பம் அவருக்கு வாய்த்தது. அவ்வருடம் சோதனை கார்த்திகை 10 ந் திகதி. 1 ம் திகதி பிள்ளைகளை மறித்தார்கள். இவர் ஊருக்குள் சொன்ன பொய் அண்ணாசாமி ஒரு பெண்பிள்ளையை (மாணவியை) 3 நாளாகக் கோயிலறைக்குள் வைத்திருந்ததை நான் அறிந்தும் அதைக் கண்சாடையாக விட்டேனென்றும் அதை நான் கவனியாதபடியால்தான் தாங்கள் பிள்ளைகளை மறிக்கிறோ மென்றதை அல்வாய் சபாபதியான் எனக்குச் சொன்னார்(சிவகுரு ஆசிரியர் தகப்பன்). அவரைப் பாடசாலையுள் கூட்டிவந்து மு.செ, சி.வ. ஆசிரியர்கள் முன்னிலையில் ஆசையம்மானும் நிற்க (சி.பொன்னர்) மேற்படி விஷயத்தைச் சொல்லும்படி சொன்னேன் அவர், சபாபதியான் எனக்குச் சொன்னதை அப்படியே சொன்னார். ஆசிரியர் இருவரும் நாக்கைக் கடித்துக் கையை உதறி இதென்ன அநியாயக் கதையென்றனர். சி. பொ. ஆசையம்மானும் தலை யிலடித்து இதென்ன அநியாயமென்றார். சபாபதியான் அவர்கள் சொன்னதைப் பொய்யென்று அறிந்து தனக்கிசைந்த பிள்ளைகள் பத்து 10 உடனே பிடித்துவந்து பாடசாலையுள் விட்டார் அன்று 9ந் திகதி 10 மணிபோல் நெவின்சர் திக்கம் செல்லையா, மூ.சி, க.வே.தம்பையா, சி.க.ஆறுமுகம், வெ.வல்லிக்குட்டி,



ப.வைரமுத்து பாடசாலைக்குள் வந்தார்கள். நெவின்சருக்கு வணக்கம் செய்தேன் நானும் உங்கள் பாடசாலையைத் தரிசித்துப் போகவந்தே னென்றார். மறிபட்ட பிள்ளைகளெல்லாரும் வந்தார்களாவென்றார் நெவின்ஸ். ஆம் 10 பிள்ளைகள் வந்தார்களென்றேன். அந்தப் பிள்ளைகள் எழும்பட்டு மென்றார் எழும்புங்களென்றேன் 10 பிள்ளைகளும் எழும்பினார்கள். உவர்களை ராத்திரி நாங்கள்தான் ஒழுங்குபண்ணி விட்டதென்றார் சி.க. ஆறுமுகம். மெய்தானா எந்தப்பாட்டுக்கும் பிரட்டும் வல்லமை உன்னிடம் உண்டென்பது எல்லாருக்கும் தெரியுமென்றேன். இதற்கிடையில் நெவின்ஸ் குறுக்கிட்டமர்த்தினார்.

பின்னர் செல்லத்துரை நெவின்ஸ் என்னைக் கேட்டார் நாளைக்குப் பிள்ளைகளெல்லாம் சோதனைக்கு வருவார்கள் நாங்களொரு மத்தியட்சம் வைத்துப் பேசி அந்த மத்தியட்சர் சொல்வதைக் கேட்போ மென்று எழுத்தில் தரவேண்டுமென்றார். நான் ஆமென்றேன் அவர்கள் மேலே சொல்லப்பட்ட ஐந்து பேரும் 2 ம் பகுதி முதலாம் பகுதியாக நானும் சி.பொன்னர், மூ.மண்டலம், மு.வயிரமுத்து (வைரவி) வ.சி.சிலம்பு இந்த இரு பகுதியும் இவ்விரண்டு பேரை மத்திட்சராகத் தெரியவேண்டும். ஒருவரை அக்கிராசனராகத் தெரிய வேண்டும். கார்த்திகை 23 ந் திகதி மத்திட்சர் கூடிப் பேசவேண்டும் அவர்கள் தீர்ப்பை இரு பகுதியும் ஒத்துக்கொள்ளவேண்டும் இந்தப் பொருத்தனைக்கு முதலாம் பகுதிக்கு நான் மாத்திரம் கையொப்ப மிட்டேன். இரண்டாம் பகுதிக்குச் சி.க.ஆறுமுகம், க.வே.தம்பையா, க.மூ.சின்னத்தம்பி, வ.வெ.வல்லிக்குட்டி, வ.ப.வயிரமுத்து ஆகிய ஐந்துபேரும் கையொப்பமிட்டனர். மத்திட்சர் கூடி விளங்கும் 23ம் திகதிக்கிடையில் இரு பகுதியும் தங்கள் தங்கள் மத்திட்சர் இவ்விரண்டுபேரின் பெயர்களை நெவின்சருக்கு அறிவிக்கவேண்டும். அதன்படி நான் கொடுத்த பெயர்வழி வீ.மு. சிற்றம்பலம் (சித்தமணியம்), ரீ.எம்.சபாரத்தினம் அவர்களுக்கு ஏ.நாகநாத முதலியார் கோப்பாய் வீ.பொன்னம்பலம், உரும்பிராய்.

குறித்த 23ந் திகதி முதல் நாள் பாடசாலை மனேஜர் சின்னையாவுக்கு ஒரு தந்தி டிவிசன் இஞ்சிப்பற்றர் உவாஷ்சன் அடித்திருந்தார். நாளை 9 மணிக்குப் பாடசாலையில் விளக்கமென்று அதன்படி அவர் வந்து மானேசரையும் என்னையும் அவர்களையும் விளங்கிமுடிய அவர் களுக்கு உவாஷ்சன் சொன்னார் இங்கே ஒரு பிழையும் நடந்ததாகத் தெரியவில்லை. இதில் நீங்கள் அதிகாரம் பண்ண வந்ததென்று எனக்கு நல்லாய் விளங்கியிருக்கென்றும் இதற்காகத் தானா நீங்கள் தந்திக்கு மேல் தந்தியடித்தீர்கள். தந்தியைக் கண்டவுடன் வேலை எல்லாத்தை யும் விட்டுத் தந்தியில் பிடித்தோடி வருவார்கள் என்றெண்ணீர்களா வென்று சொல்லி அருமந்த பாடசாலையைக் குழப்பாதீர்களென்று சொல்லிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார் (உவாஷ்சன்). அன்று விடாமழை காலை டிவிசன் இஞ்சிப்பற்றர் விளக்கம் பிற்பகல் 2 மணிக்கு மத்திட்சர் விளக்கம். இதற்கிடையில் நான் நெல்லியடி மானேசர் வீடு, கரவெட்டி மணியம் வீடு, தாரிக்கப்பத்துச் சபாரண்ணன் வீடு கால்நடையில் எனது குளிப்புப் பூசை சாப்பாடு எவ்வளவோ அவதிப்பட்டுச் சாப்பாடும் முடித்துப் பாடசாலையுள் போக மத்திட்சர் ஐந்துபேரும் கூடினர். மழை நல்லாய் இருண்டு பொழுதுபடுமாப் போலிருந்தது. அவர்கள் விளக்குக்கூட கொழுத்தி வந்தார்கள் இந்தக் கலவரம் ஆரால் எழுந்தது இதில் ஆர் பிழைவிட்டது என்பதை மேற்படி மத்திட்சர் விளங்கித் தீர்க்கவேண்டும். இதை அவர்கள் கவனியாமல் இந்தப் பாடசாலைச் சபை திருத்தி அமைக்க வேண்டும் மார்கழி 3ம் திகதி மகாசனங்கூடி 5 காரியஸ்தர் தெரிபடவேண்டும் அக்கூட்டத்தில் சபாரத்தினமும் செல்லையாவும் சமூகம் இருக்க வேண்டுமென்று அவர்கள் இங்கிலீசில் பேசிக்கொண்டு மேற்படி தீர்ப்பை எழுதித் தங்கள் கையொப்பங்களை வைத்தார்கள். இன்னொரு சிறு துண்டுக் கடதாசியில் இங்கிலீசில் எழுதி என்னையும் அவர்களையும் கையொப்பமிடும்படி சொன்னார்கள் நான் இதென்னென்று கேட்கச்சபாரத்னம் சொன்னார் உனக்குப் பிழையில்லை நீ கையொப்பத்தை வையென்று அன்று என் மூளைக் கலவரத்தால் நம்பிக்கையெழுத்தை வைத்தேன் பின்புதானறிந்தேன் நான் அகப்பட்டுப் போனேன்று. இப்படியெல்லாம் நிகழ்ந்தது நெவின்சருக்கு அவர்கள் கொடுத்த பெரிய கறுத்த இறால்கள். அவர் மற்றையோரையும் அனாப்பி மேற்படி தீர்ப்பெழுதினார்.

குறித்த மார்கழி 3ந் திகதி மகாசபையைக் கூட்டினார்கள் சபாரத்தினம், செல்லையா சமூகத்தில் என்னை விலக்கி மேற் சொல்லிய ஐந்து பேரும் காரியஸ்தராகத் தெரிபட்டார்கள். கூட்டத் திற்கு நான் போகவில்லை. அதன் பின்பு ஐந்து பேரும் கையெழுத்திட்டு ஒரு நோட்டீஸ் எழுதி றிசிற்ரர் செய்தனுப்பினார்கள். அதில் பாடசாலைச் சபைக்குரிய சாமான்களை இன்ன திகதி 9 பாடசாலையுள் கொண்டுவந்து தங்களிடம் ஒப்படைக்க வேண்டு மென்றும் பாடசாலைச் சபையால் என்னை விலக்கியிருக் கென்றும் எழுதப்பட்டிருந்தது. நான் அதைக் கவனிக்க வில்லை. அல்வாய் தெற்கு விதானையைக் கூட்டிவந்து விதானை கேட்டார் பாடசாலைச் சாமானாமென்று, முடியாதென்று மறுத்து விட்டேன். கோட்டில் முறையிட்டார்கள் கட்டளைக்குப் போனேன் எனது பிறக்கிராசியார் சி.சுப்ரமணியம் எழும்பிச் சொன்னார் சூரன்தான் மனேச்சுப் பண்ணுகிறது இவர்கள் இப்பவந்து குளப்படி பண்ணுகிறார் களா கையால் சாமான்கள் கொடுக்கமுடியாதென்று. நீதவான் அப்படி எழுதிப்போட்டுப் போகலாமென்று சொல்லி விட்டார். உடனே அவர்கள் யாழ்ப்பாணம் போய் அருளம்பலம் பிறக்கிராசியை ஏற்படுத்தித்



துரட்சியணைத்து மறுநாள் எனக்குக் கட்டளை அனுப்பி விட்டார்கள். 6 மாதத்துக்குள் பாடசாலையால் என்னை வெளிக்கிடச் செய்வோமென்று சொன்ன அவர்கள் 5 வருடமளவும் ஒவ்வோர் தவணையும் சொல்வார்கள் ஒரு நூலில் வழக்கிருக்கு அடுத்த தவணை பாடசாலையுடன் வருவோமென்று. அவர்கள் கொடுத்த வழக்கு என்னிலை பல பொய்க் குற்றங்கள் சொல்லி மத்திட்சர் வந்து விளங்கித் தீர்த்ததை ஒத்துக் கொண்டு இப்போ மறுத்துவிட்டார். ஆகையால் மத்திட்சர் தீர்ப்பைப் பெலப்படுத்தி விடும்படியும் கோட்டுச் செலவுமென்று.

நான் கொடுத்த மறுமொழி நானே நெடுகப் பாடசாலையை நடத்தியும் சில காலம் படிப்பித்தும் வந்தேன். இப்போ இவர் என்னில் சுமத்தும் குற்றங்கள் பொய்யென்றும். மத்திட்சர் வந்தன்று பெரும் வெள்ள எடுப்பு மழையென்றும் அன்று யாழ்ப்பாணம் பருத்தித்துறை கோடு கச்சேரியொன்றும் நடைபெறவில்லையென்றும் விளங்க வந்த வழியைவிட்டு வேறுவழியாகத் தமிழில் ஒன்றும் பேசாமல் ஆங்கிலத்திலேயே எல்லாம் தாங்களே பேசித் தங்கள்பாட்டில் மழை அவதிக்குள் தீர்ப்பெழுதி எனக்குப் பிழையில்லையென்று என்னைக் கொண்டு கையொப்பத்தையும் வைப்பித்தார்கள் ஆகையால் மத்திட்சர் தீர்ப்பை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கோட்டுச் செலவுமென்று 1932ம் ஆண்டு தொடங்கிய வழக்கு யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டில் 1936ம் ஆண்டுவரையும் வந்த தவணைகளுக் கெல்லாம் அவர்களுக்கு ஒரு பஸ்சும் ஒரு காரும் எனக்கு ஒரு கார் மாத்திரம் 6பேர் போவோம். அவர்களில் மிச்சம் தொகையான ஆட்கள் வருவார்கள். எப்பொழுதும் எல்லாத்துக்கும் எடுபிடியாக ஆட்களைக் கூட்டிக்கொள்வார்கள். நான் தனிமையில் போய்ப்பார்த்து வரும் கருமத்துக்கு அவர்கள் எட்டுப் பத்துப்பேருக்குக் குறையாமல் போய் வருவார்கள். இரண்டு கையெழுத்தை வைத்து ஒத்துக்கொடுத்த பேயன் மறுத்து வழக்காடு கிறானேயென்று வழக்காளிகள் மாத்திரம் அல்ல ஊரவரும் அப்புக் காத்துப் பிறக்கிராசிமாரும் கூடப்பேசிக் கொண்டனர்.

அவர்களுக்கு பிறக்கிராசி அருளம்பலம் அப்புக்காத்து வணிக சூரியர் அவர் பணம் வேண்டியபின் கோட்டுக்கே வரவில்லை. பின்பு முத்துச்சாமிப்பிள்ளையை ஏற்படுத்தினர். எனக்கு மருதடி சி. சுப்ரமணியம் பிறக்கிராசி அப்புக்காத்து சு. இராசரத்னம் (இந்து போட்டு) இவர்கள் எனக்கு நம்பிக்கை சொல்லவில்லை ஒத்துக் கையொப்பம் வைத்த விஷயம் பேசிப்பார்ப்போமென்றார்கள். பின்பு உடுப்பிட்டி தா. ராமலிங்கம் அப்புக்காத்தை ஏற்படுத்தினேன் அவர் ஒரு சட்டப் புத்தகத்தைப் பார்த்துச் சொன்னார் நீர் பயப்பிடாதையும் நீர் எத்தனை கையொப்பங்களைப் போட்டாலும் அந்த மத்திட்சர் பாடசாலைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து மத்திட்சம் பேசவும் தீர்ப்புச் சொல்லவும் அவர்களுக்கு உரிமையில்லை என்பதே சட்டம். உம்மை விலக்குகில் கோட்டில் வழக்கு வைத்து விளங்கிக் கோடு தள்ளலாம் அப்படியொரு வழக்கெடுக்கிலும் அற்றோணிச்செனறலில் உத்தரவெடுக்க வேண்டு மென்றுஞ் சொல்லி எனக்குத் தென்பு தந்தார்.

இதற்கிடையில் 1935ல் எனது பிறக்கிராசியார் சி. சுப்ரமணியம் திடீரென இறந்துவிட்டார். அதன் பின் முத்துக்குமாரு பிறக்கிராசியாரை ஏற்படுத்தினேன். அவர்களின் அப்புக்காத்து முத்துச்சாமிப் பிள்ளை இவர்களது குதற்கவாதங்களைக் கவனிக்கவில்லையென்று நைல்ஸ் அப்புக்காத்தை ஏற்படுத்தினார்கள். இடையில் டொற்றிக்கோ நீதவான் மாறிப்போக மட்டக்கிளப்பு சின்னத்தம்பி நீதவான் வந்து மத்திட்சர் தீர்ப்பை வரையறுத் தெழுதும்படி திருப்பித்திருப்பி மூன்று முறை அனுப்பினார். அவர்களும் திருப்பித்திருப்பி முதலில் தாங்கள் எழுதிய தீர்ப்பையே எழுதிவிட்டார்கள். சின்னத்தம்பி நீதவான் மாறிப்போக மறுபடி டொற்றிக்கோ நீதவான் வந்தார். அவர் மத்திட்சர் எழுதியதைக் கவனியாமல் வேறு லையினில் வழக்கை விசாரிக்க ஆரம்பித்தார். முன் நிகழ்ச்சிகள் 1932 ல் ஆ.ம.செல்லத்துரை கலா சாலைக்கு எடுபட்டுப்போக ஆயத்தம். மேற்படி செல்லத்துரைக்குப் படிப்பித்த வகையில் ரூபா 250 கொடுக்க வேண்டும். அக்காலம் உபாத்திமார் பணம் வேண்டாமல் படிப்பித்துச் சோதனைக்குக் கிட்டப் பணம் பெற்றதாகப் பற்றுச் சீட்டுக்குக் கையொப்பம் தருவார்கள். பின்னர் கிறான்றுப் பணம் வந்தபின்தான் பணம் வேண்டுவார்கள் அதன்படி செல்லத்துரையைக் கேட்டேன் பற்றுச்சீட்டைத் தந்து கலாசாலைக்குப் போகும்படி. செல்லத்துரை மௌனஞ் சாதிக்க. சரி நீ போ நான் கலாசாலையில் உன் பணத்தைக் கொண்டுவந்து தந்து பற்றுச்சீட்டை வேண்டுகிறேனென்று சொன்னேன்.

செல்லத்துரை கலாசாலைக்குப் போனபின் தாலியை அடைவு வைத்து ரூபா 150 கா.வாரித்தம்பியிடம் எடுத்தேன். மு.க.கறுவல் தம்பியிடம் 100 ரூபா கைமாற்றாகவேண்டி சி.வ.ஆசிரியரையுங் கூட்டிக்கொண்டு ஆசிரிய கலாசாலைக்குப் போய் செல்லத்துரையிடம் கொடுத்துப் பற்றுச்சீட்டு வேண்டிவந்தேன். இது செல்லத்துரையின் மாமன் சி.க.ஆறுமுகத்தின் திருவிளையாடல். 1933ல் தர்மலிங்கத்தை யும் கலாசாலைக்கு எடுத்தார்கள் சமபோசன விஷயம் சர்வசாதாரண மாயிற்று.

இனி எங்கள் வழக்குத் தவணைக்குத் தவணை ஊருக்குள் வந்தவுடன் அடுத்த தவணை எனக்குப் பள்ளிக்கூட உரிமை அற்று விடுமென்பார்கள். ஒருக்கால் மத்திட்சரை விளங்கி றிப்போட் எழுதும்படி கோடு நியமித்தபடி மத்திட்சர் ஐந்துபேரும் பாடசாலையில் கூடியிருந்தனர்.



அப்போ வீ.மு. சிற்றம்பலம் மணியகாரன் (சித்த மணியம்) கேட்டார் சூரனையும் சேர்த்தொரு ஆளாகப் பாடசாலையை நடத்துங்களென்று. அப்போ க.வே.தம்பையா சொன்னார் பாடசாலை வளர்ச்சிக்குப் பங்கமேற்படுமென்று. நின்ற பலர் சிரித்தனர், நியாயம் பாடசாலையை இவ்வளவும் வளர்த்தவர் நின்றால் பாடசாலை வளர்ச்சிக்குப் பங்கம் ஏற்படுமென்று முன்னே ஒழித்துத்திரிந்த தம்பையா சொன்னமையால்.

அதன்பின் அவர்களால் ஏற்படுத்திய உரும்பிராய் பொன்னம்பலம் 500ரூபா வேண்டித்தரலாம் வேண்டிக்கொண்டு நீ விலகென்று என்னைக் கேட்டார் நான் முடியாதென்றேன். பின்னை நீயென்ன வழக்குப் பேசப் பார்க்கிறியாவென்றார் பார்ப்போமென்றேன் உனக்கென்ன வழக்கு நாங்கள் எழுதிய தீர்ப்பை வாசித்துக் காட்டுவது தானேயென்றார் ஆம் வாசித்துக் காட்டட்டுமென்றேன். அத்துடன் பழைய தீர்ப்பையே எழுதி விட்டனர்.

ஒரு தவணை எனது அப்புக்காத்து இராசரத்தினம் வரவில்லை. வழக்கைக் கூப்பிட்டார் அவர்கள் அப்புக்காத்து நைல்ஸ் மத்திட்சர் தீர்ப்பைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். இதைக்கேட்ட டெற்றிக்கோ நீதவான் மேற்படி மத்திட்சர் விட்ட பிழைகளைப் படித்தறிந் திருந்தவர். முகத்தைச் சுருக்கியபடி எனது அப்புக்காத்து இராம லிங்கத்தைப் பார்த்தார். எழுந்தார் இராமலிங்கம் மத்திட்சர் தீர்ப்பு எதிரியை ஒருபோதும் கட்டுப்படுத்தாதென்றும் எதிரியில் நடவடிக்கை வேண்டுமாயின் அற்றோணிச்செனறலின் அனுமதிப்படி கோட்டு மூலம் வழக்குப் பேசிக் கோடு தீர்ப்புச் செய்யவேண்டுமென்பதே சட்டவிதியென்றும் பேசிச் சட்டப் புத்தகத்தின் பிரிவையும் வாசித்துக் காட்டி விட்டிருந்தார். நீதவான் அப்படியே கேட்டவற்றையெல்லாம் எழுதிக்கொண்டு சட்டப் புத்தகத்தைச் சக்கடுத்தாரிடம் கொடுத்துப் போகும்படி சொல்லி வழக்கைத் தவணை போட்டார்.

## 1935 இல்

அடுத்த தவணை வழக்கைக் கூப்பிட்டார். வழக்காளி பக்கத்தை விளங்க வேண்டுமென்று நைல்ஸ் அப்புக்காத்து வாதாடி க.வே.தம்பையாவைக் கூட்டில் ஏற்றி விளங்கினார். முந்திய தவணை முகங்கோணிப்போன அவர்களுக்குத் தம்பையாவைக் கூட்டில் ஏற்றி மத்திட்சர் அங்கே வரவேண்டியதைப்பற்றியும் எனது சர்வாதிகாரத் தைப் பற்றியும் நைல்ஸ் கேட்கக்கேட்கத் தம்பையா சொல்லிக் கொண்டுவர அவர்களின் முகம் மறுமலர்ச்சிகொண்டு மலர்ந்து காட்டியது. இதற்கிடையில் நீதவான் குறுக்கிட்டு அன்று 23ந் திகதி அக்கிராசனரைத் தெரிவுசெய்தது ஆரென்று தம்பையாவைக் கேட்டார். அவரை ஒருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை அவர் தானாகவே போயிருந்தாரென்று மேற்படி தம்பையா சொன்னவுடன் பள்ளன் பள்ளன்தானே, பள்ளனுக்கேன் வழக்கென்று நைல்ஸ் சொல்லி வழக்குக் கொப்பியை மேசையில் அடித்துக்கொண்டிருந்தார். அதன்பின் நீதவான் 10ந் திகதி எழுதிய பொருத்தனை 23ந் திகதி அக்கிராசனரைத் தெரியவேண்டுமென்று அதன்படி நடக்கவில்லை யென்றும் இன்னும் பல பிழைகளை மத்திட்சர் செய்தார்களென்றும் நீதவான் பிரஸ்தாபித்தார்.

அதன்பின் நெவின்ஸ் செல்லத்துரையைக் கூட்டிலேற்றி நைல்ஸ் விளங்கினார். அதிலும் நீதவான் குறுக்கிட்டு 23ந் திகதி உங்களை அக்கிராசனராகத் தெரிவுசெய்தது ஆரென்று கேட்டார். சூரன், ஆறுமுகம் இவர்கள்தான் ஐயா நீங்கள்தான் அக்ராசனமாயிருந்து மனேச் பண்ணுங்களென்று 10ந் திகதி சொன்னபடி நான் அக்கிராசனமா யிருந்தேனென்றார். 10 ந் திகதி எழுதிய பொருத்தனைப் படி நடந்து கொள்ளவில்லை மத்திட்சரென்று நீதவான் பேசி அருவெருத்தார். அன்றைக்கே வழக்காளிகளுக்கு நல்லாய்ப் பித்தல் விட்டு வெளியே போய் வேம்பின் கீழ் அவரவரே அயர்ந்திருந்தார்கள். இதன் பின் நாங்கள் பெரிய கடைப்பக்கம் போனோம். கச்சேரியால் வந்த மாரிமுத்துவும் மூ.ம.குத்தகைக்காரனும் சொன்னார்கள் நீங்கள் இங்கே வந்துவிட்டீர்கள் அவர்கள் வேம்பின் கீழ் செத்த கோலத்துடன் இருக்கிறார்கள் நடந்ததென்னென்று கேட்டார்கள். நடந்த நிகழ்ச்சி களைச் சொன்னேன். பின்னர் எல்லாரும் நான் பிடித்த காரில் வீடுவந்து சேர்ந்தோம். அதன் பின் அவர்களைக் கொண்டுபோன பஸ் திரும்பி வந்து அவர்களை ஏற்றிக் கொண்டு வரச்சற்று கால தாமதமானது.

அடுத்தபடியாகப் பல தவணைகள் விளக்கமின்றித் தவணைகளாகி 1936ம் ஆண்டு ஆனி மாதம் மத்திட்சர் முதலெழுதிய பொருத்தனையை மொழிபெயர்த்தது சரியில்லையென்று நீதவானும் அவர்களும் வாதாடினார்கள். அடுத்த தவணை நாங்கள் இரு பகுதியும் போயிருந் தோம். நீதவான் எங்கள் அப்புக்காத்து இராசரத்தினத்திடம் ஒரு கடதாசி கொடுத்து ஏதோ சொன்னார் இராசரத்தினம் அந்தக் கடதாசியால் என்னை விறாந்தைப் பக்கம் வரும்படி சைகை காட்டினார். நான் போனேன் அப்போ ஆ.க.வே. வும் என் பின்னே வந்தார் இராசரத்தினம் வந்து சொன்னார் வழக்கு எங்களுக்காய் போச்சு இந்தக் கடதாசியைக் கொண்டுபோய் முத்துக்குமாரு பிறக்கிராசியாரிடம் கொடுத்து வடிவாக மொழிபெயர்த்து உடனே கொண்டு வந்து அணையுங்கள் அன்றி நாளைக்காயினும் கொண்டு வந்து அணைக்கவேண்டுமென்றார். வழக்கு எங்களுக்கென்று எப்படித் தெரியுமென்றேன். அவர்களின் பிறக்கிராசி யாருக்கு நீதவான் இப்ப சொன்னார் வழக்கு உங்களுக்கு மாறாகத்



தீர்த்துப்போட்டேன் தீர்ப்பெழுத சில நாள் செல்லுமென்று. இதை ஆ.க.வே. கேட்டுக் கொண்டு நின்றார். அவரை மூ.சி. சைகைகாட்டிக் கேட்டார் என் னென்று ஆ.க.வே.தனது நெஞ்சில் கையால் தட்டினார். அதை மூ.சி நினைத்தாராம் வழக்கு தங்களுக் கென்று. ஏனெனில் ஆ.க.வே. முன்னே தங்கள் பக்கம் நின்றமையால் அத்துடன் ஆ.க.வே. மூ.சி.வுக்குச் சொன்னாராம் நாங்கள் முத்துக்குமாருவைச் சந்தித்துக் கொண்டு திரும்பி இங்கே வருவோ மென்று.

நாங்கள், நான், மு.வ. (கதிராமன் வீட்டு) ஆ.க.வே. மூன்றுபேரும் பஸ்சில் ஏறிப் பருத்தித்துறைக் கோட்டடியில் முத்துக்குமாரு பிறக்கிராசியாரைச் சந்தித்துக்கொண்டுபோன கடதாசியைக் கொடுத்து அப்புக்காத்து சொன்ன கதைகளையும் சொன்னேன். அவர் சொன்னார் நாளைக்கு நான் கொண்டுபோய் அணைக்கிறேன் நீ வீட்டை போவென்றார். வழக்கு எங்களுக்குத் தானென்று நீதவான் அன்றைக்கு எனக்குஞ் சொல்லிப் போட்டாரென்றார். ஆ.க.வே. திரும்பி வருவோமென்றதால் அவர்கள் எங்கள் வருகையை எதிர்பார்த்து 5 மணிவரை காத்திருந்து அதன்பின் வெளிக்கிட்டுப் பொழுதுபடத்தான் ஊர் வந்து சேர்ந்தார்கள். ஆ.க.வே.வின் ஒலிப்பெருக்கால் வழக்கு அவர்களுக்குப் பாதகமாகவும் எனக்குச் சாதகமாகவும் தீர்ந்து விட்டதென ஊரெங்கும் கதை பரவியது. உடனே ப. வைரமுத்துவும் குண்ணந் தோட்டம் வ. நாகமுத்தரின் மகன் செல்லையனும் யாழ்ப்பாணம் போய்த் தங்கள் பிறக்கிராசி அருளம்பலத்தைக் கண்டு கேட்டார்களாம் வழக்கு முடிவென்னவென்று. அவர் சொன்னாராம் வழக்கென்னம் முடியவில்லையென்றும் முந்திய பொருத்தனைக் கடதாசி மொழி பெயர்த்தது சரியில்லையென்றும் மொழிபெயர்க்க அவர்களிடம் கொடுத்திருக்கென்றும். இல்லைத் தங்களுக்கென்று அங்கே கதைக்கிறார் களென்று ப.வ. சொன்னதற்கு அவர் சொன்னாராம் இன்னும் நீதவான் தீர்ப்பெழுதவில்லை அவர்களுக்கென்று எப்படி அறிந்தார்களென்று பரிகசித்தாராம்.

அதைக் கேட்டு வந்த ப.வ.வும் செல்லையனும் செத்த வழக்கு உயிர்த்துவிட்டதென்று சொன்னார்கள். ஆட்கள் பலர் ஓடிவந்து என்னைக் கேட்டார்கள் இனிமேல் நானென்ன சொல்வது கிட்டடியில் முடிவை அறியலாம் அப்பொழுது அறிந்து கொள்ளலாந் தானே யென்று சொன்னேன். அந்தப் பிறக்கிராசி சொன்னதிலும் உண்மை யிருந்தது. நான் சொன்னதும் உண்மை. அதாவது நீதவான் சஷ்மன் (தீர்ப்பு) என்று எழுதி அதன்கீழ் இந்த வழக்குத் தள்ளப்பட்டது என்று எழுதிய பின்தான் பிறக்கிராசிமாருக்கு நீதவான் சொன்னார். ஆனால் இனிமேல் வழக்குத் தள்ளப்பட்டதற்கு நியாயங்கள் காட்டி எழுத வேண்டியிருக்கு அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயங்களை எழுத முன் அந்த வழக்குப் புத்தகம் நீதவான் கையை விட்டு கோட்டுக்கு வராது அதனால்தான் தீர்ப்பின்னும் எழுதவில்லை யென்று அவர்கள் பிறக்கிராசியார் அவர்களுக்குச் சொல்லிவிட்டார்.

அதன்பின் அவர்கள் பலமுறை யாழ்ப்பாணம் கோட்டடிக்குப் போய்வந்தார்கள். நான் போவதை நிற்பாட்டிவிட்டேன். ஒரு நாள் அவர்கள் பிறக்கிராசி நீதவானைக் கேட்டாராம் மேற்படி வழக்கின் தீர்ப்பு எப்போ சொல்லப்படுமென்று ஆடி 26 ந் திகதியென்றாராம் அதை அவர் கேட்டுவந்து ஆனியில் தள்ளுப்பட்ட வழக்கு ஆடி 26 ந் திகதி தீர்ப்புத் தவணையென்று. அன்றுமொரு சிறு வெற்றி முரசறைந் தார்கள். குறித்த 26ந் திகதி அவர்கள் ஐந்துபேரும் இரண்டு மூன்று சிண்களும் யாழ்ப்பாணம் போனார்கள் இன்று வழக்குத் தவணை யென்று நான் போகவில்லை. என்னைப் பலர் கேட்டார்கள் அவர்கள் வலு எடுபிடியாகப் போகிறார்கள் இன்று வழக்குத் தவணையென்று நீயேன் போகவில்லையென்று. எனக்கினியென்ன வழக்கென்று சிலேடையாகச் சொல்லி விட்டேன். என்னுடைய இரண்டு கையெழுத்து ஒன்று மத்திட்சர் சொன்னபடி கேட்பேன் மற்றது மத்திட்சர் சொன்ன தீர்ப்பை ஒத்துக்கொண்டேன். இந்த இரண்டு கையொப்பத்தையும் நம்பிக் கடைசிவரையும் வழக்குத் தள்ளுப் படுமென்று அவர்கள் நம்பியிருக்க வில்லை. குறித்த 26ந் திகதி பின்நேரம் நட்சத்திரன்வீட்டு மு.வ.வும் நானும் வழக்குக்காரரை இன்னுங்காணவில்லையென்று பேசிக் கொண்டிருக்க அவர் தம்பியார் மு.க. வைத்தியர் எங்களுக்குக் கிட்ட வந்தவர் சொன்னார் உங்கள் வழக்காளிகள் மாலிசந்தைப் பிள்ளையார் கோயிலடியில் செத்தவர்கள் போல் இருக்கிறார்கள் வழக்கு கோட்டுச் செலவுடன் தள்ளுப்பட்டுப் போச்சாமென்றார். அந்த மத்திட்சர் தீர்ப்பை எனது அப்புக்காத்து இராமலிங்கம் ஓர் இடையில் தலைசிதற அடித்து விட்டார். நீதவான் றொட்றிக்கோ தானந்தானமாக முடக்கி அடித்து நொறுக்கிவிட்டார்.

**அப்பீல் மனு**

இன்னும் அந்த மத்திட்சர் தீர்ப்புக்கு உயிர் கிடக்கென்று சுப்றிங் கோட்டுக்கு அப்பீல் மனுப்பண்ணி இலங்கையில் சிவில் அப்புக்காத் தெனப் பேர் பெற்றவரும் அப்பீல் கோட்டுக்கு முதலிடம் பெற்றவரு மாகி ஏ. எஸ். சீ. பெரரா என்ற அப்புக்காத்தையும் ஏற்படுத்தினர். நான் நல்லூர் சி.சுப்ரமணியம் என்பவரை ஏற்படுத்தினேன் பல மாதங்கள் கடந்து 1937ம் ஆண்டு பங்குனி மாதம் 7ந் திகதி கீழ்க்கோட்டுச் செலவை நீக்கி அப்பீல் செலவுடன் அப்பீல் தள்ளப்பட்டது. எனது அப்புக்காத்து பேசவில்லையாம் அவர்கள் அப்புக்காத்து தனது முழுத் திறமையையுங் காட்டிக் கனநேரம் பேசிக் கடைசியில் செலவு பணத்துக்குப் பல்லைக் காட்டி கீழ்க்கோட்டுச் செலவைத் தட்டிவித்தார். மேற்படி வழக்குக்காக நான் கொழும்புக்குப் போகவில்லை நான் அப்புக்காத்துக்குச் சொல்ல வேண்டிய விஷயம் அவரது கையில் வைத்திருந்த கடதாசி யில் எல்லா மிருந்தது. அவர்கள் நாலு பேரும் இன்னுஞ்சேர்ந்த பலர் ஒரு கிழமையாக சுப்றீங்கோட்டடிக்குப் போக்குவரத்துச் செய்த படியாம்.

இத்தறுதியில் அவர்களுக்கு ரூபா 7000 ஏழாயிரஞ் செலவிருக்கும். எனக்கு ரூபா 1000 ஆயிரமிருக்கும் அவசியமற்ற வீண்டாம்பீகச் செலவுகளெல்லாஞ் செலவழித்தார்கள். யாழ்ப்பாணக் கோட்டில் ஒரு தவணையிலன்று நான் கொடுக்கவேண்டிய கார்ச் செலவு ஐந்து ரூபாவை எனது அப்புக்காத்து இராமலிங்கம் நான் கொடுக்க வேண்டாமென்று மறுத்துவிட்டார் நியாயம் தான் இன்னொருவரின் காரில் இலவசமாக வந்ததென்றும் அதிலையே போகிறதென்றும் வழக்கும் விளக்கமின்றித் தவணையானமையாலும் வேண்ட மறுத்து விட்டார். இப்படியே அப்புக்காத்துப் பிறக்கிராசிமாரும் எனக்கு அதிக சகாயமாக நின்று வழக்கை நடத்தினார்கள். ஏ.எஸ்.சீ.பெரராவுக்கு 20 கின்னி எனது அப்புக்காத்துக்கு 5 ஐந்து கின்னி.

**வழக்குகள் தோற்ற அவியில் பிட்டீசங்கள்**

வழக்குகள் நடந்து கொண்டு வரும்காலங்களில் என் சார்பாக நின்ற உபாத்திமார் சிலர் அவர்கள் தோற்ற மனஸ்தாபத்தாலும் இனப் பற்றபிமானத்தாலும் அவர்கள்பால் சார்ந்து நின்றமையால் உபாத்தி மாரிடம் பணம் வேண்டுகிறாரென்று வித்தியாபகுதிக்குப் பிட்டிசம் போட்டார்கள். அது விளக்கத்துக்கு வந்தது சி.வ.ஆசிரியர் ம.செ. ஆசிரியர், மீனாட்சியம்மா இவர்கள் தங்களிடம் பணம் கேட்டு வேண்டியதாகச் சொன்னார்கள். மு.செ. தலைமைஆசிரியர் எழுத்தில் கொடுத்திருந்தார். குறித்த சூரனென்பவர் இப்பாடசாலையைப் பல கஷ்டங்களுக்கூடாக நடத்தி வந்தமையாலும் ஆசிரியர்களாக நாங்கள் வருதற்குப் பெருந்துணைசெய்த நன்றிக்காகவும் நானே ஏனைய உபாத்திமார் தந்த பணத்தையுஞ் சேர்த்து அவர் வீட்டுக்கனுப்பியதே யன்றி அவர் எங்களைப் பணம் தரும்படி கேட்கவுமில்லை வேண்டவு மில்லையென்று. என்னை விளங்கியதற்கு நானும் அப்படியே தலைமை ஆசிரியர் எழுதிக் கொடுத்தபடி சொல்லிவிட்டேன். அப்போ பாடசாலை மனேசர் க.வைத்திலிங்கம் மனேச்சருக்கு எழுதி விட்டார்கள் இனிமேல் உபாத்திமாரிடம் சூரன் பணம் வேண்டாதபடி பார்த்துக்கொள்ளும். இன்னுஞ் சில பிட்டீசங்கள் போட்டார்கள். அவைகளில் பயனில்லை. பாடசாலை அறைக்குள் நின்று பெலக்கக் குழறுகிறாரென்றும் சமயப் பிரசங்கம் செய்கிறதாகப் பாடசாலைக்குள் நின்று ஆட்களை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசுகிறாரென்றும் எழுதினார்கள். அதைக் கிருஷ்ணபிள்ளை இஞ்சிப்பற்றர் வந்து விளங்கி றிப்போட் பண்ணிவிட்டார் சமயபாட நேரத்துக்குள் சூரன் சமயப்பிரசங்கம் செய்துமுடிக்க வேண்டுமென்று மானேஜருக்கு எழுதிவிட்டார்கள்.

**பாடசாலையை சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்கு (இந்துபோட்டு) எழுதினேன்**

1938 ல் பல பிட்டீசங்கள் போட்டார்கள் 1939 ல் புதிய பாடசாலைக் கட்டிடத்தை ஆரம்பித்து லொறச் டிவிசன் இஞ்சிப்பற்றர் அவர்களைக் கொண்டு பெயர்க்கல் (அத்திவாரக் கல்) வைப்பித்து மரம் போடும் எல்லையில் கட்டிடத்தை முடித்தேன். அது என் சொந்தக் கணக்கில் 890 ரூபா கடனிருந்தது (1940 ம் ஆண்டு பாடசாலையை இந்து போட்டுக்கு எழுதி திருப்பி வேண்டப்பொருத்த உறுதியும் எழுதி னேன். எழுதிய நியாயம் அவர்களின் பிட்டீசங்களின் தொல்லை யும் உபாத்திமாரை மாற்றம் செய்யவும்) (பையிங் ஸ்கூல்) ஆங்கிலமும் தமிழும் சரி சரி படிப்பிக்கவெண்ணி இதற்காகவும் வித்தியாகர்த் தருக்குப் பிட்டீசம் போட்டார்கள் ஊர்ப்பொதுச்சனங்களுக்குரிய பாடசாலையை எம் சமூகத்துக்குரிய பொதுஉடமைச் சொத்தை இன்னொரு சமூகத்தார் சபைக்கு எழுதினாரென்றும் வித்துப்போட்டாரென்றும் என்மேல் பழிசுமத்தி ஊருக்குள் கிளர்ச்சி செய்தார்கள். ஊர்ச்சனங்களும் சிலர் என்மேல் துவேஷங்கொண்டனர்.

**வித்தியாபகுதியார் விளக்கம்**

வடபெரும் பகுதி வித்தியாதரிசி (டிவிசன் இஞ்சிப்பற்றர்) வேதவனம் என்பவர் வந்து ஒரு நாள் முழுதும் விளங்கினார். அந்த விளக்கத்தில் சில உபாத்திமார் எனக்கு மாறாகப் படுபொய்களைச் சொன்னார்கள். குறுக்குக் கேள்விகளில் அவர்கள் தடம்பிரண்டதாலும் என்னிடம் அவர்கள் எனக்கு எழுதிய கடிதங்கள் இருந்து அவைகளை மேற்படி இஞ்சிப் பற்றருக்கு நான் காட்ட அவர் அவைகளை வாசித்துக் காட்டாமையாலும் அவர்களை அவர் நையாண்டிபண்ணி அவமானப்படுத்தி விளக்கத்தை வித்தியாபகுதிக்கு றிப்போட்டுப் பண்ணிவிட்டார். அவர்களைக் கெதியாக வழக்கில் போகும்படியும் பிந்தினால் இந்துபோட்டால் மாற்ற எங்களுக்கு முடியாதென்றும் மறுமொழி வந்தது. இதற்கிடையில் அவர்களில் ஒருவர் வ.வெ.வல்லிக்குட்டியென்பவர் இறந்து போனார் அவரைவிட்டு ஏனைய நால்வரும் அற்றோணிச் செனறலிடம் பவறெடுக்க ரூபா 2000 இரண்டாயிரம் என். நடராசா அப்புக்காத்துக்குக் கொடுத்து பவறெடுத்து என்னிலும் இந்துபோட்டிலும் வைத்தி லிங்கத்திலும் எங்களை எதிரியாக்கி வழக்கெடுத்தனர். சி.க.ஆறுமுகம்



இந்தியா ஈரோடு பவானியில் (ஆற்றில்) மூழ்கி இறந்துபோக க.வே. தம்பையாவும் நோய் கண்டு இறந்துபோக மூ.சி. வும் ப.வ.வும் வழக்காளிகளாக நின்று வழக்கை நடத்தினார்கள். அந்த வழக்கும் இரண்டு வருடம் கடத்துப்பட்டுக் கொண்டுவந்தது. எனக்குப் பிறக்கிராசி யார் நடுவில் பொ. கணபதிப்பிள்ளை அப்புக்காத்து இராமலிங்கம் சூரசங்காரம் அவர்களுக்குப் பிறக்கிராசி தனபாலசிங்கம், அப்புக்காத்து குலசிங்கம் பின்பு நைல்ஸ் அவர் இறந்தபின் சிவஞானசுந்தரம் சங்கரப்பிள்ளை. 1942 வைகாசி 28ந் திகதி நீதவான் வழக்கைக் கூப்பிட்டார். இந்துபோட்டு ஒரு பெரிய சங்கம் அந்தச் சங்கத்தில் பாடசாலை இருக்கட்டனென்றார். அவர்கள் உயர்சாதி இவர்களை நசுக்கிப் போடுவார்களென்று அவர்கள் அப்புக்காத்துமார் சொன்னார்கள். பின்னர் நீதவான் என்னைப் பார்த்துச் சொன்னார் இப்பாடசாலையை நீதான் இந்த நிலைக்குக் கொண்டுவந்தாயென்று உலகத்துக்கும் தெரியும் இப்போ நீதவானுக்கும் தெரியும். உங்கள் சாதிக்காக கட்டப் பட்ட பாடசாலையை நீங்களே ஒரு சபை சேர்ந்து பாடசாலையை நடத்த வேண்டும். இன்னொரு சாதி இதை நடத்தக் கூடாது என்று சொல்லி என்னையும் மூ.சி., ப.வ., சி.சி வைத்தியர், மு.வைத்தி லிங்கம் இந்த ஐந்துபேரும் ஐந்து வருஷம் நடத்தவேண்டும். அதன்பின் 3 ரூபா அங்கத்தவர் பணம் கட்டி மூன்று வருஷத்துக்கு ஒருமுறை 5 பேரைத் தெரிந்து பாடசாலையை நடத்தும்படியும் கூட்டங்கூடி உத்தியோகத் தரைத் தெரிந்து கொள்ளும் படியும் கரவெட்டி மேற்கு, வடக்கு அல்வாய், கொத்தாவத்தை முதலிய இடங்களிலுள்ள சைவப் பள்ளர் களின் பொதுஉடமைச் சொத்து மேற்படி பாடசாலை, காணி, தளபாடம் முதலியவெல்லாமென்று தீர்வையில் எழுதிவிட்டார்.

**உத்தியோகத்தர் தெரிவு**

இதற்கிடையில் என்னைவிட்டு மற்ற நால்வரும் உபாத்திமாரும் ஒரு கூட்டம் கூடி உத்தியோகங்களைத் திட்டஞ்செய்து வேறொரு திகதி கூட்டம் கூடி உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்தனர். தாங்கள் ஒழுங்கு பண்ணிய திட்டப்படி தலைவர் என்று மூ.சி. சொல்ல ப.வைரமுத்து எழுந்து வ.சி.சிலம்பு வைத்தியரைத் தலைவராகத் தெரிகிறேனென்ற வுடன் அதை அனுமதிப்பாரின்றி மு.வைத்திலிங்கம் எழும்பி கா.சூரன் ஆசாரியாரை உப தலைவராகத் தெரிவு செய்கிறேனென்று காரியதரிசி வைத்திலிங்கமென்றும் தனஅதிகாரி வைரமுத்துவையும் மானேசர் மூ.சி. வையும் தெரிந்து குறித்த ஐந்து வருஷமும் நான் தனியவும் மற்ற நால்வரும் ஒன்றாகவும் சபை நடைபெற்றுவந்தது.

2 வது வழக்குத் தொடங்கிய காலம்முதல் தலைமை ஆசிரியர் மு.செல்லையா எனக்கு விரோதியாகி நின்று அவர்களுக்குச் சாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லவும் முற்பட்டுக் கோட்டுக்கும் வந்துவிட்டார். நல்ல வேளை அவர்சாட்சிக் கூட்டில் ஏறவில்லை அதற்கிடையில் நீதவான் வழக்கைச் சரிப்பண்ணிப் போட்டார். மூ.சி.வாய்ப்பிறப்பே முழுக்கத் தடம் பிரண்டது. உபாத்திமாரின் ஒற்றுமையால்தான் அவர்கள் என்னை உபாத்திமாரிடம் பணம் வேண்டியதாகப் பிட்டீசம் போட்டார்கள். அதனால் உபாத்திமாரிடம் இனிமேல் பணம் வேண்டி அனுப்ப வேண்டாமென்று தலைமை ஆசிரியர் மு.செ. விடஞ் சொன்னேன். புலி விழுந்தது நரிக்குத் தாயமென்று எல்லாரும் நிற்பாட்டினர். மு.செ.ஆசிரியரும் சு.பொன்னம்மாவும் நிற்பாட்டாமல் பணத்தை அனுப்பியதுபோல அனுப்பிவந்தார்கள். செல்லையாவைக் கூடி யளவு பணத்தைக் கொடாதையென்று மூ.சி வும் மு.வைத்திலிங்கம் முதலியோரும் மறித்தார்கள். அந்நாள் அதைக்கேட்கவில்லை. ஆனால் சபை நடத்த அவர்களுக்குத் தெரியாது செல்லையாதான் அவர்களுக்கு வழிகாட்டி. அப்படியிருந்தும் கனமுறை கன பிழைகள் சபையில் நிகழ்ந்தது அவர்கள் நாலுபேரும் ஒத்தபடி பிழையில்லை யென்பார்கள். நான் அப்பிழையானவைக்கு எனது கையொப்பம் வைத்ததில்லை. அவைகளையெல்லாம் ஒரு புத்தகத்தில் அந்தந்த ஆண்டு மாதம் திகதி குறித்து எழுதிவந்தேன்.

*1942* வைகாசி *28*ந் திகதி வழக்குத் தீரும்பொழுது நீதவானுக்குச் சொன்னேன் புதிய கட்டிட வகையால் எனக்குக் கடனிருக்கென்று. நீதவான் சொன்னார்சபையைக் கூட்டிப் பேசிப் பணத்தை வேண்டென்று வாயால் சொன்னார் தீர்வையில் எழுதவில்லை. நிர்வாகசபையில் அதைப்பற்றிப் பேசினேன். மூ.சி. சொன்னார்உபாத்திமாரிடம் வேண்டிய பணத்தில் முடிந்ததென்று. இது குதற்க நியாயம், இது சைவ கலைஞான சபையல்ல மூ.சி சபை. மூ.சி. சபை போலிச்சபையென்று பலமுறைகளில் பேசியிருந்தேன். பின்னர் சி.மகேசனைத் தலைவராகக் கொண்ட ஒரு மகாசபையைக் கூட்டிக் கட்டிட விஷயமாகப் பேசினேன் அப்போ மைத்துனர் சி.மாரிமுத்தர் இந்துபோட்டுக்குப் பாடசாலையை நான் எழுதியதைப் பிரஸ்தாபித் தார். இந்துபோட்டுக்குப் பாடசாலையை நான் எழுதியதால் ஆர்குடி கெட்டதென்றேன். அத்துடன் அதைவிட்டு உபாத்திமார் பணத்தில் கட்டியதென்றார். அப்போ மு.செ.ஆசிரியர் வித்தியாபகுதிக்கெழுதிய கடிதத்தை வாசித்துக் காட்டினேன் (*131* பக்கத்தில் மேற்படி கடிதக் குறிப்பிருக்கு) மேற்படி மாரிமுத்து சொன்னார் செல்லையா உபாத்தியார் இதற்கு மறுமொழி சொல்ல வேண்டுமென்று அவருக்கு வால் கட்டிவிட்டார். உடனே உபாத்தியார் வாலையுஞ் சுழற்றிக் கொண்டெழுந்து இவர் பொய் சொல்லி இக்கடிதத்தை எழுதிவித்தாரென்றும் இவரைத் தப்பவைக்க எழுதிக் கொடுத்தேனென்றும் தன்வாய் கூசாமல் இன்னுஞ் சில அந்தச்சபையில்



சொல்லிவிட்டார் (என்னை அவமானப்படுத்தினார்) நான் சொன்னேன் உதைக் கடவுளுக்குச் சொல்லென்று. எனக்கு வேறு சொல்ல வழியின்றிச் சொன்னேன் இது நடைபெற்றது *1943*ல் இன்று *1953*ல் கடவுள் அவரைக் கேட்பிக்கிறார் மேற்படி ஆசிரியர் அப்போ ஆருக்காக என்னைப் பொய்யனென்றாரோ இப்போ அவரெல்லாம் மேற்படி ஆசிரியரைப் பொய்யனென்றும் கபடனென்றும் நம்பிக்கைத் துரோகியென்றும் ஏமாற்றுக்காரனென்றும் சுயநலவாதியென்றும் கண்டகண்ட இடமெல் லாம் பேசித்தூற்றுகின்றனர்.

மேற்படி கட்டிடப்பணம் எனக்குச் சனங்களால் கொடுபட வேண்டுமோ அல்லவோவென்ற வாதாட்டத்தில் சனசம்மத வாக்கெடுப் புக்கு விடப்பட்டது. அதில் எனக்குச் சாதகமாகச் சனங்கள் வாக்களித் தனர். அதன் பின் நான் ஓர் விண்ணப்ப விளம்பரத்துண்டுப் பிரசுரம் வெளியிட்டேன். அத்துண்டுப் பிரசுரம் அவர்கள் முன்னுக்கு வெளியிட்ட துண்டுப்பிரசுரத்துக்கு மாறாக இருந்தது. அதாவது அவர்கள் வெளி யிட்டது ஐந்து வருஷமும் வருஷம் மூன்று ரூபா நிரையாகக் கொடுத்த வரே அடுத்த தெரிச்சலுக்கு வாக்களிக்க உரிமையுண்டு. நான் வெளி யிட்டது ஒரு வருஷம் மூன்று ரூபா கட்டினவர் அந்த வருஷத்துக்கு அங்கத்தவரென்றும் அதுவும் முதல் ஐந்து வருஷம் முடிந்தபின்னென்றும் இதுவே கோட்டுத் தீர்ப்பென்றும். நான் கட்டுவித்த கட்டிடச் செலவைச் சனங்களே எனக்குத் தரவேண்டுமென்றுங் காட்டியிருந்தேன். அந்தத் துண்டுப் பிரசுரத்தி லொன்று மூ.சி. கையில் அகப்பட்டது உடனே மூ.சி. மேற்படி பிரசுரத்துடன் சங்கார உருத்திரர்போல ஆவேசத்துடன் தனபாலசிங்கம் பிறக்கிராசியாரையடைந்து பிரசுரத்தை அவர் கையில் கொடுத்தார். பிறக்கிராசியார் எனது அப்புக்காத்து இராமலிங்கத்துக்கு முறையிட்டார். இராமலிங்கம் எனக்காளனுப்பினார். நான் குறித்த இரு பிரசுரங்களுடன் அப்புக்காத்தைக் கண்டு துண்டுப் பிரசுரங்களைக் காட்டினேன். சரி இதன்படி நீ பணத்தை அறவிட்டு நீ கட்டிய கட்டிடச் செலவை எடுத்துக்கொள்ளென்றார். நீ ஏதோ குழப்படி செய்கிறாயென்று தனபாலசிங்கம் சொன்னார் அதற்காகத்தான் நான் உன்னை வரச் சொன்னேனென்றுஞ் சொன்னார். அவர்களின் நோட்டீசைக் கவனமாக வைத்துக்கொள்ளென்றுஞ் சொன்னார்.

எனது துண்டுப் பிரசுரத்தைக் கொண்டுசென்ற மூ.சி. அதைத் தனபாலசிங்கத்தின் கையில் கொடுத்தவுடன் அவர் அதைப் படித்துவிட்டு இந்த நோட்டீசுடனையே சூரனுக்கு ஒரு காலமும் பாடசாலையில் உரிமையில்லாது செய்வேனென்று சொன்னாராம். அப்போ மூ.ம.குத்தகைக்காரனும் சி.மாரிமுத்துவும் கூடநின்றனராம் அவர்கள் வாயிலாகக் கேட்டுவந்த மகன் ம.சுப்ரமணியம் எனக்குச் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அதைப் பறவாய் பண்ணாமல் கரவெட்டி, வதிரி, தாரிக்கப்பத்து, அல்வாய், கொழும்பு முதலியவிடங்களிலெல்லாம் மேற்படி துண்டுப் பிரசுரங்களையெல்லாம் விநியோகம் செய்து நான் செலவளித்த கட்டிடச் செலவுக்கு மேல் அறவிட்டுக்கொண்டேன் அவர்களும் பணம் கொடுக்க வேண்டாமென்று மறியல் செய்தார்கள். சிலர் போக ஏனையோர் பணந்தந்துதவினர்.

## 1942 ல்

மேற்படி ஆண்டு நான் போட்ட புதிய கட்டிட மேல்கோப்புவேலை தச்சப் பொன்னையா ஒப்பந்தமெடுத்து செய்துமுடித்தது போகத் தளபாடங்கள் பல செய்வித்தமை எனக்குத் தெரியாதிருந்தது. எல்லாம் போலிவேலை அதனால் கணக்கு முடிப்புக்களொன்றுக்கும் நான் கையொப்பங் கொடுத்திருக்கவில்லை 5 வருஷம் கோடு நியமித்த 5 ஐந்து காரியஸ்தர் சபை அதில் நான் சொல்லும் பிழைகளைச் சரி யென்பார்கள் அவர்கள் நால்வரும். மூ.சி.வின் பணச் செல்வாக்கால் மூ.சி எதைச் சொன்னாலும் அதையே சரியென்று சொல்லும் மனப் பான்மை ஏனைய மூவரிடமும் குடிபுகுந்திருந்தது. இப்படியே ஐந்து வருடமும் சபை நடைபெற்றவிதம் மூ.சிவின் பணம் அநீதிகளையும் நீதிகளாக்கி நின்றன.

ஒரு பிரசங்கக் கூட்டம் எனது தலைமையில் வ. தர்மலிங்க ஆசிரியர் விஷயம் பேசினார். இந்தச் சமயப் பிரசங்கத்துக்கு என்னைவிட ஏனைய காரியஸ்தர் நால்வரும் வரவில்லை. அந்தப் பிரசங்கக் கூட்டத்தில் சி.வ., ம.செ. ஆசிரியரிவரும் வேணுமென்று என்னுடன் கதை கொழுவிக் கூட்டத்தை கலகமாக்கினர். இந்த விஷயத்தை எங்கள் நிர்வாக சபையில் விளங்கித் தீர்ப்பளிக்கும்படி எழுதிக் கொடுத்திருந்தேன். அந்த விஷயத்தை விளங்கிக் கொள்ளத் தீர்ப்பும் சொல்லமுடியாமல் பல தவணைகள் போட்டுக் கடத்திவந்தார்கள். ஒரு நாள் நான் கடிமையாக நெருங்கி நின்றேன் அப்போ தலைவர் சொன்னார் (வ.சி.வைத்தியர்) இவர் எனக்கு மைத்துனன் (என்னை) அவர்கள் மருமக்கள் (மேற்படி சி.வ., ம.செ. ஆசிரியர்கள்) நான் இதை விளங்க முடியவில்லை ஒரு தலைவரை நியமித்து அவர் வாயிலாக மேற்படி விளக்கத்தை முடிக்கப் போகிறேனென்றார். நான் மறுத்தேன் சபைத் தலைவர் வழக்காளி எதிராளிகளை முறைபாராட்டினால் இதென்ன சபையென்று இன்னும் பல பேசினேன். அதைச் சபையில் தீர்மானமாக்கினார்கள். தலைவர் மயில்வாகன உபாத்தியாயர்.

அடுத்த தவணைத் திகதிக் கூட்டத்துக்கு மேற்படி மயில்வாகனம் உபாத்தியாயர் தலைமை வகித்தார். அவர் முதலில் ஆட்களைத் தனித்



தனி கூப்பிட்டுக் கதைத்தார் (ஆசிரியர்களையும் நிர்வாகத்தவர்களை யும்) பின்னர் எல்லாரையும் வெளியில் ஒன்றுகூட்டிப் பேசிப் பின்னர் உள்ளே எல்லாரையும் வரவழைத்துப் பேச்சை ஆரம்பித்தார். அதாவது இந்தப் பாடசாலையைக் கொண்டு நடத்திப் பல கஷ்டங்களை அனுபவித்த ஆள் சூரனென்பதை நீங்கள் எவரும் மறுக்காது ஒப்புக் கொள்வீர்கள். ஆகையால் இப்பாடசாலைச்சபையால் மேற்படி சூரனுக்கு ஒரு தொகை நிதி உதவ வேண்டும் என்றார். மேற்படி தலைவர் ஆசிரியர் மயில்வாகனம் அப்போ மூ.சி. எழுந்து சொன்னார் பாடசாலைக்குப் பல செலவிருப்பதால் 15 ரூபா பதினைந்துதான் கொடுக்கலாமென்றார். அப்போ மேற்படி தலைவர் கேட்டார் உபாத்திமாரால் எவ்வளவு கிடைக்கிறதென்று (எனக்கு) மு.செ. 15, ச.பொ. 5 என்றார்கள். 20ம் 15ம் 35 என்று தலைவர் திருப்தியடைந்தார். நான் சொன்னேன் எனக்கந்தப் 15 ரூபா வேண்டாம் சமயபாடம் சமயபிரசாரம் செய்து வருமாப்போல் செய்வே னென்றேன். அவ்வளவில் அக்கூட்டம் முடிவடைந்தது.

1946ல் ஆனி பின்பு அந்த மாதம் முடிந்து 10ந் திகதிபிந்தி சி.க.சரவணமுத்து, மூ.சி.கந்தவனம் வ.நா. ஆள்வாப்பிள்ளை ஆகியோர் வந்து மூ.சி.சபைக்கணக்கில் 10 ரூபாவும் மிகுதி ஆளுக்கு 2 ரூபா வீதம் போட்டதென்று சொல்லி ரூபா 28 தந்தார்கள் அடுத்த மாதம் 32 ரூபா அடுத்த இரண்டு மாதம் 30-30 தந்தார்கள் பின்பு வரவரக் குறைந்து கொண்டும் கூடியும் குறைந்துகொண்டும் வர நான் சொன்னேன் பிறிம்பாக ஆட்களிடம் வீதம் போடவேண்டாம் சபைக்கணக்கால் ஏதோ வாறதுவரட்டுமென்று தடுத்துவிட்டேன். அதன் பின் சபைக் கணக்கில் மூ.சி. ரூபா 10 அனுப்பிவந்தார். 1949 வைகாசி மாதத்தின் பின் அதைத் தராமல் நிற்பாட்டினார். அதைப்பற்றி ப.வ., சி.க.ச., மூ.சி.க. இவர்களுக்குத் தெரிவித்தேன் அவர்கள் மௌனிகளாயினர். நானுந் தொடராதுவிட்டேன்.

1947ல் முன்னே நீதவான் நியமித்த ஐந்து வருடம் முடிந்து மூன்று வருடத்திற்கொருமுறை ஐந்து காரிய நிர்வாகத்தவரைத் தெரிவு செய்யும் மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. அதில் சென்ற ஐந்து வருடமும் வருடம் மூன்று ரூபாவாக பதினைந்து ரூபா கொடுத்தவரே நிர்வாகஸ்த வரைத் தெரிவுசெய்யும் உரிமையுடையவரென்ற முறையை அவர்கள் (மூ.சி., ப.வ.) சொன்னதைக் கேட்டுச் சனங்கள் பணங்கட்டி வந்தார்கள். அது கோட்டுத் தீர்ப்புக்கு மாறு. அதனால் நான் சபையை விட்டு விலகி விட்டேன். ஆனால் வெள்ளிக் கிழமை காலை சமயப் பிரசங்கத்தை தவற விடாமல் செய்துகொண்டு வந்தேன். இப்பொழுதும் அப்படியே செய்து வருகின்றேன் (1953). 1942ல் கோயிலறையைக் குழப்பி இப்போதிருக்கும் கோயிலில் கொண்டு போய் வைக்க அதற்குள்ளிருந்த விக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள் முதலியவை களை எடுக்கவேண்டுமென்றார்கள் நான் மறுத்தேன். அதற்கவர்கள் டீ.ஆர்.ஓ. உடையார் விதானை இவர்களைக் கூட்டிவந்தார்கள். வந்த உத்தியோகத்தர்கள் என்னைக் கேட்டார்கள் ஏன் தடைசெய்கிறாயென்று. நான் சொன்னேன் இப்போ 20 இருபது வருஷம் இதில் பூசை நடைபெற்று வருகின்றது அப்படியானதை மாற்றுவது சரியில்லை. இப்போ இவர்கள் கட்டியிருக்கும் கோயில் பூதமனையான மையால் அந்த இடத்திற்கு மாற்றுவது சரியில்லை யென்று. அவர்கள் சொன்னார்கள் சாஸ்திரி வந்து வகுத்த இடமென்று. டீ.ஆர்.ஓ. (மணியம்) சொன்னார் சாஸ்திரிகளிலும் குருட்டுச் சாஸ்திரிகளுண்டு. அதிருக்கட்டும் அவர்கள் கோயிலொன்றைக் கட்டிப்போட்டார்கள் இப்போததில் வைக்கட்டும் பின்பு அது சரியில்லாவிட்டால் வேறிடத்திற்கு மாற்றலாம். இப்போ அதை எடுக்கட்டும் நீ தடைசெய்யாதேயென்று எனக்குச் சொன்னார். சரி அப்படி ஆகட்டுமென்றேன்.

எனக்குச் சொந்தமான சில பொருட்களை எடுத்துக் கொண்டு நான் மேற்படி கோயில் விஷயத்தால் விலகிவிட்டேன். ப.வ. கூடியளவு கேட்டுப் பார்த்தார் கோயில் பூசையை நடத்தும்படி நான் சம்மதிக்க வில்லை. வீட்டிலேயே படத்தை வைத்துப் பூசை முடித்து வந்தேன். இப்போ சில காலமாகப் புதுமைக்கு வண்ணான் பறைதட்டி வெழுத்தான் என்ற பான்மையாக மேற்படி கோயில்ப் பூசை ஐயரைக் கொண்டு செய்வித்துத் திருவெம்பாவையும் அப்படியே செய்து வந்தார்கள். பின்னர் படிப்படியாகப் பூசைக் கிரமங்கள் தேய்ந்து இப்போ சிலகாலமாக (1953 ல்) கோயில் திறபடாது பூட்டப் பட்டிருக்கின்றது. புராண காலத்திலே வேதாரண்யத்தில் ஓர் கோயில் கதவு வேதங்களால் பூட்டப் பட்டிருந் ததாம் அதைத் திருநாவுக்கரசு சுவாமிகள் தமிழ் வேதம் (தேவாரம்) பாடித் திறக்கச் செய்தாராம். அங்ஙனமாகவே எம் பாடசாலைக் கோயில் கதவும் பூதங்களால் பூட்டப்பட்டாயிற்று. இதை யார் வந்து பாடித்திறப்பரோ நாமறியோம்.

1950ம் ஆண்டு நானும் கொழும்பில் நிற்க ப.வ.வும் மூ.சி.கந்தவன மும் கனகரத்தினத்தையும் (கல்வி உப மந்திரி) த. இராமலிங்கத்தையும் (எம்.பி) கொண்டு எங்கள் பாடசாலையை ஆங்கிலப் பாடசாலையாக்க வெகு பணஞ் செலவிட்டார்கள். பிரதம மந்திரி சேனாநாயக்காவையும் கல்வி மந்திரி நுகவிலையையும் பாடசாலைக்குத் தனித்தனி வெவ்வேறு நாட்களில் அதிக பணஞ்செலவிட்டழைத்தார்கள். கடைசியாக மலை வயிறு நொந்து சுட்டெலிக் குஞ்சை ஈன்றவாறான பழங்கதைபோல சூனியர் செக்கன்றறியென்று பதிந்தாயிற்று என்று பெருமை பேசினார்கள். ஆங்கிலம் ஒரு பாடம் படிப்பிக்குந் தமிழ்ப் பாடசாலை. இதை ஆங்கிலச் சொல்லால் அழைத்ததே ஆங்கிலப் பாடசாலையாய்



விட்டதென்று ஊரவர்க்குப் புகட்டினார்கள். சில மாதங்களால் வதிரி மிஷன் பாடசாலையையும் எங்கள் பாடசாலையைப் போலப் பதிந்து போட்டார்கள். இது எம்மவர்க்குச் சிறிது அவமானமானது.

1952ம் ஆண்டு தை மாதம் ஆங்கிலப் பாடசாலை திறப்பு விழா வென்று ஒரு பெரும் கொண்டாட்டம் வைத்தார்கள். அதற்குக் கல்வி மந்திரி காரியதரிசி கே.கனகரத்தினம் எம்.பி. தலைமை வகித்தார். சாவுகச்சேரி வே.குமாரசாமி எம்.பி கனகசிங்கம் பொன்னுத்துரை பெண் மீனாட்சி பீ. ஏ முதலியோர் பேசினார்கள். கடைசியில் மேற்படி பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியராக வந்த வீரசிங்கமும் பேசினார். அதன் பின் தலைவர் எழுந்து என்னைப்பற்றி வேண்டிய மட்டில் புகழ்ந்து பேசினார். இப் பாடசாலையை ஸ்தாபித்தவரும் இதற்காகப் பெரிதும் பாடுபட்டவரும் இந்தப் பகுதியாரில் தான் முதலில் கண்டு அறிமுகப் பட்டவரும் இந்தச் சூரனென்பவர் என்றும் பேசி ஆங்கிலப் பாடசாலை யாக்க ப.வ.வும் மூ.சி.கந்தவனமும் மிகப்பாடுபட்டார் களென்றும் பேசினார். இது மாத்திரமல்ல அவர்கள் அதிக பணம் செலவிட்டு வைக்கும் கூட்டங்கள் கொண்டாட்டங்களிலெல்லாம் வருகின்ற பெரிய மனிதர்களெல்லாம் பாடசாலையையும் என்னை யுமே இணைத்துப் பேசுவார்கள். இந்தியாவால் வரும் பெரிய மனிதருக்கு அவர்களுடன் வரும் யாழ்ப்பாணப் பிரமுகர்கள் என்னை அவர்களுக்கு அறிமுகப் படுத்திப் பாடசாலையையும் என்னையே உண்டாக்கினதென்று சொல்லுவார்கள். கல்கி ஆசிரியர் இங்கு பாடசாலைக்கு வந்தபொழுது யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் பீ.ஏ ச.அம்பிகைபாகன் என்னை மேற்படி கல்கி ஆசிரியருக்கு அறிமுகப்படுத்தினார். நான் என்னால் பாடப்பட்ட மஹாத்மா காந்தி மறைந்த இரங்கற் பாடல் புத்தகமொன்றை அவருக்கு உபகரித்தேன். அவர் அதைக்கொண்டு என்னையும் எங்கள் சமூகத்தையும் பெரிதும் வியந்து தனது கல்கிப் பத்திரிகையில் எழுதி வெளியிட்டார்.

1952ம் 1953ம் ஆண்டு நிகழ்ச்சிகள் ஆங்கிலப் பாடசாலையாக்க வேலைசெய்துகொண்டு வரும்பொழுது ஆங்கிலப் பாடசாலை யானால் இப்போ இருக்கும் தலைமை ஆசிரியர் மு. செல்லையாவைத் தாக்கும். அவர் தலைமை ஆசிரியர் பதவியை இழந்து உதவி ஆசிரியராக இருக்க வேண்டி வருமென்றும் பணமும் 80-90 ரூபா இழக்க நேரு மென்றும் கதைத்தார்கள். அப்போ தலைமை ஆசிரியர் மு.செல்லையா சொன்னா ராம் பாடசாலை வளர்ச்சிக்காக நான் எதையும் இழக்கத் தயாரென்றும் அதனால் தனக்குவரும் பணக் குறைவைப் பதவி இழத்தலைப் பொருட் படுத்தேனென்று பலருக்கும் சொல்லிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952ம் ஆண்டு தை மாதம் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் வீரசிங்கம் தலைமை ஆசிரியராகப் பாடசாலையில் சேர்ந்தார். அவரு டைய பதிவு நடத்தப்பட்டு ஒரு வருஷத்தின் பின் உதவி ஆசிரியராகப் பதியப்பட்டுத் தனது சம்பளத்தையும் எடுத்துக்கொண்டு பாடசாலையால் விலகி விட்டார். இம்மட்டும் மு.செ.ஆசிரியரே தலைமை ஆசிரியராகக் கடமை செய்துவந்தார். மேற்படி வீரசிங்கம் விலகிய பின் அந்த இடத்துக்கு மூ.சி.சீனித்தம்பியைத் தலைமை ஆசிரியராக்குதற்கு ஆயத்தம் செய்தார்கள். இதற்கு மு.செ.ஆசிரியர் ஒத்துக் கொண்டால்தான் சீனித்தம்பியைத் தலைமை ஆசிரியராக்கலாம். இதற்காக சி.க.சரவண முத்து, ப.வ., மூ.சி.கந்தவனம் ஆகியோர் மு.செ. ஆசிரியரைச் சந்தித்து நீங்கள் முன்னே சொன்னபடி தலைமை ஆசிரியர் பதவியை விடுகிறதாக மனேச்சருக்கு எழுதிக் கொடுங்கோ அந்த இடத்துக்குச் சீனித்தம்பி பீ.ஏ.யை வைக்கப் போகிறோமென்று அவரைக் கரைத்தார்களாம். 1953ம் ஆண்டு ஆவணி மாதம் ஆசிரியர் மு.செ. ஒரு காகிதத்தை எழுதிக் கொடுத்தார். அதன் சாரம் மூ.சி.சீனித்தம்பி பீ.ஏ. யை இப்பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக 1.1.54ல் வைக்க இருப்பதால் நான் தலைமை ஆசிரியர் பதவியை விடுகிறேன். இந்தக் காகிதத்தைக் கொண்டு சீனித் தம்பியைத் தலைமை ஆசிரியராக நியமிக்கும்படி நியமனப் பத்திரத்தையும் சேர்த்து வித்தியாகந்தோருக்கு அனுப்பினார் மானேஜர். மேற்படி தலைமை ஆசிரியர் தன் வேலையை விடவில்லை. ஆகையால் குறித்த சீனித்தம்பியை நியமித்துப் பதியமுடியாதென்று வித்தியா கந்தோரால் மானேஜருக்கு மறுமொழி வந்தது. இதன்பின் மு.செ. ஆசிரியரை வளைத்தார்கள் மூ.சி. மானேஜரும் ஆசிரியர் வீரசிங்கமும் அக் காகிதத்தை திருத்திச் சீனித்தம்பியின் வசனத்தைவிட்டு முற்றாக நான் வேலையை விடுகிறேனென்று எழுதித் தரும்படி. முன்னிவர் எழுதிக் கொடுத்ததையிட்டுப் பலரும் மு.செ.ஆசிரியரைப் பேயனென்றும் மற்றவரின் அணாப்புக்கெடுபட்டுத் தன் தலையில் மண்போட்டுக் கொண்டாரென்றும் பேசினார்கள். அதனால் இவர் வெட்கமும் துக்கமும் கொண்டவராக இருந்தார். ஆகவே மானேஜரும் வீரசிங்கம் ஆசிரியரும் வளைத்த வளைப்புக்கு எடுபடாமல் எழுதிக்கொடுக்க மறுத்துவிட்டார். அதற்காக ஆசிரியரைப் பலரும் (மூ.சி. அனுதாபிகள்) தூற்றத் தலைப் பட்டனர்.

மேற்படி ஆண்டு ஐப்பசி மாதம் சோதனை நடக்கவிருப்பதால் மு.செ. ஆசிரியர் எனது மகனை (ஏகாம்பரம்) உதவியாகக்கொண்டு இடாப்பு முதலிய கணக்குகளைப் பார்த்து முடித்து முடிக்க ஒரு ஆசிரிய ருக்கு சராசரி இருக்கின்றமையால் எனக்கறிவித்தார்கள். என்னுடைய மகனை வைக்க வித்தியாபகுதி பதிவார்களாவென்ற சந்தேகத்தால் நான் யாழ்ப்பாணம் போய் டிவிசன் இஞ்சிப்பற்றர் கிருஸ்ணபிள்ளையையும்



டிஸ்திறிக் இஞ்சிப்பற்றர் அந்தோனிப் பிள்ளையை யும் சந்தித்து விஷயத்தைச் சொல்லிப் பதியலாமாவென்று கேட்டேன். (மகனை) அவர்கள் ஓம் சொன்னார்கள். இங்கே வந்து மூ.சி. மானேஜரிடம் சென்று மேற்படி விஷயத்தைச் சொல்லி என் மகனைப் பாடசாலையில் ஆசிரியராக நியமிக்க நியமனப்பத்திரத்துக்கு கையெழுத்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். அப்போ அவர் சொன்னார் கார்த்திகைக் கும் மார்கழிக்கும் (2 மாதத்துக்கு) மாத்திரம் பதிவு செய்யலாம். அடுத்த வருடம் பாடசாலை (1954 ல்) என்ன நிலமையடையுமோ தெரிய வில்லையென்றார். இந்த இடத்துக்கு இங்கிலீஸ் உபாத்தியை வைக்க வேண்டியும் வருமென்றார். நான் சொன்னேன் தை மாதம் சீனித்தம்பியை வைக்கப் போகிறீர்கள் ஒரு பாடந்தானே இங்கிலீஸ் உபாத்தி படிப்பிக்கும். அத்துடன் ஆள் ஒன்றும் பேசவில்லை. சரி நிரப்பிவரும் நியமனப் பத்திரங்களுக்குக் கையொப்பத்தைப் போட்டுவிடும்படி சொல்லி மீண்டேன்.

பின்னர் தம்பி ஐ.வ.கந்தவனத்திடம் விஷயத்தைச் சொல்லி மூ.சி.விடஞ்சென்று தாமதஞ்செய்யாமலும் இரண்டு மாதம் என்றதை விட்டு மூன்று வருடப் பதிவையும் நிறைவேற்றப் பேசும்படி சொல்லி அனுப்பினேன் இன்னும் வைத்தியர் வ.சி.சி. வையும் மகன் ம.சுப்ரமணியம், சி.மாரிமுத்து ஆகியோரையும் அனுப்பினேன். எல்லாருக்கும் இரண்டு மாதக் கதைதான் சொன்னாராம். எல்லாரும் சி.மாரிமுத்துவைவிட மற்றையோர் எதிர்த்து மூன்று வருடமும் பதியவேண்டுமென்று வற்புறுத்தினராம். இதற்கிடையில் கார்த்திகை மாதம் 1ந் திகதி ஞாயிறு 2 ந் திகதி மகனை பாடசாலை இடாப்பில் எழுதிச் சேர்த்தாயிற்று. இதற்கிடையில் மானேச்சருக்கு மாறாக யாரோ போட்ட பிட்டீசம் இம்மானுவேல் வந்து மு.செ.ஆசிரியரையும் மூ.சி.மானேஜரை யும் விளங்கிப் போனார். பிட்டீச சாரம், இந்த மனேச்சர் தன்னுடைய மகனைத் தலைமை ஆசிரியராக வைத்துப் பழைய தலைமை ஆசிரியரை விலக்கச் சூட்சி செய்கிறார் அப்படியானால் பிள்ளைகள் கலையும் பாடசாலை விழுக்காடாய்ப்போம் ஆகையால் இருந்த தலைமை ஆசிரியரே தலைமை ஆசிரியராக இருக்கச் செய்யவேண்டும் (என்பது பிட்டீசம்) இனித் தலைமை ஆசிரியரை யாழ்ப்பாணம் வித்தியா கந்தோரில் வந்து காகிதத்தை மாற்றி எழுதித்தரும்படி ஆசிரியர் வீரசிங்கமும் மனேச்சர் மூ.சி.வும் நெருக்கிக் கொண்டார்கள். எனது மகன் தனது நியமனப்பத்திரத்துக்கு கையொப்பம் போடும்படி கேட்க உபாத்திமாருடன் யோசித்து போடவேணுமென்று மானேஜர் மூ.சி. சொல்லிக் கையெழுத்திடாது திருப்பி விட்டாராம். பின்னர் 11ந் திகதி மேற்படி நியமனப் பத்திரத்துக்குக் கையொப்பமிட்டு அதையுங் கொண்டு மு.செ. ஆசிரியரும் வீரசிங்க ஆசிரியரும் மூ.சி. மானேஜரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியா கந்தோருக்குப் போனார்கள் (யாழ்ப்பாணம்). மகனின் நியமனப் பத்திரத்தைக் கொடுத்துப் பதியும்படி சொல்லி பீ.ஏ பட்டதாரியை எம் பாடசாலையில் ஆசிரியராகப் பதியும் விஷயத்தைக் கேட்டார்களாம். அதைப் பதியமுடியாதென்றும் கொழும்புக்கெழு துங்கோவென்றும் டிவிசன் இஞ்சிப்பற்ரர் கிருஷ்ணபிள்ளை சொன்னாராம். அப்படியிருந்தும் மு.செ. ஆசிரியரை காகிதத்தை மாற்றி எழுதித்தரும்படி அவர்கள் கேட்டார்களாம். பீ.ஏ. வைக்க முடியவில்லை காகிதம் மாற்றி எழுதவேண்டியது அவசியமோ வென்று மறுத்து விட்டாராம் மு.செ.ஆசிரியர். நான் இராமலிங்கத்திடம் (எம்.பி) சென்று கேட்டேன் எங்கள் பாடசாலைக்குப் பீ.ஏ.வைக்கும் விஷயம் எப்படி இருக்கென்று. அது பேச்சளவில் இருக்கென்றும் ஒத்துக் கொள்ளுவார் களென்பதை நம்பமுடியவில்லையென்றுஞ் சொன்னார். இதற்கு முன் 1.1.54ல் பாடசாலையால் விலகும்படியும் அந்த இடத்துக்குச் சீனித்தம்பியை நியமித்திருக்கென்றும் விரும்பினால் உதவி ஆசிரியராக இருக்கலாமென்றும் தலைமை ஆசிரியர் மு.செ.வுக்கு மானேஜர் மூ.சி. நோட்டீஸ் அனுப்பியுள்ளார். இதற்கு முன் மு.செ. ஆசிரியர் தான் முன் எழுதிக் கொடுத்த பொருத்தனைக் கடிதத்தை வாபீஸ் வாங்குகிறேன் என்று மானேஜருக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதை அவர் ஏற்க முடியாதென்று திருப்பி அனுப்பிவிட்டார். இவ்வளவில் இருவருக்கும் விஷயம் பெருஞ் சிக்கல் முத்தலாயின.

இந்த இடையில் பாடசாலைச் சபை நிர்வாக அங்கத்தவர் மூன்று பேர் தங்களுடன் கலந்தாலோசியாது தலைமை ஆசிரியரை விலக் கவும் அந்த இடத்துக்கு இன்னொருவரை நியமிக்கவும் மனேச்சருக்கு அதிகார மில்லையென்றும் மேற்படி மானேச்சர் சபையாரைக் கவனியாமல் தனது சொந்த அதிகாரத்தைப் பிரயோகித்திருப்பது சரியில்லையென்று மேற்படி மூன்றுபேருஞ் சேர்ந்து மந்திரிக்கும் வித்தியாகர்த்தருக்கும் பிட்டீசம் எழுதியிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நூலின் பதிப்பாசிரியர் ராஜ ஸ்ரீகாந்தன் அவர்கள். அவர்களின் மறைவின் பின்னரே (20. 04. 2004) இந்நூல் வெளிவருகின்றது.

இந்நூற்பொருளின் சமூகவியல், வரலாற்றியல் அம்சங்களிலும், அடிப்படையில் திரு. சூரன் அவர்களின் வாழ்க்கைப் பணிகள் பற்றியும் அவற்றினால் அச்சமூகத்தவருக்குக் கிட்டிய பேறுகள் பற்றியும் ஆழ்ந்த, அகன்ற புலமை ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். ஐம்பத்தியாறு வயதிற் காலமான ராஜ ஸ்ரீகாந்தன் மொழிபெயர்ப்புத் துறையினைத் தமது சிறப்புப் புலமை ஈடுபாடாகக் கொண்டு வாழ்ந்தவர். சோவியத் யூனியன் இலங்கை தூதுவராலயத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் செய்தி இதழ் கூட்டுப் பொறுப்பாளராகவும் விளங்கிய இவர், பின்னர் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் பதவி வகித்தார். இதழியல் துறையிலிருந்த ஈடுபாடு காரணமாகவும் அவரது கருத்துநிலை காரணமாகவும் அவர் தினகரன்,ஞாயிறு தினகரன் இதழ்களின் பொறுப்பாசிரியராக இருக்குமாறு வரவழைக்கப்பட்டிருந்தார். ஐந்தாண்டுகள் (1997 - 2002) அப்பணியினைச் செவ்வனே புரிந்தார்.

ராஜ ஸ்ரீகாந்தனின் இலக்கியச் சிறப்புப்பணி இலங்கையின் மிகச் சிறந்த ஆங்கில எழுத்தாளர்களில் ஒருவரான அழகு சுப்பிரமணியத்தின் சிறுகதைகளைத் தமிழிலே தந்தமையாகும். (நீதிபதியின் மகன் - 1999, 2002) உண்மையில் அழகு சுப்பிரமணியத்தின் இலக்கிய மேதாவிலாசம் பற்றிய நிபுணத்துவ அறிவுகொண்ட ஒருவராக இவர் விளங்கினார்.

மொழிபெயர்ப்புத் துறையில் இவருக்கு இருந்த தேர்ச்சியும் ஆற்றலும் இவரை அத்துறையிற் கடமையாற்றும் சிங்கள, தமிழ் எழுத்தாளர்களின் நண்பனாக்கிற்று.

தான் பிறந்து முகிழ்த்த மண்ணிலே தனது காலடிகளை வலுவுடன் ஊன்றி அவர் தன் வளர்நிலையில் தேசிய, சர்வதேசிய ஒலிகளுடனும் காற்றுக்களுடனும் இணைத்துக்கொள்ளும் வல்லமையினையும் பெற்றிருந்தார். அந்த இணைவுகளின் சிறப்பு அவர் தொடர்ந்தும் கலைத் தேடல்களும் புலமைத் தேடல்களும் மிக்க பௌவியமான மனிதராக விளங்கினார். இனிமையான சொல்லாடல் அவரது உறவுக்கான திறவுகோலாகும்.

ராஜ ஸ்ரீகாந்தன் அவர்கள் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கியஸ்தர்களுள் ஒருவராக விளங்கினார். ராஜ ஸ்ரீகாந்தனின் நினைவு ஈழத்து இலக்கிய வரலாற்றினுள் இடம்பெறவேண்டிய ஒன்றாகும்.

கார்த்திகேசு சிவத்தம்பி

தகைசார் ஓய்வுநிலைத் தமிழ்ப் பேராசிரியர்

ISBN 955-98619-0-5

9 789559 861904

விலை : ரூபா 200.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org